வலி.வடக்கில் 201 ஏக்கர் விடுவிப்பு



பக்கம் 02


விலை ரூபா 30

பக்கங்கள் 56

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 213 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 12, ஞாயிற்றுக்கிழமை 26.06.2016


## பூநகரி விபத்தில் கொன்ஸ்டபிள் பரிதாபச் சாவு

கிளிநொச்சி, ஜூன் 26
பூநகரியில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் பரிதாபகரமாக உயிரிழந்தார். சுன்னாகம்பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த அன்ரனி மரியதாஸே (வயது 48) உயிரிழந்தார். இவர் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் மெய்க்காவலராகக் கடமையாற்றி வந்தவர்.
பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த அவர் பின்னர் வைத்தியசாலையில் உயிரிழந்தார். பூநகரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பக்.53

# கூட்டமைப்பில் எண்மர் குழு

## அரசுடனான பேச்சுக்களை இனிமேல் கையாள்வதற்கு

"அரசியல் தீர்வு தொடர்பில் ஆராயப்பட வேண்டும். மீள்குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு என்பனவும் தீர்க்கப்படவில்லை. இவை தொடர்பில் இலங்கை அரசுடன் பேச வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடயங்களைக் கடுமையாகக் கையாண்டால், தென்பகுதியில் அது பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்காகப் பேசாமல் இருக்க முடியாது."

யாழ்ப்பாணம், ஜூன் 26
இலங்கை அரசுடன் அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் இனிமேல் பேச்சு நடத்த கூட்டமைப்பு எண்மர் கொண்ட குழுவை நியமித்துள்ளது. அதற்கு முன்பாக அது பற்றிக் கூடி ஆராய்வது என்பவற்றை இந்தக் குழுவே இனி மேல் செய்யும்.
தமிழ்த் தேசியக் பக்.53

## நீதிகோரி கவனவீர்ப்பு

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையை வெளிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியும் வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
அரசின் நிலைமாற்றுக் கால நீதிப் பொறிமுறையானது ஒரு பன்னாட்டு ஏமாற்று நாடகமாகவே உள்ளது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (விரிவு 7 ஆம் பக்கத்தில்)

## வவுனியாவில் நேற்று எதிர்ப்புப் போராட்டம்

திருகோணமலை மக்களின் காணியை அபகரித்து சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்கப்படுவதைக் கண்டித்து வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
உலக நாடுகள் அனைத்தும் நிலக்கரி அனல்மின் நிலையங்களுக்கு மூடு விழா நடத்துகின்றன. திருமலையில் நிறுவுவதற்கு அனுமதிப்பது ஏன்? என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர். (விரிவு 8ஆம் பக்கத்தில்)

## எஞ்சிய காணிகளையும் விடுவியுங்கள் மாவட்டச் செயலர் நேற்று வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 26
பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள தனியாருக்குச் சொந்தமான எஞ்சிய காணிகளையும் விடுவியுங்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகளிடம் நேரில் நேற்றுக் கோரிக்கை முன்வைத்தார் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.



201 ஏக்கர் காணி விடுவிப்பு நிகழ்வு காங்கேசன்துறை புகையிரத நிலையம் முன்பாக நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றிய மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:
காணி விடுவிப்பு நல்லிணக்கத்துக் கான முக்கிய நடவடிக்கை. கடந்த ஆண்டு மார்ச் பக்.53

## கூட்டமைப்பின் நேற்றைய கூட்டத்தில் அலசப்பட்டவை

யாழ்ப்பாணம், ஜூன் 26
வவுனியா பொருளாதார மத்திய நிலையம், வடக்கு மாகாணசபைக் குழப்பங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையில் நேற்றுக் கலந்துரையாடப்பட்டன.
கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான உயர் மட்டக் கூட்டம் மூன்று மாதங்களின் பக்.53

## தனியார் பஸ்கள் நாளை முதல் வடக்கில் சேவைப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலவரையறையற்ற சேவைப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறி வித்துள்ளனர்.
இது தொடர்பில் வடஇலங்கை பஸ் உரிமையாளர் சங்கச் செயலாளர் எஸ்.சுதர்சன் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
அமைச்சரவைத் தீர்மானமான, தனியார் பஸ் சேவைக்கு 60 சத வீதமும், பக்.53

## பொலிஸாரின் வசமுள்ள காணியின் நிலை என்ன?

யாழ்ப்பாணம், ஜூன் 26
காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்ட நிலப் பரப்பினுள் 59 ஏக்கரில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பில் இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. பக்.53

## முக்கிய காணிகள் விடுவிக்கப்படா இழப்பீடுகள் மட்டுமே வழங்கப்படும்

### இப்படித் தெரிவித்தார் பாதுகாப்புச் செயலர்

யாழ்ப்பாணம், ஜூன் 26
தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு சில முக்கிய காணிகள் விடுவிக்கப்படமாட்டாது. அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும். இவ்வாறு நேற்று காங்கேசன் துறையில் தெரிவித் தார் பாதுகாப்பு பக்.53




011 5 411 411
ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு 11% கவர்ச்சிகர வருடாந்த வட்டி
(வ.தே.வ. 11%)
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ



Saree Shaper by amanté
dare to be



இரண்டு வாங்கினால் மேலும் ஒன்று இலவசம்
ஜூலை 10 வரை மட்டுமே
Available in Colours

SIDE SHAPER
SMOOTH SHAPER
EASY SHAPER



# வலி. வடக்கில் 201 ஏக்கர் விடுவிப்பு

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகளின் பங்குபற்றலுடன் நேற்று காங்கேசன்துறையில் நிகழ்வு





யாழ்ப்பாணம், ஜூன் 26

வலி.வடக்கில் 201 ஏக்கர் நிலப் பரப்பு நேற்று மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகளின் பங்குபற்றலுடன் இந்த நிகழ்வு காங்கேசன்துறையில் இடம்பெற்றது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த குரும்பசிட்டி - கட்டுவனில் 126 ஏக்கரும், காங்கேசன்துறையில் 63 ஏக்கரும், வறுத்தலைவிளானில் 12 ஏக்கரும் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகிலிருந்த பாதுகாப்பு நுழைவாயில் நேற்று அகற்றப்பட்டிருக்கவில்லை. காணி விடுவிப்பு நிகழ்வு நடைபெற்ற இடத்துக்கு இராணுவத்தின் வாகனங்களில் மக்கள் ஏற்றி இறக்கப்பட்டனர். பாதுகாப்பு நுழைவாயிலில் பதிவுகள் மேற்கொண்ட பின்னரே மக்கள் ஏற்றப்பட்டனர். இந்தப் பாதுகாப்பு நுழைவாயில் இன்று தொடக்கம் காங்கேசன்துறை புகையிரத நிலையத்துக்கு அருகில் பின்னகர்த்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

காங்கேசன்துறை வரையில் காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் படையினரின் முகாம்கள் முன்னர் காணப்பட்டதைப் போன்றே காணப்பட்டன. அவை விரைவில் அகற்றப்படும் என்று இராணுவத்தினர் உறுதி வழங்கியுள்ளனர் என்று பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

காணி கையளிப்பு நிகழ்வு முடிந்த பின்னர் காங்கேசன்துறை சிமெந்து நிலையக் காணியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழு நேற்று நேரில் சென்று பார்வையிட்டது. இந்தக் காணியில் நலன்புரி நிலையங்களிலுள்ள காணியில்லாத மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர். அவர்களுக்கான வீட்டுத் திட்டம் உள்ளிட்ட வசதிகள் ஒக்ரோபர் மாதத்துக்குள் பூர்த்தியாக்கப்படும்.

பலாலி வடக்கில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 20 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியமர்ந்துள்ளனர். தமது வீடுகளை நிர்மாணித்து வருகின்றனர். அவற்றை பாதுகாப்பு அமைச்சின் செயலர், முப்படைத் தளபதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பலாலி வடக்கில் இன்னுமொரு 20 ஏக்கர் அரச காணியை விடுவிக்க வேண்டும் என்று அரச அதிகாரிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனைச் சாதகமாக பரிசீலிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (ற-5)

## மாணவன் விபத்துச் சம்பவம் சி.சி.ரி.வி. கமராவில் பதிந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் சிவன் கோவிலடியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் மாணவன் ஒருவன் படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார்.




இந்த விபத்துத் தொடர்பான காட்சி அருகில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா ஒன்றில் பதிவாகியுள்ளது.

நிறுத்தப்பட்டிருந்த வாகனக் கதவு திறக்கும்போது விபத்து ஏற்படுவதும், மற்றொரு வாகனம் மாணவனை மோதுவதும் அதில் பதிவாகியுள்ளது.




அந்த வீடியோ தற்போது இணையத்தில் வெளியாகியுள்ளது.

மாணவன் காங்கேசன் துறை வீதியூடாக யாழ்.நகர் நோக்கி சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கிறான். உணவுக் கடை ஒன்றின் முன்பாக வீதியோரம் ஹைஏஸ் வாகனம் நிறுத்தப்பட்டிருந்தது. மாணவன் அந்த வாகனத்தை முந்திச் செல்கின்றான். திடீரென ஹைஏஸ் வாகனத்தின் முன் கதவு திறக்கப் படுகிறது. வாகனக் கதவுடன் மோதுண்டு நிலை குலைந்து மாணவன் வீதியில் விழுகிறான். மாணவனுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த படி வாகனம் வீதியில் விழுந்த மாணவனை மோதித் தள்ளிச் செல்கிறது.

காயமடைந்த மாணவன் சிறிது நேரம் வீதியில் கிடக்கின்றான்.

சிறிது நேரத்தின் பின்னே அவனை நோக்கி அங்கிருந்தவர்கள் செல்கின்றனர்.




இவை காணொலியில் பதிவாகியுள்ளன.

படி வாகனச் சாரதி தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரித்தனர்.

குறித்த மாணவன் முன்னர் ஒரு வழக்கில் தொடர்புபட்டு நீதிமன்றால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4,101)

## தெய்வங்களின் பெயர்களால் முரண்படுவது அர்த்தமற்றது

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

தெய்வங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. நாம் தெய்வங்களின் பெயர்களால் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இது அர்த்தமில்லாத செயற்பாடு. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

காணி விடுவிப்பு நிகழ்வு காங்கேசன்துறையில் நேற்று இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

முப்பது ஆண்டு காலப் போரில் என்ன நடந்தது என்பது உங்களுக்கும் எனக்கும் தெரியும். போரில் மகிந்த ராஜபக்ச வெற்றி பெறவில்லை. சிங்கள மக்கள் வெற்றி பெறவில்லை. தமிழ் மக்கள் வெற்றி பெறவில்லை. போரில் அநியாயம்தான் நடந்தது. இப்போது சமாதானம் உருவாகியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருவரும், உங்களுடைய காணிகளை உங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதனை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.

இலங்கை உங்கள் சொந்த பூமி. இங்குதான் நீங்கள் பிறந்து வளர்ந்தீர்கள். உங்கள் சொந்த பூமியை உங்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னர்தான் சமாதானம் வரும். கொழும்புக்கு பக்கத்திலிருந்து வந்த சிங்கள மனிதன் நான். தமிழ் மொழியில் பேசும் போது தவறுகள் இருந்தால் மன்னிக்கவும்.

நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள். சிறிலங்கா தாய்க்கு தமிழ் மக்கள் பாரமில்லை. எல்லோரும் இணைந்து நல்லது செய்ய வேண்டும். நல்லது செய்ய வேண்டும் என்றால் நல்ல சிந்தனை வேண்டும். நல்ல சிந்தனை மனதில் உருவாக வேண்டும்.

தெற்கில் சிங்கலே கோஷம் எழுப்பு கின்றனர். சிங்கள இரத்தம் என்று சொல்லுகின்றனர். தமிழ் மக்கள் தமிழ் இரத்தம் என்று சொல்ல முடியும். அவ்வாறான இரத்தம் ஒன்றுமில்லை. நோய்க்கு வைத்தியசாலைக்குச் சென்று இரத்தம் தேவைப்படும் போது தமிழ் இரத்தம் வேண்டாம், சிங்கள இரத்தம் வேண்டாம் என்று சொல்வதில்லை. உங்கள் உடலில் எல்லா உடலிலும் ஓடுவதும் ஒரே இரத்தம்தான். பௌத்த கோயிலின் உள்ளே சென்றால் அங்கு கணபதி, சிவன், விஷ்ணு என எல்லா தெய்வங்களும் இருக்கின்றன. தெய்வங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. ஆனால் தெய்வங்களின் பெயரால் நாம் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றோம் -என்றார். (ற-5)

## உமி மூடைகளால் மறைக்கப்பட்டு கடத்தப்பட்ட முதிரைக் குற்றிகள்

### துரத்தி மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்

வீதியில் சோதனை நடவடிக்கைகளுக்காக நின்ற பொலிஸார் மறித்த போது நிற்காமல் சென்ற வாகனத்தைத் துரத்திப் பிடித்தனர். அதிலிருந்து 2 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.



சாரதி கைது செய்யப்பட்டார்.

முதிரை மரக்குற்றிகள் உமி மூடைகளால் மறைக்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்பாணம் நோக்கி குறித்த படி ரக வாகனம் பயணித்துள்ளது. ஏ-9 வீதியில் வீதிச் சோதனையில் நின்ற பொலிஸார் அதை மறித்துள்ளனர். வாகனம் நிற்காது சென்றுள்ளது. பொலிஸார் வாகனத்தைத் துரத்தி மடக்கிப் பிடித்தனர்.

7 முதிரைக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-21,ரி3)

தேசிய போசணை மாதம்
ஜூன் - 2016
அளவோடு உண்போம் அழகாக மிளிர்வோம்.
ஆரோக்கிய உணவு சமைப்போம் நோயின்றி வாழ்வோம்.

# கட்டுவன், குரும்பசிட்டி மக்கள் காணிகளை இன்று பார்வையிடலாம்

## கிராம அலுவலரிடம் பதிவை மேற்கொண்ட பின் செல்ல அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 26
கட்டுவன் – குரும்பசிட்டியில் நேற்று விடுவிக்கப்பட்ட பகுதிகளை மக்கள் இன்று காலை 9 மணிக்குப் பின்னர் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்லை – அராலி வீதியின் ஊடாக தெல்லிப்பழை வைத்தியசாலைப் பகுதியினால் இந்தப் பகுதிகளுக்குள் மக்கள் நுழைய முடியும். அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்களிடம் பதிவுகளை மேற்கொண்ட பின்னர், தமது காணிகளை மக்கள் பார்வையிடலாம் என வலி. வடக்கு பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

குரும்பசிட்டி – கட்டுவன் பிரதேசத்தில் 126 ஏக்கர் நிலப்பரப்பு பாதுகாப்புத் தரப்பினரால் நேற்று விடுவிக்கப்பட்டது. இந்தக் காணிகள் உத்தியோகபூர்வமாக மாவட்டச் செயலரிடம் கையளிக்கப் பட்டது.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இன்று முதல் தமது காணிகளைச் சென்று அடையாளப்படுத்த முடியும். அத்துடன் துப்புரவு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு முன்பாகச் செல்லும் வல்லை – அராலி வீதியினூடாக மேற்படி விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் நுழைய முடியும்.

அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்கள் பதிவு நடவடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளனர். அவர்களிடம் பதிவுகளை மேற்கொண்ட பின்னர், மக்கள் தமது காணிகளுக்குச் செல்ல முடியும் என்று, வலி.வடக்குப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (வ-5)

# ஐ.நாவில் மங்கள உரையாற்ற 5 நிமிடங்களே வழங்கப்படுகிறது

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்கு, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு 5 நிமிடங்கள் மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நோர்வேக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அங்கிருந்து நாளை மறுதினம் ஜெனிவாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் புதன்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசேன், இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையை வெளிப்படுத்துவார்.

இந்த அறிக்கைக்குப் பதிலளித்து உரையாற்ற வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். இலங்கை அரசின் விளக்கத்தைக் கொடுப்பதற்கு மங்களவுக்கு 5 நிமிடங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை, நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான ஒருங்கிணைந்த செயலணி அமைக்கப்பட்டுள்ளமை, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நிறுவுவதற்கு தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முன்னெடுக்கப்படும் நடவடிக்கை, சர்வதேசத்தின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாக உருவாக்கப்படவுள்ள சட்டம், வடக்கில் காணி விடுவிப்பு நடவடிக்கை, இனப் பிரச்சினையைத் தீர்க்க உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு ஆகிய விடயங்களை மங்கள சமரவீர வழங்கப்படும் 5 நிமிடங்களுக்கு பேசி முடிப்பார் என்று வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-5)

# 5 கடல் மைல்களுக்கு அப்பாலேயே தென்பகுதி மீனவர்களுக்கு அனுமதி

## யாழ். மாவட்டச் செயலரின் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடக்கு கடற்பரப்பில் கடலட்டை பிடிக்கும் அனுமதியின் பிரகாரம் தென்னிலங்கை மீனவர்கள் கரையிலிருந்து 5 கடல் மைல்களுக்கு அப்பாலேயே தொழில் செய்யவேண்டும்.

இவ்வாறு மருதங்கேணி பிரதேச செயலகத்தில், யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குக் கடலில் இந்த மாத ஆரம்பத்தில் தென்னிலங்கை மீனவர்களுக்கும் கட்டைக்காட்டு மீனவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இவ்வாறான மோதல்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்க கலந்துரையாடலை ஏற்படுத்துமாறு பிரதேச செயலாளர் வேண்டுகோள்விடுத்தார். இதன் பிரகாரம் யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தென்னிலங்கை மீனவர்களும் அட்டைத்தொழிலுக்கு சட்ட ரீதியான அனுமதியைப் பெற்றுள்ளதால் அவர்கள் அட்டைத் தொழிலை மட்டுமே மேற்கொள்ளமுடியும். அதேபோன்று கரையில் இருந்து 5 மைல்கள் தொலைவிற்கு அப்பால் மட்டுமே தொழில் புரிவதுடன் இரவில் தொழில் புரிய முடியாது. கரையில் தொழில் புரியும் முல்லைத்தீவு மீனவர்களின் வலையைச் சேதப்படுத்திச் செல்லும் வகையில் அவர்களின் பிரதேசம் ஊடாகக் கடலிற்கு செல்ல முடியாது.

இந்தச் சட்டங்களை கரையில் பொலிஸாரும் கடலில் கடற்படையினரும் நடைமுறைப் படுத்துதல் வேண்டும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இ.அங்கையன் மற்றும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா ஆகியோருடன் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளூர் மற்றும் தென்னிலங்கை மீனவர்களும் கலந்து கொண்டனர். (வ-101)

# வழுக்கையாறு பிரதான வீதிக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 26
வட்டு. வழுக்கையாறு பிரதான வீதிக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாணத்துக்கான பிரதிப் பொது முகாமையாளருக்கு, வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் கடிதம் மூலம் இதைத் தெரியப்படுத்தியுள்ளார்.

வட்டு நவாலி வழுக்கையாறு, பிரதான வீதி வழியே இரு இந்து மயானங்கள், ஒரு கிறிஸ்தவ சேமக்காலை என்பன உள்ளன. இந்த மயானங்களை உள்ளடக்கிய நவாலி வழுக்கையாறு பிரதான வீதி மின்சார வசதியின்றி இருளில் மூழ்கியுள்ளது. பிரதேசம் இருளில் மூழ்கியிருப்பதால் பாதுகாப்பற்ற போக்கு வரத்தையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பிரதேசத்துக்கு மின்சார வசதி ஏற்படுத்தி ஒளி யூட்டவும் – என்று அந்தக் கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஜ-50)

# 4 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 26
சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் 14ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நாயன்மார்கட்டு எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராமத்தில் நடைபெறும். மன்றத்தின் தலைவர் செல்வி இராசேந்திரம் சனுஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானமும், யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் கலந்துகொள்வர். (ற-ஜ-ரி)

# குடாநாட்டு விவசாயிகளிடம் 3,500 புசல் நெல் கொள்வனவு

## பெரும்போக செய்கைக்கு விநியோகிப்பதற்காக

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டில் பெரும்போக நெற் செய்கைக்கான மூவாயிரத்து ஐந்நூறு புசல் விதை நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த விதை நெல்லை ஆய்வுக்கு உட்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்ததாவது:

பிஜி 406 இனத்தைச் சேர்ந்த நெல்லே விவசாயிகள் பெரும்பாலானோரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நெல், ஆய்வுக்கு உட்படுத்திய பின்னர், பெரும்போக நெற் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடாநாட்டில் கூடுதலான விவசாயிகள் பிஜி 406 இன நெல்லையே பயிரிட்டு வருகின்றனர். கடந்த ஆண்டும் பெரும் போக நெற்செய்கைக்கான விதை நெல்லை, யாழ்.குடா நாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது – என்றார். (வ-17)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2777 திகதி: 2016-06-25
36 39 56 57 H 08
ரூ. 12,177,275/-

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திரு.பரமநாயகம் பார்த்தீபன்
(யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை)
அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெற வேண்டுமென மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
பொ.ஈஸ்வரி, பொ.ஜெயந்தி, - சரசாலை தெற்கு
சுதர்சன், சுகீர்தன், சுபேசன், லதீபா,
தெய்வேந்திரன் குடும்பத்தினர் - அச்சுவேலி

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி
British College of Beauty Studies
Olialakan studio இணைந்து நடத்தும்
அழகுக் கலை பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்
- இலங்கையிலே பெறுமதிவாய்ந்த சான்றிதழை நாங்கள் வழங்கி வருவதில் பெருமையடைகின்றோம்.
- அழகுக்கலையில் அறிமுகம் ஆகும் புதிய தொழில்நுட்பங்கள் புதிய பாடநெறிகள் போன்றவற்றை யாழ் மண்ணில் அறிமுகப்படுத்தி உள்ளோம்.
- எங்கள் கல்லூரியில் பயிற்சியளிக்கும் அனைத்து ஆசிரியர்களும் NVQ
- அழகுக்கலை, தையல்கலை, கேக் ஐசிங் போன்றவற்றை அடிப்படையில் இருந்து முறையாக பயிற்சி வழங்கி வருகின்றோம்.
- பொதுவாக ஒவ்வொருவரும் பல இடங்களில் படித்தும் வேலையற்று இருக்கின்றார்கள். அதற்காகவே எங்களிடம் படிக்கும் மாணவர்களுக்கு மாத வருமானத்தை பெறக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளோம்.
- வெளிநாடு செல்பவர்களுக்கும் எங்களுடைய சான்றிதழ் ஒரு வரப்பிரசாதம் என்று கூறலாம்.
- எங்கள் புதிய கிளையை கஸ்தூரியார் றோட்டில் ஆரம்பிக்க உள்ளோம். அங்கு இணைய விரும்பும் ஒவ்வொரு மாணவரும் தற் போது எங்கள் கல்லூரி இயங்கும் இடத்தில் வந்து பதிவை மேற்கொள்ளுங்கள்.



கஸ்தூரியார் வீதி கிளையில் புதிய பயிற்சி வகுப்பு ஆரம்பம் 29.06.2016 புதன்கிழமை மு.ப 10.00 மணி
நேரில் வருபவர்களுக்கு மட்டும் அனுமதி.
- ஒரு வகுப்பில் குறிப்பிட்டளவு மாணவர் மாத்திரமே இணைத்துக் கொள்ளப் படுவர்.
பலாலி றோட், திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம்.
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
T.P: 076 7011 645

**வாடகைத்தாய் தேவை**

கொழும்பிலுள்ள தம்பதியினருக்கு IUF செய்வதற்கு 30 வயதுக்குக் குறைவான பெண் வாடகைத் தாயாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 906 1406

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு. இருபாலை வீதியில் அமைந்துள்ள அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்துக்கு அருகில் இருபாலை வீதியில் இருந்து 12 அடி தனிப்பாதையுடன் கூடிய வீடு கட்ட உகந்த தோட்ட நிலம் 2¼ பரப்பு விற்பனைக்குண்டு.

077 644 1957

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், 21A, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் வீடு. கிணற்றுடன் நான்கு பரப்புமீ நான்கு குழியும் கொண்ட உறுதிக்காணி விற்பனைக்குண்டு. கடைகட்டுவதற்கான அனுமதியும் உண்டு.

076 749 6942/ 0044 758 740 4752

**வங்கியில் பணவைப்பு**

UK,Canada,Australia,German,France,Swiss மற்றும் ஏனைய நாடுகளுக்கும் விசாவுக்கு 1,3,6,12 மாதங்களுக்குப் பிரதான வங்கிகளின் பணவைப்பு Loan வசதி செய்து தரப்படும்.

077 363 7864

**காணி விற்பனைக்கு**

வல்வெட்டித்துறை. பருத்தித்துறை கடற்கரை வீதி பொலிகண்டியில் கடற்கரைக்கு முன்பாக 8 பரப்பு 14.60 குளி காணி உடைந்த வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கு உகந்த இடம் (J 2140)(12.18)

077 742 0240

**விற்பனைக்கு**

பிறவுண் வீதியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக அமைந்துள்ள நான்கு கடைகளும் சகலவசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடும் விற்பனைக்குண்டு. (J 2415)(14,17,18)

தொடர்பு : 077 233 6238

**க.பொ.த.உயரதர வணிகக்கல்வி வகுப்புக்கள்**

2017 (உ/த) பிரிவு. 'முகாமைத்துவம்'
ஆரம்பம் - 27.06.2016 திங்கள்
பிற்பகல் 5.00 மணி

2016 (உ/த) பிரிவு. 'அரசும் வணிகமும்'
ஆரம்பம்:- 29.06.2016 புதன்
பிற்பகல் 4.00 மணி

ஆசிரியர்:- V.K ரவீகரன்
32,பேரின்பநாயகம் வீதி,கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 704 6968

தற்போது யாழ்ப்பாண நகரிலும்..

# NSoft Academy

We Trust to Make You a Career

பதிவுகளுக்கு முந்துங்கள்

Register NOW!

- Spoken English
- IELTS
- Bachelor of Information Technology
- Higher National Diploma in Computing
- Industrial Training

For More Info

**NSoft Academy - Vavuniya**
Vairavarkovil Road,
Vairavapuliyankulam,
Vavuniya.
0244545061

**NSoft Academy - Jaffna**
320, 1st Floor,
Point Pedro Road,
Anaipanthy, Jaffna.
0214545293

www.nsoftedu.com
www.facebook.com/nsoftacademy

## ராஜா பிளாசா மாதிரிக் கிராமம்

### 15 வீட்டுத்திட்ட நன்கொடையாளர்

### கௌரவிப்பு விழா



**காலம்**
26.06.2016 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்**
காலை 8.30 மணி

**இடம்**
ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபம், கோண்டாவில்.

தலைமை: சா.பபிசன் (நிலைய செயலாளர்)

விழா நாயகர்கள்

வொன்மனப் பேராளன், செங்கைப்புரவோன், கல்விக் கொடையாளன்.

**உயர்திரு இராசையா குவேந்திரநாதன்**
**திருமதி. குவேந்திரநாதன் றஞ்சினிதேவி**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகத்தினர் -

அனுசரணை:-

# FIT OR FIGHT

Health & Fitness Centre

- உங்கள் விருப்பத்திற்கேற்ப உடலமைப்பை மாற்றிக்கொள்ள தனித்துவமான பயிற்சிகள் வழங்கப்படும்.
- உடல் வலிமையை அதிகரிப்பதற்கும் விளையாட்டுத்துறையில் உடற் தகுதியை மேம்படுத்துவதற்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.
- மெலிந்த உடலமைப்பைக் கொண்டவர்களும் உடல் பருமனானவர்களும் சீரான, உடலமைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிகள் மேற்கொள்ள முடியும்.
- நவீன வசதிகள் கொண்ட உடற்பயிற்சி உபகரணங்களுடன் போதிய இடவசதி கொண்ட உடற்பயிற்சிக்கூடம்.



புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் கிழக்கு.
தொ.பே: 077 8817436, 077 9500146

**வேலைவாய்ப்புக்கள்**

இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் வேலைவாய்ப்புக்களை உங்கள் மொபைலில் SMS மூலம் பெற
REG <இடைவெளி> JOBS என டைப் செய்து 77010இற்கு SMS அனுப்புங்கள்.

தொடர்புகளுக்கு: 076 767 7222

**ஆங்கிலம் மற்றும் சிங்களம் கற்பதற்கான வகுப்புக்கள்**

அனைவரும் ஆங்கிலம் மற்றும் சிங்களம் கற்றிடப், பேசிட, எழுதிட உங்களுக்கோர் அரியவாய்ப்பு. தேர்ச்சி பெற்ற குருக்கள் (Catholic Priests) மற்றும் ஆசிரியர்களால் நடத்தப்படும் இந்த வகுப்புக்களில் ஆசிரியர்கள், அலுவலர்கள், வேலை வாய்ப்புக்களுக்காக காத்திருப்போர், க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரம் கற்று விட்டு இருப்பவர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

முகவரி: கிளாரட் அகம்
இல.15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
வகுப்புக்கள் நடைபெறும் நேரம்: சனி, ஞாயிறு முற்பகல் 10.00 - 12.00

மேலதிக தகவல்களுக்கு : 077 375 3776

**கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தி (2Weeks Result)**

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
**Herbal Whitening Cream**
Cream விலை 2500/-.5500/-
முகப்பரு, கண் கருவளையம், முகச்சுருக்கம், உதடு கருப்பு, முதுகு கழுத்து கருப்பு, கை கருப்பு மற்றும் முகம் தாடைகளிலுள்ள தேவையற்ற ரோமங்களை அகற்றும் கிறீம் முகம் , உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாள்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு.
எங்களிடம்
மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை ,டொனிக், பால்மா, தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.
077 210 6155
221, நாவலர் றோட்,
(பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

**உள்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

வேலை தேடும் உங்களுக்கான ஒரு அரிய வாய்ப்பு எமது D&D நிறுவனத்தினூடாக உங்களுக்கான அரிய உள்ளூர் வேலைவாய்ப்புக்கள்

- மேசன் • கூலித் தொழிலாளி • பணிமனை • பணிப்பெண்
- உதவியாளர் • அழைப்பு மையம் • விநியோக இயக்கி

தனியார் கப்பல் நிறுவனத்திற்கு

- வெல்டர் • சுத்திகரிப்போர் ( கிளீனர் ) தேவை

முன் அனுபவம் தேவையில்லை,மேலதிக வேலை நேரம்,உணவு,தங்குமிடம் வழங்கப்படும்

அழைப்பு மையம் (Call Center ) • முன் அனுபவம் தேவையில்லை.

மேலதிக வேலைவாய்ப்புக்கள் நீங்கள் விரும்பத்தக்க உங்களுக்கு ஏற்ற வகையான உடனடி வேலைவாய்ப்புக்களுக்கு கீழ் காணும் முகவர் நிலையத்திற்கு நாடவும்.

Registration No : WA205788
S.Prathaban
292B 2/1,Havelock Road,Colombo - 05.
Mob : 0727500002 ,Tel : 0112552598
Hotline : 0727200005, 0727300005

max adz

**வேலைவாய்ப்பு**

பிரசித்திபெற்ற Ticketing நிறுவனமொன்றுக்கு பணியாளர்கள் தேவை. Ticketing வேலையில் பயிற்சியுள்ள, பயிற்சியற்ற O/L, A/L கல்வித் தகைமையுள்ள ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். வயதெல்லை 19 தொடக்கம் 45 வரை. சம்பளம் OT யுடன் 28,000/= வரை வழங்கப்படும். எமது அலுவலக பிரதேசங்கள் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை.

உடன் தொடர்புகளுக்கு:
071 087 4467, 076 962 9160

## போதைப் பொருளுக்கு எதிராக உணவு தவிர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் போதைப் பொருள்களுக்கு எதிரான அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் காலை 8 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை சங்கானை பஸ் நிலையத்தில் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினமான நாளை போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள உணவு தவிர்ப்புப் பேராட்டத்தை வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் ஆரம்பித்து வைப்பார். வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே நிறைவு செய்வார்.

(ற-ஐ-ரி)

## மது கொண்டு சென்ற நோயாளி கைது

சாவகச்சேரி,ஜூன்26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிக்குள் மது பானம் கொண்டு செல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டில் நோயாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுபவராவார்.

கடந்த வியாழக்கிழமை மாலை, வெளியில் உள்ள கடையில் உணவு வாங்கச் செல்வதாகக் கூறி அனுமதி பெற்றுச் சென்றார்.

வெளியே சென்று வந்தவரின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்டு, கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அவரைச் சோதனையிட்டார். அவரிடம் மதுபானப் போத்தல் காணப்பட்டது. வைத்திய சாலைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு மது பானப் போத்தல் கைப்பற்றப்பட்டது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. அவரது பணிப்பின்பேரில் பொலிஸார் நோயாளியைக் கைது செய்து, பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

(ற-ஐ-9)

# கர்ப்பிணிகளின் போசாக்குப் பொதியை மீளவும் சங்கங்களின் ஊடாக வழங்குங்கள்

## கிளிநொச்சி கூட்டுறவாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 26
கர்ப்பிணிகளுக்கான போசணைப் பொருள் விநியோக அனுமதியை ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து தனியாரின் கைகளுக்கு மாற்றி, கூட்டுறவுச் சங்கங்களை நலிவுறச் செய்யாதீர்கள். மீளவும் சங்கங்களுக்கே வழங்குங்கள். இவ்வாறு கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன அரசால் அறிமுகம் செய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கான போசாக்கு உணவு விநியோகத் திட்டத்துக்கான பொருள்கள், வடக்கின் பல மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

இந்த ஆண்டுக்கான விநியோகம் தற்போது ஆரம்பித்துள்ள நிலையில், பல இடங்களில் விநியோக அனுமதி தனியார் கடைகளிடம் வழங்கப்பட்டுள்ளன. இது நலிவடைந்து செல்லும் கூட்டுறவுத்துறையை மேலும் நலிவடைவதற்கு வழி வகுக்கும்.

விநியோக அனுமதியை இனி, கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"கர்ப்பிணிகளுக்கான போசாக்கு உணவு விநியோகத்தை முதலில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாகவே மேற்கொண்டு வந்தோம். பயனாளிகள் தாம் எவ்வேளையிலும் பெறுவதற்கு ஏற்ப அவற்றை விநியோகிக்குமாறு கோரிக்கை விடுத்தனர். தற்போது தனியார் கடைகளிடம் குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது" - என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ற-ஐ-101)

## நெல்சிப் திட்டத்தில் 5 வீதிகள் புனரமைப்பு


அச்சுவேலி, ஜூன் 26
வலி.கிழக்கு பிரதேச சபைப் பிரிவில் நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருந்த 5 வீதிகள் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

வாதரவத்தை பெரிய பொக்கணை வீதி 7.8 மில்லியன் ரூபா செலவிலும், நீர்வேலி மாலை வைரவர் வீதி 6.9 மில்லியன் ரூபா செலவிலும், அக்கரைக் கிராம இணைப்பு வீதி 9.2 மில்லியன் ரூபா செலவிலும், வளலாய் கந்தனார் வீதி 12.5 மில்லியன் ரூபா செலவிலும், ஆவரங்கால் சிவன் வீதிநெல்லியோடை வீதி அருளாவத்தை வீதி, ஆகியன 8.2 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன. (ற-ஐ-11)

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் பாலசிங்கம்

(முன்னாள் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் - வலிகாம வலயம்)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பாலசிங்கம் நேற்று (25.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - யோகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், தர்சன் (ஆஸ்திரேலியா), நிசாகன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், லுய்சியின் (ஆஸ்திரேலியா) அன்பு மாமனாரும், சறோஜினிதேவி (உரும்பிராய்), நாகேஸ்வரி (ஏழாலை), தவமணி (நீர்கொழும்பு), ரவிராஜ் (கனடா), மோகனராஜா (உரும்பிராய்), சந்திராதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணி, காலஞ்சென்ற வேலாயுதம், சிறீதரன், குமரவேள், சின்னத்தம்பி, நிர்மலா, சிவாஜினி, நவரட்ணராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51/4, 3ஆம் ஒழுங்கை,பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(J/2423) (11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

**021 221 2001**

## திறப்பு விழா

அச்சுவேலி, ஜூன் 26
ஆவரங்கால் நடராஜ இராமலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் பர்வதவர்த்தனி மண்டபத் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

ஆலயத்தில் நடைபெறும் அன்னதானப் பணியை மேற்கொள்ளுவதற்கு வசதியாக மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. சுப்பிரமணியம் கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகள் 150 லட்சம் ரூபா செலவில் இதனை நிர்மாணித்துள்ளனர்.

ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவர் அ.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில், கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினராக வலி கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர்ச. லலீசன் ஆகியோர் கலந்து கொள்வர். (ற-ஐ-11)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிராசா இராசகுமாரி



தோற்றம் 1951.05.11 மறைவு 2016.06.24

கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா இராசகுமாரி 24.06.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசாவின் அன்பு மனைவியும் கோபி, சரணி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.


(J/2420), (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 615 9154**

### சிவகுரு சபாபதிப்பிள்ளை (J.P)

(சமாதான நீதிவானும், பண்.பல.நோ.கூ.சங்க கிளைக் குழுத் தலைவரும், பண்டத்தரிப்பு, மாதகல் கிராமச்சபை அங்கத்தவரும்)



தோற்றம் 10.01.1934 மறைவு 24.06.2015

மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சபாபதிப்பிள்ளை 24.06.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - செல்லமுத்து தம்பதிகளின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இந்துமதியின் அன்புக் கணவரும், தயாபரன் (ஜேர்மனி), பத்துமாவதி, சிவகுருநாதன், காண்டீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகலா (ஜேர்மனி), லோபமித்திரா (கனடா), புஸ்பராணி ஆகி யோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சோபிகா, கேமலதன், தரணிகா, ஆதினி, கஜீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் போதி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் கிழக்கு,
மாதகல்
(C/22108) (11,17,18)

தகவல்:
குடும்பத்தினர்
சிவகுருநாதன் (மகன்)

## துஷ்பிரயோகங்களை கண்டித்துப் பேரணி

சாவகச்சேரி, ஜூன் 26
சாவகச்சேரிகைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கண்டித்து, கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது. நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பேரணி ஆரம்பமாகும். தென்மராட்சி பிரதேச செயலரிடமும், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் மனுக்கள் கையளிக்கப் படும்.

கண்டனப் பேரணியில் தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புகள் கலந்து கொள்ள வேண்டும் என்று வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் கேட்டுள்ளார். (ற-ஐ-9)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் விமலாதேவி கார்த்திகேசு

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வு இன்று (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

எங்கள் தாயாரின் இறுதி நிகழ்வில் நேரடியாக வந்து துயர்துடைத்த அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி அழைப்புக்கள் மூலம்துயரங்களைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், உணர்வோடு தோள் கொடுத்துதவிய உறவுகளுக்கும் இவ்வேளையில் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தங்களுக்கான நேரடியான அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்
077 171 9208 (சிவா - சுவிஸ்)
திருமதி கே.விஜயலட்சுமி 077 452 5496
(முதலமைச்சின் செயலாளர் (வ.மா)

(கே.2385) (13.19)

# மக்களின் கருத்துக்களுக்கமையவே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு மக்களிடம் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதனடிப்படையிலேயே புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

காலி வித்தியாலோக மகா பிரிவெனாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதி தெரிவித்ததாவது:

பொதுமக்களின் விருப்பத்திற்குப் புறம்பான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு அரசு தயாரில்லை. புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் இந்த நாட்டின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு, மக்களின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் ஆகியவை மேலும் வலுவடையச் செய்யப்படும். அதனை எந்தவகையிலும் சிக்கலானதாக ஆக்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை. அவ்வாறே நாட்டுக்குப் பொருத்தமான ஓர் அரசமைப்பை அறிமுகப்படுத்துதல் சட்டநிபுணர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட அனைவரதும் பொறுப்புமாகும்.

புதிய அரசமைப்பு மாத்திரமன்றி, அரசின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஊடகங்களில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகின்றன. சில நேரங்களில் அவை விசித்திரமானவையாகவும் உள்ளன. நாட்டின் அழிவுக்காக இணையத்தளம் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தக் கூடாது - என்றார். (வ-5)

# ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு மங்களவின் அறிவிப்பு முரணானது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒஸ்லோவில் தெரிவித்திருக்கும் கருத்தானது, ஜனாதிபதி வலி.வடக்கு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு முரணானது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நோர்வேக்குப் பயணம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒஸ்லோவில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியிருந்தார். அதில், வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகளை 2018 ஆம் ஆண்டுதான் முழுமையாக விடுவிக்க அரசு திட்டமிட்டுள்ளது எனத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசின் பங்காளர்களான தமிழ் மக்கள் வாக்களித்தது தமது அடிப்படை வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு உடன் தீர்வு கிட்டும் என்ற எதிர்பார்ப்பில்தான்.

இதன் பிரகாரம் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்திருக்கின்றனர். இதில் வலி. வடக்கிலுள்ள 5 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் இன்றும் 32 முகாம்களில் தவிக்கின்றனர்.

இவர்களை அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்த அனைவரும் முயன்று வரும் நிலையில், ஜனாதிபதி கடந்த ஆண்டு இறுதியில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஓர் உறுதிமொழியை அளித்திருந்தார். வலி. வடக்கு மக்களை 6 மாதகாலத்தில் சொந்த இடத்தில் குடியமர்த்துவதாகக் கூறினார். இதனை நம்பி ஆறு மாதம் கடந்து விட்ட பின்பும், மக்கள் காத்திருக்கும் நிலையில் மங்களவின் அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இந்த வாரம் 700 ஏக்கர் விடுவிக்கப்படும் எனவும் 2018ஆம் ஆண்டுக்கு முன்பு மேலும் 4 ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்படுவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும் மங்கள சமரவீர ஒஸ்லோவில் தெரிவித்தார். இந்த அறிவிப்பு தமிழ் மக்களை கவலை கொள்ள வைக்கும் ஓர் அறிவிப்பாகும்.

இந்த வாரம் 700 ஏக்கர் விடிவிப்பதாக கூறப்பட்ட போதிலும், நேற்றைய தினம் வலி.வடக்கில் 201 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே இவை தொடர்பில் விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடவுள்ளோம் - என்றார். (வ-101)

# மன்னார் வீட்டுத் திட்டத்தில் நேற்று அடிக்கல் நடப்பட்டது

மன்னார், ஜூன் 26

மன்னார் மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் வீட்டுத்திட்டம் வழங்கப்படுகின்றது. இதில் முதலாவது வீட்டுக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 261 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதே பிரிவில் பெரியகடை கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கான வீட்டுக்கே நேற்று அடிக்கல் நடப்பட்டது.

மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் ரிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-4,56)

**காணி விற்பனைக்கு உண்டு**
மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் (சோடாக் கம்பனி ஒழுங்கை அருகில்) 21/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 753 2994

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் 12 பரப்பு காணி உறுதியுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணி பிரித்தும் கொடுக்கப்படும் தரகரும் தொடர்பு கொள்ளலாம்.
Foresight's
0710 805 355

**வீடு வாடகைக்குத் தேவை**
உத்தியோகத்தர்கள் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு வலிகாமம் அல்லது யாழ் நகரப்பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (J 2429)(14,17,18)
தொடர்பு : 077 922 7780

**வீடு விற்பனைக்கு**
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர் இல்லை (c 22102)(12.18)
077 594 5478, 021 225 0448

**வீட்டுப்பணிப் பெண் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை பார்க்கக் கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட வேலையாள் தேவை. (J 2429)(14,17,18)
077 300 0299/ 077 722 4942

**வேலை ஆள்கள் தேவை**
கடையில் வேலை செய்யக் கூடிய படித்த பெண்பிள்ளைகள் தேவை (c 22102)(12.18)
077 159 5826

**காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு**
வாலையம்மன் கோயிலடி திருநெல்வேலி கிழக்கு - யாழ்ப்பாணம். (J 2440)(14,17,18)
077 113 3229

**யப்பான் சைக்கிள் விற்பனைக்கு**
யாழ் மண்ணில் மீண்டும் உதயம்
Original japan Ladies and Gents
சைக்கிள் மலிவு விற்பனைக்குண்டு.
நேரடியாக இறக்குமதியாளர்
தொடர்பு: றாசிக் சைக்கிள் பசார்
077 790 5333

**கடை வாடகைக்கு**
நல்லூர் கோயிலுக்கு அருகில் செட்டித்தெரு வீதியில் 20அடிX12அடி அளவுள்ள கடை வாடகைக்கு உண்டு. (J 2445)(17,19)
தொடர்பு: 021 2225683

**வாகனம் விற்பனைக்கு**
HG தொடரிலக்கமுடைய Mitsubichi Badda விற்பனைக்குண்டு.
* Driver's தேவை.
தொடர்பு:076 603 6597

யாழ்.பிரபல ஹோட்டலுக்கு Waiters தேவை.
தொடர்பு: 077 970 0385

ஜுலை 09,10 வவுனியா நகரில்......
Natural Hair Transplant & Hair Treatment
Proven Results
(Hair restoation)
வழுக்கை தலை, தலை முடி குறைவு அல்லது அடர்த்தியின்மை, இளநரை, கதிர்சிகிச்சை மற்றும் நோய் சம்பந்தப்பட்ட முடி உதிர்வு, நவீன சிகிச்சை மூலம் முடி வளர வைக்க சிறந்த முறை



Before After Before After
ஆண்,பெண் அனைவருக்கும்
கண் புருவம் வளர்ச்சிக்கு நிரந்தரமான தீர்வு.
✓ பக்கவிளைவற்றது ✓ முடி பரிசோதனை
✓ பாதுகாப்பானது ✓ சிறந்த பலன்
✓ வலி இல்லை ✓ குறைந்த கட்டணம்
H CARE CLINIC
OPEN DAILY
No.252,SEASTREET, NEGOMBO
Tel : 0771556305

**வீடு வாடகைக்குத் தேவை**
வைத்தியருக்கு சில மாதங்கள் தங்கியிருப்பதற்கு சிறிய வீடு / அனெக்ஸ் விரும்பத்தக்கது.
077 907 9888 (11.17.18)

**காணி விற்பனைக்கு**
கொக்குவில் மேற்குப் பகுதியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 7111716, 021 2213262

**வீடு வாடகைக்கு**
யாழ் நகரில் இருந்து (500m) அண்மையில் 8 அறைகள் கொண்ட வாகன தரிப்பிட வசதியுடன் நிறுவனம் அல்லது Store ஆகியவற்றிற்கு தகுதியான மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
077 257 5214

**யாழ் நகர மத்தியில் மாடி வீடு வாடகைக்கு உண்டு**
10 அறைகள் வாகன தரிப்பிடம் மற்றும் சகல் வசதிகளுடனும் உண்டு அரச. தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது
Foresight's
தொடர்பு: 0777 813 646

**வேலைவாய்ப்பு**
இல்லாமல் உள்ளதா? இதோ எம் நாட்டின் தலைநகரான கொழும்பில் உள்ள விமான நிலையத்தில் வேலைவாய்ப்பு Basic ரூ. 25000-35000 மூன்று மாத காலங்களின் பின்னர் ரூ. 55000 - 75000 இற்கு மேல் வழங்கப்படும் வயது 18 - 40 உணவு, தங்குமிடம் இலவசம். இன்றே தொடர்பு களுக்கு
077 251 155, 075 060 6968

நண்பர்களே இன்று வேலை தேடி அலையத் தேவையில்லை. குறைந்த உழைப்புக்கு கூடிய வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். எமது புதிதாக திறக்கப்படும் தொழிற்சாலைக்கு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. லேபல், பொதியிடல்,களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு (நாள் சம்பளம் Rs. 1500) கிழமை சம்பளம் மாத சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். உணவு,தங்குமிடம், ஆடை முற்றிலும் இலவசம். 6 மாத காலம் தொடர்ந்து நீங்கள் வேலை செய்தால் சம்பளத்திற்கு மேலதிகமான (Rs 25000) போனஸ் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும் (முன் அனுபவம் தேவையில்லை)
077 401 7543, 070 210 4871

இலங்கையில் பிரசித்திபெற்ற ஐஸ்கிறீம்,ஜேம், சொக்லட், நூடில்ஸ்,பால்மா,பிஸ்கட், ரொப்பி இவ்வனைத்து உற்பத்தி செய்யும் கம்பனிகளுக்கு வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். ஒரு நாளைக்கு 1200/= கிழமை சம்பளம் 10.000/= மாத சம்பளம் 35000/= ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். வயது 18 முதல் 55 வரை வரும் நாளிலே வேலைக்கு சேர்க்கப்படுவீர்கள்.
071 147 5324 , 077 494 3502

பொய் வார்த்தைகளை நம்பி ஏமாறவேண்டாம். நாள் சம்பளம் 1600 (With Ot) உணவு, தங்குமிடம் இலவசம் 18 - 50 ஆண்,பெண் இருபாலாரும் தேவை. நாள் சம்பளம் கிழமை சம்பளம் உண்டு வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு
077 277 0023, 077 392 2611

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




மஜெஸ்டிக் பனோரமா
10.00 / 1.00 / 7.00
Fri/Sat/Sun 9.30 p.m
3D 4.00 p.m




சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m



பிரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

**தவறிவிட்டது**
இராசரத்தினம் பிரசாத் என்பவருடைய தே. அ.அட்டை (891313004V). சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரிப்பத்திரம் என்பவற்றுடன் பேஸ் ஒன்று நேற்று மாலை 5 மணியளவில் நல்லூருக்கும் இருபாலைக்கும் இடையில் தவறி விட்டது.கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 748 1625

**விற்பனைக்கு**
Robin நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு. Brand New Japan Robin - M 200, 2x2 /HP 3.0
ஒரு வருட உத்தரவாதம்
077 746 0447

IPS
Institute of Professional Studies
இலவச கணினி வகுப்புக்கள்
பாடசாலை மாணவர்கள், O/L, A/L பரீட்சைக்கு தோற்றியவர்கள், நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள், தொழில் புரிபவர்களுக்கு ஏற்ற
★ Diploma in MS-Office
★ Diploma in Internet Technology
பிரிவுகள் ஆரம்பம் 02,03/07/2016
சனி, ஞாயிறு
பெறுமதிமிக்க சான்றிதழ் காலம் : 3 மாதங்கள்
English Courses
(I) Spoken English - ஆங்கிலத்தில் சரளமாக உரையாட அடிப்படையிலிருந்தான பிரிவு
(II) Diploma in English - Writing, Speaking Listening, Grammer
உள்ளடங்கலாக அடிப்படையிலிருந்து
★ சான்றிதழ் ★ காலம்: 3மாதங்கள் ★ வாரத்தில் 4 நாள்கள்
IPS Thirunelvely
0766852529

# வெளிநாடே உங்களுக்கு இலக்கெனில் நாம் எதற்கு இங்கு போராடவேண்டும்?

## இளைஞர்களிடம் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேள்வி

அச்சுவேலி, ஜூன் 26

"எமது இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதாயின் நாம் ஏன் போராட வேண்டும்? அரசு செய்வதைச் செய்யட்டும் என பார்த்துக்கொண்டிருக்கலாமே?" இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கோண்டாவில் ராஜா பிளாசா நிறுவன உரிமையாளர் இராசையா குவேந்திரநாதன் 15 வீடுகள் கொண்ட ராஜா பிளாசா மாதிரிக் கிராமத்தை மூன்றரைக் கோடிரூபா செலவில் அமைத்துள்ளார். அங்குள்ள வீடுகளை பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் இடம் பெற்றது. இந்த நிகழ்வின் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"குவேந்திரநாதனின் செயல் பாராட்டுக்குரியது. இதே போன்று ஏனையோரும் செய்ய முன்வர வேண்டும். இத்தகைய வேலைத் திட்டங்களை வன்னிப் பிரதேசத்திலும் மேற்கொள்ள முன்வர வேண்டும்.

தனவந்தர்கள் பொருள் படைத்தவர்கள் தாராள சிந்தனையோடு நின்று நிலைக்கத்தக்க, பெயர் விளங்கத்தக்க உதவிகளை சமூகத்துக்கு வழங்க முன்வர வேண்டும். உதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் பெற்ற உதவிகளை மூலதனமாகக்கொண்டு, தங்களது சுய முயற்சி மூலம் முன்னேறுவதோடு தாங்களும் இயன்றளவு சமூகத்துக்கு உதவ வேண்டும். சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக வாழத் தலைப்பட வேண்டும்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு- பாதிப்புக்களுக்கு உள்ளாகிய எங்களை நாங்களே பாதுகாக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. எமது பிரதேசத்தில் இருந்து இடம் மாற்றப்பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் எமது பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் மூலம் எமது பிரதேசத்தில் வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் இருந்து பல தொழிற்சாலைகள் இடம் பெயர்ந்துள்ளன. அவை மீண்டும் வடக்கில் செயற்பட வகை செய்யப்பட வேண்டும், தொழில் அதிபர்கள் முன்வரவேண்டும். எமது இளைஞர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றனர். என்னை புதன்கிழமை தோறும் அலுவலகத்தில் சந்திக்கும் இளைஞர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கு முயற்சிக்கின்றேன். அதுவரை ஒன்று இரண்டு வருடங்கள் வேலை செய்வதற்கு தொழில் வாய்ப்புத் தாருங்கள் என கேட்கின்றனர். இளைஞர்களே நீங்கள் வெளிநாடு சென்றால் நாம் எதற்காக அரசுடன் போராட வேண்டும்?

வன்னியில் பெருமளவில் பாதிப்புக்களுக்கு உள்ளாகியவர்கள் வாழ்கின்றனர். உடல் அவயங்களை இழந்தவர்கள், முள்ளந்தண்டு பாதிப்புக்கு உள்ளானவர்கள், கண் பார்வை இழந்தவர்கள் பெருமளவில் நாளாந்தம் அல்லல்படுகின்றனர். அவர்களுக்கும் நாம் உதவ வேண்டும். வன்னிமக்களைபாதுகாக்கவேண்டியது - அவர்களுக்கு உதவ வேண்டியது எமது பொறுப்பாகும்.

சுய பொருளாதார கட்டமைப்புக்களை, கைத்தொழில் முயற்சிகளை உருவாக்கி எமது வாழ்க்கைத் தரத்தை மேல்நிலைப்படுத்த வேண்டும். இத்தகைய முயற்சிகளுக்கு சுழற்சி முறைக் கடன் திட்டங் களை ஆரம்பித்து நடைமுறைப் படுத்தலாம். அதன் மூலம் சமூக மறுமலர்ச்சி ஏற்படும். உள்ளூரிலேயே தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

முதலமைச்சர் நிதியம் செயற்படத் தொடங்கியதும் உள்நாட்டு வெளிநாட்டு உதவிகளை நிதியத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம். அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளலாம்"- என்றார். (ற-ஐ-4,11)

### கல் அகழ்ந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26

சட்ட விரோதமாகக் கல் அகழ்ந்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய வாகனங்கள், இயந்திரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குற்றத்தடுப்பு இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் கனியவளங்கள் மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்தின் அனுமதி இன்றி அவர்கள் கல் அகழ்வில் ஈடுபட்டமை தெரிய வந்தது. சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4,107)

### முதியோர் மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கை முதியோர் சுக வாழ்வு கழகத்தின், முதியோர் மாதாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் மருத்துவம், உடல் நலம், மனநலம், உளவியல், ஆன்மிகம், முதியோர் சுக வாழ்வு முறைமைகள், வழி காட்டல்கள் பற்றிய விரிவுரைகளும், கலந்துரையாடல்களும் இடம்பெறும். (ற-ஐ-ரி)

### பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும். (ற-ஐ-ரி)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கொழும்புத்துறை ஆத்திப் புலம் ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் குருமாரின் ஆசீர்வாதம், ஆசியுரைகள், கலைஞர் கௌரவிப்பு, மகேஸ்வர பூசை என்பன நடைபெறும். (ற-ஐ-17)



பூநகரி மண்டக்கல்லாறுப் பகுதியில் பயணித்த டிப்பர் வாகனம் நேற்றுத் தடம் புரண்டு மதகு ஒன்றுக்குள் கவிழ்ந்தது. சாரதி தூங்கியதால் வாகனம் தடம்புரண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ற-ஐ-101)

### பப்பாசிப்பழத்தின் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜூன் 26

முழங்காவில் பகுதியில் பப்பாசிப்பழத்தின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது. "நாம் பெரும் நட்டத்தை எதிர்கொள்கின்றோம்'' என்று பிரதேச விவசாயிகள் தெரிவித்தனர்.

முழங்காவில் விவசாயிகள் மரக்கறிவகைகளுடன் வாழை, பப்பாசி , வெற்றிலை என்பவற்றையே அதிகம் பயிரிட்டனர். தற்போது நிலவும் கால நிலையால் பப்பாசிப் பழங்களின் விலை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

கடந்த ஆண்டு பப்பாசி கிலோ ஒன்று 30 ரூபா முதல் 40 ரூபா வரை விற்பனையானது. இந்த ஆண்டு 10 ரூபா முதல் 15 ரூபா வரையே விற்பனையாகின்றது. இதனால் விவசாயிகள் பெரும் நட்டமடைகின்றனர். .

கடந்த இரு மாதங்களின் முன்பு பெய்த மழை காரணமாக போக்குவரத்துச் சீரின்மை மற்றும் கன மழையால் ஆயிரக்கணக்கான பப்பாசிப் பழங்கள் கால்நடைகளுக்கே உணவாக்கப்பட்டன- என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ற-ஐ-101)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகோரி வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு

வவுனியா, ஜூன் 26

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலையை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் வவுனியாவில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கமும், வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவும் இணைந்து போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன. வவுனியா மத்திய பஸ் நிலையம் முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது.

"இலங்கை அரசின் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் - படுகொலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலைமாறு கால கட்ட நீதிப் பொறிமுறையானது ஒரு அனைத்துலக ஏமாற்று நாடகமாகவே உள்ளது.

கடந்த காலப் போரில் சரணடைந்த மற்றும் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட உறவுகளுக்கான நிரந்தரமான முடிவு இன்று வரை தெரிவிக்கப்படவில்லை. எமது உறவுகளை எங்களிடம் ஒப்படைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்பதற்காகப் பல தடவைகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டோம். ஈடுபட்டுகொண்டிருக்கின்றோம். பதில்கள் எவையும் வழங்கப்படவில்லை. தேர்தல் காலங்களில் தமிழ் மக்கள் மத்தியில் வழங்கிய வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை.



இந்த அரசும் நாடகமாடுகின்றது. எங்களுடைய உறவுகளை மீட்டுத் தாருங்கள். இனியும் போராடுவதற்கு சக்தியில்லை'' - என்று தெரிவித்தனர் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.

போராட்டத்தில் சுமார் 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை.

இந்தப் போராட்டம் நண்பகலுடன் நிறைவடைந்தது. போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப் பட்டவர்களுடைய உறவினர்கள், வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினர் வவுனியா பஸ் நிலையத்தில் நடைபெற்ற மற்றுமொரு போராட் டத்துக்கு ஆதரவு வழங்கி அதிலும் கலந்து கொண்டனர். (ற-ஐ-2)

# அனல்மின் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம்

## வவுனியா பஸ் நிலையம் முன்பாக நேற்று நடத்தப்பட்டது

வவுனியா, ஜூன் 26
திருமலை மக்களின் காணியை அபகரித்து சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதைக் கண்டித்து வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.
வவுனியா சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பு போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. பஸ் நிலையம் முன்பாக முற்பகல் 10 மணிக்கு போராட்டம் ஆரம்பமானது.
போராட்டத்தை ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:



**வாழ்விழப்பு**
திருகோணமலையில் அமைந்துள்ள பொருளாதார வளம் நிறைந்த மூதூர் பகுதியில், சம்பூர் எனும் இடத்தில் 505 ஏக்கர் நிலப்பகுதி இந்தியக் கம்பனி ஒன்றின் இலாபத்துக்காக வழங்கப்பட்டுள்ளது. சம்பூர் மக்களின் பூர்வீக நிலமும் வாழ்வாதாரமும் பறிக்கப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்து வரும் விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், பழங்குடிகள் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.
நிலக்கரி அனல் மின்நிலையம் அமைக்கப்படும் பட்சத்தில் பெரிய சூழல் பாதிப்பை திருகோணமலை எதிர்நோக்கும்.

**சுவாச நோய்கள்**
நிலக்கரியிலிருந்து கழிவாக வரும் சாம்பல் கழிவுகளும், அதிகூடிய காபனீரொட்சைட்டும், சுவாச நோய்களை ஏற்படுத்தும். திருகோணமலை உட்பட வடக்கு - கிழக்குப் பகுதிகள் அதனைச் சுற்றியுள்ள ஏனைய இடங்கள் கடும் வெப்பச்சூழலாக மாறிவிடக்கூடிய அபாயநிலை தோன்றும். அதனைச் சுற்றியுள்ள 5 கிலோ மீற்றர் தூரத்தில், மக்கள் தங்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகளை அப்புறப்படுத்த வேண்டிய உடனடித் தேவை உருவாகும். 5 கிலோ மீற்றருக்குள் 5 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் எங்கே இடம் பெயர்வது என்பது மிகப் பெரிய பிரச் சினையாக மாறி நிற்கும்.

**வெப்பப் பாதிப்பு**
சம்பூர் மீனவர்களுடைய மீன்பிடித் தளங்கள் இழக்கப்பட்டு, மீன்பிடி இறங்குதுறைகளும் பறிக்கப்படும். 505 ஏக்கர் நிலப்பரப்புக்குள், 110 ஏக்கர் வயல் காணிகளும், 8குளங்களும், 41 குடியிருப்புக் காணிகளும் பறிக்கப்பட்டுள்ளன. அதனைச் சுற்றியுள்ள மக்களும் அதீத வெப்பம் காரணமாக வெளியேற வேண்டிய தேவையும் ஏற்படும்.

**உலகில்தடை இங்குஅனுமதி?**
உலக நாடுகள் அனைத்தும் உலகம் வெப்பமயமாதலைத் தடுக்க, நிலக்கரி அனல் மின் நிலையங்களுக்கு தொடர்ந்து மூடுவிழா நடத்துகின்றன. திருகோணமலையில் நிறுவுவதற்கு அனுமதிப்பது ஏன்? பல்தேசியக் கம்பனிகளின் இலாபத்துக்காக மக்களின் சுற்றுச்சூழலையும் இருப்பிடத்தையும், வாழ்வாதாரத்தையும் நாசப்படுத்த முனைவது ஏன்?
சம்பூர் மக்கள் கடந்த 10 வருடங்களாக போரால் முகாம் வாழ்வை அனுபவித்தவர்கள். மீண்டும் அவர்களை நடுத்தெருவில் விட நல்லாட்சி அரசு விரும்புகின்றதா? இதுபற்றி ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய் திறக்க மறுக்கின்றது?- என்றனர்.
போராட்டத்தில் வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினருடன் வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவினர், கடத்தப்பட்டு காணாமற் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த பொது அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(ற-ஜ-21)

### சட்டவிரோதமாக வேப்ப மரக்குற்றிகள் ஏற்றியவர் கைது

தென்மராட்சி, ஜூன் 26
அனுமதிப் பத்திரமின்றி வேப்ப மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறியின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து வரணி மாசேரிப் பகுதியில் பயணித்த லொறி சோதனையிடப்பட்டது. அதற்குள் இருந்து வேப்ப மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. பொலிஸார், சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். விசாரணைகளின் பின்னர், விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-9)



தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையிலான 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வின் இறுதிப் போட்டிகள் நேற்று சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றன.(ற-ஜ-9)

### சமுதாய சீர்த்திருத்த கட்டளைக்கு உட்பட்டோருக்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26
பருத்தித்துறை நீதிமன்ற சமுதாய சீர்திருத்தப் பிரிவால் சீர்திருத்தத் தண்டனைக்கு உட்பட்டவர்களுக்கான சர்வதேச போதை பொருள் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.
காலை 9 மணிக்கு பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் பருத்தித்துறை நீதிமன்ற சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் சி.இதயதீபன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. பிரதம விருந்தினராக பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி, நீதிமன்றப் பதிவாளர், பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கரவெட்டி பிரதேசசெயலகநன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.
சீர் திருத்தக் கட்டளைக்கு உட்பட்ட 60 பேரும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த வருடத்தில் 92 பேர் பருத்தித்துறை நீதிவான் மன்றால் சீர்திருத்தக் கட்டளைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மதுபாவனையால் 53 பேரும், கசிப்பு பாவனையால் 26 பேரும் சீர் திருத்தக் கட்டளைக்கு உட்பட்டிருந்தனர்.
(ற-4,26)

## சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு தனியார் நிறுவனங்களால் ஏமாற்றம்

### அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 26
நாம் சமூக பாதுகாப்புப் பணிகளைச் சரியாக செய்யவில்லை. சிறுதொழில் முயற்சியாளர்கள் பலர் தனியார் நிறுவனங்களின் விளம்பரங்களை நம்பி ஏமாந்துள்ளனர். இலகு கடனைத் தருவதாகக் கூறி ஆலோசனை வழங்கும் பல நிறுவனங்களிடம் ஏமாந்துள்ளனர்.
இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கா தெரிவித்தார்.
யாழ். கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாட்டில் தொழில் அதிபர்களைத் தவிர ஏனைய 92 வீதமான மக்களுக்கு நிதித் தேவை ஏற்பட்ட வண்ணமே உள்ளது. ஆனால் சிறிய நிதித் தேவையை முழுமை செய்வதற்குக் கடன் பெற பிணையாளிகள் தேவைப்படுகின்றனர். பிணையாளிகளே இல்லாமல் கடன் வழங்கும் வேலைத்திட்டம் சமுர்த்தி வேலைத் திட்டத்தில் மட்டும் உள்ளது.
அந்த வேலைத்திட்டம் 10 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவற்றை நடைமுறைப்டுத்தப்படாத காரணத்தால் வேறு நிறுவனங்கள் கடன் கொடுப்பதற்கு முன்வந்தன. தற்போது கடன் வழங்குவதற்காக ஏறத்தாழ 29 நிறுவனங்கள் இலங்கையில் உள்ளன.
அரசியல் வாதிகளும் கடன் வழங்கும் நிறுவனத்தை ஆரம்பித்தனர். குறித்த நிறுவனங்களில் அதி கூடிய வட்டிவீதம் அறவிடப்படுகிறது. மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அந்த நிலையை மாற்ற வேண்டும். சமுர்த்தி வேலைத்திட்டத்தில் வறுமை ஒழிப்பு வேலைத் திட்டமும் உள்ளடங்கப்பட்டுள்ளது. ஆனால் செயற்படுத்துவது குறைவாகவுள்ளது.
இந்தத் திட்டத்தில் 143 பில்லியன் ரூபா சேமிப்பிலுள்ளது. ஆனால் அதில் 30 வீதமான தொகையே பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மிகுதித் தொகைகளை மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிகளில் நிலையான வைப்புச் செய்துள்ளோம்.
கல்விக்காகப் பல உதவிகளை மேற்கொண்டு வரும் நிலையில், பல்கலைக்கழகங்களுக்குச் செல்வதைத் தவற விட்ட மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம். உத்தியோகத்தர்களுக்குத் திடீர் தேவை அடிப்படையில் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா கடன் வழங்கவுள்ளோம் -என்றார். (ற-ஜ-4,101,106)

# இராணுவத்துக்கு மட்டும் மின்சாரம் நாங்கள் மட்டும் இருளில் வாழ்வதா?

## விநாசியோடைக் கிராம மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூன் 26

கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. எமது வீடுகளுக்கும், பாடசாலைகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இராணுவத்துக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. பாடசாலைக்கு வழங்கப்பட்டு வந்த மின் இணைப்பை மின்சார சபையினர் துண்டித்துள்ளனர். இவ்வாறு விநாசியோடை, கௌதாரிமுனை மக்கள் குற்றஞ்சாட்டினர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விநாசியோடைக் கிராமத்தில் 119 குடும்பங்கள் வாழ்கின்றன. 70 குடும்பங்களுக்கு கடந்த காலங்களில் வீட்டுத் திட்டங்கள் ஊடாக வீடுகள் வழங்கப்பட்டன. அவற்றில் 15 வீடுகளில் மின்சுற்று வேலைகளும் முடிந்துள்ளன. இன்று வரை எவருக்கும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

கடந்த மார்ச் மாதம் பாடசாலைக்கும், இரு வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. பனை ஒன்று முறிந்து விழுந்ததை அடுத்து அவையும் துண்டிக்கப்பட்டன. எமது கிராமத்துக்கு மின் வழங்கப்பட்டுள்ளது. எமக்கு மேலாக மின் கம்பிகள் செல்கின்றன. எமக்கு மின் இணைப்பு வழங்குகிறார்கள் இல்லை. அயல் கிராமமான வெட்டுக் காட்டுக்கு சீரான மின் விநியோகம் நடைபெறுகின்றது. அங்குள்ள இராணுவ முகாமே அதற்குக் காரணம். அங்குள்ள இரு பெரிய இராணுவ முகாம்களுக்கு கிராமத்தின் ஊடாகவே மின் இணைப்பு செல்கின்றது.



இராணுவத்துக்கு என்றால் மட்டும் மின்சாரம் வழங்குகின்றனர். மக்களைப் புறக்கணிக்கின்றார்கள். எமது பிள்ளைகள் குப்பி விளக்கில் படிக்கும் நிலையே தொடர்கின்றது - என்று அந்தக் கிராம மக்கள் விசனத்துடன் தெரிவித்தனர்.

இராணுவத்தினருக்காக மின் வழங்கப்படவில்லை. அங்குள்ள இராணுவ முகாமுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. பனை மரம் அண்மையில் முறிந்து விழுந்தது. அது சீர் செய்யப்படுகின்றது. தடை ஏற்பட்ட பிரதேசத்துக்கு அப்பால் இதுவரை யாருக்கும் மின் இணைப்புக் கிடையாது - என்று தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர்.

பாடசாலைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு துண்டிக்கப்பட்டது என்ற செய்தி தவறானது என்று அவர் தெரிவித்தார். பாடசாலைக்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்றார்.

பாடசாலைக்கு மின் இணைப்பு கடந்த மார்ச் மாத இறுதியில் வழங்கப்பட்டது. 70 யுனிற் மின்சாரம் உபயோகிக்கப்பட்டுள்ளது. பனை முறிந்து தடை ஏற்பட்டு இரு மாதங்களாகி விட்டன. மின்சார சபையினரிடம் இதுகுறித்து பலமுறை தெரியப்படுத்தப்பட்டது, இதுவே உண்மை. உரியவர்கள் வந்து நேரில் ஆய்வு செய்ய முடியும் - என்று கிராம மக்கள் தெரிவித்தனர். (ற-ஜ-101)

### விழிப்புணர்வு வாரம்

குருநகர், ஜூன் 26

இளைஞர், யுவதிகளுக்கான விழிப்புணர்வூட்டும் வாரம், இன்று தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை வரை ஒரு வாரத்துக்கு கடைப்பிடிக்கப்படவுள்ளது.

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை வண.பிதா. ஜே.ஜே மௌலிஸ் அடிகள் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இளைஞர், யுவதிகளை சமுதாயம் சார்ந்த விடயங்களில் அக்கறை கொள்ளச் செய்வதும், சிறந்த பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்கத் தூண்டுவதுமே விழிப்புணர்வு நிகழ்வின் நோக்கம் என்று அவர் தெரிவித்தார். (ற-ஜ-51)





புத்தூர் நவக்கிரி மஸ்கன் வீதியில் ராஜ பிளாசா மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 15 வீடுகள் அமைக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. கோண்டாவிலைச் சேர்ந்த ராஜா பிளாசா நிறுவன உரிமையாளர் இராசையா குவேந்திரநாதன் அந்த வீடுகளை அமைத்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவற்றைக் கையளிக்கும் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், மாகாணசபை உறப்பினர்கள் சிலர் மற்றும் பல விருந்தினர்கள் கலந்து கொண்டனர். (ற-ஜ-4,11)

### மணல் ஏற்றிய சாரதிக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

தென்மராட்சி, ஜூன் 26

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற சாரதிக்கு, சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில், அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிவந்த போது மறைந்திருந்த கொடிகாமம் பொலிஸார் சாரதியை கைது செய்தனர்.

சாரதியை நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். அங்கு சாரதி தன்மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார். (ற-ஜ-9)

### பொருள்களை அடையாளம் காட்டிப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில், யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பொருள்கள் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளன. உரியவர்கள் அந்தப் பொருள்களை உரிமை கோரிப் பெற்றுக்கொள்ள முடியும் என நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட ஈ.பி.கியூ.டி 4453 இலக்க நீலநிற ஒட்டோ, என்.பி.பி.பி.கே. 3230 இலக்க மோட்டார் சைக்கிள், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட கட்சொன் வர்க்க சிவப்பு நிற பெண்கள் சைக்கிள், லுமாலா வர்க்க கறுப்பு நிற, இலக்கமற்ற பெண்கள் சைக்கிள் என்பன மன்றில் உள்ளன. குறித்த வாகனங்களின் உரிமையாளர்கள், 6 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். (ற-ஜ-ரி)

# ஏமாறுபவர்களாகத் தமிழர் தொடர்ந்து இருக்கக்கூடாது

## அருட்தந்தை செலஸ்தீன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருந்து கொண்டே இருப்பார்கள். தமிழர்களாகிய நாங்கள் ஏமாறுபவர்களாக இருப்பதால் எங்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் அருட்தந்தை செலஸ்தீன்.

நவாலி புனித பேதுறு பாவிலு ஆலயத்தின் வருடாந்த நவநாள் கொண்டாட்டம் ஆலயத்தின் பங்குத்தந்தை ஜோய் பேடினன் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நான்காம் நாள் திருப்பலி நிகழ்வுகள் அருட்தந்தை செலஸ் தீனால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியில் மறையுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வாக்குறுதிகள் பல வழங்கப்படுகின்றன. வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் பல காற்றிலே பறக்கின்றன. எத்தனையோ பேச்சு இடம்பெற்றும் தீர்வுகள் பெற் றுத்தரப்படவில்லை. 26 வருடங்களாக சொந்த இடத்துக்குத் திரும்பிப் போக முடியாமல் எத்தனையோ மக் கள் ஏக்கப் பெரு மூச்சு விடுகின்றனர்.

இயேசு கிறிஸ்துநாதர் கோபம் கொண்டு ஜெருசேலம் தேவாலயத்தில் மோசடிக்காரரை கள்வர் குகை ஆக்காதீர்கள் என்று கூறி சவுக்குக் கொண்டு துரத்தினார். இன்று அவர் இருந்தால் என்ன செய்திருப்பார். அதை செய்ய எங்களுக்கு திராணியில்லை. பலமில்லை.

நாங்கள் சாதாரண பலி செலுத்தவே விரும்புகின்றோம். பலி என்பது என்ன அன்பானவர்களே? மக்கள் வாழ்வதற்காக எங்களை பலியாக்குவது. சிறிது காலத்துக்கு முன்னர் வாழ்ந்த இளைஞர்கள் நாங்கள் போகின்றோம் என்று கூறிச் சென்று மக்களுக்காக தங்களை பலியாக்கினார்கள். ஆனால் எங்களுக்கு நடந்தது என்ன? தங்களுடைய நலன்களுக்காக சர்வதேசம் எங்கள் மக்களை பலியாக்கியது. இறுதிப் போருக்காக பணத்திலிருந்து ஆயுதங்கள் என அனைத்தையும் வாரி வழங்கினர். இன்று இறுதிப் போரில் எவருமே சாகவில்லை என்று கூறுகின்றனர்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் தங்களுடைய நலன்களுக்காக தமிழ் மக்களுக்கு எதிரான சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே நாம் விழிப்பாக செயற்பட வேண்டும் - என்றார். (ற-103)

# நல்லாட்சி அரசை வீழ்த்த நாட்டில் சதி நடக்கின்றது

## நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் ஆதங்கம்

கொழும்பு, ஜூன் 26

அரசை வீழ்த்த நாட்டில் சதி இடம்பெறுகின்றது. இராணுவத்தில் இருந்து பாசிசவாத கொள்கையுடையவர்களும் இதற்குத் துணையாக உள்ளனர். இவர்களை உடனடியாகக் கண்டறிய வேண்டும்.

இவ்வாறு நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு தொடர்பில் மக்கள் மத்தியில் பொய் வதந்திகளை சிலர் பரப்புகின்றனர். அரசை வீழ்த்த சதி நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. சதித் திட்டங்களுக்குள், கடந்த அரசில் இராணுவத்தில் இருந்து, பாசிசவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் உள்ளனர். அரசுக்கு எதிரான சதி நடவடிக்கைகளுக்கு மறைந்திருந்து துணை போகின்றனர்.

கொஸ்கம, சலாவ இராணுவ ஆயுத களஞ்சியசாலை வெடிப்புக்கான காரணம் இதுவரை வெளிப்படவில்லை. இது சதி நடவடிக்கையாகவே இருக்க வேண்டும். அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயலா என்ற சந்தேகமும் தோன்றுகின்றது- என்றார். (ற-ஐ-5)

## கட்டுநாயக்கா தாக்குதல் வழக்கு 15 ஆண்டுகளின் பின் விசாரணை

கொழும்பு, ஜூன் 26

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. 15 வருடங்களுக்குப் பின்னர் வழக்கு விசாரணைக்கு வரவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி, பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

தாக்குதலில் 7 விமானப்படையினர் கொல்லப்பட்டனர். 14 படையினர் காயமடைந்தனர். போர் விமானங்களும் நிர்மூலமாக்கப்பட்டன.

தாக்குதல் தொடர்பில் தனபால சிங்கம் ஜெயலக்ஷ்மி, இரத்தினசிங்க புஷ்பகுமரன் அல்லது பொன்னுத்துரை, விக்டர் அல் பிறட் டொமினிக், நாகேந்திரம் நாகரத்தினம், நிர்மலா ரஞ்சன் அல்லது மசூர், சுப்பிரமணியம் நவராஜசிங்கம் ஆகியோர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது.

அனைவருக்கும் எதிராக சுமார் 311 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 415 பேர் சாட்சிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (ற-ஐ-5)

## மீனவர்கள் பிரச்சினையைப் பேச நிபந்தனை விதிக்கிறது இந்தியா

கொழும்பு, ஜூன் 26

இருநாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த இலங்கை மீன்பிடித்துறை அமைச்சுக்கு, இந்திய மீன்பிடித்துறை அமைச்சு நிபந்தனைகளை விதித்துள்ளது என்று தெரியவருகின்றது.

இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 24 மீனவர்களையும், 93 படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

நிபந்தனைகளுக்கு இணங்காத பட்சத்தில் இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தொடர்பில் பேச்சு நடத்தப்படாது என்று இந்திய மீன்பிடித்துறை அமைச்சு சார்பான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள இலங்கை மீனவர்கள் விடுதலை தொடர்பாக இந்திய மீன்பிடித்துறை அமைச்சு கருத்தும் எதுவும் வெளியிடவில்லை. (ற-ஐ-5)

## நிதி மோசடி விசாரணைப் பிரிவின் செயற்பாட்டில் அரசியல் தலையீடு

கொழும்பு, ஜூன் 26

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகளை முடக்க, அரசியல் உயர் மட்ட தலையீடுகள் இடம்பெறுகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ் சுமத்தியுள்ளது.

கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான அநுர குமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசால் ஏற்படுத்தப்பட்ட நிதி மோசடி பிரிவுக்கு, அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டன.

ஒருவரை விசாரணை செய்து கைது செய்வதற்கான அதிகாரங்கள் நிதிமோசடி பிரிவுக்கு உள்ள போதிலும், செயற்பாடுகள் செயலிழந்துள்ளன. அவற்றைச் செயற்படுத்த விடாது உயர் மட்ட அரசியல் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசைப் பாதுகாத்துக் கொள்ள சில முக்கிய புள்ளிகளின் கோவைகளை மூடிவிடுமாறு உயர் மட்டங்களிலிருந்து உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

(ற-ஐ-5)





## பதவி வெற்றிடங்கள்

கடந்த 28 வருடங்களாக சிறந்த காப்புறுதி சேவையினை சிறப்பாக வழங்கி வரும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் வடமராட்சி வாழ்மக்களுக்கு ஓர் சிறப்பான ஆயுட்காப்புறுதி சேவையைத் தொடர்ந்து வழங்குவதற்காக பருத்தித்துறை பிராந்திய அலுவலகத்திற்கு **AGENCY DEVELOPMENT OFFICER (ADO)** தரத்திலான பதவிகளுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்ட இருபாலரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் - 05**

**AGENCY DEVELOPMENT OFFICER (ADO)**

**தகைமைகள் -**

01) குறைந்தபட்சம் க.பொ.த உயர்தர (A/L) பரீட்சையில் சித்தி.
02) காப்புறுதி, சந்தைப்படுத்தல் துறை அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களில் (NGO) பணியாற்றியவர்கள் விரும்பத்தக்கது.
03) அர்ப்பணிப்பு மற்றும் குழுவையும், ஆலோசகர்களையும் வழிநடத்தும் திறன்.
04) வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பைப் பேணும் திறன்.

**நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்றுவதனால் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள்.**

01) அடிப்படை வேதனம் மற்றும் இதர கொடுப்பனவுகள்
02) உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிகள்
03) வருடாந்த இலவச வெளிநாட்டு சுற்றுலாக்கள்.
04) சர்வதேச விருதுகள்
05) விரைவான பதவி உயர்வுகள்
06) இலவச காப்புறுதி அனுகூலம்
07) Tab / Laptop வசதிகள்
08) கடன் வசதிகள் (மோ.சைக்கிள்,கார்)

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்ற விரும்பினால் தங்களது விண்ணப்ப படிவங்களை கீழுள்ள எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது எமது பிராந்திய அலுவலக முகவரிக்கு 10th July 2016 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பிராந்திய முகாமையாளர்,
யூனியன் அஷ்யூரன்ஸ்,
(வேலாயுதம் மகா வித்தியாலயம் அருகில்),
357/1, பிரதான வீதி,
பருத்தித்துறை.

Email ID: gobinatht@ualink.lk

GREAT PLACE TO WORK Best companies to work for 2015 Sri Lanka

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

## விற்பனை முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தேவை

நாடளாவிய ரீதியில் பிரசித்திபெற்ற
**Velona by Thred Works (pvt)Ltd**
நிறுவனத்தின் குழந்தைகளின் அரை ஆடை ( Diaper ) உற்பத்தியினை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விநியோகிப்பதற்கு யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவு னியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து சிறந்த விற்பனை முகவர்கள் (Agent) மற்றும் விநியோகஸ்தர்கள் ( Distributer) எமது நிறுவனத்துக்குத் தேவைப்படுகின்றனர். வங்கி முதலீடு ( Bank gurantee) பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
Email: velonacuddles@ymail.com
075 708 2379 - Prasath
071 236 6000 - Sandra

## வாழ்த்துகின்றோம்

**ராஜா பிளாசா மாதிரிக் கிராம 15 வீட்டுத்திட்டத்தை நன் கொடையாக உவந்தளித்த கொடையாளருக்கு எனது வாழ்த்துக்கள்**

## உயர்திரு.இராசையா குவேந்திரநாதன்



ஐயா!
உலகம் போற்றும் உத்தமர்களை என்வாழ்நாளில் சந்தித்ததில்லை ஐயா
உண்மையாய் உலகில் உன்னதமாய் வாழ சிந்தித்தது உண்டு ஐயா
உயர்ந்த நோக்கத்துக்காய் காணி வாங்க வந்தவேளை உங்களைச் சந்தித்தேன் ஐயா
உலகம் போற்றப்படுகின்ற உத்தமர்களில் ஒருவர் நீங்கள் என
பின்நாளில் உணர்ந்தேன் ஐயா
உயர்ந்தோர் பொன்மனப்பேராளன் எனப் போற்றுகின்றார் உங்களை ஐயா
உயர்வான செய்கையினால் செங்கைப் புலவோன் என்னும்
சிறப்புப்பட்டமும் கண்டீர் ஐயா
உலகில் கல்விச் செல்வம் அதைப் பெருக்கிடவே நிறையவே ஊதியமாய்
புகழ் விரும்பாமல் செய்த செயலால் கல்விக் கொடையாளன் என்னும் பட்டமும் கண்டீர் ஐயா

இறையருளால் இ.குவேந்திரநாதன் இணங்கினார் காணி வாங்க எம் கிராமத்தில் இயற்கை நியதிக்கமைய செயலாற்றி இவரது வார்த்தையால் இசைந்தேன். என்வாழ்நாளில் என்றுமே காணாத ஓர் ஏற்றமுறும் பணிக்காய் ஐயா என்றும் துணைபுரியும் அவர் தம் மனையாள் ரஞ்சினிதேவியுடன் எம்மவர்க்கு இல்லமதைத் தானமாய்த் தந்து எழுச்சியோடு வாழ வழி செய்தீரே ஐயா. ஒரு நடமாடும் இறைவனாக நீங்கள் உயர்ந்து நின்றீர்களே ஐயா. நீங்கள் வாழியவே ஆலவிருட்சமாய் வளர்ந்து உங்கள் பணிகள் தொடர என்றும் பக்க விழுதுகளாய் நான் இருந்திடுவேன். இவ்வாறான பல சமூகப் பொதுப்பணிகள் செய்து பல்லாண்டு காலம் நீங்கள் இந்த மண்ணில் வாழ எல்லாம் வல்ல புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஐயப்பன் சுவாமிகள் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**வாழ்த்துவோர்:- கதிரவேலு சத்தியரூபன்**
**புன்னாலைக்கட்டுவன் வடக்கு.**

**23.06.2016 அன்று இவரால் நிர்மாணிக்கப்பட்ட ராஜா பிளாசா வீட்டுத்திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.**





# கைதடி அருள்மிகு வீரகத்திப்பிள்ளைய...

# பிரதிஷ்டா மஹா கும்பாபி...

## 26-06-20...

### ஆசியுரை



கி.பி.17 ஆம் நூற்றாண்டு காலத்தில் கையில் வெட்டுண்ட தழும்புடன் கூடிய திருவடிவோடு தோற்றிய விநாயகர் இன்று மஹா கும்பாபிஷேகம் என்னும் பெருஞ் சாந்தியில் காட்சி தருகின்றார். தாம் துவஜஸ்தம்ப மூலா தாரவிநாயகராகத் திகழ தமக்கு பிரதியாக பெரிய அழகு நிறைந்த திருக்கோலத்தில் மூலாலயத்தில் காட்சி தருகின்றார்.

கையில் விறகு வெட்டியால் கைவெட்டுண்ட காரணத்தால் கைதறி என்னும் நாமம் அவவூருக்கு உண்டாகியது. காலப்போக்கில் பெயர் கைதடி எனமருவியது. வேதாகம முறைப்படி ஆதிசைவப் பிரா மணர்களினால் நித்திய. நைமித்தியங்கள் நடைபெற்று பல அற்புதங் களையும் அனுக்கிரகங்களையும் புரிகின்ற விநாயகர் தோற்றிய சூழலில் ஓங்கிவளர்ந்திருக்கும் தெய்வீக விருட்ஷங்களின் வளர்ச்சி நன்னீர் ஊற்று தீர்த்தம் உள்ளன. யாழ்ப்பாணசித்தர்களின் வருகையும் அருட்பார்வையும் இத்தலத்திற்கு உண்டானது. கொழும்புத்துறை தவத்திரு யோகசுவாமிகள் அவரின் சீடர் தவத்திரு மார்க்கண்டு சுவாமிகளின் சிறு குடில் ஆச்சிரமமும் அமைந்துள்ளது. இந்த ஆச்சிரமத்தில் மார்க்கண்டுசுவாமிகள் சிவபதமடைந்தார் லண்டன் கோல்பரி பிரபுவின் மகன் சாந்தசுவாமிகளும் இவ்வாச்சிரமத்தில் இருக்கும்போது பிள்ளையார் திருவீதியில் நடப்பார். சிவதொண்டர். திருவடி பாதயாத்திரை முதன்முதலாக இங்கு ஆரம்பிக்கப்பட்ட சிறப்புடையது. கோயில் சிறுதூரத்தில் மாதாஜிலிங்கேஸ்வரர்கோயிலும் அருள் பாலிக்கின்ற இத்தவப்பேறுகளினால் தெய்வானுக்கிரஹம் பெருக பலகோடி செல்வம் சேர்த்து பெருந்திருப்பணிகள் செய்து மஹா கும்பாபிஷேக பெருவிழாக்காணும் அன்பர்கள். அமைதியும். சகலசம்பத்துக்களுடன் நல்வாழ்வு பெற எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் கழல் பணிந்து ஆசீர்வதிக்கின்றோம்.

**தேவஸ்தான மூத்த சிவாசாரியார்**
**ஆ.சந்திரசேகரக் குருக்கள்**

### செயலாளரின் உள்ளத்தில் இருந்து



ஈழ மணித்திருநாட்டின் யாழ்ப்பாண நன்னகரில் தென்மராட்சி மண்ணில் வளமான கைதடிப் பதியிலே கதிரவனை வரவழைக்கும் திசையில் தொன்மையும் அற்புதங்களும் நிறைந்ததாக விளங்கும் விக்கினங்கள் தீர்க்கும் வீரகத்தி விநாயகருக்கும் அங்கு எழுந்தருளியி ருக்கும் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி, சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜர், வள்ளி தெய் வானை சமேத சுப்பிரமணியர்.பூலட்சுமி, மஹாலட்சுமி, சமேத மகா விஸ்ணு, தட்சணாமூர்த்தி. சனீஸ்வரன். நவக்கிரகங்கள். வைரவர். சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேக பெருவிழா இன்று நடைபெறுவது எம்மை எல்லாம் ஆனந்தமடையச் செய்கிறது. உள்ளூரிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற இப்பிரதேச அடியவர்களின் அன்பான நிதியுதவியினால் பெரியளவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று ஆலயம் புதுப்பொலிவுடன் காட்சிதருவது எமக்கெல்லாம் மகிழ்வழிக்கின்றது. 1916ஆம் ஆண்டு ஆனி மாதம் 16ஆம் திகதி முதலாவது மஹாகும்பாபிஷேகம் நடைபெற்ற இவ் ஆலயம் தொடர்ந்து பல மஹாகும்பாபிஷேகங்களைக் கண்டு 2016ஆம் ஆண்டு 100ஆவது ஆண்டில் நடைபெறுகின்ற இவ் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இப்பூமியில் வாழ்கின்ற உயிர்கள் எல்லாவற்றுக்கும் சுபிட்சமான வாழ்வதனை அளிக்கும் என்பது திண்ணம். மேலும் இப் புனித கைங்கரியம் நடைபெற பலவகைகளிலும் உதவியாக இருந்த அடியவர்கள் அனைவருக்கும் வீரகத்தி விநாயகர் அருள் ஆசி கிடைக்க வேண்டிக் கொள்வதோடு எமது மனம் குளிர்ந்த நன்றிகளையும் இம் மலரினூடாகத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

**ந.ஜெயகாந்தன்**
**கௌரவ செயலாளர்.**

### கும்பாபிஷேக குருவின் ஆசியுரை



கைதடி வீரஹத்திப்பிள்ளையார் கோயில்களின் மஹா கும்பாபிஷேக பெரும்சாந்தி மிகவும் சிறப்பாக இன்று நடைபெறுகிறது. இக்கோயிலானது 17 ஆம் நூற்றாண் டில் தோற்றம் பெற்று படிப்படியாக வளர்ச்சியுற்று இன்றைய தினம் முற்றுமுழுதாக புதுப்பிக்கப்பட்ட கோயி லாக பரிணமித்து காட்சியளிக்கின்றது. அதற்கேற்றவாறு இக்கோயில் இன்றும் அனேக சம்பிரதாயங்கள் ஆகம முறைப்படி நடைபெற்றுவருகின்றன. தேவஸ்தான பரம்பரை சேவார்த்திகளாக ஆலய சிவாச்சார்யார், ஆலய நித்ய மூர்த்தி அலங்காரம், சங்கு வாத்யம், ஓதுவார் மங்கல வாத்தியக்கலைஞர். திருவலகிடும் துறை காரர் என்பேர்ர் இன்றும் செயற்பட்டு வருகின்றனர். இன்று மஹோற் சவ காலத்தில் இரவு சுவாமி வெளிவீதி பிரதட்சணமாகி பாததீத்தம் கொடுத்தவுடன் சிவார்சார்யார் உள்ளே வந்து பலிபீடத்தில் பலிபோடும் வழக்கம் இன்று நடைபெற்றுவருகிறது. இந்த பலியானது கொடியேற்ற இரவு ஆரம்பித்து தேர் இரவுடன் முடிவுறும். இதற்கும் மகாயாகத் திற்கும் ஒருவிதமான ஆகம சம்பந்தம் உண்டு. இவ்வாறான ஆகம சம்பிரதாயங்களும் புராதன கைங்கரி யங்களும் நடைமுறையில் புராதன ஆலயமாக இன்றும் இருந்து வருகின்றது. இப்படியாக இருக்கின்ற இந்த விநாயகப் பெருமானுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. அதனால் எல்லா மக்களுக்கும் ஆலய கைங்கரியம் செய்தவர்களுக்கும், ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபையினருக்கும், திருப்பணி உப சபையினருக்கும் விநாயகப் பெருமான் திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**தேவஸ்தான பிரதம குரு**
**பிரம்மஸ்ரீ ச. ஜெயந்திரநாதகுருக்கள்.**

### வாழ்த்துரை



சைவப் பாரம்பரிய கலாசாரத்தை அன்று தொட்டு இன்றுவரை பேணி வரும் யாழ்ப்பாணத்தில் பழம் பெருமை வாய்ந்த ஆதிகால கோயில்களில் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இவ்வூருக்கு கைதறி என்னும் நாமம் உருவாகக் காரணமான வீரகத்தி விநாயகப் பெருமான் பரந்த நிலப்பரப்பில் வீற்றிருப்பதோடு விநாயகர் கருவறையை அடுத்துச் சிவனுக்கும் கோயில் அமைத்து இரட்டைக் கருவறைகளைக் கொண்ட பெரியதோர் கோயிலாக காட்சியளிப்பது இவ்வூருக்கு ஒரு தனிச் சிறப்பாகும். இவ்வகை சிறப்புக்கள் கொண்ட ஆலயம் 1916ஆம ஆண்டு ஆனி மாதம் முதலாவது கும்பாபிஷேகத்தினைக் கண்டு நூறாவது வருடத்தில் தற்போது 2016ஆம் ஆண்டு ஆனி மாதத்திலும் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது எனும் பொழுது ஒரு சிறப்புக்குரிய விடயம் எனலாம். ஆலயம் பெரிய கட்டட திருத்த வேலைகள் என்பன வேகமாக நடைபெற்று இன்றைய தினம் கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான் பாதம் பணிவோமாக.

**தி.ஜெயக்குமார்**
**கௌரவ பொருளாளர்.**

### அருளாசிச் செய்தி



விக்கினங்கள் தீர்க்கின்ற விநாயகப்பெருமான் தம்மை வழிபடுகின்ற அடியார்களின் குறைபோக்கி நிறைவாழ்வருளும் பொருட்டு யாழ்குடா நாட்டிலே கைதடியிலே எழுந்தருளி வீற்றி ருந்து திருவருள் பாலிக்கின்றார். இங்கு வீரகத்தி விநாயகர் என்ற திருநாமத்துடன் அருள் பொழிகின்ற ஆனைமுகனுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நிகழ்வதையிட்டு மிக்க பெருமகிழ்வு அடைகின்றோம்.

வினைபோக்கும் வீரகத்தி விநாயகரின் ஆலயத்தைத் திருப்பணிசெய்து புனருத்தாரணமாக்கி அழகுபடுத்தி மெருகூட்டி இன்று மஹா கும்பாபிஷேகம் நிகழ்வது மனநிம்மதியைத் தருகின்ற திருவருட் செயலாகும். இதில் பங்கேற்று நிறைவு செய்த அடியார்களின் அருஞ்செயல் போற்றுதற்குரியது.

முதியோர் பாதுகாப்பு இல்லம் அமைந்துள்ள சிறப்பைக்கொண்டு விளங்கும் கைதடி வாழ்மக்கள் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்தவர்களே! கணபதியைக் கைதொழும் அடியார் பெருமக்களும் மற்றும் ஆலய அறங்காவலர்களும் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானுடைய திவ்ய திருவருட்கடாட்சம் கிடைக்கவேண்டுமென்று அருளாசிகள் வழங்கி வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம். அனைத்து அடியார்களுக்கும் பரிபூரணமான திருவருள் கிட்ட உளம் மகிழ்ந்து பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குரு முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**திருஞான சம்பந்தர் ஆதீனம் - யாழ்ப்பாணம்.**

### பரம்பரைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



கைதடியில் மிகப் பழைமை வாய்ந்ததும் மிகப் பெரிய ஆலயமாகவும் திகழும் வீரகத்திப் பிள்ளையார் கோயில் இன்று புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

இவ்வாலயமானது 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஊர் தலைமைக்காரரான வேலப்ப முதலியாரின் முயற்சியால் அமையப்பெற்றது. கைதடி என்ற பெயர் பெறக் காரணமும் இவ்வாலயம் தோற்றம் பெற்ற வரலாற்றுடன் ஆகும். பின்னர் 1764ஆம் ஆண்டு இரட்டைக் கருவறைக் கோயிலாக இராமலிங்க முதலியாரால் அமைக்கப்பெற்றது.

காலப்போக்கில் 1989 ஆம் ஆண்டு வருடாந்த மஹோற்சவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எனினும் 1916ஆம் ஆண்டு நடைபெற்ற புனருத்தாரண மஹா கும்பாபிஷேகமே எமக்கு ஆவண மூலமாகத் தெரிந்த தாக அமைகின்றது. அதன்பின் 7ஆவது மஹா கும்பாபிஷேகமாக தற்போது 100 ஆவது வருடத்தில் நடைபெற இறையருள் கூடியுள்ளது. இக் குட முழுக்கினைக் காண நான் முற்பிறவியில் என்ன தவம் செய்தேனோ.

ஆலய புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேகத்துக்கு ஆக்கபூர்வமான பணம், பொருள் மற்றும் ஆலோசனை உதவிகள் நல்கிய பெரியார்கள், அடியார்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இந்த நன்முயற்சி யில் முன்வந்து உழைத்த அனைவருக்கும் வீரகத்திப் பெருமான் அருள் கிடைப்பதாக.

**செ.சதீஷ்குமார், - பரம்பரைத் தலைவர்.**

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்**

கதிர்வேலவன் அரிசி ஆலை
கதிர்வேலவன் ஹாட்வெயார்
கைதடி.

வெலிகம ஸ்டோர்ஸ்
4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு -11
K.S.பொன்னம்பலம்
எரிபொருள் நிரப்பு நிலையம்,
கைதடி.

விவா
மின்பொருள்
இரும்பு வாணிபம்
கைதடிச் சந்தி.

விசாகா
ரேட்
கைதடிச்சந்தி.

சுமித்தி...
ஸ்ரோர்...
கைதடி ம...

ஆரியபவான்
சைவ உணவகம்
கைதடிச் சந்தி.

வேணுகா
சைவ உணவகம்
A9 வீதி, கைதடி.

பராசக்தி
களஞ்சியம்
பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி தென்கிழக்கு
(மு.செல்லையா)

ஓம் முருகா
பல்பொருள் வாணிபம்
பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

பிள்ளை...
பல்பொருள் நி...
மானிப்பாய் வீதி, கை...

### விற்பனைக்கு
சிறியரக கல், மணல் ஏற்றும் வாகனம் (Loader) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 744 8617

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் வடக்கு, உடுவில் (றோட்டில்) வீதியில், GREEN ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு. இல 17, உடுவில் வீதி,மானிப்பாய்.
தொடர்பு:
இரவீந்திரன் - 077 727 0310
சாம்பசிவன் - 075 565 5053
Sambasivan - UK - London +44 7818557193 (69531)(12,18)

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பற் Black Brown நிற நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
(C 2401)(14,17,18) தொடர்பு: 077 946 2841

### விற்பனைக்கு உண்டு
உடற்பயிற்சி நிலையத்துக்குரிய சகல உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு.(GYM) (J 2140)(12.18)
077 025 0339

### வைரஸ் பிறிண்டேர்ஸ்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
அச்சுத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
- ரைப்பிங் (Computer Typing -Tamil)
- கிரபிக்ஸ் டிசைனர் (CorelDraw /Photoshop)

அனுபவமுள்ளவர்கள் நேரில் சமூகம் தரவும்
தொடர்பு : 021 224 1815

### வீடு வாடகைக்குண்டு
K.K.S றோட், குளப்பிட்டிச்சந்திக்கு அருகில் பெரிய மேல்மாடி வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 077 979 8181

### காணி விற்பனைக்கு
மல்லாகம் 8 ஆம் கட்டையில் கே.கே.எஸ் வீதியிலிருந்து 600 மீற்றர் மற்றும் துர்க்கை அம்மன் கோயிலிலிருந்து 800 மீற்றர் தூரத்தில் 10 பரப்பு வெற்றுக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. இரண்டு வழிப்பாதை மூலம் போக்குவரத்து செய்யமுடியும். (J 1880)(12.18)
077 731 6487

### வீடு விற்பனைக்கு
புத்தூர்ச் சந்தியில் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரிக்கு அண்மையில் 4½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் அமைந்த 4 அறைகளை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
076 696 5124

### வாடகைக்கு
யாழ்.மாநகர எல்லைக்குள் எட்டு றூம், கோல், சாப்பாட்டறை, மூன்று கடைக் கட்டடம் சிறிய குடும்பம் தங்கக் கூடிய மூன்று அறைக் கட்டடத் தொகுதி இல.120, ஆஸ்பத்திரி வீதி கொட்டடி என்னும் முகவரியில் உடனடி வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 600 8762 (இலங்கை)
0049 176 610 65636 (ஜேர்மன்)

### பணிப்பெண் தேவை
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
077 2626944,077 2987506

### ஒத்துமாறல்
பம்பலப்பிட்டி அரச திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் மாவட்டத்துக்கு ஒத்து மாற விரும்புகின்றார். (J 2140)(12.18)
071 440 2338

### காணி விற்பனைக்கு
ஒரு ஏக்கர் தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
இடம்: அன்பு சகோதரர் இல்லறோட், தாழ்வுபாடு
காணி 1 பேர்ச் ரூபா 20,000/= (11,17,18)
பேர்ச் கணக்கில் பிரித்து வழங்கப்படும்.
077 586 9600

### வீடு வாடகைக்குத் தேவை
அரச உத்தியோகத்திலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ் நகரை அண்டிய பகுதியில் வாடகைக்குத் தேவை. பருத்தித்துறை வீதியை அண்மித்த பகுதி விரும்பத்தக்கது. (J 2398)(14,17,18)
தொடர்பு : ராஜ்குமார் - 075 765 9510

### விற்பனைக்கு உண்டு
இத்தாலியிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய Bottle Cooler மற்றும் சிறிது காலம் பாவித்த D. Fridge என்பன விற்பனைக்குள்ளன. Supper Market இற்கு உகந்தது. (J 2404)(12.18)
077 271 9229, 076 857 8315

### விற்பனைக்கு உண்டு
1950 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீட்டின் முதிரைக் கதவுகள், யன்னல்கள்,ஓடு, மரம், கல், மண் (வீடு உடைத்து எடுத்தல் வேண்டும்) வீட்டுத் தளபாடங்கள் மேசை,கதிரை,சேபா செற், குளிர்சாதனப் பெட்டி குளிரேற்றி (Air Cooler) என்பன விற்பனைக்குள்ளன
077 025 0339

### மணமகள் தேவை
1981 இல் பிறந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள் தேவை. நட்சத்திரம் - பூசம், கிரகபாவம் - 51½, சூரியன், செவ்வாய் - 1ஆம் இடம். (K 87)(14,17,18)
தொடர்பு : 077 800 1912

### இரும்பு சுருக்குக்கேற் விற்பனைக்குண்டு
10அடி அகலம் 8 அடி உயரமுடைய 95 வீதம் புதியதான இரும்புச் சுருக்குக் கேற் விற்பனைக்கு உண்டு.
077 742 0240

### FOR SALE
Our house with three rooms and well at Manipay South for Sale.
S.Sivanesan - 077 436 3992

### வேலைக்கு ஆள்கள் தேவை
- பில் கிளாக்
- ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்
- சப்ளையர்ஸ் தேவை

தொடர்பு: 077 830 4553

### வீடு தேவை
யாழ்ப்பாணத்தில் இருந்து 3KM இற்குள் 3 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளுடன் கூடிய வீடு தேவை. இடைத் தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 802 6041

### கடைகள் வாடகைக்கு
இல 18 றக்கா வீதியில் இரு கடைகள் வாடகைக்குண்டு. (C 22102)(12.18)
077 271 9229

### வேலையாள்கள் தேவை
இல.1037, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள உணவகத்துக்கு
- சமையல் உதவியாளர்
- தேநீர் தயாரிப்பாளர்
- பார்சல் கட்டுபவர்
- உணவு பரிமாறுபவர்

தேவை (C 22102)(12.18)
077 078 2375, 077 6230970

### சுத்திகரிப்பு பணியாளர் தேவை
யாழில் இயங்கும் விமான பயணச்சீட்டு நிறுவனம் ஒன்றுக்கு காரியாலயத்தைச் சுத்திகரிப்பு வேலை செய்வதற்கு பணியாளர் தேவை. நேரில் வரவும்.
(திங்கள் காலை 8.00 மாலை 5.00 மணி வரை நேரில் வரவும்.) (C 22106)(14,17,18)
மெற்றோ ரவல்ஸ்
272/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

BLOOMING BUDS
The Wisdom of Children

# BLOOMING BUDS International E CAMPUS
PV 94034

## பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்
நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ திருவிழாவுக்கு முன்னர் (08.08.2016) பதிவுகளை மேற்கொள்வோருக்கு 30 வீதம் கட்டணக் கழிவு வழங்கப்படும்.

## 12 Months

### தகைமைகள்
- க.பொ.த. (சா/து) 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த. (உ/து) கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாள்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5 நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30-5.00 வரை வேலைநாள்களாகும்.

### மேலதிகமாக
சிங்களக் கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்.

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம், தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9X4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்புவரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்

378/3, Nelson Building
Kandy Road, Dalugama,
Kalaniya. 011 305 4641

No.390/2/1,Baseline Road,
Dematagoda.
Colombo-9.T.P.011 267 7641
071- 566 9641, 077 152 9731

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி: officer.
Blooming Buds International E Campus
Teacher Training School - 178,
Thavadi Rd,Suthumalai South, Manipay.
Hotline - 071 566 9641
021 225 6641

www. blooming budse campus.com

மருத்துவர் பொ.ஜெசிதரன் (MBBS,DFM)

# சுற்றாடல் சுத்தத்தை மேம்படுத்தும் 3R முறைமை

**"சொர்க்கம் என்பது நமக்கு சுத்தம் உள்ள வீடுதான்
சுத்தம் என்பதை மறந்தால் நாடும் குப்பை மேடுதான்"**
என்பது இன்றைய காலத்தின் தேவையான சூழல் சுகாதாரத்தைப் பற்றி இயல்பாக கூறுகின்ற இனிமையான திரை இசைப் பாடல் ஆகும். நாளுக்கு இரு முறை குளித்து நம்மை சுத்தமாக வைத்திருக்க முயல்கிறோம். வீட்டை அழகுபடுத்தி சுத்தமாக வைத்திருக்க விரும்புகிறோம். ஆனால் நாம் வாழும் சூழலை மட்டும் சுத்தமாக வைத்திருக்க ஏனோ அக்கறை செலுத்துவதில்லை. அதனால் அசுத்தத்திலேயே வாழவேண்டிய நிலை. இதற்கு காரணம் என்ன? நாம் எப்போது, அசுத்தமான சூழலிலிருந்து சுத்தமான சூழலில் குடியிருப்பது? சுத்தமான காற்றை சுவாசிப்பது? நோய்களுடனும், தூசிகளுடனுமான எமது வாழ்க்கைப் போராட்டத்தை நிறுத்தி அமைதியான வாழ்வுக்கு திரும்புவது? என்று கேட்டால், நாம் யார் யாரையோ எல்லாம் குறை கூறுகிறோம். ஆனால் நாமே நம்மை நோக்கி எப்போதாவது இந்தக் கேள்வியை கேட்டிருக்கிறோமா? எமது நாளாந்த செயற்பாடுகளில் சூழல் சுகாதாரத்தை பேணுவதற்கும், அதன் அழகை பேணுவதற்கும், நாம் என்னென்ன செயல்களை ஆற்றியிருக்கின்றோம் என்று நம்மை நாமே விமர்சனமாக பார்த்திருக்கிறோமா?

ஒரு நகரின் சுத்தம் என்பது ஒரு நிறுவனத்தின் கையிலோ அல்லது ஒரு குழுவின் கைகளிலோ உள்ள விடயம் என்று நாம் ஒதுக்கிவிட முடியாது. அதில் நம் எல்லோரது பங்களிப்பும் உள்ளது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அது நம் எல்லோரது கைகளிலுமுள்ள கூட்டுப் பொறுப்பாகும். எந்த ஒரு செயல்முறையிலும் வெற்றிபெற வேண்டுமாயின், போதிய பயிற்சியும் அர்ப்பணிப்பும் தேவை. அதேபோல்தான் தினமும் உருவாகும் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கும் எமக்கு போதிய பயிற்சியும் அர்ப்பணிப்பும் அவசியமாகும்.

ஒரு நகரத்தில், அதில் குடியிருப்போரும் பல்வேறு தேவைகளுக்காக அந்த நகருக்கு வந்து செல்வோரும் அந்தநகருக்கு பயணம் செய்யும் உல்லாசப் பிரயாணிகளும் அங்கு அமைந்துள்ள உணவகங்களும் தொழிற்சாலைகளும் சந்தைகளும் நிறுவனங்களும் பல தொன் திண்மக் கழிவுகளை தினமும் ஏற்படுத்துகின்றனர். (ஒருவர் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ½ kg கழிவுகளை உருவாக்குவார்). பல தொன் குப்பைகளால், நகரின் அழகு தினமும் அலங்கோலமாகிவிடுகிறது. இதனை மீறி நகரின் அழகை அதிகரிக்க வேண்டுமாயின் நாம் ஒவ்வொருவரும் கட்டாயமாக, 3R முறைமையை கைக்கொண்டே ஆக வேண்டும். எமது பிரதேசத்தில் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட எல்லைக்குள் மட்டும் தினமும் 17 மெற்றிக்தொன் கழிவுகள் உருவாக்கப்படுகின்றன. கோடை காலத்திலும் பார்க்க மாரிமழையை அடுத்துவரும் மாதங்களில் இதன்அளவு சற்று அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றில் 60தொடக்கம் 80 வீதமானவை உக்கக்கூடிய கழிவுகளாகவும் 20தொடக்கம் 40 வீதமானவை உக்கமுடியாத கழிவுகளாகவும் உள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன. உக்கமுடியாத கழிவுகளான சொப்பிங் பைகள், பிளாஸ்ரிக் போத்தல் என்பன bulkygarbage எனப்படும். அதாவது அவற்றின் கனவளவுக்கான நிறை மிகவும் குறைவாகும். அவற்றை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவும் அதிகமாகும்.

**3R முறைமை என்றால் என்ன?**

Reduce (குறைத்தல்), Reduse (மீள்பாவனை), Recycle (மீள்சுழற்சி) என்பதே இந்த 3R ஆகும். சுற்றாடல் அழகைப் பேண உறுதி கொண்டால், எமது அன்றாட செயற்பாடுகளை அக்கறையுடன் அவதானிக்க வேண்டும். ஏனெனில் எமது அன்றாட செயன்முறைகளால் தான் அதிகளவு கழிவுகள் சூழலைச் சென்றடைகின்றன. எமது கழிவுகளை சிறந்த முறையில் நாமே நடை முறைக்கு ஏற்றவகையில் கையாள்வதை உறுதி செய்தால் நல்ல பயன் கிடைக்கும்.

நம்மால் உருவாக்கப்படும் குப்பைகளின் அளவை குறைப்பதற்கு (Reduce) கீழ்வரும் முறைகளை இயலுமானவரை கடைப்பிடிக்க முயலலாம். தேவையான பொருள்களை மட்டுமே வாங்கிப் பாவிக்க முன்வருதல் வேண்டும். தேவையற்ற பொருள்களை வாங்கும்போது அவை நாளடைவில் கழிவாகி அவற்றை அப்புறப்படுத்துவதே சிரமமானதாகிவிடும். பாவனையின் போது அதிகளவு உக்காத குப்பைகளை தரக்கூடிய பொருள்களை தவிர்த்திடல் வேண்டும். கழிவுகளின் அளவைக் குறைக்கும் முகமாக கழிவுகளை உருவாக்கும் பொருள்களைத் தவிர்த்து, முடியுமானவரை நீடித்து உழைக்கக்கூடிய மற்றும் மீள் பாவனைப் பொருள்களையே பாவிக்க முன்வருதல் வேண்டும். சந்தைக்கோ அல்லது கடைக்கோ செல்லும்போது மீள்பாவனைக்குரிய பைகளையே கொண்டு செல்லுதல் நன்று. இது துணிப்பையாகவோ அல்லது மட்டைப் பையாகவோ இருக்கலாம். முடியுமானவரை சொப்பின்



பைகளை பாவிப்பதை தவிர்த்தல் வேண்டும். குறைவாகப் பொதியிடப்பட்ட பொருள்களையே தேர்வு செய்து வாங்குதல் வேண்டும். இங்கு பொலித்தீன் பைகளில் பொதியிடப்பட்ட பொருள்களை முற்றாகவே தவிர்த்தல் நன்று.

தேவை நிமித்தம் பாவித்து, தற்போது தேவையற்றது என கருதும் பொருள்களை வேறு நபர்களுக்கு பாவிக்கக் கொடுத்தல் அல்லது அதனை வாங்கி விற்கும் விற்பனையாளரிடம் கொடுத்தல் நன்று. உதாரணமாக பழைய கணினி, குளிர்சாதனப்பெட்டி போன்றவற்றை இந்த வகையில் சொல்லலாம். பிளாஸ்ரிக் தட்டுக்கள், கோப்பைகள், றெஜிபோம் போன்ற உக்கமுடியாத ஆனால் சூழலில் சேர்ந்து அதன் இயல்பைக் கெடுக்கும் பொருள்களை வாங்குவதை தவிர்த்தல் நன்று.

ஒரு நாள் தேவைக்காக சில பொருள்களை வாங்க வேண்டியிருக்கும், அதுவே பெருங்கழிவாக வீட்டில் தங்கிவிடும். அவற்றை என்ன செய்வதென்றே தெரியாத நிலை, இவ்வாறான சந்தர்ப்பங்களில் புதிய பொருள்கள் வாங்குவதை விடுத்து அவற்றை வாடகைக்குப் பெற்று பயன்படுத்துவதே சிறந்தது. காகிதத்தில் இரு பக்கங்களிலும் அச்சிட்டு அல்லது எழுதிப் பயன்படுத்துவதே சிறப்பு.

வீட்டிலிருந்து வேலைத்தளங்களுக்கோ, பாடசாலைகளுக்கோ உணவு எடுத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் முடியுமானவரை சில்வர் சாப்பாட்டுப் பெட்டிகளில் எடுத்துச் செல்லுதல். இயலுமானவரை lunch பேப்பர், சொப்பின்பை பாவிப்பதையோ றெஜிபோம் பெட்டி பாவிப்பதையோ தவிர்த்தல் நன்று. விழாக்களின்போது பிளாஸ்ரிக் ஒரு நாள் கப் (One day) உரி பாவனையைக் குறைத்து சில்வர் பேணிகளின் பாவனையை மீள அறிமுகப்படுத்துதல் சிறப்பு.

> ஒரு நகரின் சுத்தம் என்பது ஒரு நிறுவனத்தினது கையிலோ அல்லது ஒரு குழுவினது கைகளிலோ உள்ள விடயம் என்று நாம் ஒதுக்கிவிட முடியாது. அதில் நம் எல்லோரது பங்களிப்பும் உள்ளது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அது நம் எல்லோரது கைகளிலுமுள்ள கூட்டுப் பொறுப்பாகும்.

மீள் பாவனை (Reuse) என்று சொல்லும்போது ஒரு முறை பாவித்த பொருள்களை வீசி எறியாது மீண்டும் பாவனைக்கு உட்படுத்துவதையே மீள் பாவனை எனலாம். இங்கும் நாம் நுகர்வுக்கு முன்பே சிந்தித்துச் செயலாற்றினால், சிறப்பாக மீள் பாவனைக்கு உதவிட முடியும். ஒருமுறை மட்டுமே பாவிக்கக்கூடிய பொருள்களைத் தவிர்த்து மீண்டும் மீண்டும் மீள் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய பொருள்களை வாங்குவதே சிறப்பு. மீள் பாவனைப் பைகளை பாவிப்பதை உறுதிப்படுத்தல். சில்வர், கண்ணாடி செரமிக் பாவிப்பதை உறுதிப்படுத்தல். உலர்ந்த பொருள்களை சேமிப்பதற்கு, பாவித்த பெட்டிகளை உபயோகப்படுத்திக் கொள்ளுதல், பேப்பரில் அச்சிடாத பக்கத்தை மேசைகளைத் துடைப்பதற்கோ, சிறுவர்களின் கற்பித்தலுக்கோ பயன்படுத்திக் கொள்ளுதல்.

மீள்சுழற்சி (Recycle) என்னும் போது பாவித்த பொருள்களைப் பயன்படுத்தி புதிய பிற பொருள்களை உருவாக்கி மீள பயன்படுத்தல் ஆகும். எந்த வகையான பெருள்களை மீள்சுழற்சி செய்யலாம் என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும். பிளாஸ்ரிக் போத்தல்கள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், உடைந்த பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் பேனைகள், பழைய பத்திரிகைகள், கடதாசிகள், தடித்த அட்டைப்பெட்டிகள், கண்ணாடி போத்தல்கள், தகரக் கொள்கலன்கள், அலுமினியக் கொள்கலன்கள், பியர் ரின்கள், ரின்மீன் பேணிகள் உக்கக் கூடிய இலைசருகுக் குப்பைகள் போன்றவை இதில் அடங்கும். மீள் சுழற்சிப் பொருள்களை தரம் பிரித்து வேறு வேறான பைகளில் சேகரித்தல் வேண்டும். குறிப்பிட்ட அளவு சேர்ந்ததன் பிற்பாடு அதனை கடையிலோ அல்லது வீடு தேடி வரும் முகவரிடமோ ஒப்படைத்தல் வேண்டும். மிகவும் விரைவானதும் வினைத் திறனானதுமான தரம்பிரித்தல் செயன் முறைக்கு சர்வதேச நிறக்குறியீட்டை (International color code) பயன்படுத்திக் கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளுக்கு செம்மஞ்சள் நிறமும் காகித கழிவுகளுக்கு நீல நிறமும் கண்ணாடி போன்றான கூறான கழிவுகளுக்கு சிவப்பு நிறமும் உலோக கழிவுகளுக்கு மண் நிறமும் சேதனக் கழிவுகளை சேகரிப்பதற்கு பச்சை நிறமுள்ள பைகளையும் பாவித்துக் கொள்ளலாம்.

பாவித்த மின்கலன்கள், மின்குமிழ்களை (குறிப்பாக CFL) அதனைப் பெற்று மீளவும் தொழிற்சாலைக்கே அனுப்பும் முகவரிடம் கொடுத்திடல் வேண்டும். கழிவுப் பொருள்களைக் கொண்டு அழகிய கைவினை பொருள்களைச்செய்தல், கற்பனை வளத்தோடு செய்யப்படுகின்ற இந்தப் பொருள்களுக்கு சந்தைப் பெறுமானமும் அதிகம். பழைய பேப்பர்களைக் கொண்டு சிறு பிள்ளைகளின் விளையாட்டுப் பொருள்களை (மிருகங்கள், பறவைகள்) செய்யலாம். பழைய ரின்மீன் பேணிகளை விளக்கு மாறு உற்பத்தியில் பாவித்துக் கொள்ளலாம்.

**இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன?**

நாம் உருவாக்கும் கழிவுக்ளின் அளவை குறைத்திடலாம். இதன் மூலம் வீட்டில், சூழலில், நகரில் சேரும் கழிவுகள் குறைந்து நகரின் அழகு மேம்படும். தொற்று நோய்களின் பரம்பலில் காவிகளாக செயற்படும், நுளம்புகள், ஈக்களின் பெருக்கம் பல மடங்கு குறைந்துவிடும். இதனால் தொற்று நோய்களின் தாக்கமும் பரம்பலும் குறையும். கொல்லவரும் டெங்கு நோயின் தாக்கம் மிகமிக குறையும். உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கியமும் மேம்படும்.

(46 ஆம் பக்கம் பார்க்க)






Distributed by:
**Ceylon & Foreign Trades PLC.**
No. 414/18, K.Cyril C. Perera Mawatha, Colombo 13. Tele: 0114 343 444
Ayurvedic Board Approval Number: 02/01/PE/12/396

Available in Supermarkets, Groceries and Pharmacies Islandwide
LAUGFS SUPERMARKET
ARPICO SUPERCENTRE
KEELLS SUPER
SUPER K


SINGER
உயர் கல்வி அமைச்சின்
Laptop கணினி செயல் திட்டம்
பல்கலைக்கழக
மாணவர்களுக்கான
விசேட Laptop கொடுப்பனவுகள்
சிங்கரிடமிருந்து
DELL | SINGER X SERIES
6th Gen
6th Gen
DELL Vostro 15 3559-i5 (DELL- VOST-I5W10)
• 6th Gen Core i5 – 6200U (3MB Cache, up to 2.8GHz)
• 4GB DDR3 1600MHz / 1TB Hard Drive / DVD Writer
• Full Size, Spill-resistant Keyboard
• 15.6" Anti-glare, HD, LED Backlit Display
• Integrated Sound Card with MaxxAudio ® by Waves and one combo, Headphone / Microphone Jack
• 2GB seperate VGA, Webcam, 4 Cell Battery
• Dell Power Adapter, Dell Top-load Carrying Case
• Genuine Windows 10 - Home (Single Language)
• Licensed Anti-Virus Software
• 3 Years Warranty (Battery & Power Adapter - 1 year)
விசேட விலை ரூ.74,750/-
மாதாந்தம் ரூ.2,077/-
SINX-i5-6 GEN
• 6th Gen Core i5 – 6200U (3MB Cache, up to 2.8GHz )
• 4GB DDR3 1600MHz / 500GB Hard Drive/ DVD Writer
• 15.6", HD, LED Backlit Display
• USB 3.0 Ports, External VGA port, HDMI™ Output Port, Headphone Jack, Microphone Jack, RJ-45 LAN Port, DC-in Jack, Card Reader
• Full Size, Numeric Keyboard
• Integrated VGA , Webcam, 4 Cell Battery
• Genuine Windows 10 - Home (Single Language)
• Licensed Anti-virus Software, Carrying Case
• 3 Years Warranty (Battery & Power Adapter - 1 year)
விசேட விலை ரூ. 73,000/-
மாதாந்தம் ரூ.2,028/-
4G டொங்கல் இலவசம்
3 வருட உத்தரவாதம் இலவசம்
GENUINE Windows 10 இலவசம்
www.masters.lk
நாடளாவிய ரீதியில் சிங்கரின் விற்பனையின் பின்னரான அதி உயர் சேவை
மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி மூலமாக வட்டி இல்லா கடன் வசதி.
011 5 400 400
http:// www.singersl.com
யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) 021-2225408
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) 021-2216320
நெல்லியடி 021-2264937
பருத்தித்துறை 021-2263411
சங்கானை 021-2251100
சுன்னாகம் 021-2240555
முல்லைத்தீவு 021-2290180
சாவகச்சேரி 021-2270197
மானிப்பாய் 021-2255343
கொடிகாமம் 077-7858232
கிளிநொச்சி 021-2280199
கிடைக்குமிடங்கள்
SINGER Plus

# தரம் 5 புலமைப்பரிசில் சிறார்களுக்கும் அவர்களின் பாடசாலைகளுக்கும்
# சம்பத் வங்கியிடமிருந்து பல இலட்சங்கள் பணப்பரிசு

சம்பத் வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடையும் அனைத்து சிறார்களுக்கும் கை நிறைய பரிசு வழங்க சம்பத் வங்கி தயார்.



**தரம் 5 சிறார்களுக்கான பரிசு விபரம்:**

| தரம் 5 சிறார்களுக்கு | தரம் 5 சிறார்களின் பாடசாலைகளுக்கு |
|---|---|
| • அகில இலங்கையில் 1ம் இடம் ரூ. 150,000/-<br>• அகில இலங்கையில் 2ம் இடம் ரூ. 100,000/-<br>• அகில இலங்கையில் 3ம் இடம் ரூ. 75,000/-<br>• மாவட்ட ரீதியில் முதல் 5 இடங்களைப் பெறும் சிறார்களுக்கு தலா 10,000/- ரூபாய். | • மாவட்ட ரீதியில் 1ம் இடம் பெறுபவரின் பாடசாலைக்கு ரூ. 25,000/-<br>• மாவட்ட ரீதியில் 2ம் இடம் பெறுபவரின் பாடசாலைக்கு ரூ. 20,000/- |

அனைத்து மாவட்டங்களிலும் தம் வெட்டுப்புள்ளிகளைவிட அதிகமாக புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய சம்பத் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் அனைத்து சிறார்களுக்கும், பெறுமதிமிக்க சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும்.

இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற முன்னர் சம்பத் வங்கியில் நடைமுறையிலிருக்கும் அல்லது, புபுது அல்லது சபிரி சிறுவர் சேமிப்புக் கணக்கை புதிதாக ஆரம்பித்து குறைந்தபட்சம் 5000/- ரூபாய் பணத்தை பேணுதல் மட்டுமே.

சிறார்களே, இன்றே புபுது அல்லது சபிரி சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து உங்கள் பரீட்சைக்கு தயாராகுங்கள்.

The Banker

சிறுவர் சேமிப்பு கணக்குகள்
Children's Savings Accounts

Like us on
facebook.com/Sampathbankplc

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk

Grant McCann

சம்பத் வங்கி PLC-PQ 144 ஸ்ரீலங்காவின் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும், கண்காணிக்கப்பட்டும் வரும் வர்த்தக வங்கி.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது






# டெங்கு உயிருக்கு ஆபத்தான நோய். எச்சரிக்கையாக இருங்கள்!

நாளாந்தம் 82 டெங்கு நோயாளர்கள் | மாதாந்தம் 2481 டெங்கு நோயாளர்கள்

வருடாந்தம் **29,777** டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்*

உங்களது குடும்பம் நுளம்பிலிருந்து எவ்வாறு பாதுகாப்பாக உள்ளது ?

LG நிறுவனம் உலகின் முன்னனி **Mosquito Away**

துருப்பிடிப்பதை பாதுகாக்கக்கூடிய, ஸ்மார்ட் இன்வேட்டர் வளிச்சீராக்கி

LG
Life's Good

LG யின் நவீன தொழிநுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள இன்வேட்டர் வளிச்சீராக்கி தனிச்சிறப்புமிக்க சிறப்பம்சங்களை கொண்டுள்ளதுடன் **உங்களது குடும்பத்தை**, நுளம்பு மூலம் ஏற்படும் நோய் அச்சுறுத்தலிருந்து அதாவது **மலேரியா, டெங்கு** போன்ற கடுமையான நோய்த்தாக்கத்திலிருந்தும் உயிர் அச்சுறுத்தலிருந்தும் பாதுகாக்கின்றது. பூச்சிக்கொல்லி மருந்து வகைகளையோ அடிப்படையாகக் கொண்டோ அல்லது புகை மூலம் தடுத்து நிறுத்தக்கூடியவற்றுக்கு அப்பால் **LG Mosquito Away** வளிச்சீராக்கி புற ஊதாகதிர் அலைவரிசையைக் கொண்டு நுளம்புகளை அகற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் உங்களுக்கு **பாதுகாப்பானதும் அமைதியானதும் நிம்மதியானதுமான** இரவு நித்திரைக்கு உதவுகிறது.

நுளம்பை விரட்டக் கூடியவகையில் வளிச்சீராக்கியில் அடங்கியுள்ள தனிப்பட்ட சிறப்பம்சங்கள்




CERTIFICATES
PERFORMANCE
Intertek
பாதுகாப்பு
CE
TUV NORD
ACADEMIC PUBLICATION

12,000 BTU | 18,000 BTU | 24,000 BTU பெற்றுக்கொள்ளமுடியும். 124,500 ரூபாவிலிருந்து

us at www.facebook.com/abans

Abans

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இராணுவத் தலையீடுகள் இல்லாத நிலைமை வரவே மாட்டாதா...?

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் போரினால், ஒப்பீட்டளவில் மிகப்பெரிய அளவில் பாதிப்புற்றவர்கள் பெண்களே. அவர்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகப் பல இடர்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, போயும் போயும் போரில் ஈடுபட்ட இராணுவத்தினரே முதலாளிகளாக இருந்து தொழில் வாய்ப்பை வழங்குகிறார்கள். இது எந்த வகையில் பொருத்தம்? எந்த வகையிலும் உகந்த நிலை அல்லவே!

இந்த ஒவ்வாத, கண்டிக்கப்பட வேண்டிய நிலையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் எடுத்து உரைத்தோம். அவ்வாறு நடைபெறுவது தமக்குத் தெரியாது என்று அவர் கூறினார்.

மேற்போந்த நிலைப்பாடுகளை, புட்டுப் புட்டு வெளிப்படுத்தி உள்ளார் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி சரோஜா சிவசந்திரன்.

போரினால் உயிர் மற்றும் உடைமை இழப்புகளைச் சந்தித்தவர்களுக்கு, அவ்வாறு பாதிப்புறாதவர்களை விடவும் தேவைகள் பலவகையானவை.

அவை குறித்து, நாடாளுமன்று தொடக்கம் மனித நேய அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் வரையில் பல சந்தர்ப்பங்களிலும் அவ்வப்போது எடுத்துக் கூறப்பட்டது உண்டு.

ஆனால், அங்கொன்று, இங்கொன்றாக வாழ்க்கைத்தேவைகள்,சிற்சிலவே அரைகுறையாக நிறைவேற்றப்பட்டன என்பது, இப்போதைய நல்லாட்சி அரசு உள்ளிட்ட அதிகார வர்க்கத்தினருக்குத் தெரியும்.

மறுவளமாகக் கூறுவதாயின், தெரிந்தும் புரிந்தும் கூட, பாதிப்புற்ற மக்களுக்கான தேவைகளில் இருபது வீதம் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று "அடித்துக்" கூறலாம்!

இழப்புகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் எனச் சுட்டிக் காட்டப்படும் தரப்புக்களே முதலாளி ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டு --

'சம்பளம்' வழங்கும்போது, அதனைக் கை நீட்டி வாங்குவதற்கு, ஏற்கனவே பலவகைகளால் பாதிப்புற்றவர்களுக்கு நிலை தாழ்ந்து விட்டோமே என்ற மனவேக்காட்டு உணர்வு கூட உள்ளத்தைக் குடையும்.

இதனை நல்லாட்சி அரசினால் உணர்ந்து கொள்ள இயலாமற் போனதா?

ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருப்போர் தமது குறித்த செயற்பாடு சரியே என்று சப்பைக்கட்டுச் "சித்தாந்தம்" பேசிக் காலத்தைக் கரியாக்காது,

போரினால் பாதிப்புற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, உதவிகளை வழங்குவதற்கு மாற்று ஏற்பாடுகள், நடவடிக்கைகளை தாமதம் இன்றி முன்னெடுக்க வேண்டும்.

ஜனநாயக நாடு ஒன்றில், தேவையற்ற இராணுவத் தலையீடுகள், பெரும் மோசமான விளைவுகளையே உற்பவிக்கும். அந்த நிலைமை ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருப்பவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல!

# வடக்கு- கிழக்கை ஆட்சி செய்வது யார்?



யோ.நித்திலன்

ஐயா, போர் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்து விட்டன. கொடியபோரால் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து இன்றுவரை அகதி முகாம்களில் காலத்தைக் கடத்தி வருகிறார்கள். அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு இராணுவம் தடை போடுகின்றது. குறிப்பாக மயிலிட்டி கிராம மக்கள் சொந்த இடத்தில் குடியமர்த்துவதற்கு அந்தப் பகுதி இராணுவ அதிகாரி தடை போடுகிறார். கிழக்கில் முதலமைச்சர் பங்கேற்க வேண்டிய கூட்டத்தில் அவரைப் பங்கு பற்றவிடாது தடுக்கிறார் கடற்படை அதிகாரி. மட்டக்களப்பில் வனத்திணைக்கள அதிகாரிகளை இராணுவ அதிகாரியின் முன்னிலையில் படையினர் தாக்குதல் நடத்துகின்றனர். அண்மையில் ஒரு கிராம அதிகாரியும் இராணுவத்தினரது தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறார். இவ்வாறான ஒரு சம்பவம் முல்லைத்தீவிலும் நடைபெற்றது. இந்தச் சம்பவம் நடந்து இரண்டு மாதம் கடந்து விட்ட நிலையிலும், சம்பந்தப்பட்டோர் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இணைத் தலைவர்களின் கூட்டத்தில் இந்தப் பகுதி பொலிஸ் அதிகாரி, இணைத் தலைவர்களுக்கு சமமாக தனக்கும் ஆசனம் ஒதுக்கித் தர வேண்டும் – என்கிறார். கடந்த ஆட்சிக் காலத்தில் தான் படையினர் அதிகாரம் செலுத்தினார்கள் என்றால், இன்றைய நல்லாட்சியிலும் படையினரின் செயல்களில் மாற்றம் எதுவுமில்லை. இன்றைய ஆட்சியாளர்களைப் பொறுத்த வரையில் சிங்கள மக்களும் இராணுவமுமே முக்கியமாகத் தெரிகின்றது. இதற்கு உதாரணம்கொஸ்கம இராணுவ முகாம் தீ விபத்து.

### கொஸ்கம தீ விபத்து

அந்தப் பகுதி மக்களின் தேவைகளுக்கு ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வரும் முயற்சியில் சிறிதளவு கூட பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடயத்தில் இல்லை. ஆட்சியாளர்களின் இந்த பக்கச் சார்பான செயலுக்கு ஐ.நா. சபையும் ஜனநாயகமுகமூடி அணிந்த மேலை நாடுகளும் துணை போகின்றன. இந்த நிலையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு கலப்புத்திருமணம் வேண்டுமென்கிறார் ஆளுநர். முதலமைச்சர் தமிழர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென்கிறார். 56 ஆண்டுக்கு முன்பு எவருடைய வற்புறுத்தலுமின்றி தமிழர்கள் சிங்களம் படித்தார்கள். சிலர் கலப்புத் திருமணமும் செய்து கொண்டார்கள். பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் சட்டத்தாலும் தொடர்ந்து நடந்த, நடத்திய இனக் கலவரங்களாலும் இவையாவும் செல்லாக்காசாகி விட்டன. தமிழர்களின் இன்றைய நிலை சொந்த

> தமிழர்களின் இன்றைய நிலை சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ முடியுமா? என்பதே. மாத்தறை, அம்பாந்தோட்டை சிங்களவர்கள் இராணுவத்தின் துணையுடன் நாவற்குழியில் குடியமர்ந்துள்ளனர்.

மண்ணில் நிம்மதியாக வாழ முடியுமா? என்பதே. மாத்தறை, அம்பாந்தோட்டை சிங்களவர்கள் இராணுவத்தின் துணையுடன் நாவற்குழியில் குடியமர்ந் துள்ளனர்.முல்லைத்தீவுப் பகுதியில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் தொடர்கின்றது.

### மயிலிட்டி மக்களின் அவலம்

தலைமுறை தலைமுறையாக மயிலிட்டியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அகதி முகாம்களில் வாழ்வதுடன் கடலில் தொழில் செய்வதற்கும் தடை போடுகிறது இராணுவம். இதற்கு பெயர் தானா நல்லாட்சி. எம் உயிரினும் மேலான வாக்குகளை அளித்து, ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு ஆட்சியாளர்கள் செய்யும் கைம்மாறு இதுதானா. அதுமட்டுமல்ல கொஸ்கமவில் நடந்ததைப் போன்ற சம்பவம் தமிழ்ப் பகுதிகளில் நடந்தால், நடத்தப்பட்டால் எம் மக்களின் கதிதான் என்ன. எனவே காலங்கடத்தும் ஆட்சியாளர்களின் கைப்பாவைகளாக தமிழ்த்தலைவர்கள் நடந்துகொள்வது ஏற்புடையதல்ல. எமது உரிமைகள் எமக்குக் கிடைக்கும் வரைதனிவழிநடப்பதேபொருத்தமாகும். ஆரிய மேலாதிக்க சிந்தனையுடைய இந்தியாவோ? ஜனநாயகப்போர்வைபோர்த்த மேலை நாடுகளோ? ஐ.நா. சபையோ? நடு நிலையில் நியாய சிந்தனையுடன் நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. சிங்கள ஆட்சியாளர்களின் செயல்கள் பலஸ்தீனத்தில் – இஸ்ரேலிய யூதர்கள் செயற்படும் முறையிலேயே அமைந்துள்ளது. இந்த நிலை தொடருமாயின் அது மீண்டுமோர் ஆயுதப் போராட்டத்துக்கு வழி வகுப்பதாகவே அமையும். இனவாதச் சிங்களக் கட்சிகளின் எதிர்பார்ப்பும் இதுவே.

இப்படியொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இது நாட்டுக்கும் எமது இனத்துக்கும் ஏற்புடையதல்ல.



# அரசும் நீதித்துறையும் கௌரவத்துக்குரியதாக வேண்டும்!

வந்தியத்தேவர்

உதய கம்மன்பில இனவாதத்தின் தூணாக இருந்து இலங்கையைநாசப்படுத்தும் பிரகிருதிகளில் ஒருவர். நாட்டின் நலன் சார்ந்து சிந்திக் காது பதவிக்காக துவேசத்தை வளர்க்கும் எதிரணிக் கும்பலின் ஓர் அங்கமானவர். இப்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு மோசடி மன்னன். வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் பங்குகள் தொடர்பான மோசடி ஆவணத் தயாரிப்பில் எழுபது கோடி ரூபா வைச்சுருட்டிக் கொண்டு அதற்காகச் சிறையில் இருப்பவர்.
இந்த நிலையில் அவரின் கைது ஓர் அரசியல் பழிவாங்கல் என்று எதிரணியினர் கூறிக்கொண்டிருப்பதன் மூலம் அந்தக் கும்பல் தமது பங்காளரை நாணயம் மிக்க ஒருவராகக் காட்ட முயல்வதுதான் வேடிக்கை.
இனம் இனத்தைச் சேரும் என்பதுபோல் ஊழல் மோசடிகளின் பிதாமகர்களாக உள்ள மகிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச, டலஸ் அழகப்பெரும போன்றவர்கள் கம்மன்பிலவுக்காக கண்ணீர் விடுவது ஒன்றும் புதுமையும் அல்ல.
சட்டவிரோதமான வகையில் மோசடியான ஆவணங் களைத் தயாரித்து சொத்துக்களைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பெயரிலேயே உதய கம்மன்பில கைதாகி உள்ளார். இது தொடர்பாக நீண்ட விசாரணைகளும் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு விசாரணையில் கிடைக் கும் தகவல்களைக்கொண்டு சம்பந்தப் பட்டவர்களைச் சிறையில் அடைப்பதும் நீதியின் முன் நிறுத்துவதும் எப்படித் தவறாகும்?

### சட்டத்தின் முன் அனைவரும் சமம்

சட்டத்தின்முன்அனைவரும் சமனே? சுடலையில் ஆண்டிக்கும்.
அரசனுக்கும் ஒரே இடமோ அவ்வாறே சட்டத்தின் முன் அரசனும் ஆண்டியும். செங்கோலினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த உண்மையை மறுதலிப்பதும் அதற்காகப் பழி வாங்குகிறார்கள் என்று கூறுவதும் எந்த வகையில் நியாயம்?
சாதாரண ஓர் அதிகாரி ஊழல் மோசடிகளில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்படின் அவர் மீது அரசு பலதரப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. அதையொரு பழி வாங்கும் நடவடிக்கை எனக் கூற முடியாது. ஆனால்,இந்த அரசியல்வாதிகள் இருக்கிறார்களே, அவர்கள் அதியுச்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது மட்டும் அது எப்படிப்பழிவாங்கல்என்று கூற முடியும். ஆளும் கட்சியினராயினும் எதிர்க் கட்சியினராயினும் இந்த விடயத்தில் அரசியல் பழிவாங்கல் என்று கூறித் தம்மைச் சுத்தமானவர்களாகக் காட்ட முயற்சிப்பதை மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதே உண்மை.



உதய கம்மன்பிலவின் கைது விவகாரத்தில் அரசோ அரசியல் கட்சிகளோ தொடர்புடையதாக இல்லை. அது தனிப்பட்ட கொடுக்கல்வாங்கல் விவகாரம். அதில் இடம்பெற்ற மோசடி விவகாரம் என்கிறார் லலித பெரேரா.
இவர் ஆஸ்திரேலிய முதலீட்டாளர். பிரையின் ஷெடிகின் அதிகாரத் தத்துவத்தைப் பெற்றவர் ஆவார். கம்மன்பில கைது செய்யப்பட்ட பின்னர், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளார். உதய கம்மன்பில இதற்கு முன்னரும் கூட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் கைதானவர்தான். அவர் தன்னை இனவாதியாகக் காட்டி அரசியல் செய்தது கூட தனது மோசடிகளை மறைப்பதற்காகவும் இருக்கலாம்.
தனிநபர் ஒருவரின் ஊழல் மோசடிகளைக் கண்டிக்காது அதை அரசியலாக்கக் குரல் கொடுக்கும் மகிந்த ராஜபக்சவும் ஏனைய அவரது குழுவினரும் இலங்கையை எந்தளவுக்கு நேசிக்கிறார்கள்என்பதையும் ஊழல் மோசடிகள் குறித்த விடயங்களில் அவர்களின் வகிபாகம் என்ன என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

### வெளிநாட்டு முதலீடுகளில் பின்னடைவு

சிறையில் உள்ள கம்மன்பில நாடாளுமன்றம் செல்ல அனுமதிக்கப்பட, நாடாளுமன்றத்தில் அவர் பெயரால் வாக்குவாதங்களும் குழப்பங்களும் நிகழ்ந்துள்ளன.
அவருக்குச் சார்பான தினேஷ் குணவர்த்தன இதற்குக் காரணமாக இருந்தார். வெளிநாட்டாரின் முதலீடுகளை எதிர்பார்க்கும் இலங்கைக்கு மோசடி ஊழல் நடவடிக்கை பெரிய பின்னடைவைத்தரும் விடயமாகும். கம்மன்பில மற்றும் மோசடிகாரர்களின் நடவடிக்கைகளால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதை விரும்பவில்லை என்றும் தெரியவருகிறது.
நாட்டின் நலனே தமது குறிக்கோள் எனக் கூச்சலிடும் இவர்களால் மக்கள் தமக்குக் கிடைக்கக்கூடிய பலதரப்பட்ட பயன்களை இழந்துவிடுகின்றனர்.
இந்த மோசடிகள் குறித்து கடந்த ஆட்சியின்போதும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அப்போது விசாரணைகள் இடம்பெறவில்லை. ஊழல் மோசடி குறித்த விசார ணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டிய அரசியல்வாதிகள் பலர் இங்குள்ளனர். அவர்கள் மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.
இவற்றை வெறும் அரசியல் பழிவாங்கல் என்று கூறிக் காலத்தை இழுத்தடிக்காது விரைந்து செயற்படுவது அரசுக்கும் நீதித்துறைக்கும் கௌரவத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும்.

## கண்ணுக்குத் தெரியாத ஊனமடைந்தோரையும் கவனியுங்கள்

நான் ஒரு விடுதலை விரும்பி, தாயகத்தில் 2009இல் நடந்த இறுதிக்கட்டப் போராட்டப் பின்னடைவும் உறவுகளின் அநியாய இழப்புக்களையும் தாங்க முடியாததால் கடுமையான மனச்சோர்வு, பலவீனக் குறைபாடு, மனக்குழப்பம் போன்ற உளநோயினால் பாதிக்கப்பட்டு, உறவினர் வீடு ஒன்றில் தொழில் ஏதும் செய்யமுடியாது முடங்கிய நிலையில் நோய்களுடனும் போராடி நடைபிணமாக வாழ்ந்து வருகின்றேன். எனக்கு மூன்று குழந்தைகள். நிரந்தரமாக வசிப்பதற்கு கூட வீடு இல்லை. இந்த விடயம் சம்பந்தமாக பல தடவைகள் அரச அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று எனது மருத்துவ அறிக்கைகளையும் காண்பித்தும் இதுவரை எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை. அரசு எனக்கு மாற்று ஆற்றல் அடையாள அட்டையையும் வழங்கி இருக்கிறது.
கண்ணுக்குத் தெரியாத ஊனப்பாதிப்பால் வறுமை எனும் கொடிய நோயோடு போராடி வருகிறார் மனைவி. ஐயம் புகினும் செய்வன செய் என்கிறார் தமிழ் புலவர் ஔவையார். அதற்கமைய இன்றைய சூழலில் கண்ணுக்குத் தெரியாத ஊனப்பாதிப்பால் எத்தனையோ எமது உறவுகள் பாதிக்கப்பட்டு என்போல் வைத்தியசாலையில் தொடர் சிகிச்சைப் பிரிவில் (கிளினிக்கில்) சிகிச்சை பெற்று கண்ணீருடன் எமக்கு உதவ எவருமில்லையா என்று ஏக்கப் பெருமூச்சு விடுவதைப் பார்க்கும்போது என்னால் கண்ணீர் விடுவதைத் (அவர்களுடன் சேர்ந்து) தவிர வேறு ஏது செய்ய முடியும். சில நோயாளிகளுக்கு அரசு சமூக சேவைப்பகுதியூடாக மாதாந்தம் மூவாயிரம் ரூபாவை வழங்கி வருவதை இருகரம் கூப்பி வரவேற்கின்றேன். இந்த உதவியைப்பெறும் நோயாளிக்கு தனது மருத்துவ மற்றும் போக்குவரத்துச் செலவுக்கு பெரும் ஆறுதலாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கிடையாது. இதேபோல் இப்படிப்பட்ட கண்ணுக்கு தெரியாத ஊனப்பாதிப்பால் அவலப்படும் எமது உறவுகளுக்கு அந்தந்தப் பிரிவுகளில் அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வீடு, மலசலகூடம், குடிதண்ணீர், சுயதொழில் உதவிகளில் முன்னுரிமைப் பதிவை மேற்கொண்டு உதவிட, அரச அதிகாரிகள் மற்றும் ஊர்ப் பெரியவர், கல்விமான்கள் என்போர் குரல் கொடுங்கள். இன்று நடைபிணமாக வாழும் என்போன்ற நோயாளிகளின் விடயத்தில் அதிக அக்கறை செலுத்துங்கள். அவர்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுங்கள். அவர்களின் கோரிக்கைகளைத் தட்டிக் கழிக்காதீர்கள், தாயகத்தில் அவர்களின் குடும்பங்களும் ஒருவித குறையும் இன்றி இனிமையான வாழ்வு பெற்று வாழ வழி அமைத்துக் கொடுப்போமென உறுதி பூணுவோமாக!

தாயகக் கனவோடு விடுதலை விரும்பி

## சுகாதாரப் பரிசோதகர்களின் கவனத்துக்கு...

அண்மையில், எனது மகள் முட்டைக் கொத்து வாங்கித் தரும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க, எமது வீட்டுக்கு அருகில் உள்ள சந்தியில் அமைந்திருந்த ரொட்டிக் கடைக்கு மகளையும் கூட்டிக் கொண்டு போயிருந்தேன்.
ரொட்டி போடுபவரிடம் ஓடர் கொடுத்துவிட்டு அருகில் உள்ள வாங்கொன்றின் மீது அமர்ந்திருக்கையில், ரொட்டி போடுபவர் பிளேட்டில் முட்டையை உடைத்துப்போட்டார். அது பழுதடைந்த முட்டை எனத் தெரிந்ததும் வழிதகட்டால் அதை வழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு மீண்டும் ஒரு முட்டையைஉடைத்துப்போட்டபோது அதுவும் பழுதடைந்ததாக இருந்தது. குப்பைக் கூடைக்குள் அதையும் வழித்துப் போட்ட பின் பிளேட்டை நன்கு சுத்தம் செய்தார். திரும்பவும் ஒரு முட்டையைஉடைத்துப்போட்டபோது அந்தமுட்டைநல்லதாகவே இருந்தது. முட்டைக் கொத்தை வாங்கிக் கொண்டு வீடு திரும்பும்போது மகள் என்னிடம் கூறினாள்.
கடைக்கு வெளியில் என்றபடியால் கூழ் முட்டை எது? நல்ல முட்டை எது? என்று தெரியுது. கடைக்குள்ளே வைத்து கொத்துப் போடுவதாக இருந்தால் கூழ் முட்டையைத்தானே போட்டுத் தருவினம். நாங்களும் வாங்கிக் கொண்டு போய் சாப்பிட வேண்டியதுதான். கடைக்குள்ளே (கடையின் பின்புறம்) வைத்துக் கொத்து ரொட்டி தயாரிக்கும் கடைகள் குறித்து அவதானம் வேண் டும் சுகாதாரப் பரி சோதகர்களுக்கு இந்த விடயம் சமர்ப்பணம்.

வன்னிவாசி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

# கட்சி சார்ந்து இயங்காது விசாரணை நடத்துங்கள்

## கோப் குழுத் தலைவர் ஹந்துன்நெத்தியிடம் அமைச்சர் சுஜீவ சேனசிங்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 26

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்பான விசாரணையை நாம் சார்ந்த கட்சியின் பார்வையில் நோக்காது 'கோப்' குழுவின் தலைவராக நோக்கி விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், கோப் குழுத் தலைவருமான சுனில் ஹந்துன்நெத்தியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது. வாய்மூல கேள்விக்கான விடைகளின் பின்னர், சிறப்புரிமை பிரச்சினையை மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பினார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில், தமது பெயரையும், குழுத் தலைவர் பதவியையும் கூறி, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, மத்திய வங்கி ஆளுநரை 'மஞ்சள் நீரால் குளிக்க வார்த்து' தூய்மைப் படுத்தும் முயற்சிகளை மேற் கொள்கின்றனர் என்று குறிப் பிட்டார். ஹன்சாட்டிலும் அது அச்சிடப்பட்டது.

இதனை கடுமையாக எதிர்க்கின்றோம். எமக்கு அவ்வாறான தேவை கிடையாது. எவரையும் மஞ்சள் நீரால் குளிக்க வார்த்து தூய்மைப்படுத்தும் தேவை கிடையாது. விமல் வீரவன்சவின் கருத்தை நிராகரிக்கின்றேன்.

இது சபையை பிழையாக வழி நடத்தும் விடயம். மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக முதலில் போர்க்கொடி தூக்கியவர்கள் நாம்.- என்று அவர் தெரிவித்தார்.

விமல் வீரவன்சவின் கருத்தைக் கடுமையாக எதிர்க்கிறேன். தேசப்பற்று போர்வையை போர்த்திக் கொண்டு, கடந்த காலங்களில் அவர் செய்த மோசடிகள் வெட்கப்பட வேண்டியவை - என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், கோப் குழு தலைவர் பதவியையும் தனித்தனியாக பிரித்து அர்த்தப்படுத்துங்கள். உங்களது கட்சி சார்ந்த கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில், மத்திய வங்கி ஆளுநரின் விசாரணையை முன்னெடுக்காது, பக்கச்சார்பில்லாமல் கோப் குழுவின் தலைவர் என்ற ரீதியில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்று இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். (ந-ஐ-5)









# "எங்கட இடத்துக்கு எங்களை விடுங்கோ!"

சூரியகாந்தி


ஸுடோ ஸ்வாமி

வடக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெற்கில் உள்ள சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும் என்னும் குரல் அண்மைக் காலமாக வலுப்பெற்று வருகின்றது. பலரும் அதனை வலியுறுத்தி வருகின்றனர். நல்லிணக்கத்துக்கான வழியாகவும் அது காட்டப்படுகிறது. எனினும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்னவோ ஆமை வேகத்தில்தான் நகர்கின்றன.

அதிர்ஷ்டவசமாகவோ துரதிர்ஷ்டவசமாகவோ சிங்கள மக்களுக்கு வடக்கு நிலவரம் தொடர்பில் தெளிவூட்டவேண்டும் என்கிற விடயம் நல்லிணக்க புரிந்துணர்வு நிகழ்ச்சி நிரலில் முதன்மைப் படுத்தப்படல் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என் பதை அண்மையில் கண்டு உணர முடிந்தது.

நேற்றைக்கு, முந்தைய வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக பயிற்சிப் பட்டறை ஒன்றில் கலந்துகொண்டிருந்தேன். வடபகுதி ஊடகவியலாளர்கள் சிலருடன் தென்பகுதி ஊடகவியலாளர்களில் ஒரு சிலரும் அதில் கலந்துகொண்டனர். அந்தப் பயிற்சிப்பட்டறையின் முதல்நாள் நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது.





பட்டறை அமர்வுக்கு அழைக்கப்பட்டிருந்த வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் க.குணபாலசிங்கம் முன்வைத்த உணர்வுபூர்வமான கருத்துக்கள், அங்கு வந்திருந்த தென்பகுதி ஊடகவியலாளர்களை அருட்டியிருந்தது. வலி. வடக்கு மக்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் தொடர்பில் கடந்த பல வருடங்களாக வடக்கிலிருந்து அவர் எழுப்பி வரும் குரலையே அங்கும் பதிவு செய்தார். ஆனால், அது தெற்கிலிருந்து வந்திருந்த ஊடகவியலாளர்களின் மனதில் ஆழமான காயத்தை ஏற்படுத்தியதை உணர முடிந்தது.

மறுநாள் காலைவேளை ஜனாதிபதியின் வருகைக்காக யாழ்ப்பாணம் பரபரப்பாக்கியிருக்க, பிற்பகலில் தென்பகுதி ஊடகவியலாளர் குழு வலி. வடக்குத் தொடர்பான உண்மை நிலவரத்தைக் கண்டறிய திட்டமிட்டது. அந்தக் குழுவினருடன் நானும் இணைந்து கொண்டேன். அந்தப் பயணத்தில், கலப்பு எதிர்வினையுடன்கூடிய அனுபவங்களுக்கு முகங்கொடுத்த ஊடகக் குழுவினரின் உணர்ச்சி வெளிப்பாடுகளை அருகிலிருந்து காணவும் வாய்த்திருந்தது.

சனிக்கிழமை பிற்பகலில் தமது வாகனங்களில் மொழிபெயர்ப்பாளர் ஒருவருடன் புறப்பட்டனர் தெற்கு ஊடகவியலாளர்கள். கோயில் வீதிக்கு சென்று வலி. வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வுச் சங்க தலைவர் குணபாலசிங்கம் மற்றும் அதன் செயலாளர் மா. நாகேந்திரசீலன் ஆகியோரையும் தமது வாகனங்களில் ஏற்றிக்கொண்டனர். பருத்தித்துறை வீதி, அச்சுவேலி, தொண்டமானாறு ஊடாக புனரமைப்புக்காக ஏங்கும் ஏபி-021 வீதி வழியே வளலாய்க்கு விரைந்தது வாகனம்.

**வளலாய் பயணம்**

வீதியை மறித்து இராணுவத்தினர் அமைத்திருந்த மறிப்பு வேலியை தூரத்தில் கண்டதும் கிராம சேவ கரின் அலுவலகம் என்று காண்பிக்கப்பட்ட ஒரு கொட்டகைக்குச் சமீபமாகக் குழுவினர் சென்ற வாகனங்கள் நிறுத்தப்பட்டன. வீதியைத்திட்டியபடியே குழுவினர் வாகனங்களிலிருந்து இறங்கினர். ஏ-9 மெழுகுச் சாலைகளில் வழுக்கி வந்துபோயிருந்த அனுபவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட அனுபவமாக இந்த வீதிகளின் பயணம் அவர்களில் ஒரு சிலருக்கு இருந்து. சாம்பலிலிருந்து மீண்டெழுவதாக சொல்லப்படும் பீனிக்ஸ் பறவைபோல, அண்மையில்தான் விடுவிக்கப்பட்ட அந்தப் பகுதியில் வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருப்பது தெரிந்தது.

வலி. வடக்கு நிலவரம் பற்றி அதிகம் தெரிந்திராத தெற்கு ஊடகக் குழுவினருக்கும் 26, 27 வருடங்களாக அகதி வாழ்க்கையே வாய்த்த பின்னர் இப்போதுதான் சொந்த இடங்களுக்கு திரும்பியிருக்கும் அந்த மக்களுக்குமிடையே மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் உரையாடல்கள் ஆரம்பமாகின. அங்கு குழுமிய மக்கள் தமது பழைய நிலைகளிலிருந்து புதிய மீள் குடியேற்ற இடங்களுக்கு நகர்வதில் தாம் எதிர்கொள்ளும் இடர்பாடுகள், தமக்கு இருக்கும் வசதியீனங்கள் தொடர்பில் வெளிப்படுத்தினர். கடற்றொழிலையே நம்பியிருக்கும் அந்த மக்கள் புதிதாக விடுவிக்கப்பட்ட இடங்களில் உள்ள கடற்கரையோரமாக தமது படகுகளை நிறுத்த வசதி இல்லாததன் காரணமாக சொந்த இடத்தில் தொழிலைத் தொடங்க முடியாமல் இருப்பது பற்றி வருத்தப்பட்டனர். இதனால் இடம்பெயர்ந்திருந்த காலத்தில் தாம் தொழில் செய்த பழைய இறங்குதுறைகள் ஊடாகவே இன்னும் தொழிலுக்குச் சென்று வருகின்றனர் என்று தெரிவித்தனர். இரவில் கடற்றொழிலையும் பகலில் கட்டுமான வேலையையும் ஒருங்கே முன்னெடுக்கும் அந்த மக்களின் மீள் குடியேற்ற ஆரவம் வந்திருந்த குழுவினரின் விழிகளைவிரியச் செய்தது.

அரச அதிகாரிகள் வழங்கும் ஒத்துழைப்புத் தொடர்பில் துருவிய குழுவினரிடம் வளலாய் மக்கள் ஓரளவுக்குத் திருப்தியே வெளியிட்டனர். குறிப்பாகக் கிராம அலுவலர், பிரதேச செயலாளர் அலுவலகப் பணியாளர்களின் சேவை தொடர்பில் பாராட்டினர். புதிதாக மீள்குடியமர்ந்த பகுதிகளில் வேலிகளுக்கு கற்தூண்கள் அமைத்து எல்லை பிரித்துக் கொண்டிருந்த அந்த மக்களின் அச்சறிக்கை, தென்பகுதியிலிருந்து வருகை தந்திருந்தவர்களை மிகவும் கவர்ந்திருந்தது. அந்த அச்சறிக்கைக் காணிகளின் உள்ளே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பில் மக்களின் மனநிலையை ஆராயும் வகையில் ஊடகவியலாளர்கள் கேள்விகளைத் தொடுத்தனர். வீடுகளுக்கென ஒதுக்கப்பட்ட எட்டு லட்சம் ரூபாயில் சில சில காரணங்களுக்காக பதினாறாயிரம் ரூபா கழிக்கப்பட்டு எஞ்சிய தொகையே கையில் கிடைக்கிறது என்று மக்கள் தெரிவித்தனர். வயது முதிர்ந்தோருக்கு வீட்டுத் திட்டம் இல்லை என்று நிராகரித்திருப்பது அவர்களை மேலும் அநாதரவான நிலைக்குள் தள்ளியிருக்கிறது என்றும் கவலைப்பட்டனர். பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றன என்பதையும் ஆதாரங்களோடு சுட்டிக்காட்டினர்.

மருத்துவமனை, பாடசாலை, தபால் வசதிகள் எதுவுமே தமது கிராமங்களுக்கு இன்னமும் வராத நிலையிலும் தமது சொந்த மண்ணுக்கு, அதுவும் 26 வருடங்களுக்கு பிற்பாடு திரும்புவதில் அந்தப் பிரதேச மக்கள் காண்பிக்கும் வேகம் தெற்கு ஊடகவியலாளர்களிடம் பெரும் வியப்பை உண்டாக்கி இருந்தது.

> தனது பெற்றோர்களுடன் வளர்ந்து, விளையாடி, வெங்காயம் விளைவித்து வாழ்ந்த சொந்த வீட்டு நிலத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டும், மீதிப் பகுதி முட்கம்பி வேலிக்குள் சிறைப்பிடிக்கப்பட்டும் கிடக்கும் தமது சபிக்கப்பட்ட வாழ்க்கை குறித்து கலங்கும் கண்களுடன் கஸ்தூரி (வயது-68) விவரித்தார். அவரது சோகம், கண்ணீர், ஆசை, எதிர்பார்ப்பு, கோபம் எல்லாவற்றையும் நேர்கண்டு குறிப் பெடுத்துக் கொண்டனர் ஊடகவியலாளர்கள்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்கியிருக்கும் தமக்குரிய பாடசாலையான பலாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் பலாலி ஆரோக்கிய மாதா ஆலயம் என்பன விரைவில் விடுவிக்கப்படும் என தாங்கள் நம்புகின்றனர் என்று கூறி, பாதுகாப்பு வேலிக்கப்பால் இப்பிலிப்பில் மரங்களால் காடகிப் போய்க் கிடக்கும் பகுதியைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டனர். அந்த மக்களின் நம்பிக்கைகளையும் அவசர அவசரமாகத் தமது நோட்டுப் புத்தகங்களில் பதிவு செய்ய குழுவினர் தவறவில்லை.

அத்தோடு அங்கிருந்து மெல்ல விடைபெற்றனர் குழுவினர். புதிதாக மீளக்குடியமர்ந்த மக்கள் தொகுதியினரிடமிருந்து புறப்பட்டு தெல்லிப்பழை வீமன்காமத்தை அண்டிய மயிலிட்டி பிரதேசத்துக்கு பயணித்தனர்.

**வீமன்காமம், மயிலிட்டி பயணம்.**

அச்சுவேலி, நிலாவரை, ஏழாலை வழியாக வந்த குழுவினர், தெல்லிப்பழை வீதியூடாக வீமன்காமம், மயிலிட்டி பகுதிக்கு வந்து சேர்ந்தனர். பாதுகாப்பு வேலி 150 மீற்றர் பின்னகர்த்தப்பட்டதன் காரணமாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தமது வாழ்வாதாரங்களை மும்முரமாக முன்னெடுக்கும் வடபுல மனிதர்களைச் சாட்சியாளர்களாகக் கண்டுகொள்ளும் பாக்கியம் அங்கே அவர்களுக்குக் கிடைத்தது.

தனது பெற்றோர்களுடன் வளர்ந்து, விளையாடி, வெங்காயம் விளைவித்து வாழ்ந்த சொந்த வீட்டுநிலத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டும், மீதிப் பகுதி முட்கம்பி வேலிக்குள் சிறைப்பிடிக்கப்பட்டும் கிடக்கும் தமது சபிக்கப்பட்ட வாழ்க்கை குறித்து கலங்கும் கண்களுடன் கஸ்தூரி (வயது-68) விவரித்தார். அவரது சோகம், கண்ணீர், ஆசை, எதிர்பார்ப்பு, கோபம் எல்லாவற்றையும் நேர்கண்டு குறிப்பெடுத்துக் கொண்டனர் ஊடகவியலாளர்கள்.

மயிலிட்டி பிரதேசத்தின் வளமை செழுமை தொடர்பில் நினைந்துருகும் கஸ்தூரி, 1990ஆம் ஆண்டில் அங்கிருந்து இடம்பெயர்ந்தவர். இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டின்போது தனது ஒரு சிறுநீரகத்தை இழந்தார். இப்போதும் அந்த நிலையிலேயே வாழ்கின்றார்.

நலன்புரி முகாம்களில் வாழும் அனைவரையும் 6 மாதகாலத்துக்குள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால அளித்த காலக்கெடு எந்தவித பயனும் இன்றி முடிந்த நிலையிலும் மைத்திரிபால தனது காணியை விடுவிப்பார் என்ற விடாத நம்பிக்கையுடன் தள்ளாத வயதிலும் தளராத போராட்டத்தைத் தொடர்கிறார் கஸ்தூரி. தனது காணியை விடுவித்தால் தன் வாழ்வாதாரத்தை அதிலிருந்தே தான் தேடிக்கொள்வார் என்றும் அரச உதவிகளைத் தான் எதிர்பார்க்கத் தேவையில்லை என்றும் அவர் கூறுகிறார்.

சலாவை இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பை அடுத்து அங்கே உதவிகளை அள்ளிக் குவிக்கும் அரசு, 30 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழும் தன்னைப் போன்றவர்களுக்கு கிள்ளியாவது

(36ஆம் பக்கம் பார்க்க)



# ஐம்பது ஆண்டுகள் பயணம்



## "ஸ்டார் டிரெக் பியாண்ட்"

அயல் கிரகவாசிகளுக்கும் பூமியில் உள்ள மனிதர்களுக்கும் இடையே நடைபெறும் போர்களை மையமாக வைத்து ஸ்டார் டிரெக் ஹாலிவூட் திரைப்படம் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் தொலைக்காட்சித் தொடர்களையும் தொடர் காட்டூன் கதைகளாகவும் இருந்து இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் இரு உச்சம்கண்டுள்ளது. அயல் கிரகங்களைத் தேடி அண்டவெளியை நோக்கிப் பாயும் அறிவியல் புனைவுகள் ஹாலிவூட்டைப் பொறுத்தவரை எவர்கிறீன் கதைக்களம். இதனை "வி.எப்.எக்ஸ்" எனப்படும் கிராபிக்ஸ் துறைக்கு மிரட்டலான கற்பனைக் காட்சிகளுக்கு உயிர்தரும் சவாலைத் தரக்கூடிய தொழில்நுட்பப் படங்களின் உலகம் எனலாம். "ஸ்டார் வார்ஸ்" திரைப்பட வளர்ச்சிக்கு உலகம் முழுக்க வெறித்தன மாக ரசிகர்கள் உருவாகினர். அயல் கிரகம் பற்றிய மனித மனதின் தேடலே முக்கியக் காரணமாக இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்ட ஹாலிவூட்டின் மற்றொரு முக்கியமான தொடர்வரிசைப் படங்களில் "ஸ்டார் டிரெக்" வரிசையும் ஒன்று.

1979இல் இந்த வரிசையின் முதல் படமான 'ஸ்டார் டிரெக்: தி மோன் பிக்சர்' வெளியானது. இந்தக் கதைத் தொடரை நிறைவு செய்யவும் பத்தாவது படமுமான 'நெமிஸிஸ்' 2002இல் வெளியானது. இந்தத் தொடரை முடித்துக்கொள்ள மனமில்லாத தயாரிப்பாளர்களான பாராமவுண்ட் பிக்சர்ஸ் இந்தத் தொடருக்குப் புத்தாக்கம் கொடுக்க, இந்தப் புத்தாக்கத் தொடரின் முதல் பாகம் 'ஸ்டார் டிரெக்' என்ற பெயரில் 2009இல் வெளியானது.

இரண்டாவது பாகம் 'ஸ்டார் டிரெக் இன்டு டார்க்னெஸ்' 2013-ல் வெளியானது. புத்தாக்கத் தொடரின் மூன்றாவது பாகமாகவும், ஒட்டுமொத்தமாக ஸ்டார் டிரெக் வரிசையின் 13ஆவது பாகமாகவும் ஸ்டார் டிரெக் பியாண்ட் ஜூலை மாதம் 22ஆம் திகதி வெளியாகவிருக்கிறது என்ற செய்தி ஸ்டார் டிரெக் வரிசைப் படங்களின் ரசிகர் களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

### இயக்குநர் தேர்வு

2013 இல் இந்தப் படத்துக்கான முதல் கட்ட வேலைகள் தொடங்கின. ஸ்டார் டிரெக்கின் முந்தைய படங்களின் இயக்குநர்கள் உட்படப் பலரும் பரிசீலிக்கப்பட்டு இறுதியில் 'ஃபாஸ்ட் அண்டு ஃப்யூரியஸ்' படத்தின் இயக்குநரான 'ஜஸ்டின்லின்' தேர்வு செய்யப்பட்டார். திரைக்கதையை சிமோன் பெக், டக் யூங் ஆகியோர் அமைத்தனர். கிறிஸ் பைன், ஸக்காரி க்விண்டோ, பெக், கார்ல் அர்பன் போன்ற முந்தைய படங்களின் நடிகர்களுடன் புதிதாக இட்ரிஸ் எல்பாவும் சோஃபியா பவுட்டெல்லாவும் தேர்வு செய்யப்பட்டனர். 2015 ஜூன் மாதத்தில் தொடங்கிய படப்பிடிப்பு தற்போது நிறைவடைந்து வெளியீட்டுத் திகதியும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த டிசம்பர் மாதத்தில் இந்தப் படத்துக்கான முதல் டிரெய்லர் வெளியாகி, ரசிகர்களின் ஏகோபித்த கிண்டலைச் சம்பாதித்துக்கொண்டது. அடுத்த டிரெய்லரின் மூலம் அதைச் சரிக்கட்டிவிட்டார்கள் தயாரிப்பாளர்கள். 1966இல் தொலைக்காட்சித் தொடராகப் பிறப்பெடுத்த ஸ்டார் டிரெக், பிற்பாடு திரைப்பட அவதாரமும் எடுத்தது. ஆக, ஐம்பதாவது ஆண்டில் அடியெடுத்துவைத்திருக்கிறது ஸ்டார் டிரெக்.

### அப்படியென்றால் கதை என்ன?

ஸ்டார் டிரெக் பியாண்ட் படத்தில், கற்பனைக்கு எட்டாத புதிய பாணியில் முதன்மைக் கதாபாத்திரங்கள் அண்டவெளிக்கு மேற்கொள்ளும் பயணம், வேற்றுக் கிரகவாசிகளுடனான நல்லுறவு, அவர்களின் எதிரியாக மாறுவது என்று விண்வெளி சாகசங்களில் சாத்தியமுள்ளதாகக் கருதப்படும் சம்பவங்களின் தொகுப்புத்தான் இதிலும் கதையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

யூ.எஸ்.எஸ். எண்டெர்பிரைஸ் என்ற விண்கலத்தின் குழுவினர் ஐந்தாண்டுகள் பயணமொன்றைத் தொடங்குகிறார்கள். பாதி வழியே அவர்களை இனம்புரியாத சக்தி ஒன்று மூர்க்கமாகத் தாக்குகின்றது. இதனால் அவர்கள் விண்கலத்தை விட்டுவிட்டு ஏதோவொரு கோளில் தஞ்சம் புகுகிறார்கள். அங்கிருந்து தப்பிப்பதற்கு எந்த வழியும் இல்லை என்பதுடன், அங்கும் மூர்க்கமான புதிய எதிரியைச் சந்திக்கிறார்கள். இதையெல்லாம் வென்று மீண்டார்களா? இல்லையா என்பதுதான் மீதிக்கதை. அதைத் தெரிந்துகொள்வதற்கு ஜூலை 22 வரை காத்திருக்க வேண்டும், அறிவியல் புனைவு விரும்பும் ரசிகர்கள்.





# இலுப்பை விதையில் விளக்கெரித்தோம்...!



காமினி பொன்சேகா- இலங்கை திரை உலகில் மிகவும் பிரபலமான இயக்குநராகவும் நடிகராகவும் வடகிழக்கு மாகாணத்தின் ஆளுநராகவும் இருந்தவர். அவர் ஒருமுறை இந்தியா வந்தபோது அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

காமினி, தங்கள் நாடு எப்படி இருந்தது என்பதைப் பற்றி எங்களிடம் விளக்கினார். எங்கள் நாடு இயற்கை வளம் மிகுந்த நாடு. எங்கள் மக்களும் இயற்கையோடு இணைந்து வாழ்பவர்கள். உங்கள் ஊரில் இலுப்பமரம் உண்டு என்பது எனக்குத் தெரியும். அது எங்கள் ஊரிலும் உண்டு. எங்கள் நாட்டு இலுப்பம் விதையும் சரி, மரங்களும் சரி பிரம்மாண்டமானவை. விதை கிட்டத்தட்ட ஒரு விரலளவு நீளம் இருக்கும். எங்கள் மக்கள் அதனைப் பொறுக்கி காயப்போட்டு வைத்திருப்பார்கள். வீட்டில் மணலைக் குவித்து காய்ந்த இலுப்பம் விதைகளை அதன் கூர்மையான பகுதி மேலே தெரியும்படி மணல் குவியலில் நட்டுவிடுவார்கள். இலுப்பம் விதையின் நுனியைக் கிள்ளிவிட்டு அதில் நெருப்பைப் பற்ற வைத்தால் பிரகாசமாக எரியும். அதுதான் எங்கள் குடிசைகளின் விளக்குகள். ஒரு விதை, ஒரு மணி நேரம்கூட எரியும். ஒரு வீட்டுக்கு நான்கு விதைகள் இருந் தால் ஒரு இரவைக் கழித்துவிடலாம். பணச் செலவும் கிடையாது. எங்கள் நாட்டுக்கு ஐரோப்பியர்கள் வந்தார்கள். இலுப்பம் விதை எரிவதைப் பார்த்த அவர்கள் ஆச்சரியப்பட் டார்கள். விதைகளை ஆராய்ந்தார்கள். விளக்கின் சுவாலையால் குடிசைகள் பற்றிஎரியும் வாய்ப்பு அதிகம். ஆகையால், உங்களுக்குப் பாதுகாப்பான விளக்குகளைத் தருகிறோம்- என்றார்கள். கண்ணாடி சிமினி போட்ட மண் ணெண்ணெய் விளக்கைத் தந்தார்கள். பின்னர் அரிக்கன் விளக்கைக் கொடுத்தார்கள். இலுப்பம் விதையை அவர்கள் ஊருக்கு எடுத்துச் சென்றார்கள். அதைச் சோப்பாக மாற்றி எங்களுக்குக் குளிக்கக் கொடுத்தார்கள். நாங்கள் பாதுகாப் பான மண்ணெண்ணெய் விளக்குகளோடும் சோப்புக் குளியலோடும் வாழ்கிறோம். மண்ணெண்ணெய்க்கும் சோப்புக்கும் சிமினிக்கும் திரிக்கும் காசு கேட்கிறார்கள் . கொடுக்கிறோம். காமினி பொன்சேகா தன் பேச்சை முடித்துக் கொண்டார். எவரும் எதுவும் பேசவில்லை.



> வடக்கு அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை உதறித் தள்ளி விட்டு புறந்தள்ளி விட்டு கொழும்பு அரசு செயற்பட்டமை உண்மையில் பெரும் சதிதான்.

# யார் சதி செய்தார்கள்?

தி.ராஜ்

வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வு ஜூன் 23ஆம் திகதி இடம்பெற்றது. யாழ். மாநகர சபை தொடர்பிலான வினாக்கள், விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டை விசாரிக்கக் குழு நியமித்தல் ஆகிய விடயங்கள் அன்றைய நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தன. முதலமைச்சருடன் நேரடியாகத் தொடர்புபட்டவை இந்த இரு விடயங்களும். அன்றைய தினம் முதலமைச்சருக்கு திடீர் சுகவீனம் என்று சபைக்கு அறிவிக்கப்பட்டது.

காலையில் சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்குச் சென்ற முதலமைச்சர் மாலையில் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார். ஆனால், அவர் ஓய்ந்திருக்கவில்லை. வீடு திரும்பியதும் மக்கள் பணிக்காக உடனேயே களத்துக்குப் புறப்பட்டார். ராஜா பிளாசா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்வுக்கு அவர்தான் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். (வழித் தேங்காய் எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும் காரியங்களில் எங்களது மாகாண சபை உறுப்பினர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்று சில வாரங்களுக்கு முன்னர் முதலமைச்சர் உரையாற்றியிருந்தார். ஆனால் அது இந்த விடயத்தைக் குறிப்பிட்டு அவர் சொன்னதல்ல.)

கடும் சுகவீனத்துக்கு மத்தியிலும், தான் எழுதிச் சென்ற நீண்ட உரையை அங்கு நின்று கொண்டே வாசித்தார் முதலமைச்சர். அந்த உரையில் வீட்டுத் திட்டத்தை அமைத்துக் கொடுத்தவர்களுக்கு எல்லாம் நன்றி பாராட்டினார். வன்னி மக்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் அவர்களுக்கும் உதவி வழங்க வேண்டும் என்று முழங்கினார். இறுதியில், மற்றொரு விடயத்தையும் அந்தக் களத்திலேயே அவிழ்த்து விட்டார்.

## சதி

முதன்முறையாக முதலமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பங்கெடுத்திருந்தார். அதில் தான் பங்கெடுத்ததால் வடக்கு மாகாணத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படவிருந்த மிகப்பெரிய சதி நடவடிக்கை அம்பலமானது என்பதே அவர் அவிழ்த்துவிட்ட மற்றொரு விடயம். வவுனியாவில் அமைக்கத் திட்டமிட்டப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தை மதவாச்சிக்கு (அநுராதபுரம் மாவட்டம்) மாற்றம் செய்யப் பார்த்தார்கள் என்பதே முதலமைச்சர் சொன்ன சதி முயற்சி. இதற்கான கோரிக்கையை அமைச்சரவையில் கொழும்பு அரசின் அமைச்சர் ஹரிசன் முன்வைத்தார், அதற்கு அமைச்சர் ரிசாத் பதியுதீனும் எதிர்ப்புச் சொல்லாமல் அமைதி காத்தார் என்பதே முதலமைச்சர் சொல்லிய ஏனைய விடயங்கள்.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சொல்வதைப் போன்று இது மிகப் பெரிய சதி நடவடிக்கைதான். வடக்கு மாகாணத்தின் மீது இன்னமும் கொழும்பு ஓரவஞ்சனையுடன் செயற்படுகின்றது என்பதற்கு இது மிகப் பெரும் உதாரணம் தான்.

## சதிக்கு தூபமிட்டது யார் ?

வடக்கு அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை உதறித் தள்ளி விட்டு - புறந்தள்ளி விட்டு கொழும்பு அரசு செயற்பட்டமை உண்மையில் பெரும் சதி தான். ஆனால் கொழும்பு அரசு, வடக்கு அரசின் தீர்மானத்தை புறக்கணித்துச் செயற்படுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது யார்? இந்தக் கேள்விக்கு எந்த மாற்றுக் கருத்தும் இன்றிக் கிடைக்கக்கூடிய பதில் வடக்கு முதலமைச்சர்தான். தனது அரசின் தீர்மானத்தையே புறந்தள்ளி, முதலமைச்சர் தன்னிச்சையாகச் செயற்பட முற்பட்டமைதான், கொழும்பு அரசின் சதி நடவடிக்கைக்குப் பிள்ளையார் சுழி போட்டது.

## பின்னணி

கொழும்பு அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. இதற்கான காணியை அடையாளப்படுத்துவதில் சிக்கல் தோன்றியது. வவுனியாவைப் பிரதிநித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து இதனை ஓமந்தையில் அமைப்பதற்கு பரிந்துரைத்தனர். ஆனால் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கிராமிய பொருளாதார அமைச்சு நகரில் இருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தினுள்ளேயே காணியை வழங்கவேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தது. அதுதான் நடைமுறை என்றும் வலியுறுத்தியது. இதனால் தாண்டிக்குளத்தில் உள்ள விவசாயப் பண்ணைக்குரிய காணியில் ஒரு பகுதியை இந்தத் திட்டத்துக்கு வழங்க வவுனியா மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளால் இணக்கம் எட்டப்பட்டது.

இந்த முடிவை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஏற்கவில்லை. ஓமந்தையில்தான் நிலையம் அமையவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். விவசாய அமைச்சர் ஐங்கரநேசனின் தூண்டுதலே இதற்குக் காரணம் என்ற கசமுசாக்கள் கட்சிக்குள்ளேயே எழுந்தன. இதனால் இழுபறி நீடித்துக் கொண்டிருந்தது. பிரச்சினையைத் தீர்க்க வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் முதலமைச்சரை நேரில் சந்தித்தனர். கொழும்பு அரசுடன் பேசி எப்படியும் வவுனியாவிலேயே திட்டத்தைச் செயற்படுத்துவேன் என்று உறுதியளித்து அவர்களைத் திருப்பியனுப்பிவிட்டார் முதலமைச்சர்.

## வடக்கு மாகாண சபை தீர்மானம்

வடக்கு மாகாண சபையின் மே மாத அமர்வில் இந்த விடயம் சுகாதார அமைச்சரால் எடுக்கப்பட்டது. வவுனியாவில் அமைக்க இருந்த இதனை வேறிடத்திற்கு மாற்றுவதற்கு (மதவாச்சி) அமைச்சர் ஹறிசன் ஜனாதிபதியுடன் பேசியுள்ளார் எனவும், இதற்கு அமைய அமைச்சரவைப் பத்திரம் அவரால் சமர்ப்பிக்கபடவுள்ளது எனவும் அமைச்சர் சத்தியலிங்கம் சபையில் தெரிவித்தார். பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்கும் காணியை இறுதி செய்யாததன் விளைவாக இந்த நிலை தோன்றியிருக்கிறது என்று விளக்கினார். இப்படி வவுனியாவுக்கு வரவேண்டிய ஓர் அபிவிருத்தித் திட்டம் வேறு இடத்திற்குச் சென்றுவிடக்கூடாது என்று அவர் கேட்டுக்கொண்டார். விடயம் விவாதிக்கப்பட்டபோது சபையில் வடக்கு மாகாண முதலமைச்சர் இல்லை. இதனால் ஏனைய நான்கு அமைச்சர்களும் முதலமைச்சருடன் கலந்துரையாடி அதனடிப்படையில் இறுதி முடிவை எடுக்கலாம் என்ற யோசனை அங்கு முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைவாக நான்கு அமைச்சர்களும் முதலமைச்சருடன் கலந்துரையாடினர். பின்னர் சபைக்கு வந்த அவர்களையும் உள்ளடக்கி தாண்டிக்குளத்தில் பொருள்ாதார மத்திய நிலையத்தை அமைப்பது என்ற முடிவை மாகாண சபை ஏகமனதாக எடுத்தது.


## வில்லங்கமான விக்னேஸ்வரன்

நிறைவேற்றப்பட்ட தீர்மானம், கிராமிய பொருளாதார அமைச்சுக்கும், வவுனியா மாவட்டச் செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அடுத்த நடவடிக்கைகள் வடக்கு அரசின் தீர்மானத்துக்கு அமைய முன்னெடுக்கப்பட்டன. தாண்டிக்குளம் விவசாயப் பண்ணைக்குரிய காணியை விடுவிக்குமாறு மாகாண காணி ஆணையாளருக்கு மாவட்டச் செயலர் கடிதம் அனுப்பினார். அந்தக் கடிதம் மாகாணக் காணி ஆணையாளரால் காணி அமைச்சர் என்ற ரீதியில் முதலமைச்சருக்குப் பாரப்படுத்தப்பட்டது. அதற்கு முதலமைச்சர் எந்தப் பதிலும் வழங்காத நிலையில் மாகாணசபைத் தீர்மானத்துக்கு மாறாக இந்த விவகாரத்தைக் கிளறிய முதலமைச்சர் இதனைப் பிரதமரின் கவனத்துக்கு எடுத்துச் சென்றார். "தாண்டிக்குளம் காணியை இந்தத் திட்டத்துக்கு விடுவிக்கமுடியாது. வேறு பொருத்தமான காணிகள் வழங்கலாம்" என்று தெரிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பினார்.

## தீர்மானமே இல்லை

இது மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வவுனியாவில் உள்ள அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொடுத்தன. தனது சபை தன்னுடன் கலந்துரையாடிய பின்னர் ஏகமனதாக எடுத்த முடிவை முதலமைச்சரே மதிக்காமல் செயற்பட்டிருப்பது ஒட்டுமொத்த அரசியல் வட்டாரத்தையுமே வியப்படைய வைத்தது. அதன் பின்னர் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது. அதிலும் பொருளாதார அபிவிருத்தி நிலையம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

(39 ஆம் பக்கம் பார்க்க)






# யாழ்ப்பாணப் பலாவுக்கு கிழக்கில் கடும் கிராக்கி

ஏ.எல்.எம்.சலீம்

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தியாகும் பலாப்பழங்களுக்கு நாடு முழுவதும் தனி மவுசு எப்பொழுதுமே இருக்கின்றது. கிழக்கில் அதற்கு தனிக் கிராக்கியே இருக்கின்றது.

தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் பலாப்பழ பருவகாலம் ஆரம்பித்துள்ளதால் அதன் நறுமணம்கிழக்குவரைக்கும்வீசத்தொடங்கியுள்ளது. பட்டா வாகனங்களில் அள்ளி வரப்படும் பலாப் பழங்கள் கிழக்கு மாவட்ட வீதிகளில் சுடச்சுட விற்கப்படுகின்றன.இந்தப் பலாப்பழங்களை வாங்கிச் சுவைப்பதில் கிழக் கில் மக்கள் பெரும் ஆர்வம் காட்டுவதால் பெரும் கேள்வியும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் வியாபாரிகள் யாழ். மாவட்டத்தின் கொடிகாமம், சாவகச்சேரிப் பகுதிகளுக்குச் சென்று பலாப் பழங்களைக் கொள்முதல் செய்து அதைக் கிழக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வருமானம் பெறுகின்றனர்.

இவ்வாறு கொண்டு வரப்படும் பலாப் பழங்கள் கிழக்கில் பிரதான வீதிகளின் இருமருங்குகளிலும் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.



அதிலும் முழுமையான பழமாக விற்பனை செய்வதை விடவும், ஒரு பழத்தை நான்கு துண்டுகளாக வெட்டி விற்பதால் அதிக லாபத்தை வியாபாரிகள் பெறுவதோடு ஒரு பழத்தை 100 ரூபா முதல் 150 ரூபா வரையில்கொள்முதல்செய்யும் அவர்கள் அதன் ஒரு துண்டை 100 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்கிறார்கள்.

இவ்வாறு வியாபாரம் செய்யும் பூநொச்சி முனையைச் சேர்ந்த வியாபாரிகள் தாம் இருதினங்களுக்கு ஒரு முறை யாழ்ப்பா ணம் சென்று கொடிகாமம், சாவகச்சேரி போன்ற பகுதிகளிலிருந்து பலாப்பழங்களைக் கொண்டு வருவதாகவும்.

குறித்த வியாபாரம் செய்யுமிடத்தில் தம்முடன் நான்கு பேர் இருப்பதாகவும், இந்த நான்கு பேருக்கும் நாளாந்த வருமானம் பெற சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும், பருவகாலம் முடிந்ததும் இந்த வருமானத்தைப்பெற முடியாது போய் விடுமெனவும் தெரிவித்தனர். தாம் வாடகைக்கு அமர்த்திச் செல்லும் வாகனத்தில் ஒரு தடவையில் 200 பழங்கள் அளவில் ஏற்றி வருவதாகவும் ஒரு லட்சம் ரூபாவரை ஒரு தடவையில் இதற்கு முதலீடு செய்வதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பலாப்பழங்களென்றால் விற்பனை செய்வதில் கடினமில்லையெனவும், மக்கள் மிகவிருப்புடன் பெற்றுச் செல்வதாகவும், யாழ். பலாப்பழங்களின் மவுசு தனியானதுதானெனவும் அவர்கள் கூறத் தவறவில்லை.

இதேவேளை மொனறாகல, சியம்பளாந்துவ, உகண போன்ற சிங்களப் பிரதேசங்களிலிருந்தும் பலாப்பழங்கள் கிழக்குக்கு வரத் தொடங்கியுள்ள நிலையில், அந்தப் பழங்களையும் யாழ்ப்பாணப் பழங்களேயெனக் கூறி அதை விடக் குறைந்த விலைக்கு விற்றுவரும் உத்தியிலும் சிலர் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான பழங்களைக் குறைந்த விலையில் விற்பதால், தமது பழங்களுக்கான கேள்வியில் சற்றுத் தளர்வு ஏற்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணப் பலாப் பழங்களை கொண்டுவந்து விற்போர் கவலை தெரிவிக்கின்றனர். எனினும் யாழ்ப்பாணப் பலாப் பழங்களை எளிதில் இனம் கண்டு அதனையே வாங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

யாழ். பலாப்பழங்களின் ரகமும், தனிச்சுவையும் தனித்துவமாக மிளிர்வதால் மக்கள் எளிதில் ஏமாறுவதில்லையாம். இருப்பினும் சிலசமயங்களில் பார்த்தவுடனேயே நாவில் உமிழ்நீர் சுரக்கும் வண்ணம் பலாப்பழச்சுளைகள் தென்பட்டாலும் உண்ணும்போது ருசியற்ற தன்மை தென்படுவதாகவும் பொது மகனொருவர் தெரிவித்தார். அதிகூடிய விற்பனைக்காக ஏதோ ஒரு வகை மருந்தைப் பாவித்து பழங்களைப் பழுக்கவைத்து வருமானம் ஈட்ட சிலர் முனைவதாலேயே இந்த சுவையற்ற நிலையிருப்பதாகவும் அவர் குறிப்பிடத்தவறவில்லை. எது எப்படியிருப்பினும் யாழ்ப்பாணப் பலாப்பழங்களுக்கான மக்கள் வரவேற்பு கிழக்கில் குறையவே இல்லை!

## சிரிப்பே சிறந்த மருந்து

மருத்துவர்: ஞாபக மறதிக்கு நான் தந்த மாத்திரைகள் வேலை செய்யுதா?
நோயாளி: ஆம் ஆம். அது சரி நீங்கள் யார்?





தாய்: டாக்டர், நீங்கள் பிள்ளைக்கு தந்த மருந்து சரியில்லை போல காய்ச்சல் விட்டபாடில்லை.
மருத்துவர்: மருந்தை ஒழுங்கா கொடுத்தீர்களா?
தாய்: இல்லையே
மருத்துவர்: ஏன்
தாய்: மருந்துப் போத்தலில் பிள்ளைகளுக்கு எட்டாத இடத்தில் வைக்கவும் என்று போட்டிருக்கே!

நேர்ஸ்: (நோயாளியைப் பார்த்து) வாங்க ட்ரெஸ் (ட்ரெஸ்ஸிங்)பண்ணலாம்
நோயாளி: ஏன், நான் நல்லாத் தானே ட்ரெஸ் பண்ணியிருக்கிறேன்.



கலாபூஷணம் மு.மாசிலாமணி



# புரிந்துணர்வு அவசியம்



இணையவள்

காதல்... எல்லோருக்கும் எல்லா வயதிலும் தேவையான உணர்வு. அறிவியல்பூர்வமாக ஆராயப்படாத ஓர் உணர்வும் கூட.

காதலில் சரியான எதிர்வினை இரு பக்கமும் இருக்க வேண்டும். ஒருவர் மட்டுமே பேசிக்கொண்டும் மற்றவர் எதிர்வினை ஆற்றாமலும் இருந்தால் எப்படி அந்தக் காதல் வளரும்? எத்தனையோ காதல்கள் மோதலில் முடிவதற்கான முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று.

காதலில் ஒருவர் மற்றவரை குறை, நிறைகளோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். கஷ்ட, நஷ்டங்களில் பங்கெடுப்பது அவசியம். காதலுக்குக் கண்ணில்லை – என்பதெல்லாம் பொய். முதல் பார்வையில் காதல் வருவது என்பதும் உண்மையல்ல. முதல் சந்திப்புக்கு பிறகு நன்கு பழகி, ஒருவரை ஒருவர் புரிந்து வருவதே உண்மையான காதல். அது ஆணோ, பெண்ணோ... தங்களுடைய சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள நம்பிக்கையான, சிறந்த ஒரு புரிந்துணர்வு ஒவ்வொருவருக்கும் அவசியம். அதுதான் காதல் இணை. பல விடயங்களை காதல் இணையுடன் மட்டுமே நம்பிக்கையோடு பகிர்ந்து கொள்ள முடியும். காதலர்கள் தங்களுக்குள் பிரச்சினைகள் வராமல், சுமுகமாக இருக்க சில வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

ஒருவர், எல்லாவற்றிலும் தனது துணை சரியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்து கொடுத்துப் போவது அவசியம். உங்கள் துணையின் உணர்ச்சிகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

அவர் உங்களுக்காகவே படைக்கப்பட்டவராக நினைத்து ஆதிக்கம் செலுத்தக் கூடாது. காதலிக்கும் போது இருக்கும் தீவிரம் திருமணத்துக்குப் பிறகும் இருக்க வேண்டும். இருபதோ, அறுபதோ... எந்த வயதிலும் உங்களுக்கு துணையின் மேல் காதல் இருக்குமானால் உங்கள் இல்லற வாழ்க்கையில் என்றென்றும் ஆனந்தமே!

# ஆடை கலாசாரம்

மென்மையானதும் கவர்ச்சிகரமானதும் ஆன உடலமைப்பு கொண்ட பெண்கள் அணியும் ஆடைகள் பலவிதமான ஜன்னல்களோடும் உடலோடு இறுக்கமாக ஒட்டியவையாகவும் நீளம் குறைந்தவை யாகவும், கைகால்கள் இல்லாதவை யாகவும் இருப்பதைக் காண்கிறோம். பெண் என்பவள் பலவீனமானவள், அவளது உடலின் கவர்ச்சி கண்டு ஏதாவது அந்நிய ஆண் ஈர்க்கப்பட்டால், அங்கு அவளது கற்பும் தொடர்ந்து உயிரும் பறிபோக வாய்ப்பு உண்டு என்பதை நாம் அனைவரும் அறிந்தே இருக்கிறோம். அதனால் இந்த விதமான ஆடைகள் பாதுகாப்பு அற்றவை என்பதை நிரூபிக்க சான்றுகள் தேவையில்லை. அன்றாடம் தொடர்ந்து அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களே இதை உறுதிப்படுத்துகின்றன.

இந்தக் குற்றங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் இருந்தாலும் பெண்களின் ஆடைக்குறைப்பு ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

நமது மகளோ அல்லது உடன் பிறந்த சகோதரியோ அல்லது பெற்றெடுத்த தாயோ அல்லது கட்டிய மனைவியோ மேற்கூறப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடாது என்பதில் நாம் குறியாக இருக்கிறோம். நமது குடும்ப அமைப்பு சீர்குலையக் கூடாது என்பது நம்மில் ஒவ்வொருவரதும் விருப்பம்.

பொதுவாகவே நமக்குச் சொந்தமான ஒரு விலைமதிப்புள்ள ஒரு பொருளையோ அல்லது பணத்தையோ வெளியே எடுத்துச் செல்லவேண்டி வந்தால் அதை பத்திரமாக பொதுமக்கள் பார்வையில் படாமல் இருக்க மறைத்து தான் எடுத்துச் செல்வோம். காரணம் அதைக் கவர்ந்தெடுக்க கள்வர்கள் வெளியே காத்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். இங்கு நமது அன்புக்குரியவர்களின் உடலை காட்சிக்கு வைத்து காமுகர்களுக்கு அழைப்பு கொடுப்பது போலல்லவா அமைகிறது பெண்களின் ஆடை? இவ்வாறு நமது பணத்தை விட, செல்வத்தை விட விலைமதிக்க முடியாத நம்மவர்களின் கற்பையும் உயிரையும் துச்சமாகக் கருதச் செய்வது எது? இவ்வாறு நமக்கும், குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் பெரும் ஆபத் தானது என்று அறிந்தும் பெண்களின் ஆடைக்குறைப்புக் கலாச் சாரத்தைக் கட்டுப்படுத்த பெண்கள் முன்வர வேண்டும். நாகரி கம் என்ற போர்வையில் உடலை காட்டாமல் கௌரவமாக உடை அணிய பெண்கள் முன் வர வேண் டும். அது தான் பெண்களுக்கும், சமுதாயத்துக்கும் பாதுகாப்பானது.

# பெண்ணே வெற்றி உன்னிடம்!

வாழ்வில் பொருளாதார வளம் பெற நினைப்பவர்களின் முதல் தெரிவு தொழில். இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருந்தும். ஆண்கள் வருமானத்தை எதிர்பார்த்து கடினமான வேலைகளைக் கூடத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் பெண்களுக்கு அப்படியான சூழல் அமையப் போவதில்லை. அவர்கள் எவ்வளவு தான் கடினமான தொழிலைத் தேர்ந்தெடுத்தாலும் கிடைக்கும் வருமானம் சொற்பமாகவே இருக்கும். எனவும் பெண்கள் தாம் தெரிவு செய்யும் தொழில் விடயத்தில் திட்டமிடல் அவசியம்.

முதலில் உங்கள் மனதுக்குப் பிடித்த தொழிலில் ஈடுபடுங்கள். உங்களுக்கு அவ்வளவாகப் பிடித்தமில்லாத தொழிலில் ஈடுபட்டால் வெற்றி கிட்டாது.

நீங்கள் செய்யத் தொடங்கும் தொழில் உங்களின் கனவுத் தொழிலாக இருந்தால், அது நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக இலாபத்தைத் தரும். உங்கள் ஈடுபாடு அதுதான் என்றால், அதில் நீங்கள் சாதாரணமாகச் செயல்படுவதை விட இரண்டு மடங்கு அதிகமாகச் செயல்படுவீர்கள். வேலை பார்ப்பது போலவே உணர மாட்டீர்கள். வெற்றியும் விரைந்து வரும்.

தொழிலில் சில நேரங்களில் சில சோதனை முயற்சிகளைச் செய்ய வேண்டி வரும். அது போன்ற நேரங்களில் கொஞ்சமும் தயங்காதீர்கள். தயங்காமல் சோதனை முயற்சிகளில் ஈடுபடுவது தொழிலில் ஈடுபடுவோருக்கு, முடிவெடுக்கும் திறனையும், தொழில் மீதான அவருடைய தன்னம்பிக்கையையும் அதிகரிக்கும்.

ஒரு தொழிலைத் தொடங்க நினைத்தாலோ அல்லது விரிவாக்க நினைத்தாலோ உடனடியாக அதைச் செயல்படுத்திவிட வேண்டும். தகுந்த சூழல் வரவில்லை என்று நமக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தால், வேறொருவர் முந்திவிட வாய்ப்பு உண்டு.

தொழில் என்றாலே மிகப் பெரிய முதலீடு தேவை என்ற எண்ணம் அவசியமில்லை. சிறு முதலீட்டிலும் வெற்றிகரமாக உயரக்கூடிய தொழில் வாய்ப்புகள் உண்டு. கொஞ்சம் சந்தை ஆய்வு செய்தால் போதும். அதேபோல, வங்கியில் தொழில் கடன் பெறுவதற்காக நமது மதிப்பீட்டை அதிகப்படுத்திக் கூறத் தேவையில்லை. தேவைக்கு அதிகமான கடன் கிடைத்தால், அதை திருப்பிச் செலுத்தும் போது சிரமமாக இருக்கும்.



ஞானாம்பிகா

# கணக்கில் புலி

புலி என்றதும் கிலி கொள்பவர் பலர்! பயப்பட வேண்டாம். இந்தப்புலிக்கு நான்கு காலும் இல்லை. இரண்டு காலும் இல்லை! அன்று பாமா கடிதம் போடப் போனவள் திரும்பி வரும் போது கடையில் சாமான் பட்டியல் துண்டைக் கொடுத்துச் சாமான்கள் சிலவற்றை வாங்கிய பின் பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டாள். நாள்கள் சில சென்றன. பாமா வீட்டுக்குப் போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டு கைப்பையை எடுத்து அதற்குள் பணம் சிறிது வைக்க என்று திறந்த போது சில ரூபாக்களும் சாமான் பட்டியல் துண்டும் இருந்தன. சாமான் என்ன விலை போகுது என்று பார்த்தபோது கடைசியில் எட்டு ரூபா போட்டுக் கூட்டப்பட்டிருந்தது! பொருள் எழுதவில்லை, இலவச போனசோ! பட்டியலின்படி கூட்டியபின் எட்டு ரூபாவையும் கூட்டினால் சதம் முற்றுப்பெற்று ரூபா வாகிறது. கணக்கும் கூடுகிறது. இப்படியும் க(ன!) ணக்கு! கணக்கில் புலிதான். அட! நானும் கணக்குப் பாடம் படித்தனான்தான் இப்படியொரு கணக்குப் படிக்கவில் லையே? கடைக்காரர் கெட்டிக்காரர் என்பதைவிட திறமைசாலி என்பதே பொருத் தம். மெடல் கொடுத்தாலும் தகும் என்று மானசீகமாய்ப் பாராட்டினாள். அவள் எப்போதும் அப்படித்தான் . யாரும் திறமைசாலி என்றால் உடனே மனதுள் மெடல் கொடுத்துப் பாராட்டுவாள்! கடைக்காரர்களில் இப்படிப் போனஸ் என்று பணம் சேர்த்துக் கோட்டை கட்டியவர்களும் உண்டு. கோட்டை விட்டவர் களும் உண்டு. சில மனிதர்கள் நினைப்பர். "நான் தட்டி விட்டேன்" என்று ஆனால் அந்தத் தட்டிய பொருள் போல் இரு மடங்கு அவர் பின்பு கொடுக்க வேண்டி வரும் என்பதை அறியார். சைவ மார்க்கத்தில் இதுபற்றிய விளக்கம் உண்டு. அதனால் தான் பிறர் பொருளை அபகரிக்காதே என்று கூறுவார்கள். பாமா கணக்குப் பட்டியலைப் பார்த்துவிட்டு, போனால் "போகட்டும் போடா. யார் தான் நிலையாய் வாழ்ந்தவரோ" என்று மனதுள் பாடிக்கொண்டாள்! எல்லாமே மனத்துள் அடக்கம்.



# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்....

கூர்ப்புக் கொள்கையில்
தோன்றிய மனிதனின்
எண்ணங்களெல்லாம்
நடந்துவிட்டால்
நான்கு கால்களில் நடக்கின்ற
நாய்களும்,
நான்கு சக்கர வாகனத்தை
நாடியே நிற்குமன்றோ

தளிர் கொடிகளிலெல்லாம்
வாடாத இறப்பர் பூக்கள்
இரசாயன வாசனையுடன்
பூத்துக் குலுங்கிடுமன்றோ
கடவுளும் வீதியிலே
காட்டுமிரண்டியாய்
அலைவாரன்றோ

அன்பு பாசங்களும்
அநாதரவாய் ஏங்கிட
ஆசை எனும் அலைவந்து
முகாந்தரம் இடுமன்றோ


செவ்வாயிலும், நாடாளுமன்ற
கூட்டங்கள்
தினம் தினம் நடந்திட
செவ்வாயும் வெந்து
வெந்தணலாய்ப் போகுமன்றோ

கண்டம் விட்டுக் கண்டம் தாவும் எம்
கலியுக ஆசையினால்
பறவைகளும் பயங்கொண்டு
பறந்திட மறுக்குமன்றோ

தங்கத்தினால் சேலை நெய்து
உடல் முழுக்க அணிவதானால்
நடமாடும் தங்கக் கடைகள்
நகர் முழுக்க கருமன்றோ

நீர் நிலைகள் மறைவதானால்
வேகம் கொண்ட வெப்பம்
வேடமிட்டுப் பூமி முழுக்க
நாடகம் போடுமன்றோ
நாமெல்லாம் அழிவமன்றோ.

பா.பாலஜினி, வரணி



# தண்டவாளத் தற்கொலைகள்

கடுகதியில் உடலுமுள்ளமும்
மகிழ்ந்தெங்கோ பயணிக்கவே
தண்டவாளத்தைத் தழுவியோடுகிறது
புகையிரதம்
எங்களின் பிரச்சினைக்குத் தீர்வாக
எம் முடிவைத் தேடிக் கொள்ளவல்ல

சமாந்தரமாய் பயணிக்கும் தண்டவாளங்கள்
இணைந்து உறுதுணையாய் நிற்பதால் தான்
புகையிரதம் பயணிக்கிறது
உறவுகள் இரண்டு ஒத்திசைந்தொருமித்து
ஒற்றுமையாய் வாழ்ந்தால்தான்
வாழ்க்கைப் பயணம் சிறக்கிறது.
கடவையில் சமிக்ஞைகள் ஒளிர்ந்து சத்தமிட
அதை வேகமாய்த் தாண்டும் புகையிரதம்
அதைச் சரியாகக் கவனிக்கின்; உயிர் எம்மில் மிஞ்சும்;
நின்று நிதானித்து சிந்தித்துச் செயற்பட்டால்
ஒருநாள் கூடிவாழலாம் உயிர் உன்னிடமிருந்தால்

கடன்பட்டவர் பலபேர் புகையிரதத்தில்
ஆழ்ந்த நல் உறக்கத்தில் பயணிக்கையில்
கடன்பட்ட இன்னொருவன் அதன் முன் பாய்கிறான்
கடன் தொல்லை தீருமென்றெண்ணி
சிதறுண்ட உடலைப்பார்த்து
மனம் சிதறுண்டு கிடக்கும் அவன் குடும்பம்
மீண்டும் கடன்படும் அவனது மரணச்சடங்கிற்காய்;

புகையிரதப் பயணத்தில் ஓட்டுநர் முதல்
தண்ணீர்ப் போத்தல் விற்பவன் வரை
பட்டினிபோக்கவே பாடுபடுகிறான்
உழைக்காமல் உண்டி நிறையுமா?
பட்டினி பட்டாளியின் பகைவனல்ல
பாரதியின் பட்டினி அவனைப் பாவலனாக்கியது
காந்தியின் பட்டினிப்போர் சுதந்திரமாகியது
பட்டினி உழைப்பை உணர்ந்திடும் உணர்வு
உண்டிசுருங்கிடின் உயிர்விடல்முறையோ?

புகையிரதம் தினமோடும்
தண்டவாளப் பாதையிலும்
துளிர்விடுகின்றனவே சில புற்கள்
அதன் துணிவு உனக்கில்லையா மனிதா!
உயிர்துறக்க எண்ணுமுனக்கு உள்ளதுணிவை
எண்ணிப்பார் வாழ்வுக்கு அது வழிகாட்டும்
உன் அழிவுக்கது தடைபோடும்

விபத்து நடந்தாலும் [illegible] நின்று
[illegible] அப்புறப்படுத்திப்
பின் அதே பாதையில் தன் கடமையின்
நிமித்தம் பயணிக்கிறது புகையிரதம்
வாழ்வில் நடைபெறும் விபத்துக்களை
எண்ணி உன் உயிரை புகையிரதத்தில்
மாய்ப்பதேனோ?
உன் பிறப்பின் கடமையை எண்ணி
உன் பயணம் தொடரட்டும்
உன்னில் பயணிக்க பலர் காத்துள்ளனர்
அடுத்த தரிப்பில்.

# கண்ணீரின் சங்கமம்

திருமதி அ.காசிலிங்கம்

காலைவேளை. யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு வார்ட் ஒன்றின் பதின்னான்காவது கட்டிலில் ஒரு பெரியவர் படுத்திருக்கிறார். வெண்புறாக்களாகச் சீருடையுடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து திரியும் தாதியர்களையும், வெள்ளைக் கோட்டை மாட்டிக்கொண்டு ஒவ்வொரு நோயாளர்களாக அணுகி, அவர்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து குறிப்பெடுப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மருத்துவ மாணவர்களையும் அவரது கண்கள் துழாவிக் கொண்டிருக்கின்றன.

அந்த மருத்துவ மாணவர்களுள் ஒருத்தி மீது அவரது பார்வை நிலை குத்தி நின்று விடுகிறது.

அச்சொட்டாய் என்ரை தமிழரசி மாதிரியே இருக்குது அந்தப் பிள்ளை, மனதுக்குள் நினைத்துக் கொண்டவர் ஒரு கணம் நிலை குலைந்து போனார். அவரது இதயக் குமுறல் ஒருநீண்ட பெருமூச்சாக வெளிப்பட, அவர் தன்னை ஒருவாறு ஆசுவாசப் படுத்திக் கொண்டார்.

தனக்கு எதிர்ப்பக்கத்திலிருக்கும் கட்டிலில் உள்ள நோயாளி ஒருவரிடம் கைச்சைகை மூலமும், வாய் மொழியாலும் அளவளாவிக் கொண்டிருந்த அவளை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார் ஜெகதீசன். அந்தப் பெண் தனது கட்டிலடிக்கு வரமாட்டாளா? என்றொரு ஏக்கம் அவரிடம் குடிகொண் டது. இதயம் படபடக்கக் காத்திருந்தார். காத்திருந்தது வீண் போகவில்லை. அந்த நோயாளி யிடம் விடை பெற்றவள், நேராக அவரிடம் வந்தாள்.

"ஐயா! பேரு சொல்லுங்க!"

ஜெகதீசனுக்கு இப்போது புரிந்துவிட்டது. அவள் தமிழ்ப் பெண் அல்ல. வேற்று மொழிக்காரி என்பது "பிள்ளை... உனக்கு தமிழ் தெரியுமே?"

"கொஞ்சங்... கொஞ்சங்...."

அவளுடைய கேள்விகளுக்கு அனுசரணையாக அவர் பதிலளித்துக் கொண்டிருந்தார். திடீரென அவள் கேட்ட கேள்வி அவரைச் சங்கடத்துக்குள்ளாக்கி விட்டது.

"புள்ளைஙக எத்தின?"

அவர் மௌனமானார். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடியத் தொடங்கியது. அவரது நிலை கண்டு அவள் பதறிப்போனாள். அவளது தர்ம சங்கட நிலையைப் புரிந்து கொண்ட சக தமிழ் மாணவி ஒருத்தி அவர்களிடம் வந்தாள்.

"ஐயா! ஏன் அழுகிறீங்கள்? என்ன பிரச்சினை எண்டு சொல்லுங் கோவன்". வாய் திறந்தார் ஜெகதீசன். கண்களைத் துடைத்துக் கொண்டே சொன்னார்.

"என்ரை பிள்ளையைப் பற்றிக் கேக்க எனக்கு வெப்பியாரமாய்ப் போச்சுது. ஆனந்தபுரத்தில.. என்ரை மனுசி, பிள்ளையள் எல்லாரும் குண்டு பட்டு செத்துப் போச்சினம். நான் வெளியில அலுவலாய்ப் போயிருந்தபடியால் அதிலிருந்து தப்பி இன்னும் இந்த வருத்தங்களையும் அனு பவிச்சுக் கொண்டு உயிரோட இருக்கிறன்" விம்மினார் ஜெகதீசன். "அவையள பங்கருக்குள்ள இழுத் துப் போட்டு, இந்தக் கையால தான் மண்ணை அள்ளிப் போட்டு மூடி விட்டு வந்தனான். அந்த நேரத்தில எனக்கு வேற வழி தெரியேல்ல! "

"மாலினி" என அழைத்து அந்தப் பெண்ணிடம் எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் கூறிப் புரிய வைத்தாள் சக தமிழ் மாணவி சாமந்தி. "வட் ஏ பிற்றி" என்று சொல்லி அனுதாபப்பட்டாள் மாலினி. அன்றிலிருந்து அவள் வார்ட்டுக்கு வரும்போதெல்லாம் அவரிடம் வந்து ஓரிரு வார்த்தைகள் பேசி விட்டுத் தான் போவாள்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி அவரது சொந்த ஊர். வீடு, வளவு, வளவு முழுவதிலும் பயன்தரு மரங்கள், தோட்டம், வயல் என வசதியுடன் கூடிய வாழ்க்கை அவருடையது. இடப்பெயர்வு அவரது குடும்பத்தினருக்கு பல இன்னல்களைத் தந்தாலும் பட்டினி அவர்களை வருத்தவில்லை. போதிய உணவு வகைகளை அவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றிருந்ததே அதற்குக் காரணம். எனினும் குடும்ப உறுப்பினர்களை ஒரேயடியாக இழந்து விட்டதால் அவரது மனம் பேதலித்து நொறுங்கிப்போனது. அந்தச் சமயத்தில் அவரது தம்பியாரான அருளீசன் அவரை அரவணைத்துக் கொண்டார். இடைத்தங்கல் முகாமிலிருந்து வரும்போது அவனைத் தன்னுடனே யாழ்ப் பாணத்துக்கு அழைத்து வந்து விட்டார். தம்பியின் குடும்பத்தினரோடு தங்கி விட்டவருக்கு அங்கு கவனிப்பு பலமாயிருந்தது. அவரது சொத்துக்கள் எல்லாம் தங்களைத் தான் வந்து சேரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. அதுவே அவருக்கும் சாதகமாய் போயிற்று. தவிர, அவருக்கும் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்த வீட்டில் தனிக்கட்டையாக உலாவ இஷ்டமில்லாமல் போயிற்று.

"

நோயாளி ஒருவரிடம் கைச்சைகை மூலமும், வாய் மொழியாலும் அளவளாவிக் கொண்டிருந்த அவளை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் ஜெகதீசன். அந்தப் பெண் தனது கட்டிலடிக்கு வரமாட்டாளா? என்றொரு ஏக்கம் அவரிடம் குடிகொண்டது. இதயம் படபடக்கக் காத்திருந்தார்.


காத்திருந்தது வீண்போகவில்லை. அந்த நோயாளியிடம் விடைபெற்றவள், நேராக அவரிடம் வந்தாள்.

கடந்த மாரி காலத்தில் ஒரு நாள் அவர் வளவுக்குள் உலாவிய போது அவரது கணுக்காலில் ஒரு கட்டை இடறி விட்டது. சிறு காயம் தானே என அவர் அலட்சியமாய் இருந்துவிட்டார். நீரிழிவு நோயாளியான அவருக்கு புண் புரையோடி பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவே, அவர் வைத்தியசாலையை நாடினார். அவரை உள்ளக நோயாளியாகச் சேர்த்துத் தற்போது வைத்தியம் நடந்து கொண்டிருக்கிறது. ஊசிமூலம் இன்சுலின் செலுத்திக் கொண்டிருப்பதுடன் கிருமித் தொற்றுக்குரிய மருந்துகளும் ஏற்றப் படுகின்றன.சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு கொண்டுபோய் அவரது காலிள்ள புண்ணைத் துப்புரவு செய்தபோது. எலும்பிலும் தாக்கம் ஏற்பட்டிருப்பதை மருத்துவர்கள் அவதானித்தனர். எனவே அவரது காலின் முழங்காலுக்குக் கீழேயுள்ள பகுதியை நீக்க வேண்டுமென முடிவெடுத்திருக்கின்றனர்.

ஜெகதீசனுக்கு அதில் உடன்பாடில்லாவிட்டாலும், வேறு வழி இல்லாததால் ஒப்புக்கொண்டுவிட்டார். எத்தனை நாளைக்குத்தான் உபாதையைத் தாங்கிக்கொள்ள முடியும். சத்திர சிகிச்சைக்கான நாளும் குறித்தாகி விட்டது. பரிசோதனைகள் அனைத்தும் நடைபெற்று சத்திர சிகிச்சைக்கூடத்துக்கு அவரை அழைத்துச் செல்லும் நேரம், எங்கிருந்தோ ஓடி வந்தாள் மாலினி.

"ஐயா! பயம் வாணாம். எல்லாம் சக்ஸஸ் கிடைக்கும்!" அவரது தோளைத் தொட்டு தடவிவிட்டாள். கொச்சைத் தமிழில் அவள் கூறிய வார்த்தைகள் படபடத்துக் கொண்டிருந்த அவரது இதயத்துக்கு ஆறுதலைத் தந்தது.சத்திரசிகிச்சை முடிந்து அவரை வார்ட்டுக்குக் கொண்டு வந்து விட்டுப்போனபின் மாலினி வந்து அவரைப் பார்த்து விட்டுப் போனதாக அவருக்கு மயக்கம் தெளிந்ததும் தம்பி அருளீசன் சொன்னான். பூர்வ ஜென்ம பந்தம் என அவர் மனம் நினைத்துக் கொண்டது. மீண்டும் மயக்கம் அவரை ஆட்கொண்டது.

மறுநாளும் மாலினி வந்தாள் "ஐயா!வலிக்குதா? "ஜெகதீசன் தனது காலின் வெறுமையாய் இருந்த பகுதியை ஒரு தரம் பார்த்து விட்டு நீண்ட பெருமூச்சொன்றை வெளிப்படுத்தினார்.




(43 ஆம் பக்கம் பார்க்க)



# குடியே அழிந்து விடும்

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பாவம்! அவள் என்ன செய்வாள்!
பால் கொடுக்க என்ன வழி!
பாலன் பசி தீர்க்க என்ன வழி!
நட்ட நடுநிசியில்
கொட்டும் மழைக் குளிரில்
அலறித் துடிக்குந்த ஐந்து மாதப்பிஞ்சு
அதன் பசி தீர்க்க என்ன வழி!
ஆற்றுதற்கு என்ன மொழி!

ஒட்டிய வயிறு முட்டிய கண்ணீர்!
கட்டியவன் கலைத்துவிட
அவளோ களைத்துவிட
வலிகள் தானதிகம்.
வழிகளோ தெரியவில்லை.
பன்றிக்குப் பால் கொடுத்த
பரமசிவன், பார்வதியும்
தன் பாலகனின் பசி தீர்க்க

பால் கொண்டு வருவாரோ!
படலையைப் பார்த்தபடி
பாவம் அவள் நிற்கின்றாள்.

குடிகாரக் கணவன்
குடும்பத்தில் வந்துவிட்டால் இதுபோன்று
குடியே அழிந்து விடும்.
கூறுதற்கு வேறு ஒன்றுமில்லை.

*மிருசுவில் தமிழ்தாசன்*

ஜெ.காயா



# புளித் தண்ணி

செக்கல் பொழுதில ஐயா வாங்கி வாற மீன் குஞ்சுகள உடனடியாகச் சமைத்துச் சுவைக்கக் கூடியதாயும், உடன் மீனின் சுவை மாறாமலும் ஆச்சி சமைப்பது தான் அந்தப் புளித்தண்ணி. இது அவசரத்துக்கு ஆச்சியால் ஆக்கப்படும் ஒரு வகையான கறி. செக்கல் பொழுதான, கடற்காத்து வாங்கப் போகும் ஐயாவின் கைகளுக்கு வீச்சு மீனோ, தூண்டில் மீனோ கிடைச்சுதெண்டால், எங்கட அன்றைய இராச் சாப்பாட்டில புளித்தண்ணியின் சுவையும் சேர்ந்து விடும்.

பத்துப் பன்னிரெண்டு செத்தல் மிளகாய்களை பனம் ஈக்கொண்டில கோர்த்து, சட்டிக்க போட்டு தண்ணி ஊத்தி அவிய வைச்சிட்டு மீன் கழுவத் தொடங்குவா ஆச்சி. மீன் வெட்டி முடிந்து வந்து, அவிச்ச செத்தல் மிளகாய்களை வெளியே எடுத்திற்று, அது அவிச்ச தண்ணீக்க கைப்பிடியளவான புளியைக் கரைச்சு விட்டு, அந்த அவிஞ்ச செத்தல் மிள காய்களையும் கசக்கி அதுக்குள்ள போட்டு, ரெண்டு, மூண்டு உப்புக்கட்டிகளையும் போட்டு, அந்த உடன் மீன் குஞ்சுகள் அவியும் வரை சூடாக்கியது தான் அந்தப் புளித்தண்ணி. சுடச் சுட இருக்கிற புட்டுக்கும் சோத்துக்கும் இன்னும் சுவை சேர்க்கும் ஆச்சியின் புளித்தண்ணி.

மறுநாள் காலை பழங்கறியானாலும் பழுதாகி விடாத ஒன்றாம். அதனால் தான் ஐயா பழஞ் சோத்தோட புளித் தண்ணியைச் சூடாக்கி மறுநாளும் தின்பாராம். வகைவகையான புளித்தண்ணிக் கறிகள் சாப்பிடும் போது நோய் நொடிகள் இல்லை என்றும், மழை, வெயில், குளிர் போன்றவற்றுக் கெல்லாம் தன்னுடல் ஈடுகொடுத்து நிமிர்ந்து நின்றதென்பார் ஐயா. செவிவழி கதையறிந்து நாம் ஆக்கும் புளித் தண்ணி ஆச்சியின் கைபட்ட ருசிக்கு ஈடாகாத ஒன்றுதான்.

# மூன்றாம் தரம் படிக்கும் போது போர் நிறுத்த காலத்தில்...

வள்ளிபுனத்துச் சந்திக்கு
அருகில் நின்ற
புளியமரத்துக்குக் கீழே
ஓடிப்பிடிச்சு கிளித்தட்டு
விளையாடினது
இன்னும் ஞாபகமாய்....

சின்னாத்தங்காட்டு
ஆற்றில நீச்சல் போட்டு
அடிவேகத்தை அள்ளியாந்து
யூதாகோயில்ல மெழுகுவர்த்தி
கொளுத்திக் கும்பிட்டது
இன்னும் மனசுல யேசுபிரானின்
ஒளிக்கதிராய்....

கனகம்மா ஆச்சியின்ர
தோட்டத்து
மாங்காயை
திருட்டுத்தனமா ஆய்ஞ்சு
உப்பு, மிளகாய்த்தூளை
மாங்காயில தடவி
நறுக்கெண்டு கடிச்ச ருசி
இன்னும் நுனி நாக்கில
ஒட்டிக்கிடக்கு

பாலை மரம் ஏறி
காலால உலுப்பிவிட
விழுந்த பழங்களைப் பொறுக்கி
தின்றதுவும் முள்ளியவளை
தண்ணீர் ஊற்றுத்
தண்ணியை குடிச்சதுவும்

அது சக்கரையா
இனிச்சதுவும் இன்னும்
தொண்டைக்குள்ள
ஈரமாக்கிடக்கு....

போர் நிறுத்தம்
முடிஞ்சு போய்
பாய் பெட்டிகளோட
அப்பாவின் சைக்கிள்
இருக்கையில் அமர்ந்து
சைக்கிளில் கொழுவியிருந்த
வானொலிப் பெட்டியில்
ஒலித்த கம்பீரமான
குரலைக் கேட்டபடி
முல்லை வீதியில்
பயணித்தது இப்போதும்
மனதிடையே....

அழியாத
ஞாபகங்களாய்....

ஆ.முல்லைதிவ்யன்





# இந்த வாரம்

**26.06.2016 முதல் 02.07.2016 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன், கேது ஆதாய பலன் தருவர். உங்கள் செயல்களால் புகழ் பெறுவீர்கள். புத்திரர்களின் செயல் சிறப்பாக அமைந்திட உதவுவீர்கள். மருத்துவ சிகிச்சையால் நோய் தொந்தரவு குறையும். மனைவியுடன் கருத்து ஒற்றுமை வளரும். பயணங்கள் அதிகரித்தாலும் இனிதாக அமையும். திட்டமிட்ட உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும். உபரி பணவரவால் சேமிப்பு பெருகும். பணியாளர்கள், மேலதிக நேர வேலைகளின் சலுகைகளால், வருமானம் உயரப் பெறுவர். பெண்கள் தாராளப் பணவரவில் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்களுக்குப் படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## இடபம்

செவ்வாய், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். மற்றவர்களின் உணர்வுகளை மதித்து பேசுவதால், பிரச்சினை வராமல் தவிர்க்கலாம். சமூகத்தில் மதிப்பு மரியாதை கூடும். சௌபாக்கியம் நிறைந்த வாழ்வு பெறுவீர்கள். வீட்டில் தகுந்த பாதுகாப்பும், வாகனத்தில் மிதவேகமும் தேவை. புத்திரர்கள் செலவைக் குறைத்து, பெற்றோருடன் ஒத்துழைப்பர். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நோய் தொந்தரவு விலகி, உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி வழி சார்ந்த உறவினர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, புதிய வாய்ப்பு வரும். பணிபுரிந்து நிறைந்த சலுகை பெறுவர்.

## கடகம்

குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். உங்கள் செயற்திறன் வளரும். முக்கியஸ்தர்களின் உதவி கிடைக்கும். வாகன பராமரிப்புச் செலவு உயரும். புத்திரர்களின் ஆர்வமிகு செயல்களைத் தடுக்காமல், ஊக்கப்படுத்துவது நல்லது. மனைவியின் ஆலோசனை குடும்பத்தில், ஒற்றுமையை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகள் ஏற்படலாம் என்பதால், கவனம் தேவை. பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்படி செயற்பட்டால் தான், சலுகைகளை பெறமுடியும். பெண்களுக்கு வீட்டுச்செலவுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம். மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி பெறக் கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

## மிதுனம்

சுக்கிரன், ராகு, சனீஸ்வரர் வியத்தகு பலன் தருவர். எதிர்பார்ப்புகள் திட்டமிட்டபடி நிறைவேறும். உங்களின் செயல் சமூகத்தில் நற்பெயர் பெற்றுத் தரும். தம்பி, தங்கையின் பாசம் நெகிழ்ச்சி தரும். அறிமுகமில்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்கள் உற்சாகமாகப் படித்து முன்னேற்றம் காண்பர். உடல்நிலை சீராக இருக்கும். வழக்குகளில் சாதகமான தீர்வு கிடைக்கும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் கடும் போட்டி இருந்தாலும், சமயோசிதமாக யோசித்து சரி செய்வீர்கள். பணியாளர்களுக்கு, சகபணியாளர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

## சிங்கம்

சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய் அதிக நன்மை தருவர். திட்டங்கள் சிறப்பாகச் செயற்பட, கடும் முயற்சி மேற்கொள்வீர்கள். வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் உங்களுடன் ஒத்துழைக்க மறுக்கலாம். பூர்வசொத்து பராமரிப்பில் செலவு அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வார். தொழில், வியாபாரம், வளர்ச்சி பெற்று அதிக லாபத்தை தரும். பணியாளர்களுக்கு உபரி பணவரவால் சேமிப்புக் கூடும். பெண்கள் உறவினர் வருகையால் மகிழ்ச்சியடைவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பெற்றோரிடம் பரிசு பெறுவர்.

## கன்னி

பெரும்பாலான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். புதிய திட்டங்களை பரிசீலனை செய்து நிறைவேற்றுவீர்கள். இனிய அனுபவம் கிடைத்து மனதில் உற்சாகம் வளரும். உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புத்திரர்கள் உங்கள் சொல்லை மதித்து நடந்து நற்பெயர் பெறுவர். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி அன்புடன் உதவி புரிவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் அதிகரிக்கும். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கைப் பூர்த்தி செய்து, அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர்.

## துலாம்

ராகு, குரு, சுக்கிரனால் நன்மை உண்டு. மனதில் சிறு குழப்பம் வந்து நீங்கும். சமூகத்தில் இருக்கும் நற்பெயரால், சில சலுகைகளைப் பெறுவீர்கள். பணவரவு அதிகம் பெற புதிய வாய்ப்பு வரும். தம்பி, தங்கை பாசத்துடன் நடந்து கொள்வர். புத்திரர்களின் செயற்பாடு மனதுக்கு கஷ்டம் தரலாம். எதிர்ப்பாளர்களால் இருந்த சிரமம் விலகும். பயணங்கள் ஓரளவு நன்மை தரும். பெண்களால் உதவி உண்டு. மனைவி, கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி விற்பனை செழித்து வளரும். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து, சலுகை பெறுவர். பெண்கள், மாணவர்கள் படிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

## தனுசு

குரு, செவ்வாய், கேது நன்மையை வாரி வழங்குவர். மனதில் குழப்பம் விலகி புத்துணர்வு ஏற்படும். பணிகள் குறித்த காலத்தில் நிறைவேறும். உங்களைப் புகழ்ந்து பேசுபவரிடம் கவனம் வேண்டும். பிள்ளைகள் வளர்ச்சி பெற உதவுவீர்கள். ஆரோக்கியம் பெற சத்தான உணவும், சீரான ஓய்வும் அவசியம். மனைவியின் தேவையறிந்து உதவியாக நடப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு செயற்படவும். பெண்கள் கணவரின் வருமானத்திற்கேற்ப செலவு செய்வது நல்லது. மாணவர்கள் படிப்பில் சீரான வளர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

புதன், சுக்கிரன். சந்திரன் நற்பலன் தருவர். பிறரது விமர்சனத்துக்கு ஆளாக நேரும். அதை பொருட்படுத்த வேண்டாம். செலவு அதிகமாவதால் பணத்தேவை அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் நல்லது. புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். குடும்ப ஒற்றுமை மனதுக்கு நிம்மதி தரும். உடல்நிலையைப் பாதுகாக்க, சிகிச்சை தேவைப்படலாம். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனையைப் பெருக்க, கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். பணியாளர்கள் கேட்ட சலுகை கிடைக்க தாமதம் ஆகலாம்.

## மகரம்

சூரியன், புதன், சனீஸ்வரர் சுப பலன் தருவர். நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள் வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர் தங்களின் தேவையை நிறைவேற்ற, பிடிவாத குணத்துடன் செயல்படுவர். வாழ்வில் எதிர்ப்பாக இருந்த விடயம் அனைத்தும் விலகும். ஆரோக்கியம் பலம் பெறும். சுபநிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்வீர்கள். மனைவியின் கருத்தை ஏற்பதால், குடும்ப ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் செயல்படுவர். மாணவர்களுக்கு நண்பர் விடயத்தில் கவனம் தேவை

## மீனம்

புதன், சுக்கிரன், ராகு அளப்பரிய நற்பலன் தருவர். சிறுபணியும், நேர்த்தியாக அமையும். தாய்வழி உறவினர் பாசத்துடன் நடப்பர். விலகிய நண்பர்கள் நெருங்கி வந்து பாராட்டுவர். புத்திரர் உங்கள் கருத்துக்கு மதிப்பளித்து நடப்பர். தாராள பணச் செலவில் குடும்பத் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழிலில் புதிய முயற்சி மூலம் உற்பத்தியைப் பெருக்கி இலாபம் காண்பீர்கள். பணியாளர்கள் கடின உழைப்பால், நற்பெயரைப் பாதுகாத்திடுவர். மாணவர்கள் நண்பர்களுடன் சேர்ந்து படிப்பர்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரன் அதிக நன்மைதருவர். பொதுவிடயங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தாமதமான பணிகள், புதிய முயற்சியால் நிறைவேறும். வாகன பயன்பாட்டால் நன்மை காண்பீர்கள். புத்திரரின் கவனக்குறைவை, இனிய அணுகுமுறையால் சரி செய்யவும். நண்பரால் உதவி கிடைக்கும். நேரத்துக்கு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். விஷப் பிராணிகளிடம் விலகுவது நல்லது. மனைவியின் சொல்லும் செயற்பாடு குடும்பத்துக்குப் பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காண்பர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பில் ஈடுபடுவர்.

# ஒரு கால் ஊனமானால்

தலைமை ஆசிரியர் சங்கரலிங்கம் எல்லோராலும் மதிக்கப்படுகிறவர். அவர் முகத்தைப் பார்த்தால் கருணை தென்படும்.

முகம்மட்டுமல்ல, உருவமே அப்படித்தான். வேட்டிக்குப் பொருத்தமாக நஷனல் வெள்ளைச் சட்டை அணிந்திருப்பார்.

எல்லாவற்றிலுமே முன்னுதாரணமாக இருக்கவேண்டும் என்பது அவரது ஆசை. 8மணிக்குப் பள்ளிக்கூடம் தொடங்கும். மாணவர்கள் தாமதமாக வருவதைத் தவிர்க்கத் 8.30 மணிக்கே அலுவலக அறைக்கு வந்துவிடுவார்.

அதனால் மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்கு வந்தார்கள் என்பதைவிட ஆசிரியர்கள் சரியான நேரத்துக்கு வரத் தொடங்கி விட்டார்கள்.

பள்ளி மாணவர்கள் அனைவருக்குமே தலைமை ஆசிரியர் சங்கரலிங்கம் மீது தனி மரியாதை. குறிப்பாக குமாருக்கு அவரை அதிகம் பிடிக்கும்.

குமார் 8ஆம் வகுப்பு மாணவன். நன்றாகப் பேசுவான். அவனது பேச்சில் நிறையத் சிந்தனை இருக்கும். நல்ல கருத்துக்களைத் தெளிவாகச் சபையில் எடுத்து வைப்பான். அதனால் பள்ளிக்கூட்டங்களுக்கு இடையேயான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி நடக்கும் போது அவனைத்தான் அனுப்புவார்கள்.

குமார் படிப்பிலும் கெட்டிக்காரன்தான். ஆனால் ஒரே ஒரு விடயத்தில் மட்டும் அவனது செயற்பாடு சரி இல்லை.

ஒரு நாள் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. குமார் இரண்டாவது பெஞ்சில் அமர்ந்திருந்தான். வகுப்பாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது வகுப்பறைக்குள் அனுமதி பெற்று 'அலுவலக உதவியாளர்' நுழைந்தார். "சார் குமாரை தலைமை ஆசிரியர் அழைக்கிறார்" என்றார்.

அடுத்த சில நிமிடத்திலே குமார் அறைக் கதவை தள்ளிக்கொண்டு தலைமை ஆசிரியரிடம் போய் நின்றான். அவர் "குமார் நாளை உன் அப்பாவை அழைத்து வா" என்றார்.

மறுநாள்..'திடும்' என கதவை தள்ளிக்கொண்டு குமாரின் அப்பா தங்வேலன் தலைமை ஆசரியரின் அறைக்குள் நுழைய,குமாரும் பின்னால் சென்றான். அவர் வந்த நிலையைப் பார்த்த உடனே தலைமை ஆசிரியருக்குக் கோளாறு புரிந்துவிட்டது குமாரிடம் இருக்கும் குறைபாட்டுக்கு அவனது தந்தைதான் காரணம் என்பதைப் புரிந்து விட்டார்.

"வாங்க தங்கவேலன்" என்று தலைமை ஆசிரியர் சொன்னதும், அவர் அருகே இருக்கும் இருக்கையில் அமர்ந்தார்.

"தங்கவேல் உங்க பையன், பேச்சில், படிப்பில் மகா கெட்டிக்காரன். அதை நினைத்து எங்களுக்குப் பெருமை.."

"அதுக்கு நான்தான் சார் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்...உங்க கடமையைச் சரியாகச் செய்றீங்க. அதனால்தான் என் பையன் நல்லப் படிக்கிறான். அப்பாதான்..."

"ஆனால் ஒரு பையனுக்கு முதல் ஆசிரியர் முக்கிய ஆசிரியர் அப்பதான்..."

"சரி இருக்கட்டும்... இப்போ எதுக்கு நீங்கள் என்னை அழைத்தீர்கள் என்று நான் தெரிந்துகொள்ளலாமா...?" என்றார் தங்கவேலன். அந்த நேரம் பார்த்து அலுவலக உதவியாளர் ஒரு நாய்க்குட்டியைத் தலைமை ஆசிரியரிடம் கொண்டு வந்துகொண்டிருந்தார்.

"சார் இந்த நாய்க் குட்டி தெருவிலே கிடந்தது..." என்றார்.

அந்தநாய்க் குட்டிக்கு ஒரு கால் உடைந்திருந்தது. அதனால் அதை எவரோ தூக்கி வெளியே வீசி இருக்கிறார்கள்.



அந்த நாயை தங்கவேலன் பார்த்ததும் 'உச்' கொட்டினார். "இதேன்ன சார் கொடுமை. ஒருகால்சரிஇல்லை என்று இதை தூக்கி வீதியில் வீசிவிட்டார் களே" என்று பரி தாபப்பட்டார்.

"இதுதான் நாட்டு நிலைமை. இப்படி ஒரு சிக்கலான குழப்பம் உங்கள் பையன்கிட்டேயும் இருக்கு, அதுக்காகத்தான் உங்களை அழைத்தேன்"

குழப்பமான தங்கவேலன் தலைமை ஆசிரியரை பார்த்தார். அவர் சொன்னதைக்கேட்டு குமார் திடுக்கிட்டுப் போனான். தலைமை ஆசிரியரே பேசினார்.

"எல்லாத் திறமையும் குமார்கிட்டே இருக்கு. ஆனா ஒரே ஒரு கெட்ட பழக்கத்தை உங்கள் மூலமா அவன் படித்திருக்கிறான். நீங்கள் உறவினர் நண்பர்கள் எவர் வீட்டுக்குப்போனாலும் கதவு தாழிடாமல் இருந்தால் உடனே அதை தள்ளி திறந்துகொண்டு உள்ளே போய்விடும் பழக்கத்தை வைத்திருக்கிறீர்கள். அந்த பழக்கம் குமாரிடம் இருக்கிறது. அவனது இந்த செயலில் இருக்கும் குறைபாடு அவனுக்கே தெரியவில்லை... அடுத்தவர்களின் இடத்துக்குள் அமைதி பெற்றே நாம் நுழைய வேண்டும். அதுதான் மரியாதை. அதை நீங்கள் கடைப்பிடிக்கவில்லை. உங்களைப்போல குமா ரும் கடைப்பிடிக்கவில்லை..."

"பாருங்க நமக்கு இரண்டு கால்கள், ஒன்று திறமை. இன்னொன்று மரியாதை. இரண்டில் எதை இழந்தாலும் ஒற்றைக்கால் ஆகிவிடுவோம். இந்த நாயைப்போல நம்மையும் தூக்கி எறிந்து விடுவார்கள்..." தலைமை ஆசிரியர் சொல்லி முடிக்கும் முன்னே தங்கவேலனுக்கு புரிந்தது.

"வீட்டுப்பாடம் என்கிற ஒழுக்கத்தை நான் என் பையனுக்கு சொல்லிக் கொடுக்கவில்லை. இனிமேல் நானும் திருந்திக் கொண்டு என் பையனையும் திருத்தி விடுகிறேன்..." என்றார். உடனே அவருக்கு தலைமை ஆசிரியர் கைகொடுத்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

"சரி நான் கிளம்பட்டுமா?"

"தாராளமாக கிளம்புங்கோ..."

"ஒரு சின்னக் கோரிக்கை..."

"சொல்லுங்கோ..."

"அந்த நாய்க்குட்டியை எனக்கே தாருங்கோ.. நானே அதன் காலைக் குணமாக்கி வளர்க்கிறேன்"

தலைமை ஆசிரியர் சிரித்தார். நாய்க் குட்டியுடன் தங்கவேலன் வெளியே வந்தார். இனித்திறந்த வீட்டில் அவர் புகுந்து கொள்ளமாட்டார் குமாரும்தான்...!

## பள்ளிக்கு நேரம் ஆகுது



எழுந்திடு மகனே எழுந்திடு
என்றன் செல்வா எழுந்திடு
பொழுது புலர்ந்தது எழுந்திடு
பூமி வெளுத்தது எழுந்திடு

பூக்கள் இதழ்களை விரிக்குது
புன்னகைத்து அழகு காட்டுது
ஈக்கள் பறந்து வருகுது
இருந்து தேனை அருந்துது

பறவைகள் எழுந்து பறக்குது
பால்தரப் பசுவும் அழைக்குது
உறவைக் காகம் சேர்க்குது
உறக்கம் போதும் எழுந்திடு

குளித்து வந்து கைகளை
கூப்பிக் கடவுளை வணங்கிடு
வெளுத்த ஆடை அணிந்திடு
சுவைத்து உணவை அருந்திடு

பள்ளிக்கு நேரம் ஆகுது.
பையினில் புத்தகம் சேர்த்திடு
பள்ளம் வெள்ளம் பாதையிலே
பார்த்துப் பள்ளி ஏகிடு

ஆசான் சொல்லித் தருகின்ற
அனைத்தையும் மனதில் பதித்திடு
பாசாங்கின்றிப் படித்து முடித்து
பள்ளி விட்டதும் வீடு சேர்ந்திடு





கே.அனுசன்,
தரம் - 8
யாழ்.இந்துக் கல்லூரி.



செ.தீர்க்கஜன்,
தரம் 8 சி,
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

## வரலாற்றில் இன்றைய தினம்



1295 - போலந்து அரசராக இரண்டாம் பிறிஸ்மைல் முடிசூடிக் கொண்டதுடன், வெள்ளைக் கழுகுச் சின்னமும் இணைத்துக் கொள்ளப்பட்டது.

1483 - மூன்றாம் றிச்சாட் இங்கிலாந்து அரசரானார்.

1848 - பாரிஸில் இடம்பெற்ற ஜூன் எழுச்சி தினம் முடிவுக்கு வந்தது.

1857 - போரில் சாதனை படைத்தோருக்கு விக்டோரியா ஹாஸ் சின்னம் சூட்டும் செயற்பாடு லண்டன் ஹைட்பார்க்கில் ஆரம்பிக்கப்பட்டது.

1906 - கிறான்ப் பிறிக்ஸ் மோட்டரர் கார் பந்தயப்போட்டி முதன் முதலாக இடம்பெற்றது.

1917 - முதலாம் உலக மகா போரில் ஜேர்மனிக்கு எதிராக பிரிட்டன் மற்றும் பிரான்ஸூடன் இணைந்து போராட அமெரிக்கப் படைகள், பிரான்ஸ் நாட்டை சென்றடைந்தன.

1924 - அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் டொமினிக்கன் குடியரசை விட்டு வெளியேறின.

1945 - ஐக்கிய நாடுகள் பட்டயம் சான் பிரான்சிஸ்கோவில் ஒப்பமிடப்பட்டது.

1948 - மேற்கு பேர்லினை சோவியத் யூனியன் தடை செய்ததையடுத்து, பேர்லினுக்கு மேற்கத்தைய கூட்டுநாடுகள், விமான மூலமான போக்குவரத்தை ஏற்படுத்தின.

1960 - பிரான்சிடமிருந்து மடகஸ்கார் சுதந்திரம் பெற்றது.

1963 - லெவி எஷ்கோல் இஸ்ரேலிய பிரதமரானார்.

1977 - இன்டியானா பொலிஸ் எனும் இடத்தில் வாழ்வின் கடைசி ஆற்றுகையை எல்விஸ் பிரெஸ்லி நிகழ்த்தினார்.

1990 - பாகிஸ்தான் படைகள் இலங்கை வரக்கூடும் என ராஜீவ் காந்தி எச்சரிக்கை.

- ஈரான் பூகம்பத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 80 ஆயிரத்தைத் தாண்டியது. காயமடைந்த பலரும் இறந்ததையடுத்து உயிரிழப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

1992 - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் ஊரடங்கு அறிவித்தலை இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு அறிவித்தது.


- தேசிய வருவாயில் 40 வீதம் போருக்குச் செலவு ஏற்படுவதாக பிரதமர் டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு

1995 - அடிடாஸ் அபாபாவில் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2004 - இலங்கைப் பத்திரிகையாளர் அவையால் 'உதயன்' செய்தியாளர் புலோலி எஸ்.தில்லைநாதன், விருது வழங்கிக் கௌரவிப்பு.

2004 - அமெரிக்கா வழங்கிய கப்பல் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியிடம் கையளிப்பு.

2006 - பதவியேற்று சில வாரத்தின் பின், ஸ்திரமற்ற அரசியல் நிலமை காரணமாக கிழக்குத் தீமோர் பிரதமர் மாரி அல்காதிரி பதவி விலகினார்.



## பாதாம் இனிப்பு

**தேவையான பொருள்கள்**

பாதாம் பருப்பு -1 கப்
கசகசா 1 கரண்டி
பால் அரைலீற்றர்
நெய் 100 கிராம்
சீனி 200 கிராம்

**செய்முறை**

பாதாம் பருப்பு, கசகசாவை முதல் நாள் இரவே ஊற வைக்கவும். மறுநாள், பாதாம், கசகசாவை மிக்ஸி யில் அரைக்கவும்.
அடி கனமான பாத்திரத்தில் நெய் ஊற்றி பாதாம் விழு தைப் போட்டு குறைந்த சுவாலையில் கிளறவும்.
இலேசான பொன்னிறம் வரும்போது, பால், சீனி சேர்த்து நன்கு கிளறவும்.
ஏலப்பொடி சேர்க்கவும்.
சிறிதளவு, முந்திரி, பாதாம் மெல்லியதாக சீவி மேலாக அலங்கரிக்கவும்.

## சரும வறட்சியை போக்கும் கசகசா

தினமும் 4 பாதாம் பருப்பை ஊற வைத்து அரைத்து, ஒரு கப் பாலில் கலந்து சாப்பிட்டு வரலாம். இரவில் ஒரு கப் பாலில் அரைக்கரண்டி கச காதூளைக்கலந்து குடித்து வரலாம். மனநிம்மதியான உறக்கத்துடன்சரும மும் மிருதுவாக மாறும்.
பொரியல், கூட்டு, சாம்பார் உணவு வகைகளில் கசகசாவை சேர்த்துக் கொள்வதும்சருமத்தின் எண்ணெய்ப் பசையைக் கூட்டும். 50 கிராம்கசகசாவைவறுத்து, சம அளவு சீனியுடன், 25 கிராம் பாதாம் பருப்பை யும் சேர்த்து பொடியுங் கள். ஒரு கப் பாலில் இந் தப் பவுடரை ஒரு கரண்டி அளவுக்குக்கலந்து குடித்து வர சரும வறட்சியும் சட் டெனகுறையும்.





# ஐந்தே நாள்களில் வெள்ளையாக...

வெள்ளைத் தோலின் மீது எவருக்குத் தான் ஆசை இருக் காது. ஒவ்வொரு வரும் மற்றவர்களுக்குத் தெரியாமல் தங்கள் சரும நிறத்தை அதிகரிக்க முயற்சித்துக் கொண்டு தான் இருப்போம். அதில் பலர் கிறீம்களைப் பயன்படுத்தி வெளிக்காட்டிக் கொண்டாலும், இயற்கை வழிகளை முயற்சித்தால், அதனால் கிடைக்கும் பலன் நிரந்தரமானதாக இருக்கும். அந்த வகையில் இந்த வெள்ளையாக நினைக்கும் ஒவ் வொருவரும் பின்பற்ற வேண்டிய சில எளிய வழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப் படித்து தினமும் பின்பற்றி வந்தால், நிச்சயம் நீங்களும் வெள்ளையாகலாம்.

**குங்குமப்பூ**

சிறிது குங்குமப்பூவை ஒலிவ் ஓயில் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி மசாஜ் செய்து, ஊற வைத்து கழுவி வந்தால், சருமத்தின் நிறம் மேம்படுவதை நன்கு காணலாம்.

**தயிர்**

பலரும் தயிர் சருமத்துக்கு ஈரப்பசையை மட்டும் தான் வழங்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால் தயிரில் உள்ள லாக்டிக் அமிலம் சருமத்தில் உள்ள கருமையைப் போக்கும் தன்மை கொண்டவை. அதற்கு வெறும் தயிரை முகத்தில் தடவி மசாஜ் செய்து 20 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும்.

**எலுமிச்சை மற்றும் பால் பவுடர்**

ஒரு பௌலில் ஒரு கரண்டி பாதாம் எண்ணெய், ஒரு கரண்டி எலு மிச்சை சாறு மற்றும் ஒரு கரண்டி பால் பவுடர் சேர்த்து கலந்து, முகத் தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ, முகத்தில் உள்ள கருமை நீங்கி சரும நிறம் அதிகரிக்கும்.

**வெள்ளரிக்காய் மற்றும் தேன்**

வெள்ளரிக்காய் சாற்றில் தேன் கலந்து, முகத்தில் தடவி வர, சரும வறட்சி நீங்குவதோடு, சரும நிறமும் மேம்படும்.

**முட்டை வெள்ளைக்கரு**

முட்டையின் வெள்ளைக்கருவை வாரத்துக்கு 2 முறை முகத்தில் தடவி ஊற வைத்து கழுவ, சருமத்தில் உள்ள அழுக்குகள், கருமைகள் முழுமையாக நீங்கி, முகம் பொலிவோடும், வெள்ளையாகவும் காட்சியளிக்கும்.

**தக்காளி மற்றும் தயிர்**

தக்காளியை அரைத்து, அத்துடன் சிறிது தயிர் மற்றும் ஓட்ஸ் பொடி சேர்த்து முகத்தில் தடவி, சிறிது நேரம் ஸ்கரப் செய்து 20 நிமிடம் ஊற வைத்து கழுவ, சருமம் பொலிவோடு காணப்படும்.

**பச்சை பால் மற்றும் ரோஸ் வோட்டர்**

தினமும் இரவில் படுக்கும்முன் பச்சை பாலில் ரோஸ்வோட்டர் கலந்து, முகத்தில் தடவி, ஊற வைத்து மறுநாள் காலையில் கழுவுவதன் மூலமும், சரும நிறத்தை அதிகரிக்கலாம்.

**தக்காளி மற்றும் எலுமிச்சைச் சாறு**

தக்காளி மற்றும் எலுமிச்சை சாற்றில் உள்ள சிற்றிக் அமிலம், சருமத் தின் எண்ணெய் பசையை கட்டுப்படுத்துவதோடு, அதில் உள்ள ப்ளீச்சிங் தன்மையால் சரும கருமை நீங்கி, சருமம் வெள்ளையாகும்.



## கால் பாத வெடிப்புக்கு...

தேங்காய் எண்ணெய் - ஒரு கரண்டி
தேன் - ஒரு கரண்டி
பசுநெய் - 4 துளி
மஞ்சள்தூள் 2 சிட்டிகை.
பயத்தம் மா- ஒரு கரண்டி

இவற்றைக் கலந்து தினமும் தூங்கப் போகும் போது, வெடிப்பு இருக்கும் பகுதியில் 10 நிமிடங்கள் தடவிய படி இருந்து, வெது வெதுப்பான தண்ணீரில் கழுவுங்கள்.
ஒரு வாரம் இதை தொடர்ந்து செய்து வந்தால் பாத வெடிப்பு குணமாகும்.
கடுகு எண்ணெயை சூடாக்கி பாதங் களில் தடவிய பின்னர் இளஞ்சூடான நீரில் கால்களை வைத்திருக்கவும். தொடர்ச்சியாக செய்வதால் பாத வெடிப்புகள் மறையும்.

கால்களை சுத்தம் செய்து விட்டு தேங் காய் எண்ணெயை காலில் நன்றாக தடவி விட்ட பின்னர், அதன் மேல் கிளி சரினை தடவ வேண் டும்.
இவ்வாறு ஒரு வாரம் தொடர்ந்து செய்து வர பாத வெடிப்பு படிப் படியாக குறையும். பப்பாளி பழத்தை நன்கு அரைத்து அதை பாதங்களில் வெடிப்பு உள்ள பகுதியில் தேய்க்க வேண்டும். அவ்வ உலர்ந்ததும் பாதத்தை தண் ணீரில் நனைத்து மறுபடியும் தேய்க்க வேண்டும் இவ் வாறு செய்து வந்தால் குணமாகும்.
மருதாணி இலைகளை நன்றாக அரைத்து பாத வெடிப்பு உள்ள இடங் களில் தேய்த்து உலர விடவேண்டும். பின்னர் தண்ணீரில் கழுவி வர நாள டைவில் வெடிப்பு குணமாகும்.

# நல்ல மனம்!

எனது நண்பனும் நானும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்கின்றோம். நான் தினமும் காலையில் அவன் வீட்டுக்குச் சென்று அவனது ஸ்கூட்டரிலேயே இருவருமாக அலுவலகம் செல்வோம்.

நான் அவன் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் ஒரு விடயத்தை அடிக்கடி என்னால் அவதானிக்க முடிந்தது. தினம் தவறாமல் மனைவிக்கு ஏதாவதொரு வெளி வேலை கொடுத்து விட்டுத்தான் அவன் அலுவலகம் கிளம்புவான். வங்கிக்கு சென்று பணப்பரிமாற்றம் செய்தல், ரெலிபோன் சிட்டை, சொத்து வரி, தண்ணீர் வரி என்பவற்றை அவன் மனைவி செய்யப் பணித்திடுவான். இந்த நடவடிக்கையை அவதானித்த எனக்கு மனம் பொறுக்கவில்லை . எனக்கு அவன் மனைவியைப் பார்த்தால் பாவமாய் இருக்கும். வாகன வசதியுடைய அவன் அலுவலகத்தில் அனுமதி பெற்று சுலபமாகச் செய்யக் கூடிய இந்தச் சின்னச் சின்ன வேலையைஎல்லாம்ஏன்தன்மனைவியைக் கொண்டு செய்வித்து அவளைக் கஷ்டப் படுத்துகிறான் என்று கவலைப்படுவேன்.

ஒரு நாள் மனம் பொறுக்காமல் அவனிடம் நேரடியாகக் கேட்டேன். ஏன் இந்த வேலையை நீயே செய்யலாமே? ஏன் மனைவியிடம் சுமத்தி விடுகிறாய்? என்று .அவன் சொன்ன பதில் என்னை ஆச்சரியம் அடைய வைத்தது.

என் மனைவி வீட்டை விட்டு வெளியே போய் பழக்கம் இல்லாதவள். இவளை வெளியிடத்திற்கு சென்று நாலு பேருடன் பழக வைக்கவும் , இந்த முக்கியமான வேலைகளைப் பழக்கி விட்டால் எனக்குப் பின்பு அல்லது எனக்கு இயலாமல் வருத்தம் துன்பம் வரும் சந்தர்ப்பங்களில் இந்த முக்கியமான விடயங்களை செய்வதற்கு யார் தயவையும் நாடத் தேவையில்லை . எந்த வேலையையும் தன்னம்பிக்கையுடனும் மனத்தைரியத்துடனும் தானே கையாளும் பக்குவம் தன்னாலே ஏற்பட்டு விடும் என்றும், அது மாத்திரமன்றி உதவிக்கு வேறு ஒருவரை நாடும் போது அதனால் ஏற்படும் விபரீதங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் அல்லவா எனவும் கூறினான்.

அவனது கருத்து எனக்கு நியாயமாகப் பட்டது. எனது அறிவுக்கு அந்தப் பரந்த மனப்பான்மை இல்லாமல்போய்விட்டதேஎன்றுவருந்தினேன்.

*தெல்லியூர்த் தேவி*

# அடியாத மாடு....



செ.மகேஷ்

நான் படிக்கிற காலத்தில வாங்காத அடியா! எத்தனைபிரம்படிகளைவாங்கியிருப்பேன். அடியாத மாடு படியாது என்றும் அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்றும் சும்மாவா சொல்லி வைத்தார்கள். சிவபாதத்தார் உரத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

செல்லத்தம்பியருக்குச் சிவபாதத்தார் சொல்ல வாறது என்னென்று விளங்கிவிட்டது. கல்வியில் நாங்கள் உயரவேண்டும் என்பதற்காகப் பிரம்படி தந்த ஆசான்களால் விளைந்த வலிகளின் வலிமையைச் சொல்லி அந்தக் காலத்துப் படிப்பின் உன்னதத்தைப் பேசினார் சிவபாதத்தார்.

இன்றைய நிலையில் பிரம்பெடுக்கக் கூடாது என்கிறது பாதுகாப்புச் சட்டம். இன்று பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடாது என்ற கருத்துக்கு எதிர்நிலை எடுத்திருப்பவர்களின் குரல்களில் ஒன்ருகவே சிவபாதத்தாரின் கூற்றுக்கள் இருக்கின்றன. செல்லத்தம்பியர் நினைத்துக் கொண்டார். அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியிலே அதன் விளக்கமாக மாணவன் ஒருவன் கல்வியைக் கற்றுக்கொள்ள அவனை அடித்துத்தான் படிப்பிக்க வேண்டும் என்ற அழுத்தம் தொனிக்கிறது. அடியைப்போல அண்ணன் தம்பி உதவமாட்டான் என்ற பழமொழியும் இந்த வகையில் சொல்லப்பட்டதுதான். ஒருவனுக்கு அடிக்கின்ற அடியின் வேகத்தின் வழியே அவனிடத்தில் பிறக்கும் மாற்றத்தின் மகத்துவத்துக்கு ஓர் உதாரணமாக இது சொல்லப்படுகிறது.

இந்த அடிகள் எல்லாமே கற்றலோடு தொடர்புபடுத்தப்படுவது என்னவோ துரதிர்ஸ்ட வசமானதுதான். இன்று இந்தப் பழமொழிகளுக்கெல்லாம் தவறான அர்த்தம் கண்டு விட்டார்கள் என்பதுதான் செல்லத்தம்பியரின் சிந்தனையில் விரிந்த முடிவு.

ஒருவன் எந்தக் கடினமான வேலையையும் செய்ய முன்வந்தால் அவ்வேலைக்கான தனது முயற்சியினின்றும் விலகாது ஓயாது அதனைத் தொடரவேண்டும் அப்பொழுதுதான் வெற்றி கிடைக்கும் என்பதுவே அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்ற அப்பழமொழி துலக்கும் உண்மையாகும். இந்த உண்மையைச் செல்லத்தம்பியர் சிவபாதத்தாருக்கு சொல்ல நினைத்தார் ஆனால் சொல்லவில்லை.

அவ்வாறே வண்டி இழுத்தும் வயலிலே உழுதும் வேலை செய்வதற்காக நாம் வளர்க்கின்ற காளை மாட்டுக்கு நலம் அடித்தாற்றான் அது தொழிலுக்குப் படிந்து உழைக்கும். இதனையே அடியாத மாடு படியாது என்ற வார்த்தை விளக்கி நிற்கின்றது.

பள்ளியிலே படிக்கின்ற மாணவனைப் படிக்காத மாடாகக் கற்பனை செய்து இப்பழமொழி வழக்கத்திலே சொல்லப்படவில்லை சிவபாதத்தார் சொல்லிக் களித்த பழமொழிகள் எதனிலும் பள்ளியில் படிக்காத மாணவனுக்கு வழங்கப்பட வேண்டிய பிரம்படிகள் பற்றிச் சொல்லவே இல்லை. எனினும் சிவபாதத்தார் ஒரு மாணவனை அடித்துத்தான் படிப்பிக்க வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவாகவே இப்பழமொழிகளைப் பயன்படுத்துகிறார் என்பதைச் செல்லத்தம்பியர் அறிந்தே இருந்தார். சிவபாதத்தார் இப்பொழுது அழுத்திச் சொல்லுகின்ற தண்டனை வழங்கும் கருத்துக்கு முழுவதுமாகவே எதிரானவர் செல்லத்தம்பி.

சிவபாதத்தாரை எதிர்த்துப் பேசப் புறப்பட்டால் நிறையப் பேச வேண்டும். அன்பினால் ஆகாத தொன்றில்லை.

தண்டனை வேண்டாம்

பிள்ளைகளின் நடத்தைகளில் அல்லது கற்றலின் வளர்ச்சியில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் உளவியல் சார்ந்த அர்த்தமுள்ள அணுகுமுறைகள் தெரிந்த ஆசான்களே இன்றைய தேவையாகும். இவை பற்றி உணராதவர்களாலேயே இந்தப் பிரம்படியின் உன்னதம் பேசப்படுகிறது பிள்ளைகளை நல்வழி நடத்தக் கண்டிப்பும் தண்டனையும் அவசிமானவை என்பதைச் செல்லத்தம்பியர் ஏற்றுக் கொண்டிருந்தார். அடிச்சுப் படிப்பிக்க முயலாமல் உணர்வுபூர்வமாக சிந்தனையைத் தவிர்த்து வேகங்கொள்ளாமல் அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படுவதே நல்லது. இதைச் சிவபாதத்தாருக்குச் சொல்லப் போனால் எனக்கென்ன அறிவில்லையெண்டே நினைக்கிறாய் என்று சொல்லிக் கொண்டு சண்டைக்கும் வந்துவிடுவார. பிள்ளைகளின் நடத்தைகளிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமானால் உளவியல் சார்ந்த அணுகுமுறைகள் அவசியமல்லவா! அனேகரிடம் இன்று இவை இல்லை என்று சொன்னால் எவராவது கேட்கவா போகிறார்கள்? ஆத்திரப்படுவதும் அடித்துப் படிப்பிக்க முந்துவதும் சரியா? எனச் சற்றுச் சிந்தித்தால் நல்லதுதான். உடல் பாதிப்புறும் வகையிலான தண்டனைகளும் உளம் சோர்வடையும் வகையிலான கண்டிப்புகளும் பொருத்தமற்றவைதாம். குருவைத் துவம்சம் செய்யும் வகையிலே சீடன் முந்தும்போது கற்பித்தலை எவ்வாறு நடத்துவது என்று அங்கலாய்க்கும் சிலரின் ஆத்திரம் செல்லத்தம்பியருக்கும் புரிநதது ஆனால் எதற்கும் தண்டிக்காமலும் கண்டிக்காமலும் பிள்ளையை வழிநடத்த மார்க்கம் உண்டென்கிறார்களே! என்றாலும் செல்லத்தம்பியர் சிவபாதத்தாரின் கருத்துக்கு எதிரானவர்தான். நினைத்தார், சொல்லவில்லை.

அன்புதான் அனைத்தையும் நல்வழிப்படுத்தும் ஒரே அரிய பேறாகும். செல்லத்தம்பி மௌனமானார்

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

11



## போதைக்குள் தாண்டவமாடும்

# ‘உத்ர பஞ்சாப்’




பஞ்சாப்பைப் பெரும்பாலும் அதில் விளைந்துள்ள கோதுமை வயல்களில் டூயட் பாட மட்டுமே பாலிவுட் பயன்படுத்திவந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். உத்ர பஞ்சாப் அந்த பிம்பத்தை உடைத்து, அங்கே நிலவும் சமூகப் பிரச்சினைகளை வெளிச்சம்போட்டுக் காட்டியிருக்கிறது.

பஞ்சாப்பில் போதைப் பழக்கத்துக்கு அடிமையாக்கப்படும் இளைஞர்களின் வாழ்க்கையை மனதை உலுக்கும்படி பதிவுசெய்கிறது இந்தப் படம். இயக்குநர் அபிஷேக் சவுபே, போதைப் பழக்கத்தால் பஞ்சாப் இளைஞர்கள் பாதிக்கப்படுவதன் பின்னணியை எந்தச் சமரசமும் செய்து கொள்ளாமல் திரையில் கொண்டுவந்திருக்கிறார்.

போதைப் பழக்கத்துக்கு எதிராக ஒரு சமூகம் நடத்த வேண்டிய போரைப் பற்றித் தெளிவாகப் பேசுகிறது இந்தப் படம். இந்தப் படத்தில் தணிக்கைக் குழு குற்றம் சாட்டியதுபோல, போதைப் பழக்கத்தைக் கொண்டாடும் எந்த அம்சமும் இடம்பெறவில்லை. மாறாக, போதைப் பழக்கத்தின் விளைவுகளைச் சமூகத்தின் முகத்தில் அறையும்படி புரியவைக்க முயன்றிருக்கிறது இந்தப் படம்.

### திசை மாறிய கலைஞன்

டாமி சிங் (ஷாஹித் கபூர்) என்பவன் போதை மருந்துக்கு அடிமையாகி, தன்னுடைய நட்சத்திர அந்தஸ்தை இழந்துகொண்டிருக்கும் ஒரு இராப் பாடகன். அவன் போதையின் பெருமையைப் பாடிப் பல இளைஞர்களுக்குத் தவறான முன்மாதிரியாக இருக்கிறான். ஒரு கட்டத்தில், போதைப் பார்ட்டி நடத்தியதால் கைதாகிச் சிறையில் அடைக்கப்படுகிறான்.

சிறையில் இருக்கும் இரண்டு சிறுவர்கள் இவனை அடையாளம் கண்டு இவனுடைய பாடலைப் பாடிக்காட்டுகிறார்கள். அப்போது, அங்கேயிருக்கும் ஒரு முதியவரின் குரல் அம்மாவைக் கொன்றுவிட்டு, உங்களுக்குப் பாட்டு ஒரு கேடா? என்று அதட்டுகிறது. அந்தச் சிறுவர்கள், நாங்க மால் வாங்க பணம் கேட்டால் கொடுக்கல. அதான் கொன்னுட்டோம் என்று பெரிய வருத்தம் எதுவும் இல்லாமல் சொல்கிறார்கள்.

இதைக் கேட்ட பிறகு, டாமிக்குத்தான் எவ்வளவு பெரிய தவறு செய்துள்ளேன் என்று புரிகிறது. அந்தச் சிறுவர்களின் குரல் அவனைத் துரத்துகிறது. தான் செய்த தவறுக்கான குற்ற உணர்வு அவனைத் துரத்த, நிம்மதியிழந்துபோகிறான். தன்னைத்தானே எதிர்கொள்ள முடியாமல் ஓடுகிறான்.

### மேலும் மூவர்

இதற்கிடையில், பிஹாரில் இருந்து பஞ்சாப்பிற்கு வேலைபார்க்க வரும் ஓர் இளம்பெண்ணுக்கு (ஆலியா பட்) போதைப் பொருள் கிடைக்கிறது. அதைவிற்று வாழ்க்கையில் முன்னேறிவிடலாம் என்று அவள் நினைக்கிறாள். ஆனால், அவளுடைய முட்டாள்தனமான முடிவின் விளைவு கொடூரமானதாக இருக்கிறது.

சர்தாஜ் சிங் (தில்ஜித் தோசாஞ்), தம்பியைப் போதைப் பழக்கத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக போதைக் கடத்தல் கும்பலைப் பின்தொடரும் காவலாளர். டாக்டர் பிரீத் (கரீனா கபூர்) பஞ்சாபை போதையில் இருந்து மீட்கப் போராடும் மருத்துவர். போதைக்கு அடிமையாகியிருக்கும் சமூகமும் போதைப் பொருள் வர்த்தக வலைப்பின்னலும் இந்த நான்கு பேரின் வாழ்க்கையில் எந்த மாதிரியான விளைவை ஏற்படுத்துகின்றன என்பதுதான் உத்ர பஞ்சாப்.

### துணிச்சலான பதிவு ஏன்?

வணிகரீதியான அம்சங்களுடன் எடுக்கப்படும் படத்திலும் சமூகத்துக்கான செய்தியை வலிமையாகக் கொடுக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார் இயக்குநர் அபிஷேக்.

சுதிப் ஷர்மாவின் திரைக்கதை முதல் பாதியில் பார்வையாளர்களை மிரட்டிவிடுகிறது.

இரண்டாம் பாதியில் பாலிவுட்டுக்கே உரிய நாடகத்தனமான சில காட்சிகளைத் தவிர்த்திருந்தால், இன்னும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். கதாபாத்திரங்களின் தேர்வும் கச்சிதம். ஷாஹித், ஆலியாவின் நடிப்புத்திறனைச் சிறந்த முறையில் பயன்படுத்தியிருக்கிறார் இயக்குநர். கரீனா, பஞ்சாபி நடிகர் தில்ஜித் இருவரும் தங்கள் கதாபாத்திரங்களுக்கு ஏற்ற நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால், படம் முடியும்போது, ஷாஹித், ஆலியாவின் நடிப்பே மனதில் நிற்கிறது. அமித் திரிவேதி இசையமைத்திருக்கும் பாடல் கவனத்தை ஈர்க்கிறது. பெனிடிக்ட் டெய்லர், நரேன் சந்தாவர்கர் பின்னணி இசையும் திரைக்கதையின் பதற்றத்தை உணரவைக்கிறது. நான்கு வெவ்வேறு பாதைகளில் நான்கு கதாபாத்திரங்களின் கதைகளைச் சொன்னபடி படத்தைக் கொண்டு செல்கிறார் இயக்குநர். முக்கிய கதாபாத்திரங்களின் தனித்தன்மையான கட்டமைப்பு படத்தை நம்பகத்தன்மை கொண்டதாக ஆக்குகிறது. உதாரணமாக, சர்தாஜின் தம்பி பல்லி (பிரப்ஜோத்சிங்) கதாபாத்திரத்தைச் சொல்லலாம். அவனுடைய கதாபாத்திரம் போதைக்கு அடிமையாகும் இளைஞர்கள் தங்களுக்குள் தாங்களே நடத்தும் போராட்டத்தைத் தெளிவாகத் திரையில் கொண்டுவருகிறது.

ஆனால், போதை மருந்தை விநியோகிக்கும் கும்பலுக்கும் பின்னால் இருக்கும் அரசியல்வாதிகளையும், காவல்துறையையும் படம் மேலோட்டமான சித்திரிப்பின் மூலம் கடந்து சென்றுவிடுகிறது. அந்தப் பகுதியை இன்னும் அழுத்தமாகவும் தெளிவாகவும் அமைத்திருந்தால் படம் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். எது எப்படியிருந்தாலும், போதை மருந்துக்கு அடிமையான ஒரு சமூகத்துக்கான செய்தியைத் துணிச்சலாகப் பதிவு செய்ததற்காக உத்ர பஞ்சாப் திரைப்படத்தை எல்லா வகையிலும் வரவேற்கலாம்.



## ஏணிப்படிகள் (சில) ஏணிப்படி?

ஆசு இல்லாத புனித சேவையே ஆசிரியம்
ஆண்டவனுக்கடுத்தோராய் அன்னை தந்தை ஆசிரியர்
ஐயந்திரிபறக் கற்பிக்கும் ஆசிரிய பெருமக்கள்
அடுத்தோரை உயர்த்திடும் ஏணிப்படிகள்

ஆனால் ஆசிரியம் இப்போது அலங்கோலமாய்
அரசியல் செல்வாக்கால் அரங்கேற்றப்பட்டோர்கள்
அனுபவமோ, அறிவோ அறவே இல்லாதவர்கள்
ஆசிரிய சேவையைக் காசுக்கு விற்பவர்கள்

புதிரான செயல் கண்டு புனித பணி தலை குனியும்
எளியோர் குழந்தைகளை ஏளனமாய் நோக்குவதும்
கிள்ளுவதும், நுள்ளுவதும் கிண்டலடிப்பதுவும்
திட்டுவதும், குட்டுவதும் எட்ட அமரவைப்பதுவும்



# ஹிரோஷிமா

## உணர்த்தும் உண்மை

ஆர்லாண்டோவில் நடந்த மனித குலத்தின் கொடூர சம்பவத்தைப் பற்றி இன்றைக்குப் பேச விரும்புகிறேன். ஆனால், அதற்கு முன்பாக ஹிரோஷிமாவைப் பற்றி – இன்னும் சரியாகச் சொல்வதென்றால், மே 27இல் ஜப்பானில் அதிபர் ஒபாமா வழங்கிய ஆழமான உரையைப் பற்றிப் பேச விரும்புகிறேன். அதிபர் தேர்தல் பரப்புரை முழக்கங்களுக்கு இடையே கண்டுகொள்ளப்படாமல் போன உரை அது.

“முதன்முறையாக, நம் அனைவரையும் கொன்றழிக்கும் ஆற்றல் ஒரு நாட்டின் மூலம் கைக்கொள்ளப்பட்டதன் அடையாளம் ஹிரோஷிமா என்று ஒபாமா குறிப்பிட்டார்” ஆனால், நாம் இன்றைக்கு நுழையும் உலகத்தில் சிறிய குழுக்கள், சொல்லப்போனால் நவீன ஆயுதங்கள் கொண்ட ஒரு தனிநபரால் நம் அனைவரையும் கொல்ல முடியும். எனவே, தொழில்நுட்பம் நம்மை எந்த இடத்துக்கு வழிநடத்திச் செல்கிறது என்பதன் தார்மீக விளைவுகளைப் பற்றி நாம் சிந்திக்கத் தொடங்குவது நலம் என்றார்–ஒபாமா.

“அறிவியல், கடல்கள் தாண்டியும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள வைக்கிறது. மேகங்களுக்கு மேலே பறந்து செல்ல வைக்கிறது. நோய்களைக் குணப்படுத்த உதவுகிறது. அண்டவெளியை அறிய உதவுகிறது. அதேசமயம், அதே கண்டு பிடிப்புக்கள் மிக மோசமான உயிர்க்கொல்லி ஆயுதங்களாகவும் மா[illegible]டியும்” என்று ஒபாமா தெரிவித்த[illegible] நவீன யுகத்தின் போர்கள் இந்த[illegible]ண்மை நமக்கு உணர்த்து[illegible]ர்றன. ஹிரோஷிமா இந்த உண்[illegible]மையை நமக்கு உணர்த்துகிற[illegible] மனித [illegible]லம் தொடர்பான நிறுவன[illegible]களில் [illegible]மான வளர்ச்சியைக் கொ[illegible]டிருக் [illegible]த தொழில்நுட்ப வளர்[illegible]ம்மை அழித்துவிடும்” என்றார்–[illegible]ர். அவர் குறிப்பிட்டது நம் [illegible]த்தின் மிக முக்கியமான பிரச்சினை. அதிவேகமாக வளர்ந்துவரும் நமது தொழில்நுட்பத்திறன், ஏற்படுத்த தனிநபர் களுக்கும் குழுக்களுக்கும் பெரும் சேதத்தை அது வழங்கும். இந்த ஆற்றலைப் பொறுப்புடன் கையாள்வதற்கும் நிர்வகிப்பதற்குமான தார்மீக மற்றும் சமூக வளர்ச்சிக்கும் இடையில் அதிகரித்துக் கொண்டேவரும் வேறுபாடுதான் அந்தப் பிரச்சினை.

ஆர்லாண்டோ சம்பவம் தொடர்பாக நான் பேசுவது அந்த அடிப்படையில் தான். ஏராளமான அப்பாவி மக்களை ஒரு தனிநபரால் கொல்ல முடியும் என்ற சூழல் நிலவும் நிலையில், சமூக, சட்ட மாற்றங்கள் தொடர்பாக நாம் மறுபரிசீலனை செய்ய மறுக்கும் சூழலில், இதுபோன்ற சம்பவங்கள்தான் நடக்கும். இராணுவம் துப்பாக்கிகளைத் தனிநபர்களும் வாங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தே கிறுக்குத்தனமானது.

> அடிப்படையிலிருந்தே இவற்றையெல்லாம் நிறுத்தக் கூடிய ஒரே விடயம்: முஸ்லிம் அரசுகள், மதகுருக்கள், மக்கள் ஆகியோர் இதுபோன்ற நடவடிக்கைகளை அங்கீகரிக்க மறுப்பதுதான். ஒரு கிராமத்தில் உள்ள மதகுரு, இனியும் வன்முறை வேண்டாம் என்று சொன்னால் போதும். அது அடியோடு இல்லாமல் போய்விடும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.



குடியரசுக் கட்சியிடம் துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பாக அறிவார்த்தமான கருத்து இல்லாதது, இன்னும் மிகப் பெரிய படுகொலைச் சம்பவங்களுக்கு இட்டுச் செல்லும். அதேசமயம், முஸ்லிம் இளைஞர்கள் மேற்கத்தேய நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களையும், இன்னும் சொல்லப் போனால், முஸ்லிம் நாடுகளிலேயே பிற முஸ்லிம் மக்களையும் கொல்ல, இஸ்லாம் மதத்திலிருந்தே தாக்கத்தையும் அனுமதியையும் பெறுவதைக் கடந்த ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம்.

நான் முஸ்லிம் நாடுகளிலும் வசித்திருக்கிறேன். இஸ்லாம் மதத்தின் சாரம் இதுதான் என்று கருதும் அளவுக்கு முஸ்லிம் சமூகங்களின் மேன்மையான நாகரிகத்தை அனுபவித்திருக்கிறேன். அதேசமயம், அரபுலகம், பாகிஸ்தான், ஆப்கான் ஆகிய நாடுகளில் உள்ளவர்களால் வளர்த்தெடுக்கப்படும் தன்பாலின உறவாளர்களுக்கும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் பெண்களுக்கும் எதிரான, மத அடிப்படை இஸ்லாமிய வடிவங்களுக்கும் முன்னர் குறிப்பிட்ட நாகரிகத்துக்கும் தொடர்பே இல்லை எனும் அளவுக்கு மிக மோசமானவன் முறைகளைப் பார்த்து வருகிறேன்.

சகிப்பின்மை அடிப்படையிலான இந்தக் கருத்தாக்கங்களை முன்வைக்கும் இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள், மசூதிகள் போன்றவை உலகின் எந்த மூலையில் இருப்பவர்களிடமும் தாக்கம் செலுத்துகின்றன. இவையெல்லாம் முடிவுக்கு வரவில்லை யெனில், பாரிஸிலோ, பிரஸல்சிலோ, சான் பெர்னாடினோவிலோ அல்லது ஆர்லாண்டாவிலோ அடுத்த தாக்குதல்களை நாம் எதிர்பார்க்க வேண்டியது தான்.

### இனியும் வன்முறை வேண்டாம்

அடிப்படையிலிருந்தே இவற்றையெல்லாம் நிறுத்தக் கூடிய ஒரே விடயம்: முஸ்லிம் அரசுகள், மதகுருக் கள், மக்கள் ஆகியோர் இதுபோன்ற நடவடிக்கைகளை அங்கீகரிக்க மறுப்பதுதான். ஒரு கிராமத்தில் உள்ள மதகுரு, இனியும் வன்முறை வேண்டாம் என்று சொன்னால் போதும். அது அடியோடு இல்லாமற் போய்விடும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. இறுதியாக, தனிநபர்கள் பெரும் சக்திவாய்ந்தவர்களாக மாறும் காலகட்டத்தில், நமது (அமெரிக்க) அரசு கண்காணிப்பு வியத்தில் தனக்கு இருக்கும் அனைத்து சக்திகளையும் – தகுந்த நீதிமைப்பின் கீழ் – பயன்படுத்தி வன்முறையில் ஈடுபடும் பயங்கர வாதிகளைக் கண்காணிக்கவும் கைதுசெய்யவும் வேண்டும். ஆனால் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்கான அனைத்து சாதனங்களும் இந்தக் கயவர்களிடம் தற்போது ஏராளமாக இருக்கின்றன. பின்வரும் வார்த்தைகளால் தனது ஹிரோஷிமா உரையை நிறைவுசெய்தார் ஒபாமா. அந்த வார்த்தைகள் ஆர்லாண்டோ சம்பவத்துக்கும் பொருந்தும். இறந்தவர்கள் அனைவரும் நம்மைப் போன்றவர்கள். மேலும், போர்களை அவர்கள் விரும்பவில்லை. மாறாக, அறிவியலின் அதிசயங்கள் மனித வாழ்வை மேம்படுத்துவதாக இருக்கவேண்டும் . அவர்கள் மனித வாழ்வை விரும்புபவர்கள் அழிப்பதை அல்ல.

தனிநபரின் பலத்தைத் தொழில்நுட்பம் அதிகரிக்கும் இந்தக் காலகட்டத்துக்கு ஏற்ற முடிவுகளை நாம் எடுக்க வேண்டும். சமூகப் பிரக்ஞை கொண்ட துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சட்டம், சமூகப் பிரக்ஞை கொண்ட பாலின சமத்துவம் போன்ற தனிநபர் சட்டங்கள் நமக்குத் தேவை. ஆனால், அதற்குச் சமூகப் பிரக்ஞை கொண்ட தலைவர்கள் உருவாக வேண்டும்.

### சமூகப் பிரக்ஞை வேண்டும்

குண்டுபோடுவதன் மூலமே, எல்லைச்சுவர் எழுப்புவதன் மூலமே, அவமதிப்புகள் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்று கருதும் தலைவர் நான் அல்ல. ஆர்லாண்டோ சம்பவம் நடந்த சமயத்தில் டொனால்டு டிரம்ப் அமெரிக்க அதிபராக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று ஒரு நிமிடம் யோசித்துப்பாருங்கள். மத்தியக்கிழக்கு நாடுகள் மீது குண்டு வீச உத்தரவிட்டிருப்பார்; இதனால் தனிமைப்படுத்தப்படும் உணர்வும், பயமும் அமெரிக்க முஸ்லிம்களிடம் உருவாகியிருக்கும்; அமெரிக்காவு டன் முழுமையான போரில் இறங்கி விட்டதாக ஐஎஸ் அமைப்பு குதூ கலித்திருக்கும்; இதைச் சாக்காக வைத்து, அமெரிக்காவில் உள்ள மசூதி மீதி அமெரிக்க சமூகம் குண்டுவீசும் கிறுக்குத்தனம் நிகழும். எதிர் விளையாக உலகமெங்கும் உள்ள நமது தூதர கங்கள் மீது குண்டுகள் வீசப்படும். அமெரிக்காவுக்குப் பைத்தியம் பிடித்தால் உலகத்துக்கும் பைத்தியம் பிடிக்கும். இந்தப் பிரச்சினையில், ஒபாமா எடுக்கும் எல்லா முடிவுகளையும் நான் ஆதரிக்கவில்லை. ஆனால், இந்த மனிதர் ஆழமாகச் சிந்தித்து, பொறுப்புடன் நடந்துகொள்கிறார். பொய் சொல்கிறார். அச்சத்தை விதைக்கிறார். அமெரிக்க ராணுவத்திலும், எஃப்.பி.ஐ.யிலும் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் அமல்படுத்த மறுக்கும் அளவிலான அச்சுறுத்தல்களை உருவாக்குகிறார். டிரம்பை அதிபராக்க ஆதரவு தரும் குடியரசுக் கட்சி செனட்டர்களுக்கும் எம்பிக்களுக்கும் ஒன்று சொல்லிக்கொள்கிறேன்... அவர் உங்களைத் தன் வசப்படுத்திவிடுவார். அவர் செய்யும் எல்லா செயல்களுக்கும் நீங்களும் பொறுப்பாவீர்கள்!

*நன்றி: த நியூயோர்க் ரைம்ஸ்*



(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கக்கூடாதா என்று சிங்கள மொழி பேசும் அந்த ஊடகவியலாளர்களைப் பார்த்து அங்கலாய்த்தார் கஸ்தூரி. அவரது கேள்விகளுக்கு அமைதியைத் தவிரத் தருவதற்கு ஊடகவியலாளர்களிடமும் பதிலேதும் இருக்கவில்லை.

“இராணுவத்தினரும் பிள்ளைகள்தான். அவர்கள் சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள். அவர்களிடம் எங்களுக்குக் கோபம் கிடையாது. அவர்களை இயக்குபவர்கள்தான் அவர்களின் கொடுமைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும்” என்று சொன்ன கஸ்தூரி, 'தெற்கில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளுக்கு எம்மைப்பற்றி எதுவும் சொல்லத் தேவையில்லை: தெற்கிலுள்ள மக்களிடம் எங்களுக்கு இருக்கும் பிரச்சினை பற்றி சொல்லுங்கள். அவர்கள் அரசுக்கு அழுத்தம் தருவதன் மூலம் எங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படும். இதை நான் உறுதியாக நம்புகிறேன்” என்று ஆணித்தரமாகச் சொன்னார். மறுவார்த்தை கூறாமல் அப்படியே எழுதிக் கொண்டார்கள் ஊடகவியலாளர்கள்.

**நீதிவான் முகாம் பயணம்**

வீமன்காமம்/மயிலிட்டி சந்திப்பை அடுத்து மல்லாகம் நீதிவான் முகாமில் உள்ள மக்களை சந்திப்பதற்காக வாகனங்கள் விரைந்தன.

மயிலிட்டி, பலாலி மற்றும் காங்கேசன் துறை போன்ற இடங்களைத் தமது பூர்வீக நிலங்கள் கொண்ட 62 குடும்பங்களைச் சேர்ந்த 212 பேர் அந்த முகாமில் வாழ்கின்றனர். 27 வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த நிலத்திலிருந்து விரட்டப்பட்ட அந்த மக்களுக்கு 2009இற்கு பின்னர் எந்த அரச உதவிகளும் வழங்கப்படவில்லை. தனியார் ஒருவருக்குச் சொந்தமான இடத்தில் தாங்கள் குடியிருப்பதால் சமுர்த்தி உதவி நிதி கூடத் தங்களுக்கு கிடைப்பதில்லை என்று கவலையுடன் கூறினர்.

தகரக் கொட்டகை வாழ்க்கையினால் தாம் பல இன்னல்களைச் சந்திக்கின்றனர் எனத் தெரிவித்த மக்கள், கடந்த காலங்களில் தமது நிலத்ததை மீட்பதற்காக முன்னெடுத்த சாத்வீகப் போராட்டங்களையும் நினைவூட்டினர். எனினும் மைத்திரி தெரிவித்த ஆறு மாத காலக்கெடுவை கருத்தில்கொண்டு போராட்டங்களை இடைநிறுத்தினர் எனவும், இப்போது அத்தகைய போராட்டங்களை மீளத் தொடங்கத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் ஊடகக் குழுவினருக்கு அறிவிப்பும் விடுத்தனர்.


தங்களுடைய இடத்திற்கு தம்மை விட்டால் தமது வாழ்வாதாரத்தைத் தாமே கவனிப்போம் என்கிற தொனிப்பே அங்கு உரையாடிய முகாம் மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தாக அமைந்திருந்தது. தன் சொந்த மண்ணான மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து அந்த முகாமில் இருக்கும் மரியலிங்கம் உணர்ச்சி மேலீட்டால் நடந்து கொண்டவிதம், ஊடகவியலாளரகளின் மனதை ஆழமாகத் தைத்தது.

நீதிவான் முகாம் சந்திப்பை முடித்துக் கொள்ளும் போதே இருள் சூழ ஆரம்பித்திருந்தது. ஊடகக்குழுவினர் தமது தங்குமிடத்தை நோக்கி கனத்த மனதுடன் திரும்பினர்.

2009 இற்கு பின்னர், போர் வெற்றி கொள்ளப்பட்டுள்ளதாகவும் வடக்கில் இயல்பு நிலை திரும்பிவிட்டதாகவும், உயிரிழப்புக்கள் தவிர ஏனைய இழப்புகள் ஈடு செய்யப்பட்டுள்ளதாகவும் மனப்பிரமையை கொண்டிருந்த தென்பகுதி ஊடகர்களுக்கு குறித்த பயணம் பெரும் அதிர்ச்சிகரமானதாக அமைந்திருந்தது.

போர் ஓய்வின் பின்னர், வடக்குப் பிரதேசம் சுற்றுலாவுக்கான ஒரு தலமாக மாறியுள்ளபோதிலும், சந்தைப்படுத்தலுக்கான புதிய சந்தைப் பரப்பாக இனங்காணப்பட்டுள்ளபோதிலும், அவற்றுக்கப்பால் வடபுலத்தின் இன்னும் குணப்படுத்தப்படாத பகுதிகளின் கண்கண்ட சாட்சியாளர்களாக இந்தப் பயணம் அவர்களை மாற்றியிருந்தது.

சாவகச்சேரியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்டாலோ, யாழ்ப்பாணத்தில் நீதிமன்றின் மீது கல்வீச்சு நடத்தப்பட்டாலோ வடக்கில் புதிய போர் மீள உருவாகுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அறிவிக்கும் தெற்கின் சில ஊடகர்கள் சிலரும் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.



அவர்களுக்கு மத்தியில் பழைய போரில் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் அந்த நிலையிலிருந்து மீளவேயில்லை என்பதை கண்டறிய அவர்களின் சகாக்களில் சிலருக்கு வாய்ப்பை தந்திருந்தது அந்தப் பயணம்.

தாம் பயணம் செய்து சந்தித்த மக்கள் மொழிந்த “எங்கட இடத்திற்கு எங்களை விடுங்கோ” என்ற குரலை சிங்கள மக்கள் சரிவர புரிந்து கொள்ளும் அளவுக்கு அவர்கள் வெளிப்படுத்துவது மட்டுமே நல்லிணக்கத்திற்கான சாளரங்களை அகலத் திறந்துவிடும் தாரக மந்திரம்.

## துன்பம் வரும் வேளையிலும் சிரிப்பு!

அரசர் அவை கூடுகின்றது. அனைத்து அமைச்சர்களும் இருக்கின்றனர். அரசர் அமைச்சர்களைப் பார்த்து அமைச்சர்களே மக்களிடையே போட்டி ஒன்றின் மூலம் பரிசளிக்க விரும்புகிறேன். ஆகையால் நான் கண்டிராத சாப்பிடாத பழம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் தகுந்த பரிசு கொடுக்கப்படும்.

தவறி நான் கண்ட அல்லது சாப்பிட்ட பழங்களைக் கொண்டு வந்தால் அதனைக் கொண்டு வருபவர் முழுமையாகச் சாப்பிட வேண்டும். இதுதான் தண்டனை என மக்களுக்கு அறிவிக்கும்படி மன்னர் தெரிவித்தார். அதனை அமைச்சர்கள் மக்களுக்கு அறிவித்தார்கள். மக்கள் குறிப்பிட்ட நாளில் மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம், பலாப்பழம் வேறு வேறான பழங்களுடனும் வரிசையில் நின்றார்கள். மன்னர் வந்ததும் முதலாவதாக விளாம்பழம் வைத்திருந்தவரின் முறை வந்தது. அரசர் அதனைச் சாப்பிட்டவராகையால் அவருக்குத் தண்டனையாக விளாம்பழத்தை உடையாது இருவர் பிடிக்க ஒருவர் வாயில் திணித்தார். ஆனால் வாய் கிழிந்து இரத்தம் வடிகிறது. அவனது அவன் சிரித்த வண்ணமே நிற்கின்றான், அரசன் பார்த்தார் என்னடா வாய் கிழிந்து இரத்தம் ஓடுகிறது. அவன் சிரித்த வண்ணம் நிற்கிறான். காரணத்தை வினவத் திணிப்பது நிறுத்தப்பட்டது. மன்னர் அவனைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய் எனக் கேட்டார்.

அதற்கு அவன் மன்னா இந்த விளாம்பழத்துக்கு இவ்வளவு நடக்கிறது. எனக்குப் பின்னால் ஒருவர் பலாப்பழம் வைத்துக் கொண்டிருக்கிறார் அவரின் நிலை பற்றி சிந்திக்கும்போது எனக்குச் சிரிப்பு வருகிறது என்றான். பார்த்தீர்களா தனது வருத்தத்தை உணராது பிறர் வருந்துவதை ரசிப்பவர்களும் உண்டு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

*– தனம்*





# ரவி மீதான நம்பிக்கையில்லா பிரேரணை

## வெற்றி, தோல்வி கண்ட தரப்புக்கள் எவை?

**அரசு இன்று வரிகளை அதிகரித்ததன் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வால் சிரமப்படும் நிலையில் அவர்களது கோபம் நிதி அமைச்சர் மீதும் நல்லாட்சி அரசின் மீதும் திரும்பியுள்ள நிலை யில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன் றில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளமை ரவிகருணாநாயக்கவின் தனிப்பட்ட வெற்றியெனவும் ஐ.தே.கட்சி யின் வெற்றியெனவும் கருதப்படுகிறது.**

சிங்கள மூலம். மவ்பிம
(சந்துன் ஜீவத்த)
தமிழில் - வீ.எஸ்.ரீ

உண்மையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்புலம் என்ன? இதில் வெற்றி யாருக்கு? தோல்வியுற்ற தரப்பினர் யார்? இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த மரண விசாரணை நடத்தப்பட வேண்டிய வேளை இது? ஐ.தே.க ஒரு புறமும், மறுபுறம் கூட்டு எதிரணியும் பிறிதொரு புறத்தில் சுதந்திரக்கட்சியின் கீழ் இயங்கும் மைத்திரிபால தரப்பினரும் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் தமக்கே வெற்றி கிட்டியிருப்பதாகக் கூறிக் கொள்கின்றனர்.

**வெற்றி தோல்வி யாருக்கு?**

உண்மையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வெற்றி தோல்விக்குரியவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதனை மேலெழுந்தவாரியாகப் பார்க்காமல் உள்நுழைந்து பார்த்தாக வேண்டும்.

அரசு இன்று வரிகளை அதிகரித்ததன் மூலம் நாட்டு மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வால் சிரமப்படும் நிலையில் அவர்களது கோபம் நிதி அமைச்சர் மீதும் நல்லாட்சி அரசின் மீதும் திரும்பியுள்ள நிலையில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளமை ரவி கருணாநாயக்கவின் தனிப்பட்ட வெற்றியெனவும் ஐ.தே.கட்சியின் வெற்றியெனவும் கருதப்படுகிறது. இதனை இந்த விடயத்தில் முதலாவது காரணமாகக் கொள்ளலாம்.

இதில் இரண்டாவது காரணமாகக் கொள்ளத்தக்கது சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால அணியைச் சோர்ந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களது வர்க்குகளினாலேயே தாம் தேர்தலில் வெற்றி பெற முடிந்ததென்பதை உணர்ந்து கொண்டிருந்தும் ஐ.தே.கட்சிக்காரரான ரவி கருணநாயக்கவுக்கு ஆதரவளித்து அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்தமையாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் எந்தவொரு அமைச்சரும் தமது கட்சியைச்சேர்ந்தஉறுப்பினர்களது ஆதரவின் மூலமாகவேயன்றி பிறிதொருகட்சியைச்சேர்ந்தநாடாளுமன்ற உறுப்பினர்களது மற்றும் அமைச்சர்களது ஆதரவுடன் தமக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத்தோற்கடித்ததில்லை. இதற்கு இருவேறு தரப்புக்களைச் சேர்ந்த ஜனாதிபதியும் பிரதமரும் பக்கபலமாக முன்னின்று செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்று.

**கூட்டு எதிரணிக்கும் சாதகம்**

இந்த வெற்றி நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு மட்டுமே சொந்தமானதொன்றல்ல. கூட்டு எதிரணிக்குக் கூட இதுவோர் சாதக பயன்தரும் விடயமாகவே அமைந்தது. உண்மையில் ரவிக்கு எதிராக 51 வாக்குகள் பதிவாகியிருந்தன. அதனை ஒரு வெற்றியாக எவ்வாறு கொள்ள இயலும்? உண்மையில் நல்லாட்சி அரசு பதவியேற்ற நாள் முதல் நாடாளுமன்றில் மூன்றில் இருமடங்குபெரும்பான்மைப்பலம் அரசுக்கு வாய்த்திருந்தது. அந்த வகையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அரசுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இருமடங்கு பெரும்பான்மைப் பலம் கிடையாதென விமர்சிப்பதற்கு கூட்டு எதிராணிக்கு வாய்ப்புக் கிட்டியமை குறிப்பிட்டுக் கூறப்படக் கூடியதொன்று. கூட்டு எதிராணிக்கு ஐ.தே.கட்சியுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதான குற்றச்சாட்டும் இதன் மூலம் பெறுமதியற்றுப் போகின்றது. அவ்விதம் இருந்திருந்தால் அவர்கள் ரவிக்கு எதிராக வாக்களித்திருந்திருக்கமாட்டார்கள். ரவிக்குச் சார்பாக வாக்களித்தவர்கள் ரணிலின் அரசில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் மைத்திரிபால தரப்பினராவார். அந்த வகையில் ஐ.தே.கட்சிக்கு எதிரான தரப்பினர்கள் யார், ஐ.தே.கட்சியுடன் தொடர்புகளைப் பேணியோர் யார் என்பதை நாட்டின் கிராமப்புறச் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களால் இனம் கண்டு கொள்ள வர்ய்ப்பை அளித்தது இந்த நம்பிக்கையில்லாப்பிரேரணையே. குறித்த இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்ததன் மூலம் நாடாளுமன்றத்தில் உண்மையான எதிரணியினர் எவர் என்பதனை நாட்டு மக்களுக்கு கூட்டு எதிரணியினர் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதேவேளை மற்றொரு புறத்தில் குறித்த பிரேரணைக்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது புறக்கணித்ததன் மூலம் எதிர்க்கட்சித் தலைமையை வகிக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு திருட்டுத்தனமாக ரவி கருணாநாயக்கவுக்கு ஆதரவை வழங்கியுள்ளது.

**ஜே.வி.பியை இழுப்பதில் வெற்றி**

கூட்டு எதிரணி தாம் முன் வைத்த இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் ஜே. வி. பியினரை அவர்கள் ஆதரவளித்து உருவாக்கிய இந்த அரசுக்கு எதிராக வாக்களிக்க வைப்பிக்கும் சூழலை உருவாக்கியதன் மூலம் மற்றுமொரு வெற்றியை ஈட்டியுள்ளதெனலாம். ராஜபக்சமார் திருடர்கள் எனக் கூறிக் கூறி விமர்சித்து வந்த ஜே.வி.பியினர், கடைசியில் ராஜபக்சமார் தரப்பினர் தலைமை தாங்கும் பொது எதிரணி முன்வைத்த, நல்லாட்சி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க நேர்ந்தமை விதியின் விளையாட்டு எனக் கொள்ளத்தக்கது.

அந்த வகையில் நோக்கும் போது குறித்த இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணத்தை ரவி கருணாநாயக்கவாலும், கூட்டு எதிரணியாலுமே கைப்பற்ற முடிந்துள்ளது. வெற்றிக் கிண்ணத்தை இழக்க நேர்ந்த தரப்பினர்களாக குறிப்பிடப்பட வேண்டியவர்கள் சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால ஆதரவு தரப்பினரும், ஜே.வி.பியினருமே.

# இலங்கைக்கும் சிக்கல் தரும் பிரிட்டன் விலகல்

ஐரோப்பிய யூனியனிலிருந்து விலக பிரிட்டன் வாக்களித்ததையடுத்து, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான ஐரோப்பாவின் பெருங்கனவு நொறுங்கியதாக அதிகாரிகளும், நிபுணர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே அகதிகள் நெருக்கடி மற்றும் பொருளாதார மந்த நிலைமைகளை எதிர்கொண்டு வரும் ஐரோப்பிய யூனியனிலிருந்து மிகப் பெரிய உறுப்பினரான பிரிட்டன் வெளியேறுவதையடுத்து மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

தற்போது முக்கிய விவகாரத்தில் மக்கள் தீர்ப்பை பிரிட்டன் நாடியதையடுத்து மற்ற நாடுகளும் ஐரோப்பிய யூனியனில் இருப்பதா வேண்டாமா என்ற மக்கள் தீர்ப்பு வழிமுறையைக் கடைப்பிடிக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதனால் 60 ஆண்டுகால யூனியன் சிதிலமடையலாம் என்ற கவலையும் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியன் தலைவர் டோனல்ட் டஸ்க் ஏற்கனவே எச்சரித்த போது பிரிட்டன் வெளியேறினால், ஐரோப்பிய யூனியன் சிதிலமடைவது மட்டுமல்ல; மேற்கத்தேய அரசியல் நாகரிகமே சிதிலமடைந்து விடும் என்று கூறியிருந்தார். ஆனால் அது அத்தோடு நின்றுவிடாது. ஏனைய நாடுகளுக்கும் நெருக்கடியையே ஏற்படுத்தும். இலங்கையைப் பெறுத்தவரை ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியில் 40 சதவீதம் பிரிட்டனையே சென்றடைகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் வரிச் சலுகை கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். அத்தோடு இலங்கை வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்ளலாம்.

**மிகப்பெரிய அடி**

ஐரோப்பிய யூனியன்: சிட்டிசன் கைடு என்பதன் ஆசிரியரான பிரிட்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கிறிஸ் பிக்கெர்டன் கூறும்போது, பிரிட்டன் வெளியேறும் முடிவு ஒரு பெரிய அடிதான், ஆனால் இதனால் அனைத்தும் முடிந்து விட்டது என்று கருத இடமில்லை. ஐரோப்பிய அரசியல் வாழ்க்கையில் ஐரோப்பிய யூனியன் பங்காற்றிய விதம் அபாரமானது, அதனை தற்போது பிரிட்டன் இழக்கவுள்ளது.

## தோல்வியடைந்தவர்கள்:

**டேவிட் கமரூன்:**

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நீடிப்பதற்கான தீவிர ஆதரவாளர். வாக்கெடுப்பில் வெளியேற சாதகமாக வாக்குகள் விழுந்தால் கமரூன் நீடிக்கமாட்டார் என்பது முன்பே கணிக்கப்பட்டதாகும். ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகினால் ஏற்படும் பொருளாதார இடர்ப்பாடுகளை ,கமரூன் சுட்டிக்காட்டி வந்தார். இந்தநிலையில், தனது விருப்பத்துக்கு விரோதமாக வாக்குகள் பிரிட்டன் வெளியேற ஆதரவாக விழுந்ததால் பிரதமர் பதவியி லிருந்து விலக அவர் முடிவெடுத்துள்ளார். இந்தநிலையில் பிரெக்ஸிட் ஆதரவு பரப்புரையாளர்கள் 84 பேர். கமரூன் பதவியில் நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலக ஆதரவு கிட்டியிருக்கும் செய்தியை அடுத்து பங்குச்சந்தைகள் சரிவு கண்டன. இந்தநிலையில் கமரூன் பதவியில் நீடித்தால் மட்டுமே இந்தநிலைமைகள் சீரடையும் என்று பலரும் கருதுகின்றனர்.



**ஜார்ஜ் ஆஸ்பர்ன்:**

டேவிட் கமரூனின் தனிப்பட்ட மற்றும் அரசியல் கூட்டாளியாவார் ஜார்ஜ் ஆஸ்பர்ன். பிரெக்ஸிட் விவகாரத்தினால் ஏற்படும் பொருளாதார நசிவுகள் குறித்து எச்சரித்தபடியே இருந்தார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கு ஆதரவாக பேசுபவர்கள் பொருளாதார அறிவற்றவர்கள் என்று இவர் சாடினார். இதனால் கட்சியில் பல நண்பர்களையும் அவர் இழந்தார்.

**ஜெரெமி கோர்பின்:**

முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் தலைவராவார், இவர் ஐரோப்பிய யூனியனில் நீடிக்க வேண்டும் என்ற தனது ஆதரவை அரைகுறையாக மேற்கொண்டதற்காக பரவலாக விமர்சிக்கப்பட்டவர். பிரெக்ஸிட்டுக்கு ஆதரவாக வாக்களிக்க தொழிலாளர் கட்சியினர் எடுத்த முடிவுக்காக ஜெரெமி கோபின் மீது நிச்சயம் விமர்சனங்கள் எழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய யூனியன் உடனடியாக மறைந்து விடும் என்று நான் நினைக்கவில்லை. மெதுவாக பின்னடைவு கண்டு வேறொன்றாக உருமாறும் வாய்ப்புள்ளது. இதற்கு அடுத்த கட்ட நடவடிக்கை ஐரோப்பிய யூனியனுக்குக் கடினமானது. பிரெக்ஸிட் நடந்து விடும் என்று அனைவரும் நினைத்ததாக நான் கருதவில்லை என்றார்.

ஐரோப்பிய யூனியனின் சக்தி வாய்ந்த நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் எதிர்காலம் குறித்த இணைந்த திட்டமிடுதலை ஏற்கனவே தொடங்கி விட்டனர். யூரோ பணத்தை பொதுவாக்குவது என்பதை நிபந்தனையாக வைக்காமல், விருப்பத்துக்கு விட்டுவிடுவது என்ற திட்டத்தையும் தற்போது ஐரோப்பிய யூனியன் பரிசீலித்து வருகிறது.



பிரெக்ஸிட் விவகாரத்தினால் பிரிட்டனைப் பின்பற்றி மற்ற நாடுகளும் மக்கள் தீர்ப்பை நாடலாம் என்ற அச்சமே தற்போது ஐரோப்பிய யூனியனை பீடித்துள்ளது.

பிரான்சின் வலதுசாரி தலைவர் மரைன் டி பென் ஏற்கனவே அனைத்து ஐரோப்பிய யூனியன் நாடுகளும் பிரிட்டன் போல் மக்கள் தீர்ப்பை நாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அதே போல் ஐரோப்பிய ஐயம் கொண்ட நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன், ஆகிய நாடுகளும் மக்கள் தீர்ப்புப் பாதையை திறக்க அழைப்பு விடுத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பிரஸ்ஸல்ஸில் உள்ள சர்வதேச உறவுகளுக்கான பிரெஞ்ச் இன்ஸ்டிட்யூட் ஆய்வாளர் விவியன் பெர்டுசாட் கூறும்போது, ஐரோப்பிய யூனியன் நீடிக்கும், ஆனால் பிரிட்டன் இல்லாமல் பலவீனமடையும். நிறுவனங்களை அழிக்க முடியாது, ஆனால் ஒருமைக் குலைவு ஏற்பட வாய்ப்பில்லை, ஆனால் ஐரோப்பிய யூனியனின் தேவை என்பது இனி பலவீனமாகவே தோன்றும்.

(39 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கும் சிக்கல் தரும்.....

(38 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வெற்றி பெற்றவர்கள்:

### போரிஸ் ஜான்சன்:

முன்னாள் லண்டன் மேயரான போரிஸ் ஜான்சன் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறுவது அவசியம் என்று கடுமையாக பரப்புரை மேற்கொண்ட தீவிர பிரிட்டன் எக்சிட் ஆதரவாளர். இவரது ஆளுமையும் வழக்கத்துக்கு மாறான இவரது அரசியல் அணுகுமுறையும் வாக்காளர்களிடம் கடும் செல்வாக்கு செலுத்தியது. சரியில்லாத பல காரணங்களுக்காக இவர் பெயரும், கருத்துகளும் தலைப்புச் செய்திகளில் கவனம் பெற்றன.

ஐரோப்பிய ஒன்றியம் ஒரு சூப்பர்ஸ்டேட்டை உருவாக்க ஹிட்லர் போல் செயல்படுகிறது என்ற இவரது வாதம் பரந்துபட்ட விமர்சனங்களை ஈர்த்தது. கமரூனுக்குப் பதிலாக இவர் பிரதமர் நாற்காலியில் அமர வேண்டும் என்று பலதரப்பினரும் இவரை விரும்பினர். பிரதமர் நாற்காலிதான் இவரது குறி. ஐரோப்பிய ஒன்றிய விவகாரம் அதற்கான ஒரு கருவியே என்று இவரை விமர்சகர்கள் சாடினர்.

### நிஜெல் ஃபராஜ்:

யு.கே.சுதந்திரா கட்சியின் தலைவரான இவர் 25 ஆண்டுகளாக ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று தீவிர பரப்புரை மேற்கொண்டவர். குடியேற்றத்துக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் இவர் மேற்கொண்ட தீவிர பரப்புரைக்கு பெருகிய ஆதரவினால் டேவிட் கமரூன் 3 ஆண்டுகளுக்கு முன்பே வாக்கெடுப்பை நடத்த நெருக்கப்பட்டார்.

### மைக்கேல் கோவ்:

நீதித்துறை அமைச்சரும், இப்போது வரை டேவிட் கமரூனின் நம்பிக்கையாளராக கருதப்படுபவர் மைக்கேல் கோவ். இவர் ஐரோப்பிய யூனியனிலேயே நீடிக்கும் கமரூனின் வாதத்தை எதிர்த்தார்.

பல்வேறு அரசியல் திட்டங்கள் முடிவுகளில் ஐரோப்பிய யூனியனின் செல்வாக்கு இனி கொஞ்சம் கொஞ்சமாக குறையும் என்றார்.

ஐரோப்பிய கொள்கை மையத்தின் சிந்தனையாளர் ஜேனிஸ் இம்மானுலைடிஸ் கூறும்போது, ஐரோப்பிய யூனியன் எதிர்மறையான ஒரு சூழலில் உள்ளது. இந்தக் கதை முடிந்தது. ஆனால் புதியது பிறக்கும். ஆனால் இதுவும் எளிதானதல்ல என்றார்.

பிரெக்ஸிட் விளைவுகளுக்கு எதிரான நடவடிக்கைகள்:

சந்தைகளைக் காப்பாற்றுதல்:

உலகப் பொருளாதார ஸ்திரத்தன்மை தற்போது இடர்ப்பாடு கண்டுள்ளது. ஆகவே ஐரோப்பிய யூனியன் சந்தைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டியுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் 6 முக்கிய நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஹொலன்ட், லக்சம்பர்க் ஆகிய நாடுகள் நாளை (சனிக்கிழமை) பேர்லினில் அவசரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளன.

பிரான்ஸ் அதிபர் ஹொலாந்தே ஜெர்மன் சான்ஸலர் அஞ்சேலா மேர்க்கலைச் சந்திக்கிறார்.

பிரிட்டன் கடைசியாக ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகுவது என்பதை இறுதி முடிவாக எடுத்துவிட்டால் யூனியனிலிருந்து வெளியேறும் நடைமுறைகள் குறைந்தது 2 ஆண்டுகள் நீடிக்கும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

28 நாடுகள் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற ஆதரவாக பிரிட்டன் வாக்களித்ததையடுத்து பல்வேறு தரப்பு வெற்றிகளும், தோல்விகளும் அலசப்பட்டு வருகின்றன.

# யார் சதி

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபையின் தீர்மானத்தைப் புறம் தள்ளி, முதலமைச்சரால் பிரதமருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டமை தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் ஜெயதிலகவினால் கேள்வி எழுப்பப் பட்டது. இதற்கு முதலமைச்சர், "சபையில் அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்படும்போது நான் சபையில் இருக்கவில்லை" என்று முதலில் குறிப்பிட்டார். பின்னர், "சபையில் நிறைவேற்றப்பட்டது முன்மொழிவுதான் தீர்மானம் இல்லை" என்று பதிலளித்தார். இறுதியாக இன்னொரு வியாக்கியானமும் கொடுத்தார்.

அதாவது, நாம் பொருத்தமானதைப் பேசித்தான் செய்யவேண்டும். வடக்கு அமைச்சர்களுக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டுக்கள் வடமாகாண சபையில் முன்வைக்கப்படுகிறது, அதற்காக அவர்கள் மோசடி செய்தார்கள் என்று கூற முடியாது. பேசி, விசாரித்துத்தான் அதனைக் கூற முடியும். அதுபோல் இந்த விடயத்தையும் பேசித்தான் பொருத்தமான இடத்தை வழங்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

### இடமாற்றம்

முதலமைச்சர் இவ்வாறு பதிலளித்து முடிய அமைச்சர் ரிசாட் பதியுதீன், இந்தத் திட்டத்துக்கு இங்கு காணி வழங்கவில்லையாயின் நான் மன்னாருக்கு கொண்டு செல்வேன் என்று தெரிவித்திருக்கின்றார். வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் காணி வழங்கச் சம்மதம் தெரிவிக்காத நிலையில், கொழும்பு அரசு திட்டத்தை வேறு மாவட்டத்திற்கு மாற்ற முனைந்திருக்கின்றது.

தற்போது நடைமுறையில் 'பூச்சிய வரவு - செலவுத் திட்டம்' இருக்கின்றது. இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் செலவு செய்து முடிக்காவிடின் ஒதுக்கிய நிதி திறைசேரிக்குச் சென்றுவிடும். மீண்டும் அந்தத் திட்டத்தை தொடர அடுத்த ஆண்டுக்கு நிதி மீளவும் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

வடக்கு மாகாண சபை பொருத்தமான காணியை வழங்காவிட்டால் வேறு இடத்திற்கு இந்தத் திட்டம் கொண்டு செல்லப்படும் என்று ஏலவே எச்சரித்து வந்த கொழும்பு அரசு, இந்தத் திட்டத்துக்கு வவுனியாவில் காணி வழங்கப் படாததால் அநுராதபுரத்துக்கு மாற்ற முற்பட்டது.

### முதலமைச்சர் எதிர்ப்பு

கொழும்பு அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர், "வவுனியாவில் இதற்கு ஐந்து இடங்களை அடையாளம் கண்டோம். அவற்றில் எது சிறந்தது என்று நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்துக் கேட்டோம். தாண்டிக் குளத்திலும் மற்றைய மூன்று இடங்களிலும் அமைப்பது கூடாது என்றனர். ஓமந்தையில் அமைப்பதே சிறந்தது என்றார்கள்.

தாண்டிக் குளத்தில் அமைத்தால் எமது விவசாய கல்லூரியும் விவசாயப் பண்ணையும் பாதிக்கப்படும். ஓமந்தையில் நிறுவுமாறு கேட்டிருந்தேன். அதன் பின் நான் பங்குபற்றாமல் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரிசாட் பதியுதீன் தாண்டிக் குளத்தில் நிறுவ வேண்டும் என்று கூறி முடிவு எடுக்க வைத்தார். இந்தப் பிரச்சினையைத் தொடக்கி விட்டவரே அவர் தான்.

பிரச்சினையாகியவுடன் நான் அமைச்சர் ஹரிசனைப் போய் நேரில் சந்தித்தேன். ஓமந்தை தூரமாய்ப் போய்விட்டது. வவுனியா நகரத்தினுள் ஒரு இடந்தர வேண்டும் என்று கேட்டார். மாங்குளத்தில் அமைப்பதே சிறந்தது. அப்படி இல்லை என்றால் வவுனியாவின் வடக்கில் இருக்கும் ஓமந்தையே சிறந்தது என்று கூறிப்பார்த்தேன்.

நகரத்தினுள் இடந் தாருங்கள் என்று விடாப்பிடியாகக் கேட்டார். எனவே ஒரு வாரத்தினுள் நான் அவர் கேட்டவாறு ஏ 9 பாதையில் பஸ் நிலையத்திற்குப் பின்புறமாக மதவுவைத்த குளத்தில் ஐந்து ஏக்கர் காணியை அடையாளம் காட்டினேன். ரிசாட் பதியுதீன் அமைச்சராக இருந்த காலத்தில் அவரின் கோரிக்கைக்கு அமைய ஒரு நிறுவனத்துக்குக் குத்தகைக்கு விடப்பட்ட காணி அது. நான் விசாரித்துப் பார்த்து அப்படியல்ல, குத்தகைக்கு எடுப்பதாக இருந்த நிறுவனம் கூறப்பட்ட பூர்வாங்க நடவடிக்கைகளில் இறங்காமையால் இரண்டு வருடங்கள் சென்ற நிலையில் காணியைத் திரும்பப் பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை அவருக்கு எடுத்துரைத்தேன். இது பற்றிய காணி ஆணையாளரின் கடிதமும் கையளிக்கப்பட்டது. ரிசாட் என்னைச் சந்தித்து அவ்விடம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். எந்தவித குத்தகையும் கைச்சாத்திடப்படவில்லை என்று கூறினேன். அவர் ஏற்கவில்லை. நிபுணர்கள்கூடாது என்று கூறியிருப்பினும் கட்டாயத்தின் பேரில் வேண்டுமானால் தாண்டிக் குளத்தில் அமையுங்கள் என்று குறிப்பிட்டார்.

### நிபுணர் குழு யார் ?

இந்த விடயம் தொடர்பில் ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட்டதாக முதலமைச்சர் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார். ஆனால் அந்த நிபுணர்கள் யார் ? யாரால் நியமிக்கப்பட்டனர் என்பது தெரியாது என்று மாகாண சபை உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றனர். அத்துடன் அவ்வாறு நிபுணர் குழு நியமித்து அவர்கள் அறிக்கை சமர்பித்திருந்தால் அந்த அறிக்கை தங்களுக்கும் தரப்படவில்லை என்கின்றனர்.

இதற்கு மேலாகத் தான் பங்குபற்றாத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவ எடுக்கப்பட்டதாக முதலமைச்சர் சொல்கின்றார். முதலமைச்சரின் சம்மதத்துடன்தான் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கூட்டப்படுகின்றது. அதில் பங்கேற்காமல் விட்டது யார் தவறு? அந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் தனது பிரதிநிதியாக கல்வி அமைச்சரை அனுப்பினார். இந்த நிலையில் தான் பங்கேற்காத கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை ஏற்க முடியாது என்று சொல்வது எவ்வகையில் நியாயம் ?

வடக்கு மாகாண சபை அமர்வில் கலந்துகொள்ளும் முதலமைச்சர் மதியத்துடன் புறப்பட்டுச் சென்று விடுவார். இதன் பின்னரும் சபை அமர்வுகள் நடைபெறும். அப்படி நடைபெறும் அமர்வுகளில் எடுக்கப்படும் தீர்மானங்கள், தான் இல்லாமல் எடுத்ததால் அவை செல்லுபடியாகாது என்று முதலமைச்சர் சொல்வது சரியானதா? இப்படிப் பலதும் பத்துமான கேள்விகளை அவரைப் பார்த்துக் கேட்கிறார்கள் அவரது கட்சிக் காரர்களே.

### முதலமைச்சரே முடிக்கவேண்டும்

கொழும்பு அரசின் எச்சரிக்கையை உதாசீனம் செய்தவர் முதலமைச்சர். பொருத்தமான காணி தராவிடின் வேறு இடத்திற்கு திட்டம் செல்லும் என்று திரும்பத் திரும்ப கொழும்பு அரசு சொல்லியும் அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை. வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றிய பின்பும் அதற்கு மாறாகச் செயற்பட்டமை தான் கொழும்பு அரசு சதித் திட்டத்தை வகுத்துச் செயற்பட ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்போது ஜனாதிபதி கடைசி வாய்ப்பு வழங்கியிருக்கின்றார். முதலமைச்சரைப் பிரதமருடன் பேசி முடிவு எட்டுமாறு கூறியிருக்கின்றார்.

வருட இறுதி நெருங்குவதால், இழுபறியாகச் செல்வதற்கு கொழும்பு அரசு அனுமதிக்காது. முதலமைச்சர், வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு இடம் கொடுப்பது பொருத்தமானது. இல்லை யேல் மீளவும் முதல் புள்ளியிலிருந்து சர்ச்சை தொடர்ந்து கொண்டு தான் இருக்கும்.

# அதிகரிக்கும் சிறுவர் சினிமா

சிறுவர்களை மையப்படுத்தும் படங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. வியாபார ரீதியிலான படங்களாக இல்லாமல், சிறுவர்களின் உளவியலைப் பேசும் படங்களாக அமைந்திருப்பது ஆரோக்கியமான மாற்றமாகத் தெரிகிறது. தமிழ் சினிமாவில் பொதுவாக சிறுவர்கள் சினிமா என்றால் அந்தச் சிறுவர்களுக்கு நாயோ, பாம்போ, குரங்கோ நண்பனாக இருக்கும். அல்லது தனது வயதுக்கு மீறிய செயல்களைச் செய்வார்கள். ஆனால் இந்த இலக்கணத்தை உடைத்தது 'பசங்க' படம். பிறகு வெளிவந்த சில படங்கள் தவிர மற்ற அனைத்துமே சிறுவர்களின் உளவியலைப் பேசியது.

'பசங்க 2' தனியார் பாடசாலைகளில் சிறுவர்கள் மனரீதியாக துன்புறுத்தப்படுவது பற்றிக் கூறியது. 'அழகு குட்டிச் செல்லம்' என்ற படம் தனது பெற்றோர்களின் தவறுகளை சிறுவர்களை உணர வைத்தது. 'கத சொல்லப்போறோம்' என்ற படம், சிறுவர் திருட்டின் கொடூரத்தையும், சிறுவர்களின் பெரிய தியாகத்தையும் காட்டியது. 'அம்மா கணக்கு' அம்மாவை எதிரியாகப் பார்க்கும் சிறுவனின் பார்வை மாறுவதை வெளிப்படுத்துகிறது.

தற்போது தயாரிப்பில் உள்ள 'கொளஞ்சி' என்ற படம் அப்பாவுக்கும், மகனுக்குமான உறவை வேறு கோணத்தில் சொல்லவுள்ளது. சமுத்திரக்கனியின் 'அப்பா' படம் ஒவ்வொரு குழந்தையும் தனது தந்தையை எப்படிப் பார்க்கிறது என்பதை சொல்லவுள்ளது. இதே போல இன்னும் பெயரிடப்படாத சிறுவர்கள் பற்றிய படங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன தமிழ் சினிமாவில்.








## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 9 | 3 | | | | 6 | 2 |
| | | 3 | 8 | | | | | |
| | | | | | 5 | 4 | | |
| | 1 | | | 6 | 7 | | 3 | |
| | | 2 | | | | 7 | | |
| | 9 | | 4 | 3 | | | 2 | |
| | | 4 | 1 | | | | | |
| | | | | | 8 | 3 | | |
| 9 | 8 | | | | 3 | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 1 | 9 | 5 | 7 | 4 | 8 | 2 |
| 4 | 9 | 8 | 2 | 1 | 6 | 3 | 7 | 5 |
| 7 | 5 | 2 | 3 | 8 | 4 | 1 | 9 | 6 |
| 9 | 7 | 5 | 4 | 2 | 3 | 8 | 6 | 1 |
| 8 | 2 | 4 | 1 | 6 | 5 | 7 | 3 | 9 |
| 1 | 6 | 3 | 8 | 7 | 9 | 5 | 2 | 4 |
| 2 | 8 | 7 | 6 | 4 | 1 | 9 | 5 | 3 |
| 5 | 1 | 9 | 7 | 3 | 2 | 6 | 4 | 8 |
| 3 | 4 | 6 | 5 | 9 | 8 | 2 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரை யிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

கிரியேட்டிவ் ராஜ
ஏமாற்றங்கள் பரந்து விரிந்த உலகத்தில் எவ்வாறு உன்னை தயார்படுத்தி வாழ்வை நிலைப்படுத்தி கொள்கிறாய் என்பதே போராட்டம்
#நிதர்சனம்

படித்ததில் பிடித்தது

**மனைவி:** என்னங்க நான் செத்துப் போயிட்டா... என்ன பண்ணுவீங்க?

**கணவன்:** எனக்கு பைத்தியமே பிடித்துவிடும்.

**மனைவி:** நான் செத்தா இன்னொரு கல்யாணம் பண்ணுவீங்களா?

**கணவன்:** பைத்தியம் என்ன வேணுமென்றாலும் பண்ணும்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்மறையாக செயல்பட்டவர் விலகிச் செல்வர். தொழிலில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**இடபம்:** அக்கறையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் இருந்த இடையூறு விலகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். அரசியல்வாதிகளுக்கு சமரசப் பேச்சால் நல்ல தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** அறிமுகமில்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். சுமாரான அளவில் இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர நோக்கில் செயல்படுவர்.

**கடகம்:** பணிகளில் முழு ஈடுபாடு அவசியம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். மிதமான வருமானம் கிடைக்கும். உடல் நலத்துக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** உங்களின் திறமை மிகு பணி பாராட்டு பெறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**துலாம்:** சுய இலாபத்துக்காக, மற்றவரின் உதவியை ஏற்க வேண்டாம். அதிக உழைப்பால், தொழிலில் உற்பத்தி விற்பனை சீராகும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. உடல்நலனில் அக்கறை தேவை.

**விருச்சிகம்:** நண்பரின் செயலை குறை சொல்ல நேரிடலாம். தொழிலில் இலக்கை அடைய கால தாமதம் உண்டாகும். இலாபம் சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் வீட்டுச் செலவுக்குப் பயன்படும். தாயின் பேச்சு ஆறுதல் அளிக்கும்.

**தனுசு:** நண்பர்களிடம், உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மகரம்:** சிலரது பேச்சு, உங்களை சங்கடப்படுத்தலாம். தொழிலில் வருகிற இடையூறை தாமதமின்றி சரி செய்யவும். இலாபம் சுமார். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம். உடல்நலனில் அக்கறை தேவை.

**கும்பம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் இடுவீர்கள். இலாபம் உயரும். உறவினரின் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும்.

**மீனம்:** மனக்கஷ்டத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு தேவைப்படும். மிதமான வருமானம் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்கள் ஆதரவாக நடந்து கொள்வர்.

# சமையல் அறை குறிப்புக்கள்

* தோல் நீக்கிய வேர்க்கொம்பை, எலுமிச்சைச் சாறு அல்லது வெந்நீரில் கலந்து, தலையில் பற்றுப் போட, தலை வலி குறையும். ஒற்றைத் தலைவலி, அலுப்பு, வெயில், மன இறுக்கம் போன்ற காரணங்களால் ஏற்படும் தலைவலிக்கு, மஞ்சளை அடுப்பில் சுட்டு, அந்த புகையைச் சுவாசிக்கலாம்.

* தொண்டையில் சதை வளர்ந்ததால் வரும் வலி, தொண்டை கட்டிக்கொண்டதால் ஏற்படும் வலிகளுக்கு, உள்ளிச் சாற்றை எடுத்து, தேன் கலந்து, தொண்டையின் உள்பகுதியில் தடவி, ஒரு மணி நேரம் கழித்து, வெந்நீர் அருந்தலாம். இதனால், தொண்டையில் ஏற்பட்ட தொற்றுக் குறைந்து, வலி நீங்கும். தினமும் மூன்று வேளையும் கல் உப்பு சேர்த்து, வாய் கொப்பளிக்கலாம்.

* குழந்தைகள் மலம் கழிக்காமல், வயிற்று வலியுடன் அழுதுகொண்டே இருந்தால், காய்ந்த கறுப்புத் திராட்சை, அத்திப்பழத்தை நீரில் போட்டுக் கொதிக்கவைத்து, நன்றாக மசிந்ததும் வடிகட்டி, அந்தச் சாற்றை ஐந்து முதல் 10 மி.லி அளவில் குடிக்கக்கொடுத்தால், மலச்சிக்கல் சரியாகும். தினமும் ஒரு செவ்வாழைப் பழத்தைச் சாப்பிட்டு வர பெரியவர்களுக்கு மலச்சிக்கல் நீங்கும்.



* சளியை எப்போதுமே வெளியேற்ற வேண்டும். 50 கிராம் ஆடாதொடை இலையை, அரை லீற்றர் தண்ணீரில் பனங்கற்கண்டு சேர்த்து, பாகுப் பதத்துக்கு வந்ததும், வடிகட்டிச்சாப்பிடலாம். 50 கிராம் ஆடாதொடை இலையுடன், நான்கு மிளகு சேர்த்து, ஒரு லீற்றர் நீரில் கொதிக்க வைத்து, கால் பங்காக வற்றியதும் அருந்தலாம்.

* குடற்புண், வயிற்று வலி, எரிச்சல் ஏற்படுவதைத் தடுக்க, சங்கை உரசும் போது வரும் மாவில், இளநீர் அல்லது தேங்காய்ப் பால் அல்லது பசும்பால் சேர்த்து, 20 மி.லி அளவில் குடித்துவர, வலி குறைந்து புண்களும் ஆறும்.



## வாழைப்பூ கூட்டு

### தேவையானவை


நறுக்கிய வாழைப்பூ – 2 கப்
பயத்தம் பருப்பு – அரை கப்
வெங்காயம் – 1
பச்சை மிளகாய் – 2
மஞ்சள்த் தூள் – கால் கரண்டி
தேங்காய்த் துருவல் – கால் கப்
சீரகம் – அரைக் கரண்டி
கறிவேப்பிலை ,உப்பு ,எண்ணெய் – தேவைக்கேற்ப
கடுகு – கால் கரண்டி

### செய்முறை

பயத்தம் பருப்பை பூப்போல வேக வைக்கவும். தேங்காய், சீரகத்தை நைசாக அரைக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு, கடுகு தாளித்து, கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் இவற்றைத் தாளிக்கவும். பிறகு அதில் வாழைப்பூ, மஞ்சள்த் தூள் சேர்த்து வதக்க வும். வெந்ததும் பருப்பு சேர்க்கவும். உப் பும், அரைத்த விழுதும் சேர்த்து, அளவாகத் தண்ணீர் விட்டுக் கொதித்ததும் இறக்கி, கறிவேப்பிலை தூவிப் பரிமாறவும்.

## நாளை

ஆனி-13
திங்கட்கிழமை - 27.06.2016
திதி: ஸப்தமி மு.ப.11.12 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.05.43 வரை
ராகுகாலம்: 07.25-08.55 வரை
சுபநேரம்: 11.55-01.25 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 | 50 | 120 | – | 60 |
| கத்தரி | 80 | 70 | 80 | 100 | 60 | 200 | – | 40 |
| கரட் | 200 | 300 | 160–300 | 240 | 120 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 80 | 60 | 80 | – | 50 |
| பயிற்றை | 150 | 130 | 150 | 120 | 140 | 120 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 150 | 240 | 200 | 200 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 200 | 110 | 120 | 160 | 100 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 100 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 150 | 180 | 140 | 200 | – | 160 |
| பூசணி | 70 | 80 | 80 | 120 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 240 | 220 | 200 | 140 | 160 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 | 60 | 80 | – | 40 |
| கீரை | 15 | 30 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 45 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 800 | 600 | 600 | 800 | 600 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 100 | 70 | 120 | 100 | 120 | – | 100 |
| கோவா | 180 | 140 | 200 | 240 | 140 | 220 | – | 140 |
| வெண்டி | 120 | 100 | 120 | 120 | 100 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 140 | 180 | 200 | 220 | 240 | – | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 140–300 | 240 | 180 | 250 | – | 150 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 35–40 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 100 | 100 | 120 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 240 | 200 | 150 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 280 | 240 | 240 | 300–400 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 800 | 800 | 600 | 300 | – | 350 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 900 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 500 | 700 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 450 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 450 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 200 | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 300 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 250 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 300 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 280 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | 300 | – |

# நூறு வருடங்கள் பழமை வாய்ந்த கிண்ணத்தை ஏந்தப்போவது யார்?

கோப்பா அமெரிக்காத் தொடர் அதன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. பிரேஸில், கொலம்பியா போன்ற அணிகளெல்லாம் வெளியேற்றப்பட்டு சிலி, ஆர்ஜென்ரீனா என்னும் இரு தெரிவுகளே இன்று எம்முன் எஞ்சியிருக்கின்றன. இறுதிப்போட்டி இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

**பழிதீர்க்கும் படலம்**

100 வருடங்கள் பழமையைக் கொண்ட கோப்பா அமெரிக்காத் தொடரின் இறுதிப் போட்டி என்பதைத் தவிர்த்து வேறுசில சுவாரஸ்யங்களையும் இந்த ஆட்டம் கொண்டுள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற கோப்பா அமெரிக்காத் தொடரின் இறுதிப்போட்டியிலும் இந்த இரு அணிகளுமே மோதியிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை சென்ற அந்த ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் சிலி கிண்ணத்தை வென்றது. எனவே கடந்த வருடத்தில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்க ஆர்ஜென்ரீனா முனைப்புக் காட்டும். சிலி நடப்புச் சம்பியன் என்ற தனது அந்தஸ்தைத் தக்கவைக்க போராடும் என்பதால் ஆட்டத்தில் அனல் பறக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**மெஸ்ஸி - வர்காஸ்**

ஆர்ஜென்ரீனாவைப் பொறுத்தமட்டில் அதன் பலமாக மெஸ்ஸி உள்ளார். ஆனால் மெஸ்ஸி தன்னிகரற்ற ஆதிக்கம் செலுத்துவார் என்று எண்ணிவிட முடியாது. மெஸ்ஸியைச் சமாளிக்கக்கூடிய விதத்தில் சிலியில் வர்காஸ் உள்ளார். ஆர்ஜென்ரீனா எதிர் சிலி என்பதைவிடுத்து மெஸ்ஸி எதிர் வர்காஸ் என்று சொல்லக்கூடிய வகையில் ஆட்டம் நகரவும் வாய்ப்புக்கள் உள்ளன.

**மரியா - விடால்**

ஆர்ஜென்ரீனாவின் மற்றொரு பலமாக, அந்த அணியில் துடிப்புமிக்க வீரராக வர்ணிக்கப்படும் மரியா உள்ளார். மெஸ்ஸி, மரியா கூட்டணி அபாயகரமானது என்பதில் சந்தேகமில்லையாயினும் மரியாவைச் சமாளிக்கக் கூடிய வகையில் சிலியில் விடால் உள்ளார். வர்காஸ், விடால் கூட்டணிக்கு பந்துப் பரிமாற்றங்கள் சிறப்பாக அமைந்துவிட்டதென்றால் ஆர்ஜென்ரீனாவின் தலை உருளும்.





**ஏமாற்றங்களும் எச்சரிக்கைகளும்**

ஆர்ஜென்ரீனா அணி கிண்ணம் ஒன்றைக் கையிலேந்தி பல வருடங்கள் ஆகிவிட்டது. அரையிறுதி, இறுதி வரை சென்று வெறுங்கையுடன் அந்த அணி திரும்புவது கடந்த பல வருடங்களாக வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது. இதனால் நடப்பு வருட கோப்பா அமெரிக்காத் தொடர் ஆர்ஜென்ரீனாவுக்கு கோலாகலமாக அமையவேண்டும் என்ற ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. மட்டுமல்லாமல் ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் வீரரான மரடோன கிண்ணம் இல்லாமல் நாடு திரும்ப வேண்டாம் என்று வீரர்களுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். இவையெல்லாம் ஒன்று சேர்ந்து அந்த அணியின் மீது பெரும் அழுத்தமாக வந்து குவியவும் வாய்ப்புள்ளது. சிலியைப் பொறுத்தமட்டில் அழுத்தம் என்பது இல்லை. சுதந்திரமாகச் செயற்படக் கூடிய சூழ்நிலை அந்த அணிக்கு உள்ளது.

எதுஎப்படியோ விடிந்தால் தெரிந்துவிடும் நூறு வருடபாரம்பரியங்களைக் கொண்ட கோப்பா அமெரிக்காத் தொடரின் சம்பியன் யார் என்பது.




## கழகங்களில் ஹீரோ தேசியத்தில் ஜீரோ

கழகங்களில் அடித்து நொறுக்கும் சில நட்சத்திர வீரர்கள் ஐரோப்பிய கால்பந்துத் தொடரில் ஒரு கோல் கூட அடிக்காமல் இருப்பது ரசிகர்களுக்கு பெரிய ஏமாற்றமாக உள்ளது.

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடப்பு வருடத்துக்கான ஐரோப்பிய கால்பந்து தொடர் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. 2012ஆம் ஆண்டை விட இந்த தொடரில் கூடுதலாக 8 அணிகள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் கோல் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. சிறிய அணிகள் கூட பெரிய அணிகளுக்கு அதிர்ச்சி கொடுக்கும் வண்ணம் விளையாடி வருகின்றன. போர்த்துக்கலை ஐஸ்லாந்து சமன் செய்தமை, பிரான்ஸை சுவிற்சர்லாந்து சமன்செய்தமை ஆகிய வற்றை சிறந்த எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இவ்வாறு கத்துக்குட்டிகள் சவால் தருவதற்கு பிரதான காரணம் நட்சத்திர வீரர்களாக வலம் வருபவர்களின் செயற்பாடு அதிருப்தி தரும் விதமாக இருக்கின்றமையே. இதில் போர்த்துக்கலின் ரொனால்டோதான் பெரிதும் ஏமாற்றம் தந்தவராக இருக்கிறார்.

போர்த்துக்கல் களமிறங்கிய ஆஸ்திரிய, ஐஸ்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் ரொனால்டோ ஒரு கோலைத் தானும் பதிவுசெய்யவில்லை. இதனால் அந்த அணியின் சுப்பர் 16 சுற்றுக்கான வாய்ப்பு அந்தரத்தில் தொங்கியது. ஆனால் ஹங்கேரிக்கு எதிராக இரு கோல்களை அவர் பதிவுசெய்ததன் மூலம் போர்த்துக்கல் தட்டுத்தடுமாறி சுப்பர் 16 சுற்றுக்கு முன்னேறியது.

அதேபோல் ஸ்வீடன் வீரர் இப்ராகிமோவிச் ஒருகோலைத் தானும் பதிவுசெய்யவில்லை. இவரது மோச மான செயல்பாட்டால் அந்த அணி சுப்பர் 16 சுற்றை இழந்து வெளியேற்றப்பட்டது.

இங்கிலாந்து நட்சத்திரம் வெய்ன் ரூனி இரண்டு ஆட்டங்கள் முடிந்துவிட்ட போதிலும் இன்னும் ஒரு கோலைக் கூடப் போடவில்லை. உலக சம்பியனான ஜேர்மனி அணிக்கு மரிய கோட்சாவும் சொதப்பித் தள்ளுகிறார். இந்த ஒட்டுமொத்த நட்சத்திர வீரர்களும் இந்த சீசனில் தங்களது கழக அணிக்காக 203 கோல்களை அடித்துள்ளனர். ஆனால் ஐரோப்பிய தொடரில் ஓரிரு கோல்களை மட்டும் பதிவு செய்தமை பெரிய ஏமாற்றமே.

பிரகாஸ்



## பக்கச்சார்பான முறையில் மக்கலத்தின் கனவு அணி

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் தாம் சிறந்த வீரர்களாகக் கருதும் வீரர்களை வைத்து கனவு அணிகளை அறிவித்து வருகின்றனர். இந்த வரிசையில் தற்போது நியூசிலாந்தின் முன்னாள் தலைவரான மக்கலமும் இணைந்துள்ளார். ஆனால் மக்கலம் அறிவித்த அணி சிறிது பக்கச்சார்பான அணியாகவே கருதப்படுகிறது. அவர் அறிவித்த அணியில் தேசியத்துக்கு முதலிடம் என்ற தொனிப்பொருள் ஒட்டியுள்ளமையை வெளிப்படையாகக் காணமுடிகிறது.

மக்கலம் அறிவித்த அணி துடுப்பாட்ட வரிசையின் படி - கெயில், சச்சின், பொண்டிங், லாரா, ரிச்சட்ஸ், கலிஸ், கில்கிறிஸ்ட், ஜோன்சன், வோர்ண், சவுத்தி, போல்ட் என்றவாறாக அமைந் துள்ளது. இவர்களில் கெயில், சவுத்தி, போல்ட் மூவரினதும் தெரிவு அவசியமற்றதாகவே எண்ணத் தோன்றுகிறது. கெயிலை விட சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை கிரிக்கெட் உலகம் கண்டுள்ளது. ஹைடன், சனத் ஜெயசூரிய, சேவாக் போன்றோரை அந்த இடத்தில் பரிசீலித்துப் பார்த்திருக்கலாம். சவுத்தி, போல்ட் இருவரையும் நியூசிலாந்து வீரர்கள் என்ற அடிப்படையிலேயே மக்கலம் அணியில் சேர்த்துள்ளார். இவர்கள் இருவரையும் விட மெக்ராத், மலிங்க, ஹசில்வூட், ஸ்ராக், ரகுமான், வாஸ், கிலஸ்பி போன்ற வேகப்பந்து வீச்சாளர்களில் எவராவது இருவருக்கு இடம் கொடுத்திருக்கலாம். ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரரான மெக்ராத், பங்களாதேஷின் தற்போதைய வேகப்பந்து வீச்சாளரான ரகுமான் இருவரையும் சேர்த்திருந்தால் இன்னும் சிறப்பாகவும் ஏற்கக்கூடியதாகவும் அமைந்திருக்கும்.

# கண்ணீரின்...

(28 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு அடுத்த நாளும் மாலினி வந்தாள். கையில் ஆப்பிள் ஒரேஞ் நிறைந்த பொதி ஒன்றுடன்.

ஏன் பிள்ளை இதைக் கொண்டந்தனீர்?

அவரது கண்கள் கலங்கின.

ஐயா! நல்லா சாப்பிடுங்க. அப்பதான் காயம் சுக மாகும், சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள். அதன் பின்னர் தினமும் அவர் அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். ஆனால்.. அவள் வரவில்லை.

அன்று அவளுடைய சக மாணவியான சாமந்தி யைக் காணநேர்ந்தது.

பிள்ளை! இப்பிடி ஒருக்கா வாரும்

தன்னட்டை அவளை அழைத்தவர் கேட்டார்.

எங்கை அந்தப் பிள்ளை மாலினியை ஐஞ்சாறு நாள்களாய்க் காணயில்ல?

அவ தன்னுடைய ஊருக்குப் போயிருக்கிறா ஐயா!

பதிலிறுத்தவளை அவர் விடவில்லை. ஏன் பிள்ளை இங்கை படிப்பு நடந்து கொண்டிருக்கேக்க விட்டிட்டு அவ ஊருக்குப் போனவா?

அது ஐயா அவையின்ரை ஊரில பெரிய மண் சரிவாம். அரநாயக்க தான் அவவின்ர சொந்த ஊர். அங்கை அவவின்ரை அம்மாவும் தங்கச்சியும் இருக்கினம். அதுதான் பாத்திட்டு வரப் போயிருக்கிறா!

சாமந்தி!

சக மாணவிகள் அழைக்க அவள் போய்விட்டாள்.

அவரது மனம் இறைவனை வேண்டிக் கொண்டது. கடவுளே ! அந்தப் பிள்ளைக்கு ஒரு துன்பமும் வந்துவிடக்கூடாது வாரம் ஒன்று கழிந்தது. அவரது காயத்தைப் பரிசோதித்த பெரிய மருத்துவர் கூறினார்.

ஐயா! நாளைக்கு நீங்கள் வீட்டுக்குப் போகலாம். கிளினிக்குக்கு கட்டாயம் வரவேணும். என்ன!

ஜெகதீசனுக்கு தனது காயம் மாறியதைப் பற்றியோ, விட்டுக்குப் போவதைப் பற்றியோ எந்தவித உணர்வும் ஏற்படவில்லை.

எண்ணம் எல்லாம் மாலினியைச் சந்திக்காமலேயே போக வேண்டி வரப்போகிறதே என்ற ஏக்கம் தான் மேலோங்கி நின்றது.

பொழுது சாயும் வேளை, சாமந்தி மாலினியையும் கூட்டிக் கொண்டு வந்தாள். ஜெகதீசன் அவளைக் கண்டதும் உற்சாகம் மேலிட்ட வராய் படுக்கையிலிருந்து எழுந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டார்.

மாலினியின் முகத்தை உற்று நோக்கியவருக்கு தூக்கி வாரிப்போட்டது.

கன்னத்தில் குழி விழச் சிரிக்கும் அந்த அழகுமுகம் எங்கே? ஒட்டி உலர்ந்து வற்றிய கன்னமும் குழி விழுந்த கண்களுமாய் எதிரே நிற்கும் இவளா மாலினி...



மாலினி எதுவும் பேசாமல் அவர்முன் வந்து நின்றாள்.

சாமந்தி தான் கூறினாள்.

ஐயா! மாலினியின் அம்மாவும், தங்கச்சியும் மண்சரிவுக்குள்ள அம்பிட்டுப் போச்சினம். அவ சொல்லுறா. நீங்கள் உங்கட வீட்டாக்களை மண்ணுக்கை புதைத்து விட்டு வந்தீங்களாம். தான் அவை புதைந்து போன மண்ணைத்தான் பாத்திட்டு வந்தி ருக்கிறாவாம்

மாலினியின் கண்களிலிருந்து பொலபொலவெனக் கண்ணீர் வடிந்து நிலத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்தது. மனம் நெகிழ்ந்து ஜெகதீசன் விட்ட கண்ணீர் அதே நிலத்தில் விழுந்து சிதறி அதனுடன் சங்கமித்தது.

*யாவும் கற்பனை*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 426

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | 7 | | | ■ |
| 8 | 9 | | ■ | 10 | | ■ | 11 |
| 12 | | ■ | 13 | | | 14 | |
| ■ | 15 | 16 | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | ■ | 21 | 22 | | ■ | |
| | ■ | 23 | | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

— — — — — — — — — — — — — — — —

### இடமிருந்து வலம்

1. இணங்கு
4. இதன் வழியே மழை நீர் பாயும்
6. நோக்குதல்
8. பங்கு
10. அதிக
12. பலம்
13. துணி போன்றவற்றைக் கழுவுதல்
15. காமத்தில் கொடூரம் இழைப்பவன்
17. சேர்
18. தானாகச் சென்று விளக்கில் வீழ்ந்து உயிர்விடும் பூச்சி
19. சகல
20. ஓர் பனி மாதம்
21. குறிப்பிட்டதொன்றுக்கு மேலதிகமாக
23. பல வருடங்களாக

### மேலிருந்து கீழ்

1. உழைத்துப் பெறு
2. யானைக்கு சில வேளைகளில் ஏற்படும் ஒரு வகை கிளர்ச்சி
3. மூன்று
4. பாடமாக்கல்
5. தமது
7. சகோதரிகளின் கணவன்மாரிடையேயான உறவு
9. பொருள்களை பொது மக்கள் பார்வைக்கு வைக்கும் நிகழ்வு
11. வலிமை உடையவன்
13. நீங்குதல்
14. கூறு
16. கிரீடம்
18. விமான ஓட்டி
19. அடைக்கலம்
22. உடம்பின் ஒரு பகுதி

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக் கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 424இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) பிரசவம் (4) சதா (6) மலை (7)அரண் (8) மாதர் (10)அகண்ட (11) தரித்திரம் (13) தரிசு (14) ஆம் (15) அன்பு (16) அலை (17) பரு (18) ராகம் (20) சிவிகை (21)விமானம்

### மேலிருந்து கீழ்

(1) பிரமாதம் (2) சமர்த்தன் (3) வலை (4) சரண் (5) தாண்டவம் (7) அகம் (9) தரி (10) அரசு (12) திரிபுரா (14) ஆலை (15) அருவி (16)அம்மா (17) பசி (19) ரோம்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 424 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

செல்வி ஈ.ரிஷிகேசினி,
தரம் - 11 B
யா/வைத்தீஸ்வரா கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

ப.ஜெபப்பிரியன்,
மெதடிஸ்த தேவாலயம்,
அன்புவழிபுரம், திருகோணமலை.

**3 ஆம் பரிசு**

வே.இராசநாயகம்,
சோறன்பற்று, பளை.

**4 ஆம் பரிசு**

அ.மேரி பிறக்ஸீடா,
இல.13, அண்ணாநகர்
பிரதான வீதி, கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**

திருமதி J.பத்மா,
இல 351/1 கோயில் வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

உதயகுமார் தேனினியன்,
மட்டுவில் நாடு மேற்கு,
நெற்புலவு, பூநகரி.

நகுலன் லக்ஷகி,
காளி கோவிலடி, துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

குணரட்ணம் உமாகாந்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**

**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**

**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**

**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இல.426 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (06.07.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.426இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 10.07.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 424இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகளை நிறுவுங்கள்

## பெல்ஜியம் புலம்பெயர் தமிழ் மக்களிடம் யாழ். ஆயர் வேண்டுகோள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்



யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் முதலாவது வெளி நாட்டுப்பயணம் 2016ஆம் ஆண்டு மே மாதம் பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்காய் அமைந்திருந்தது. மரியன்னை வழி இயேசுவிடம் என்ற விருது வாக்குடன் பணி ஏற்றுள்ள யாழ். ஆயரின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் மரியன்னையின் பதிகளுக்கே அமைந்தமை பற்றி இந்தக்கட்டுரை விளக்குகிறது.

**பனுமாதா ஆசிய யாத்திரீகர்கள் ஒன்றியத்தின் 31ஆவது வருடாந்தப் பெருவிழா**

பி.எக்ஸ். பத்மராஜாவின் ஒழுங்கமைப்பில், நான் ஏழைகளின் கன்னிகை, பனுமாதா ஆசிய யாத்திரிகர்களின் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட 31ஆவது வருடாந்தப் பெருவிழாவுக்கு அழைக்கப்பட்ட யாழ். ஆயர் மே மாதம் 27ஆம் திகதி பெல்ஜியம் மாநகரை வந்தடைந்தார். அன்றைய தினம் கோலாகலமாக வரவேற்கப்பட்ட அவர் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். மே மாதம் 28ஆம் திகதி அன்னை காட்சி கொடுத்த இடத்துக்கு நடை பவனியாகச் சென்று நோயாளர்களை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கை நிறை வேற்றினார். மாலை திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெற்றன. மே மாதம் 29ஆம் திகதி அன்னை காட்சி கொடுத்த இடத்தில் யாழ். ஆயர் ஒப்புக்கொடுத்த திருப்பலியில் தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் வெள்ளையர்களும் திரண்டு வந்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. 29ஆம் திகதி மாலை பிரான்ஸ் ஆன்மிகப் பணியக இயக்குநர் கமலநாதன் அ.ம.தி. அடிகளாரின் அழைப்பின் பேரில் பிரான்ஸ் சாட் மாதா திருப்பதிக்குச் சென்று அங்கு திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இந்த இரண்டு பெயர்போன அன்னையின் பதிகளுக்கு யாழ். ஆயர் மேற்கொண்ட முதல் பயணமும் அங்கு அவர் திருப்பலியில் ஆற்றிய மறை உரைகளும் மக்கள் மத்தியில் விடுத்த வேண்டுகோள்களும் மிக முக்கியத்துவம் பெறுகின்றன.

> “மரியன்னை ஓர் இரக்கம் காட்டும் தாய். எலிசபெத் அம்மாள் உதவி கேட்கும் வரை காத்திராமல் தேவை உணர்ந்து தாமாகவே விரைந்து சென்று உதவியவர். கேட்ட பின்னர் கொடுப்பது பிச்சை. கேட்காமலே கொடுப்பது இரக்கம். இதையே மரியன்னை செய்தார். இதையே நாம் எல்லோரும் செய்ய அழைக்கப்படுகிறோம்.”

**இளைய சமுதாயத்துக்கு வேலை வாய்ப்பை வழங்க யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகளை நிறுவுங்கள்**

பனுமாதா திருத்தலம் நோக்கிய 31ஆவது திருப்பயண வருடாந்த திருவிழாவுக்கு ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் இருந்து வருகை தந்திருந்த பல நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றும் போது யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ்ப்பாணத்தில் வேலையில்லாமல் இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற வகையிலே நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய தொழிற்சாலைகளை யாழில் நிறுவ முன் வாருங்கள் என்று விடுத்த அழைப்பானது அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. யாழ். ஆயரின் இந்த அழைப்பானது உண்மையில் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பமாகவே கருதப்பட வேண்டும். யாழ். மறை மாவட்டத்தைப் பொறுப்பேற்ற பின்னர் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களைச் சந்திக்க தமக்குக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்த அழைப்பை பல சிந்தனைகளை மனதில் வைத்து விடுத்துள்ளார். யாழ். ஆயரை அவரது வெளிநாட்டுப் பயணத்தின் பின்னர் சந்தித்தபோது தமது முதலாவது வெளிநாட்டுப் பயணம் பற்றியும் தாம் விடுத்த அழைப்பின் பின்னணி பற்றியும் விளக்கினார். எல்லோரும் கலாசார சீர்கேடு பற்றியும் வாள் வெட்டுப் பற்றியும் பேசுகிறார்கள். யாரும் அதன் மூலக் கூறு பற்றிச் சிந்திக்கிறார்கள் இல்லை, அதற்கான மாற்றுத் திட்டம் பற்றியே சிந்திக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. அரசியல் தலைவர்களையும் இராஜ தந்திரிகளையும் சந்திக்கும் போதெல்லாம் நாம் இது பற்றியே பேசுகிறோம். அரசியல் நாம் பேசவில்லை. இதையே எமது முதல் வெளிநாட்டுப் பயணத்தின்போதும் எமது முதல் வேண்டுகோளாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் வெளியிட்டோம். அவர்களும் எமது அழைப்பை மகிழ்வுடன் ஏற்று வர வேற்றுள்ளனர். அது பற்றிக் கலந்துரையாடவும் தம் ஆலோசனைகளை வழங்கவும் முன்வந்துள்ளனர்.

**நீங்கள் திரும்பி வரும் போது கட்டடங்களை மட்டுமே காண்பீர்கள்**

“யாழ்ப்பாணம் மிக மோசமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் வேலையில்லாப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையை புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று மீண்டும் இலங்கைக்கு வருபவர்களிடம் நாம் பலமுறை கூறியும் அதனை யாரும் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது வருத்தத்துக்கு உரிய விடயம் ஆகும். பல்கலைக் கழகம் செல்ல முடியாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் கடமை புலம்பெயர் தமிழர்களுக் குரியது என்பதை உறுதியாகத் தெரிவிக்க வேண்டும். அதற்காக நாம் ஆடைத்தொழிச்சாலைகளை நிறுவும்படி சொல்லவில்லை. தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட தொழிற் சாலைகளை நிறுவும்படிதான் சொல்கிறோம். ஏனெனில் யாழ். இளைஞர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த திறமைகள் உள்ளன. இந்தத் திட்டத்துக்கு யாராவது முன்வந்தால் இளைஞர்களின் எண்ணங்களை மாற்றி யாழ் இளைஞர்களின் எதிர்காலத்தை நல்லதாக உருவாக்க முடியும். கல்வியில் சிறந்து விளங்கிய யாழ்ப்பாணம் இப்போது வாள்வெட்டு, போதைப்பொருள் போன்ற குற்றச் செயல்களிலேயே பெயர்பெற்று காணப்படுகிறது. இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு இளைஞர்களை வேறு வழிக்கு மாற்றாமல் விட்டால் நீங்கள் யாழ்ப்பாணத்தை இழந்து விடுவீர்கள். நீங்கள் திரும்பி வந்து பார்க்கும் போது கட்டடங்களை மட்டுமே காண்பீர்கள், மனிதர்களைக் காணமாட்டீர்கள்” என்றும் கூறினேன் என்றார்.

**மரியன்னை ஓர் இரக்கம் காட்டும் தாய்**


மே மாதம் 29ஆம் திகதி அன்னை காட்சி கொடுத்த இடத்தில் ஒப்புக்கொடுத்த திருப்பலியில் ஆயர் மரி அன்னை ஓர் இரக்கம் காட்டும் தாய். இவர் உமது சித்தப்படியே எனக்கு ஆகட்டும் என்று அனைத்தையும் ஏற்று இறை சித்தத்துக்குத் தம்மை அர்ப்பணித்தவர். இதனால் பல துன்பங்களை அனுபவித்தவர். இரண்டு விடயங்களை அன்னையிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஒன்று அன்னையின் பிரமாணிக்கம் மற்றது பிறர் தேவை உணர்ந்து கேட்காமலே விரைந்து சென்று உதவும் நல்ல பண்பு. ஆகட்டும் என்ற தாம் எடுத்த வாக்குறுதிக்கு இறுதிவரை அன்னை பிரமாணிக்கமாய் இருந்தார். மரியன்னை ஓர் இரக்கம் காட்டும் தாய். எலிசபெத் அம்மாள் உதவி கேட்கும்வரை காத்திராமல் தேவை உணர்ந்து தாமாகவே விரைந்து சென்று உதவியவர். கேட்ட பின்னர் கொடுப்பது பிச்சை. கேட்காமலே கொடுப்பது இரக்கம். இதையே மரியன்னை செய்தார். இதையே நாம் எல்லோரும் செய்ய அழைக்கப்படுகிறோம்.

**பெல்ஜியத்தில் அன்னையின் காட்சிகளும் யாத்திரைத்தலமும்**

1933ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரை தேவ அன்னை மரியா 11 வயது நிரம்பிய மரியற் என்ற சிறுமிக்கு 8 தடவைகள் காட்சி கொடுத்து தன்னை ஏழைகளின் கன்னிகை என அறிமுகம் செய்தார். மரியற் என்ற சிறுமி மிகவும் வறிய நிலையில் வாழ்ந்த 7 பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தின் மூத்த மகளாவார். மரியற் தனது 90 வயது வரை (1921 - 2011) வாழ்ந்து 2011ஆம் ஆண்டு இறந்தார். அன்னை மரியற்றிடம் “உனது கரங்களை நீரோடை நீரில் நனை - இந்த நீரோடை எல்லா நாடுகளின் நோயாளர்களுக்கும் சொந்தமானது” என்றார். இதனாலேயே ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் குறிப்பாக நோயாளர்கள் வந்து குவிகின்றனர். அன்னை தமது மூன்றாவது காட்சியின் போது தமக்கு ஒரு சிற்றாலயம் அமைக்கும்படி வேண்டியபடி 1933ஆம் ஆண்டு சிற்றாலயம் அமைக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு அன்னையின் இந்தக்காட்சிகளும் செய்தியும் உண்மையானதென ஏற்றுக் கொள்ளப்பட்டது. திருத்தந்தை 2ஆம் யோண் போல் அவர்கள் தமது பனு யாத்திரைத்தல வருகையின் போது மரியற்றைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

**பனு யாத்திரைத்தலம் தமிழ்மக்களின் யாத்திரைத்தலமானது**

பி.எக்ஸ். பத்மராஜா பெல்ஜியம் பனுமாதா யாத்திரைத்தலம் தமிழ் மக்களின் யாத்திரைத் தலமாகக் கடந்த 31 ஆண்டுகளாக விளங்கி வரும் சரித்திரத்தைச் சொன்னார். “1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெதர்லாந்தில் வசித்து வந்த தமிழ் மக்கள் மாதத்தின் முதற் சனிக்கிழமைகளில் அங்குள்ள புனித விலிபுபோட் ஆலயத்துக்குச் சென்று அன்னையிடம் வேண்டுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அப்போது டச்சுக் கத்தோலிக்க பெண்மணி ஒருவர் பெல்ஜியம் பனு மாதாதலம் பற்றி அறியத்தந்தார் 1984 மற்றும் 1986ஆம் ஆண்டுகளில் இரு தமிழ் குடும்பங்களோடு பனு யாத்திரைத்தலத்துக்குச் சென்ற பின்னர் திரும்பவும் 1986ஆம் ஆண்டு 20 பேருடன் இங்கு யாத்திரை சென்றோம். பனு யாத்திரைத்தலத்தின் பெயர் ஐரோப்பா முழுவதும் பரவத்தொடங்கிய பின்னர் 1987ஆம் ஆண்டு 50 பேருடன் இங்கு சென்றோம். தற்போது ஒவ்வெரு ஆண்டும் மே மாத்தின் இறுதிச் சனிக்கிழமைகளில் இந்த யாத்திரையை நடத்துகிறோம். தமிழ் மொழியில் வழிபாடுகளை நடத்த இந்தியா மற்றும் இலங்கைக் குருக்கள் உதவினர். 1990இல் லண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தில் பணியாற்றிய ரீ.ஈ.தேவராஜன் அடிகளார், 1993இல் யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த எஸ்.எவ். கிருபானந்தன் அடிகளார், 1995இல் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த லடிஸ்லொஸ் அடிகளார் ஆகியோர் உதவினர். 1996ஆம் ஆண்டு 10ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 2004 மற்றும் 2005ஆம் ஆண்டுத் திருவிழாக்களை ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகளார் நடத்தினார். இவரின் 25ஆவது குருத்துவ வெள்ளி விழாவும் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆயத்துவ வெள்ளி விழாவும் இங்கு கொண்டாடப்பட்டது. 2008ஆம் ஆண்டு திருவிழாவுக்கு ஏ.ஜே.வி. சந்திரகாந்தன் அடிகளாருடன் லண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியக பிரான்சிஸ் அடிகளார், யாழ். மறை மாவட்ட அன்ரன் மத்தாயஸ் அடிகளார் ஆகியோர் பங்கு பற்றினர். திருமலை - மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி ஆண்டகையின் ஆயத்துவ வெள்ளி விழா இங்கு கொண்டாடப்பட்டது. 2010ஆம் ஆண்டு திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும் 2011 ஆம் ஆண்டு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் வழிபாடுகளை நடத்தினர். 2013ஆம் ஆண்டு திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அகஸ்ரின் நவறட்ணம் அடிகளாரும் 2014ஆம் ஆண்டு கொழும்பு மறைமாவட்டத் துணை ஆயர் இம்மனுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும் வழிபாடுகளை நடத்தினர். 2015 ஆம் ஆண்டு மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் வழிபாடுகளை நடத்தினார்” என்றார். தேவ அன்னை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் அனைவரையும் மதபேதமின்றிப் பாதுகாப்பாராக.



# ளையார் கோயில் முதலாய கோயில்களின்
# பாபிஷேக சிறப்பிதழ்
# 2016

### ஆசிச்செய்தி

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்பட்டு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இக்கிராமத்திற்கு கைதடி எனப் பெயர் வருவதற்கு இவ்வாலயத்தில் நடந்த ஒரு சம்பவமே காரணமாக அமைந்ததாகத் தெரியவருகின்றது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்த மேகத்தால் சூழப்பட்டிருந்த எமது வடகுதியில், ஆலயங்கள் புனரமைக்கப்படுதல், கும்பாபிஷேகம் செய்வித்தல் என்பன காலத்தின் தேவையாகும். இப்பணிகளைத் திறம்படச் செய்து வரும் ஆலய நிர்வாகிகள் மற்றும் திருப்பணிச் சபையினரின் பணிகள் பாராட்டத்தக்கவையாகும்.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், இந்நிகழ்வினை முன்னிட்டு பிரசுரமாகும் சிறப்பிதழ் சிறப்பாக வெளிவரவும் ஆசிவேண்டி வீரகத்திப் பிள்ளையாரையும், பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்

**இறைபணியில்,**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வதிவிட ஆச்சார்யார் சின்மயாமிஷன்,**
**யாழ்ப்பாணம்.**

### உப தலைவரின் வாழ்த்துச் செய்தி



கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது ஆன்றோர்வாக்கு. அவ்வகையில் கைதடியில் அழகோடு அருளாட்சி செய்யும் ஆலயங்களிலே கிழக்குத்திசையில் அமைந்துள்ளது வீரகத்திப்பிள்ளையார் ஆலயம் ஆகும்

ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடம் எனப்பொருள்படும். இவ்வகையில் ஆலயத்தினால் எவ்வாறு எம் மனம் ஒருமைப்படுகின்றது என்பது வினாவாகும்? கோயில் அமைக்கப்பட்டுள்ள கட்டட சிற்ப, ஓவிய கலைகளினால் எம் மனம் ஒருமையடைகிறதல்லவா

அதே போல இங்கு நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகளில் எம் மனம் ஒருமைப்படுகின்றது. இதில் கும்பாபிடேகம் என்பது நைமித்தியக்கிரியையில் அடங்கும் மகா கும்பாபிடேகம் என்பது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நிகழ்வதாகும் இங்கு நடைபெறுவது புணராவர்த்தன கும்பாபிடேகமாகும் இது திருத்த வேலைகளின் பொருட்டு செய்யப்படுகின்றது. அது மட்டுமன்றி விக்கிரகத்தின் அடியில் வைக்கப்பட்டுள்ள செப்பாலான யந்திரம் ஏற்றப்பட்ட சக்தியினை பன்னிரண்டு வருடங்களில் இழப்பதாகவும் அதே போல விமானங்கள் கோபுரங்களில் இடப்படும் தானியங்கள் முளைதிறனை இதே காலப்பகுதியினுள் இழப்பதாகவும் சமய அறிவியல்ரீதியாகக் கூறப்படுகின்றது.

கும்பாபிஷேகத்தில் கும்பங்கள் வைக்கப்பட்டு அவை ஒவ்வொரு தெய்வங்களாக உருவகிக்கப்பட்டு அவ்வக் கும்பங்களில் உரிய தெய்வங்களை மந்திரங்களினூடாக ஆவாகனம் எனும் ஊற்று கிரியையினூடாக எழுந்தருளச் செய்து அக்கும்பநீரை உருவங்களில் ஊற்றுவதனூடாக மீண்டும் இறைசாந்நித்தியம் ஏற்படுத்தப்படுகின்றது.

அறிவியல் ரீதியாகக் கூறின் கோயிலின் உயர்ந்த கோபுர விமான அமைப்புக்கள் இடிமின்னலில் இருந்து எம்மைக்காக்கின்றன். அழகியல் அடிப்படையில் மங்கலவாத்தியம் கட்டடம், சிற்பம், ஓவியம் முதலியன வளர்வதற்கு ஏதுவான இடமாக ஆலயம் உள்ளது சமூக அடிப்படையில் ஒற்றுமை விட்டுக் கொடுப்பு பலகுடும்ப வாழ்வாதார மையம் எனும் அடிப்படையில் ஆலயம் திகழ்கின்றது.

ஆதலினால் கைதடியிலுள்ள வீரகத்திப் பிள்ளையார் கோயிலும் சமூக குறிகாட்டியாக வாழ்வாதாரமையமாக சமயசின்ன்மாக விளங்குகின்றதென்பதில் ஐயமில்லை.

அவனருளாலே அவன்தாள் வணங்கும் நாமெல்லோரும் இணைந்து மக்கள் சேவையே மகேசன் சேவை எனவாற்றி இம்மகாகும்பாபிஷேக தினத்தில் உறுதியெடுத்துக் கொள்வோமாக எல்லாம் நலமேயாக இறைபதம் இறைஞ்சி அமைக்கின்றேன்.

**சி. பவளகுமாரன் அதிபர்**
**உபதலைவர்**
**நம்பிக்கைப் பொறுப்பளர் பரிபாலன சபை**

### பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



இயற்கை எழில்மிகு இலங்காபுரியின் சென்னி எனத் திகழும் யாழ்ப்பாணத்தின் கிழக்கே வந்தாரை வரவேற்று வாழ்வளிக்கும் தென்மராட்சிப் பிரதேசத்திலே வளம்நிறை கைதடிப் பகுதியிலே அமைந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கும் அருள்மிகு வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் புனராவர்த்தன நவகுண்ட பஞ்சகுண்டபஷ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்வெய்துகின்றேன்.

பழமையும் பெருமையும் பல அற்புதங்களும் நிறைந்த இவ் ஆலயமானது பரந்த வயல்வெளிகளும் தென்னஞ் சோலைகளும் மெருகூட்ட, அழகிய கடல் புடைசூழ, தாழை மரங்கள் அணி செய்ய நிறைந்த குளிர்ச்சியைத் தரும் ரம்மியமான சூழலில் அமையப் பெற்றுள்ளது. விவசாயத்தை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட அதிகளவு மக்கள் இங்கு வாழ்வதால் இங்கு காணப்படும் தோட்ட நிலங்கள் இக் கிராமத்தின் அழகை மேலும் மெருகூட்டி நிற்கின்றன.

எமது வீரகத்திப் பிள்ளையார் ஆலய மஹாகும்பாபிஷேக நற்கைங்கரிய நிகழ்வு நல்லமுறையிலே சிறப்பாக பூரணத்துவம் பெற எல்லாம் வல்ல இறைவனது நல்லாசிகளோடு எனது வாழ்த்துக்களையும் இந்நேரத்திலே வழங்குவதில் மனங்குளிர்கின்றேன்.

மேலும், கலாசாரச் சீரழிவுகள், துஷ்பிரயோகங்கள், தீய செயற்பாடுகள் நிறைந்துள்ள இன்றைய சூழல் மாறி நல்லதோர் சமுதாயம் எம் தேசத்திலே மலர்ந்திட இது போன்ற மஹாகும்பாபிஷேக நிகழ்வுகள் வழி கோலும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான ஆன்மீக வளர்ச்சியுடன் கூடிய இறைபணியில் அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வரும் ஆலய பரிபாலன சபையினர் என்றும் பாராட்டுக்குரியவர்கள். இம் மஹாகும்பாபிஷேக நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர், குருமார், நித்திய பூசைக் குருமார் மற்றும் இந் நிகழ்வுக்கு நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி வழங்கிய இக் கிராமத்து மக்கள் அன்பர்கள், தொண்டர்கள் மற்றும் வெளியூர்களிலும், வெளிநாட்டிலும் வாழும் விநாயக அடியார்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு யாபேரும் இறையாசி பெற்று அவர்களது நற்பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

"தொல்லை வினைகள் தீர்க்கும் வீரகத்தி விநாயகன்
நல்லருள் யாபேர்க்கும் கிடைக்கட்டும் - அதற்கு
இம் மஹாகும்பாபிஷேக நிகழ்வு துணையாகட்டும்"

**திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன்**
**பிரதேச செயலர்,- தென்மராட்சி.**

### ஆலய நிர்வாகியின் வாழ்த்துச் செய்தி




கைதடிப் பகுதியில் பழமை வாய்ந்த மூன்று வீதிகளைக் கொண்ட பெரிய கோயிலாக கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

கி.பி 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கைதடி வீரகத்திப் பிள்ளையார் அமைந்துள்ள பகுதியில் செறிந்த பற்றைகள், தாளைகள் மற்றும் வளர்ந்த மரங்கள் அடர்த்தியாக செறிந்து இருந்த இடமாகும். அப் பகுதியில் மாடு மேய்ப்பதும், விறகு வெட்டுவதும், குழை அறுப்பதும் அந்த அயலில் இருந்த குடிமக்களின் வழமையான பழக்கங்கள் ஆகும்.

ஒரு நாள் இவ்விடத்தில் மூதாட்டி ஒருத்தி குழை அறுத்துக் கொண்டிருந்த போது கொக்கியில் இருந்த கத்தி கட்டுத்தளர்ந்து இருந்ததால் கழன்று நிலத்தில் விழுந்தது. அப்போது மற்றொரு புறத்தில் மாடுமேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனைக் கூப்பிட்டு தன்னிடமிருந்த மற்றைய கத்தியைக் கொடுத்து அந்தப் பற்றையை வெட்டி அகற்றித் தன்னுடைய கொக்கியில் இருந்த கத்தியை எடுத்துத் தருமாறு அம் மூதாட்டி கேட்டார். அப்படி சிறுவனும் பற்றையை வெட்டும் போது " கணீர் " என்ற பெரியதொரு சத்தம் கேட்டது. சிறுவனது கையும் தவறுதலாக வெட்டுப்பட்டு கத்தியும் உடைந்து விட்டது. அப்போது அங்கே ஒரு விநாயகர் சிலை தென்பட்டது. கத்தி பட்டதால் அதன் கையில் ஒரு தளும்பும் காணப்பட்டது. இவ் அதிசயத்தைக் கண்ட மூதாட்டியும் சிறுவனும் உடனே அக்காணிச் சொந்தக்காரனான பெரிய வேலப்ப முதலியாருக்கும் தெரிவித்தனர். வேலப்ப முதலியார் அச் சுற்றாடலிலுள்ள பற்றைகளை நீக்கி ஒரு ஆலயத்தை நிறுவி எல்லோரும் வழிபடச் செய்தார். பிள்ளையாரின் கையில் தழும்பு காணப்பட்டதால் " கைத்தெறிப் பிள்ளையார் " என அழைக்கப்பட்டு கால முன்னேற்றத்தில் பல பரிவார கோயில்களையும் இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் "கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் " என் அழைக்கப்பட்டு வருகின்றது. இதனால் " கைதறி " என அழைக்கப்பட்ட கிராமம் பின்னர் கைதடி என மருவியது.

10.02.2014 திங்கட்கிழமை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்ய விநாயகர் திருவருள் கூட்டியதன் பிரகாரம் ஆலய வளர்ச்சியை கருத்தில் கொண்டும் பல அடியார்களின் வேண்டுதலுக்கமைய ஆலயத்தில் ஒரு பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பிள்ளையார் சிவன் வாயிலில் இராஜகோபுரம் அமைக்கப் பெற்று அத்தோடு புதிய இரண்டு மணிக் கோபுரமும் அமைக்கப் பெற்று ஆலயம் புதுமையான முழுப் பொலிவைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அத்தோடு வருடாந்த மகோற்சவத்தை கூடிய விரைவில் செய்வதற்கு வசதியாக 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் செய்ய திருவருள் கைகூடியுள்ளது.

**சின்னத்தம்பி சுப்பிரமணியம்**
**ஆலய நிர்வாகி.**



மித்திரன்
ஸ்ரோர்ஸ்
கைதடி மத்தி.

ரூபன்
களஞ்சியம்
கைதடி வடக்கு

மகிந்தினி
களஞ்சியம்
கைதடி கிழக்கு.

நியூராஜிகா
இரும்பகம் & பல்பொருள் வாணிபம்
மாவடிக்கந்தன் முன்,
கைதடி மத்தி.

ஐங்கரன்
பல்பொருள் வாணிபம்
கைதடி கிழக்கு

ளையார்
ாருள் நிலையம்
ாய் வீதி, கைதடிச் சந்தி.

நியூ கணேசன்
களஞ்சியம்
கண்டி வீதி, கைதடி.

ஆச்சி ஹொட்பூட்
றெஸ்ரோறன்ட்
கைதடி கிழக்கு.

விநாயகர்
களஞ்சியம்
கைதடிச் சந்தி.

சூரியன்
நகலகம்
கைதடி.

# வடபகுதியின் பொருளாதார மீட்சியில் அக்கறை கொள்ளுமா நல்லாட்சி?

சேரலாதன்

நீண்ட காலமாக இடம்பெற்ற போர் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடபகுதியின் பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதில் தற்போதைய அரசும் காத்திரமான நடவடிக்கை எதையும் எடுப்பதாகத் தெரியவில்லை. ஒரு பிரதேசத்தின் பொருளாதார வளங்கள் பாதிக்கப்படும்போது அங்கு வாழ்கின்ற மக்களிடையே இயல்புக்கு மாறான முரண்பாடுகள் தோன்றுவது வழக்கமாகும். இதுதான் வடபகுதியில் இன்று காணப்படுகின்ற நிலை. படித்த மற்றும் போதியளவு கல்வியறிவு பெறாத இளைஞர்கள் பலரும் வேலையற்றவர்களாக விரக்தியுடன் திரிவதைக் காணமுடிகின்றது. இவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கும் தவறான வழிகளில் பணத்தைச் சம்பாதிப்பதற்கு முயற்சி செய்வதற்கும் இதுவே பிரதான காரணமாகும்.

முன்பெல்லாம் காங்கேசன்துறை சிமெந்து ஆலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் போன்றன சிறப்பாக இயங்கி வந்ததால் பெருமளவு வடபகுதித் தமிழர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று வந்தனர். இதனால் வேலைவாய்ப்பின்மை மிகக் குறைந்த அளவிலேயே இங்கு காணப்பட்டது. இதைவிட கிராமங்கள் தோறும் ஏராளமான கைத்தறிகள் நிறுவப்பட்டதால் பெருமளவு பெண்கள் இவற்றின் மூலமாகத் தமது குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் படித்த இளைஞர்களுக்கான விவசாயத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. வெளிநாட்டு இறக்குமதி கள் கட்டுப்படுத்தப்பட்டதால் உள்ளூர் விவசாய உற்பத்திகளுக்குச் சந்தையில் அதிக விலை கிடைத்து வந்தது. இதனால் விவசாயிகள் அதிக இலாபத்தைப் பெற்றனர். விசுவமடுவில் காணி பெற்று மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்ட இளைஞர்கள் அதன் மூலமாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு கல் வீடுகளை அமைத்துக்கொண்டமை இன்றும் நினைவில் நிழலாடுகின்றது. இதன் காரணமாக வடபகுதி விவசாயிகள் சிறிமாவோ அம்மையார் மீது நன்மதிப்பைக் கொண்டிருந்தனர். இதே சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தில் உணவுகளுக்குப் பெரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. தேநீர்க் கடைகளில் சீனிக்குப் பதிலாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பனங்கட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் பனங்கட்டி உற்பத்தியில் பலர் ஈடுபட்டு அதிக வருமானத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் இன்று நிலமை தலை கீழாக மாறி உலகமயமாக் கல் கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்திற்குள் புகுந்து கொண்டதால் உள்ளூர் உற்பத்திகள் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன.

இது ஒரு புறமிருக்க போரினால் ஏற்பட்ட இழப்புக்களை வடபகுதி மக்கள் நிவர்த்தி செய்ய வேண்டுமானால் அவர்களது பொருளாதார வளம் சிறப்பாக அமைக்கப்பட வேண்டும். இதற்கு அரச வேலை வாய்ப்புக்கள் மட்டும் உதவப் போவதில்லை. வேறு வேலை வாய்ப்புக்களும் எற்படுத்தப்பட வேண்டும். வடபகுதியில் தற்போது பல்வேறு தேவைகளுக்காகவும் கட்டடங்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதில் ஏராளமான தென்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.இவர்கள் தமக்கு அதிக ஊதியம் கோரி நிற்பதையும் காணமுடிகின்றது. இவர்களின் வருகையால் உள்ளூர்த் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதேவேளை முன்பெல்லாம் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் கப்பல்கள் தரித்து நின்று பொருள்கள் இறக்கப்படுவது வழமையாக இருந்தது. இதில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டதையும் காண முடிந்தது. ஆனால் இந்த நிலை இப்போது இல்லை. மேலும் தென்பகுதி மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர். வளமாக வாழ்ந்த இவர்கள் தற்போது வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு கிடக்கின்றார்கள். இந்த நிலையும் அரசால் மாற்ற முடியவில்லை.

ஒரு காலத்தில் குளிர்பானங்களைப் போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனங்கள் பல்வேறு இடங்களிலும் காணப்பட்டன. இவற்றைச் சோடாக் கம்பனிகள் என மக்கள் அழைத்தார்கள். இங்கு தயாரிக்கப்படும் குளிர்பானங்களை நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் விருப்பத்துடன் வாங்கி அருந்தினார்கள். ஆனால் இந்த நிலை இன்றில்லை. கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் சோடாக்களையே அருந்துவோமென எம்மவர்கள் ஒற்றைக்காலில் தவமிருகின்றனர். உள்ளூர் உற்பத்திகளை மதிப்பதற்கு மக்கள் முதலில் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் தற்போதைய அவல நிலை தீரவே தீராது.

வடபகுதியின் பொருளாதார அவலநிலையை நீக்குவதற்கு அரசு மனப்பூர்வமாக விரும்புமாயின் இங்குள்ள சூழ்நிலைக்குத்தக்கவாறான தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். அது மட்டுமல்லாது இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பையும் வழங்க வேண்டும். மேலும் மூடப்பட்டுக் கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறப்பதுடன் மட்டும் நின்றுவிடாது சிறிய சிறிய தொழிற்சாலைகளையும் அமைத்தல் வேண்டும். இதனால் கிராமிய மட்டத்தில் நன்மைகள் கிடைக்கும். இதேவேளை அரசுக்கு வட பகுதியின் பொருளாதார நிலையை உயர்த்தும் எண்ணம் இல்லையென்பது தற்போது தெரிந்துவிட்டது. பொருளாதார மையம் ஒன்று வடபகுதியில் அமைக்கப்படவுள்ளதாகச் சமீபகாலமாகச் செய்திகள் வெளிவந்தவண்ணமிருந்தன. இடத்தைத் தெரிவு செய்வதில்தான் இழுபறி நிலை நீடிப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் தொடர்பான உண்மைகளை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் போட்டுடைத்துள்ளார். இந்தத் திட்டத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இந்த மையத்தை வடபகுதியிலிருந்து தவிர்த்து மதவாச்சியில் அமைப்பதற்கு முயற்சிப்பதாகவும் அதற்கு முஸ்லிம் அமைச்சர் ஒருவர் ஆதரவாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். வடபகுதி மக்களை எந்த விதமான பொருளாதார நன்மைகளும் சென்றடையக் கூடாது என்பதில் அரசில் அங்கம் வகிப்பவர்கள் தீவிரமாக உள்ளதை இது எடுத்துக் காட்டுகின்றது. இந்த நிலையில் வடபகுதி மக்கள் இனியும் பொருளா தார மீட்சி பெறுவார்கள் என்ற நம்பிக்கை தளர்ந்து வருகின்றது. போரின் போது வடபகுதியிலுள்ள பொருளாதார வளங்களை அழிப்பதை முன்னைய அரசு முக்கியமான கொள்கையாகக் கொண்டிருந்தமை இங்கு நோக்கத்தக்கது.

# சுற்றாடல் சுத்தத்தை...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய செலவுகள் மீதப்படுத்தப்படும் (குடும்பத்தினதும், நாட்டினதும் செலவுகள்) தேவையற்ற நேர, பொருள் இழப்புக்கள் தவிர்க்கப்படும். கட்டாக்காலிகளின் பெருக்கமும் பெருமளவில் கட்டுப்படுத்தப்படும். கழிவுகள் சேகரித்தல் மற்றும் அகற்றலின் செலவை குறைத்துக் கொள்ளலாம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்படும் செலவுகளும், அவர்களின் சேவை வழங்கலில் உள்ள குறைபாடுகளும் பெருமளவு நிவர்த்தி செய்யப்படும். அமர்த்தப்பட்ட தொழிலாளர்களால் நிறைவான சேவையை வழங்கமுடியும்.

திட்டமிடல், தேவையான பொருள்களை மட்டும் வாங்குதல், மீள்பாவனை மூலம் பணத்தைச் சேமித்தல் போன்ற நல்ல ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தல், மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருள்களை விற்பதன் மூலம் வருவாயை உருவாக்கிக் கொள்ளுதல். கழிவு முகாமைத்துவத்தில் நாமும் நம் குழந்தைகளும் பரிச்சயமாதல். சூழலுக்கு நட்பான முறையில் நம்மால் உருவாக்கப்படும் கழிவுகளை அகற்றுதல். சுத்தமானதும் சுகாதாரமானதுமான சூழலை, எங்கள் சக்திக்குட்பட்ட முறையில் உருவாக்கிப் பேண உதவுதல். வேறு என்னென்ன வழிகளில் சூழல் சுகாதாரத்தை மேம்படுத்தல் என்ற பல நன்மைகள், நம்மை அறியாமலேயே நாம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் மற்றையோருக்கு முன்னுதாரணமாக விளங்கி வழிகாட்டிகளாகவும் இருப்போம். உக்கக்கூடிய கழிவுகளான இலை, குழை, சருகு , சமயலறைக் கழிவுகளைக் கொண்டு இயற்கை உரமாக்கல் compostமூலம் மீள் சுழற்சி செய்யலாம். இது மண்ணின் வளம், காற்றோட்டம் ஈரலிப்பு, நுண்ணங்கிகளின் செயற்பாடு, என்பவற்றை மேம்படுத்தி நல்ல விளைச்சலை தரும் இந்த compost உரம் மிகவும் பெறுமதி மிக்கது. வீட்டுத் தோட்டச் செய்கையில் நல்ல, தூய்மையான, நஞ்சற்ற காய்கறி, கீரை வகைகளை பெற்றிட இது மிகவும் உதவிடுவதோடு மண்ணையும் வளப்படுத்துகின்றது. அசேதன இரசாயனப் பசளைப் பிரயோகத்துக்கு பதிலாக இதனைப் பாவித்துப் பெறப்பட்ட மரக்கறி, கீரை வகைகளை உணவில் சேர்க்கும்போது மனிதனை சடமாக்கும் புற்றுநோய்த்தாக்கம் வெகுவாக குறைகின்றது.

சிந்திச்சிதறி வீடையும் நகரையும் அசிங்கப்படுத்திய உக்கக்கூடிய இந்தக்குப்பைகள், இப்போது எம் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விதமாக மாறுவது விந்தையே ஆகும். இந்தப் பசளை கொண்டு பயிரிடப்படும் தாவரங்களுக்கு அடிக்கடி நீர் பாய்ச்சத் தேவையில்லை என்பதும் கிருமி நாசினிகள் விசிறத் தேவையில்லை என்பதும் மேலதிக போனஸ் நன்மைகளே. பொது இடங்களில் உள்ள நிழல் மரங்களிலிருந்து உதிரும் சருகுகள் வீணே எரிக்கப்படுவதைக் காணும் போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

compost உரத்தை வீடுகளில் கிடைக்கும் கொள்கலன்களைப் பயன்படுத்தியோ தரையிலோ (குவியல் முறை) தயாரித்துக் கொள்ளலாம். சேதனப் பசளை கொள்கலன்களை, சமயலறை அருகிலோ, வீட்டுத் தோட்டத்திலோ நிழலின் கீழ் வைத்துக் கொள்ளலாம். சேதனப் பசளை தயாரிப்புக்கு, காய்கறி, பழவகைகளின் தோலும் கழிவுகளும், புற்கள், இலைகள், உலர்ந்த மலர்கள், வாழைக்குற்றிகள், விலங்குகளின் எரு போன்றவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றைப் பயன்படுத்ததும் போது எந்தவித துர்நாற்றமும் ஏற்படாது. (எஞ்சிய உணவுக் கழிவுகள், மீன் கழிவுகளைப் பயன்படுத்துகின்ற போது சில சமயம் துர்நாற்றம் வீசலாம்). இந்தக் கழிவுகளில் சமையல் எண்ணெய், வாகன ஒயில் வகைகளை சேர்க்கக்கூடாது இறுக்கமாக இல்லாது தளர்வாக காற்றோட்டம் இருக்கக் கூடிய வகையில் இருப்பின் அசுத்த மணம் எதுவும் வீசாது. சவள் அல்லது முள்ளு சவள் கொண்டு வாரத்தில் ஒரு தடவை புரட்டிவிட வேண்டும். உலர்ந்த நிலையில் காணப்படின் நீர் தெளிக்க வேண்டும். அதிகளவு நீரை ஊற்றக் கூடாது. நன்கு உக்கிய சேதனப் பசளையை வீட்டுத் தோட்ட பயன்பாட்டுக்காக பயன்படுத்த முடியும்.

இவை 3யூ முறைமையின் சாரமாகும் குப்பைகள் என்பவை உண்மையில் குப்பைகளே அல்ல அவை போடப்படும் இடம் நேரம் என்பவற்றின் காரணமாகவே அவை குப்பைகளாக கருதப்படுகின்றன. தகுந்தமுறையில் சேகரித்து முகாமைத்துவம் செய்வதால் அவையும் செல்வமாக மாறிவிடும் என்கின்றனர். இது விடயமாக அனுபவமும் ஞானமும் உள்ளவர்கள். இந்தியாவிலுள்ள தியாகராஜா கல்லூரியின் பேராசிரியர் வாசுதேவன் சூழலுக்கு பாதிப்பாக இருக்கும் பிளாஸ்ரிக்கைக் கொண்டு வீதிகள் அமைக்கும் தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தி பிளாஸ்ரிக்கை வீதியில் போடாதீர்கள், வீதியை பிளாஸ்ரிக்கால் போடுங்கள் என்கின்றார். வேலூரைச் சேர்ந்த திண்மக் கழிவுக் முகாமைத்துவ திட்டப் பணிப்பாளர் ஊ.சிறினிவாசன் பண்ணை விலங்குகளைக் கொண்டு திண்மக்கழிவுகளை இயற்கையோடு இணைந்து பரிகரிப்புச் செய்யும் முறையை அறிமுகம் செய்துள்ளார். இந்த முயற்சியில் பசு, கோழி, வாத்து, மண்புழு துணையுடன் உயிர்வாயு (Biogass), கூட்டுப்பசளை (compost) என்பவற்றை மீள்சுழற்சி மூலம் பெற்றுக்கொள்வதுடன் பண்ணை விலங்குகளின் பிரயோசனத்தையும் எடுத்துக்கொள்ளமுடியும் என விதந்துரைக்கின்றார். சாதாரணமாக இரண்டு மாதங்கள் வரை எடுக்கும் கூட்டுப்பசளை உருவாக்கும் இவரின் முறை மூலம் குறுகிய காலத்துக்குள் (ஒரு மாதத்துக்குள்) செய்யமுடியும் என்கிறார். மேலும் இவற்றைப் பயன்படுத்துகின்ற போது தொழிலாளர் யூனியன் இடையூறுகள், வேலைநிறுத்தம் போன்ற செயன்முறை கஷ்டங்களும் இல்லாது வருடம் முழுவதும் சீராக செயற்பட முடியும் என்கின்றார். 3யூ முறைமையை முடியுமானவரை நம் வாழ்வில் கைக்கொள்ள முனைந்தால் நம்மால் உருவாக்கப்படும் குப்பைகளின் அளவு குறைந்து, நமது நலமும் மேம்பட்டு நகரின் அழகிலும் சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டிலும் நாமும் பங்களிப்பு செய்தோமெனும் நிறைவு ஏற்படும்.





வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 19ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா வைத்தியத் துறையில் கடந்த 49 வருடங்களாக அரும் பெரும் சேவையாற்றி வரும் மருத்துவர் சுப்பிரமணியம் சின்னத்துரை, மருத்துவர் திருமதி செந்தில் வள்ளி சின்னத்துரை ஆகி யோருக்கு சான்றோர் கௌரவம், விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)





கிளிநொச்சி-கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான இலவச மருத்துவ முகாம் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. சுமார் 400 இற்கும் அதிகமானோர் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர். (ஐ)



உடுப்பிட்டி அ. மி கல்லூரி சமூகத்தால் பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலையின் தேவை கருதி குருதி நன்கொடையாக வழங்கப்பட்டது. கல்லூரியைச் சேர்ந்த 50 மேற்பட்ட ஆசிரியர் மாணவர் குருதியை தானமாக வழங்கினர். (ஐ-108)



சுவிற்சர்லாந்து நாட்டில் வாழும் புலம்பெயர் ஈழத்தமிழர் வரதராசன் நான்கு மாணவர்களுக்கான உதவிகளை வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடாக வழங்கியுள்ளார். வழங்கப்பட்ட இந்த உதவிகளில் இருந்து இரண்டு மாணவிகளுக்கு சைக்கிள்களும், நான்கு மாணவர்களுக்கு கற்றலுக்கான முழுமையான உதவிகளும் வழங்கப்பட்டன. (ஐ)





வவுனியா தமிழ் மத்திய மகா வித்திய ... ய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்விக்
கண்காட்சி கடந்த வாரம் அதிபர் சீ.மா ... நாயகம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்
வில் பிரதம விருந்தினராக தவரட்ண ... (பிரதிக் கல்விப் பணிப்பாளர்,கல்வி அபி
விருத்தி, வவுனியா தெற்கு வலயம்), ... ப்பு விருந்தினராக திருமதி எம்.தேவசேனா
(உதவிக் கல்வி பணிப்பாளர்,ஆரம்ப ... பிரிவு) மற்றும் சி.சிறிரங்கநாதன் (பிரதி அதி
பர், வவுனியா தமிழ் மகா வித்தியா ... ம், ஆரம்பப் பிரிவு), பகுதித் தலைவர்கள்,
ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்க ... எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (ஐ)





தேசிய சுற்றாடல் தினத்தில் நிழல் தரும் மரங்களை நடும் செயற்பாடு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் முன்னெடுக்கப்பட்டது. தெல்லிப்பழை பிரதேச செயலகத்துடன் இணைந்து பல்வேறுபட்ட நிழல் தரும் மரங்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து மாவிட்டபுரம் வரையிலான வீதி ஓரங்களில் நடப்பட்டுள்ளன. (ஐ)

## பதிவுகள்





உரும்பிராய் கற்பகவிநாயகர் மணிமண்டபத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. மண்டப அமைப்புக்கு நிதிப்பங்களிப்பை நல்கிய லண்டனைச் சேர்ந்த கு. விவேகானந்தன் தம்பதியர் மண்டபத்தைத் திறந்து வைத்தனர். (ஐ)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் 108 ஆவது பன்னிரு திருமுறை, கந்தபுராணம், திருப்புகழ் முற்றோதல் பெருவிழா அண்மையில் இடம்பெற்றது. (ஐ)



அராலி உப தபாலகத்தில் மிக நீண்ட காலமாக உபதபாலதிபராகக் கடமையாற்றிய அருணகிரிநாதனின் பிரியாவிடை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் அருணகிரிநாதன் மங்கல விளக்கேற்றினார். வட்டுக்கோட்டைத் தபாலதிபர் கண்ணதாசன், உதவித் தபாலதிபர் ஜீவநாதன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)





அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் விழா கடந்த 2ஆம் திகதி பாடசாலையின் முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய, வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா கலந்து சிறப்பித்தார். (ஐ-422)



கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலைத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலையின் பெயர்ப்பலகையைக் கிளிநொச்சி மகா தேவ ஆச்சிரம முதல்வர் கணேசன் சுவாமிகளும், பாடசாலையைத் தொண்டு நாதன் சுவாமிகளும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும் இணைந்து திறந்து வைத்தனர். (ஐ)





அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் நடப்பாண்டுக்கான மாணவர் நாடாளு மன்றத் தேர்தல் அண்மையில் பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ-422)




சர்வதேச புகைத்தல் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து விழிப்புணர்வுப் பேரணியை மேற்கொண்டனர். (ஐ-167)





சர்வதேச புகைத்தல் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வில், கொடி நிதி சேகரிப்பு, சிகரெட் எரித்தல் என்பன ஆரம்பித்து வைக்கப்பட்டன.(ஐ)




சர்வதேச புகைத்தல் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நிந்தவூர் பிரதான வீதியூடாக அண்மையில் இடம்பெற்றது.(ஐ-30)



இலங்கை சமாதான கற்கைகளுக்கான நிலையத்தால் இலக்கியத்துக்கான சமாதானத் தூதுவர் விருது, தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, கவிஞர் அத்தீக் ஆகியோருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஐ-30)




முள்ளியவளை செங்குந்தா வீதி நரசிம்மர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 3ஆம் திகதி மாலையில் சிறப்புற நடைபெற்றது. உற்சவத்தின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனும் கலந்து கொண்டார். (ஐ)






நயினாதீவு, ஸ்ரீபிடாரியம்பாள் தேவஸ்தான வேள்வித்தினத்தை முன்னிட்டு, நயினாதீவு ஸ்ரீ பிடாரியம்பாள் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட 25ஆவது பொது அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு நிகழ்வுகள் நயினாதீவில் அமைந்துள்ள ஸ்ரீபிடாரி அம்பாள் சனசமூக நிலைய முன்றிலில், நிலையத்தலைவர் ந.கோகுலன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன், நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் ஆ.தியாகராஜா, நெடுந்தீவு மகா வித்தியாலய அதிபர் வீ.ஓங்காரலிங்கம் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள், பிரதேச கிராம சேவையாளர்கள், தபாலதிபர், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(ஐ)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில்

கொழும்பு, ஜூன் 26
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடத்தப்படும்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எல்லை நிர்ணயப் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவு பெறும். அடுத்த வருட ஆரம்பத்தில் தேர்தலை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
நாடு முழுவதிலும் உள்ள 336 உள்ளூராட்சி சபைகளில், 313 சபைகளின் ஆயுள்காலம் நிறைவடைந்துள்ளது. விசேட ஆணையாளரின் கீழ் அவை கொண்டு வரப்பட்டுள்ளன. 33 மாநகர சபைகளின் ஆயுள்காலம் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரும்.
அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக எதிர்வரும் 29 ஆம் திகதி பிரதமர், உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஆகியோர் எனது தலைமையில் கூடி தீர்மானமொன்றை எடுப்பர்.
அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், கலப்பு முறையிலேயே இடம்பெறும்- என்றார்.
(ற-ஜ-5)

# ஜனாதிபதிப் பதவிக்கு மீண்டும் போட்டியிடேன்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



கொழும்பு, ஜூன் 26
இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாக போட்டியிடப் போவதில்லை. இந்தத் தீர்மானத்தில் மாற்றமில்லை.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.
கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.
இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவால் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.
மைத்திரிபால சிறிசேன இரண்டாவது தடவையாகவும், ஜனாதிபதியாகப் போட்டியிட வேண்டும் என்ற யோசனையை அமைச்சர் டிலான் பெரேரா முன்வைத்தார்.
நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் தேர்தல் முறைமை மீளாய்வு உள்ளடங்கும் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது.
உள்ளூராட்சித் தேர்தலுக்கு, சுதந்திரக்கட்சியில் விண்ணப் பங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதால், நேர்முகத் தெரிவுகளை எதிர்வரும் தினங்களில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. (ற-ஜ-22)




### ஓகஸ்ட்டில் 400 தமிழ் இளைஞர்கள் பொலிஸில் இணைக்கப்படுவர்

கொழும்பு, ஜூன் 26
எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் 400 தமிழ் இளைஞர்கள் பொலிஸில் இணைக்கப்படுவர் என்று அரசு அறிவித்துள்ளது.
தேசிய கலந்துரையாடல் மற்றும் மொழிகள் துறை அமைச்சர் மனோ கணேசன் இதனைத் தெரிவித்தார்.
போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு தமிழ் பொலிஸாரின் அவசியம் உணரப்பட்டது. புதிதாகத் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைக்கப்படுவர்.
கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்களில் சந்தேகம் இருந்தமையால், பொலிஸ்துறையில் இணைப்பதில் பிரச்சினை இருந்தது என்று அவர் தெரிவித்தார். (ற-ஜ-5)

### நிதி மோசடியைத் தடுப்பதற்கு தகவல் அறியும் சட்டம் உதவும்

#### அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26
இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக நிதி வெளியில் செல்வதை ஆராய வேண்டும். நிதி மோசடிகளை தடுக்க வேண்டும். இதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் அனுசரணையாக அமையும்.
இவ்வாறு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
நிதி மோசடிகளை விசாரிப்பதற்குத் தற்போதுள்ள சட்டங்கள் போதாது. புதிய சட்டங்களும் தேவை என்று தெரிவித்தார்.
(ற-ஜ-5)

தேவை

# பிரிட்டன் விலகுவது தொடர்பில் புதியதொரு வாக்கெடுப்பு நடத்துக

## பத்து லட்சம் பேர் கையொப்பமிட்டு மனு

கொழும்பு, ஜூன் 26
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதற்கு ஆதரவாக சர்வஜன வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் வாக்களித் திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் புதியதொரு சர்வஜன வாக்கெடுப்பு உடன் நடத்தப்பட வேண்டும் என்ற மனுவில் பத்து இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.
மனுவொன்றைப் பரிசீலிப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு இலட்சம் கைச்சாத்துக்கள் தேவையென்ற நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நிலைத்திருப்பதா? பிரிவதா? என்பது தொடர்பாக புதிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோரும் மனு, பிரிட்டன் நாடாளுமன்றத்தால் கருத்திற் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேற அந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வாக்களித்திருக்கும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தை நிறுவிய ஆறு நாடுகள், கூடிய விரைவில் பேர்லினில் கூடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளன.
ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், லக்சம்பர்க் மற்றும் நெதர்லாந்தின் வெளியுறவு அமைச்சர்கள் ஒன்றுகூடி, பிரிட்டன் வெளியேறுகின்ற வழிமுறை மற்றும் விரைவாக விலகுவது பற்றி விவாதிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
புதிய பிரிட்டன் பிரதமர் பதவி ஏற்பதற்காகக் காத்திராமல் பேச்சுகளை வெகுவிரைவில் தொடங்க விரும்புவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ஜீன் கிளாடுயுன்கர் தெரிவித்துள்ளார்.
ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள தேசியவாத மற்றும் ஜனரஞ்சகக் கட்சிகள், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை வரவேற்றுள்ளன.
இந்த நிலைமையில், பிரிட்டனின் இந்த மாதிரியை பிற நாடுகள் பின்பற்றாமல் தடுப்பது எவ்வாறு என்பதை இந்த அமைச்சர்கள் கருத்திற் கொள்வார்கள் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது. (வ-5)

# மாணவர் நாடாளுமன்றத்தின் அமைச்சர்களுக்கு சான்றிதழ்கள்

தென்மராட்சி ஜூன் 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் நாடாளு மன்ற அமைச்சரவைக்கான தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்திக்கான வதிவிடப் பயிற்சி வகுப்புகளின் இறுதிநாள் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்ட பத்தில் நடைபெறுகின்றது.
கடந்த வெள்ளிக்கிழமை தொடக் கம் நடைபெற்று வரும் "வெற்றிகளை வென்றெடுப்போம்" என்னும் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்ட மாணவர் நாடாளுமன்றத்தின் பிரதமர், சபாநாயகர், அவைத் தலைவர், அமைச்சர்கள் ஆகியோருக்கான சான்றிதழ்களும் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.
தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண உள சமூக வள நிலையத்தைச் சேர்ந்த செல்வி உ.சிவபாதசுந்தரமும் கௌரவ விருந்தினராக வேள்ட் விசன் நிறுவன சாவகச்சேரி அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் அ.கி.றொசைரோவும் கலந்து கொள்வர். (வ- 9)

# விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
நல்லூர், கல்வியங்காட்டுச் சந்தியை அண்மித்து நேற்று இடம் பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
இந்த நிலையில் அவர் யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
நேற்றிரவு இடம்பெற்ற இந்த விபத்தில் கல்வியங்காடு ஞானவைரவர் கோயிலடியைச் சேர்ந்த இராசமணி கனகராசா (வயது 53) என்பவரே படுகாயமடைந்தார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.
மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவரை, பின்னால் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் மோதியதாகவே உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனால் அவர் தலையில் படுகாயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-4)

# வடமராட்சி கிழக்கில் படகுத் தொழிற்சாலை

வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்ட படகு தயாரிப்புத் தொழிற்சாலை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படுகிறது.
இது தொடர்பில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்ததாவது:
மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இந்தத் தொழிற்சாலை கட்டடத்தை திறந்து வைப்பார். வடமராட்சி கிழக்கு படகு தயாரிப்புத் தொழிற்சாலை ஊடாக படகுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மீனவர்கள் பலர் விருப்பம், தெரிவித்துள்ளனர்.
முதல் கட்டமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட மீனவர்கள் படகுகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கு விரைவில் படகுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (வ-17)

# கௌரவிப்பு நிகழ்வு

தென்மராட்சி, ஜூன் 26
நாவற்குழி பிரதேசத்தில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களையும், கடந்த ஜி.சீ.ஈ..சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நாவற்குழி தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதியத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகத்திற்கு அருகில் உள்ள கந்தையா கனகம்மா நிதிய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
பிரதேச சபைச் செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தாஜ் கல்வி நிலைய அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்வார். (வ- 9)

JAFFNA COLLEGE
BUNKER MEMORIAL LECTURE
2016
Today's youth for tomorrows tasks
by
Dr.R.W.Alexander Jesudasan (Ph.D & D.Sc)
(Principal, Madras Christion College)
On
27th June (Monday) at 4.00 p.m
in
The Public Library Auditorium, Jaffna
YOU ARE CORDIALLY INVITED
Vaddukoddai. Principal.

கண்ணீர் அஞ்சலி



யா/ யூனியன் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியரும், பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும், ஓய்வு பெற்ற வலிகாமம் வலய உடற்கல்வி பணிப்பாளருமாகிய
வி.பாலசிங்கம்
அவர்களின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தி.இராஜவினோதினி
அவர்களின் அன்புக் கணவர்
துரைரத்தினம் திருக்கேதீஸ்வரன்
அவர்கள் அகால மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன் னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
ஆசிரியர் கழகம், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

எங்கள் அன்பான அப்பா மற்றும் மாமா

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் கதிரவேலு சந்திரலிங்கம்
(ஓய்வு நிலை மேற்பார்வையாளர்)
மலர்வு :- 18.07.1949 உதிர்வு :- 08.07.2015
தீதி: 26.06.2016

அமரர் சிதம்பரப்பிள்ளை சந்திரலிங்கம்
(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்)
மலர்வு :- 10.07.1944 உதிர்வு :- 13.06.2012
தீதி: 28.06.2016

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(Ou/2438) (11.17)
குடும்பத்தினர்.

# வீட்டுத் திட்டத்தையாவது அரசு தரவேண்டும்

## விநாசியோடை கிராம மக்கள் கோருகின்றனர்

கிளிநொச்சி, ஜூன் 26
மாட்டுத் தொழுவத்துக்காக அமைக்கப்படும் கொட்டில் போன்ற அமைப்பைக் கொண்ட வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றோம். எமது அவல வாழ்வைப் போக்கும் வகையில் வீட்டுத் திட்டத்தையாவது தாருங்கள்.

இவ்வாறு கோருகின்றனர் பூநகரி, விநாசியோடை கிராமத்தை சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள்.

இந்த நிலையில் குறித்த கிராமத்தில் வீட்டுத்திட்டத்துக்கான பதிவுகளை மேற்கொள்ளாது யாராவது இருந்தால் உடனடியாகச் சந்திக்குமாறு பூநகரி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.



பூநகரிப் பிரதேசத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விநாசியோடை, கௌதாரிமுனை, மண்ணித்தலை ஆகிய பகுதிகளில் 119 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களில் 70 குடும்பங்களுக்கு மட்டுமே இன்றுவரை வீட்டு திட்ட வசதிகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய 49 குடும்பங்களும் இன்று வரை எந்த விதமான வீட்டுத்திட்டங்களும் அற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தமது பிரச்சினைகள் தொடர்பில் விநாசியோடை மக்கள் தெரிவித்ததாவது:

கிராமங்களை சூழ்ந்துள்ள கடலை வாழ்வாதார தொழிலாகக் கொண்டே நாம் வாழ்ந்து வருகின்றோம். இங்கு வாழும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் குடிசைக் கைத் தொழில்களை மேற்கொள்கின்றனர். குடிசைக் கைத்தொழிலாக அதிக பெண்கள் பன்னவேலைகளிலேயே ஈடுபட்டு தமது அன்றாட வாழ்வை எதிர் கொள்கின்றனர்.

இந்தத் தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எங்களால் வீடுகளைக் கட்ட முடியாது. கிராமத்தைச் சூழ பறட்டைக் காடுகளும், பனங் கூடல்களும் காணப்படுகின்றன. இந்தக் காடுகளில் உலாவித் திரியும் சுருட்டைப் பாம்புகள் முதல் பல விச ஜந்துக்கள் எங்கள் வீடுகளுக்குள் வந்து புகுந்து விடும். இவை எமக்கு நாளாந்தம் பிரச்சினையாகவே உள்ளன.

எங்களுக்கு நிரந்தர வீடுகள் இருந்தால் அதை பூட்டிவிட்டு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால் நாம் வாழும் வீடு மாட்டுத் தொழுவத்தைப் போன்றதாகவே உள்ளது. இதனால் எந்த நேரத்திலும் எந்தப்பக்கத்தாலும் இந்தப் பாம்புகள் வீட்டினுள் புகுந்து குடிகொண்டுவிடுமோ என்ற அச்சமுள்ளது. அத்தோடு ஓர் பாதுகாப்பான இருப்பிடம் இன்மையால் இடர்களின்போது அடிக்கடி பாதிப்புக்களை எதிர்கொள்கின்றோம். இந்தக் காரணங்களால் தினமும் ஒருவர் வீட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே எங்களுடைய இந்த அவல நிலையை கருத்திற் கொண்டு வீட்டுத் திட்டங்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பில் பூநகரி பிரதேசசெயலாளர் தெரிவித்ததாவது: எமது பிரதேசத்தில் 7ஆயிரத்து 200 குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கு ஆகக் குறைந்தது ஒரு வாழ்வாதார உதவியாவது வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் குடியிருக்கும் பலருக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படாமல் உள்ளவர்களுக்கும் தற்போது பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. யாராவது வீட்டுத்திட்டத்திற்கான பதிவுகளை மேற்கொள்ளாது இருந்தால், உடனடியாக என்னை வந்து சந்திக்கவும் - என்றார். (வ-101,21,ரி3)


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை இராசமணி



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் நீர்வேலி தெற்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசமணி நேற்று (25.06. 2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசகுமாரி, உதயகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணேசராசாவின் மாமியாரும் சிவசங்கர்-நிறஞ்சனா, தனுசன், தனுஷியா, சஞ்சயன் ஆகியோரின் பேர்த்தியும் வைஸ்ணவியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06. 2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணிக்கு நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வில்லு மதவடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
உதயகுமாரி (மகள்-குண்டு)

(J/2447),
(17,19)



## மரண அறிவித்தல்

பிறப்பு
28
.
01
.
1935



இறப்பு
25
.
06
.
2016

### திருமதி குஞ்சி கந்தன்

கைதடி தெற்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குஞ்சி கந்தன் நேற்று (25.06.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை-செல்லி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தனின் அன்பு மனைவியும் மகாராணி, கந்தசாமி(சிவம்-சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தளையசிங்கம், தங்கமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் பகீதரன் (சுவிஸ்), வித்தியா (லண்டன்), லக்சியா, மிதுனா (சுவிஸ்) (ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.06.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு. கைதடி

தகவல்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### துரைரத்தினம் திருக்கேதீஸ்வரன் (குழந்தை)



வளலாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கு நாவற்கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரத்தினம் திருக்கேதீஸ்வரன் (குழந்தை) நேற்று (25.06.2016) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் துரைரத்தினம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் சிறீகனக சபேசன்(முன்னாள் ஆசிரியர் புத்தூர்-ஸ்ரீ சோமாஸ் ஸ்கந்த கல்லூரி), சந்திரகுமார், சிவகுமார் (ஒளி அண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசவினோதினி (ஆசிரியை அச்சுவேலி மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் சுகப்பிரதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), தசாருதன் (புனித தெரெசா கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜமகேந்திரன், இராஜமனோகரி (ஆசிரியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), இராஜவிமலேந்திரன், இராஜகுகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ.இராஜமகேந்திரன்
077 9366295

# சீனா பயணமானார் நிதி அமைச்சர் ரவி

சீனாவின் முன்முயற்சியில் உருவாக்கப்பட்ட ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நேற்று பீஜிங்கில் ஆரம்பமானது. பீஜிங்கில் உள்ள உலக விடுதியில் இரண்டு நாள்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இந்தக் கூட்டத்தில் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள எல்லா நாடுகளினதும் நிதியமைச்சர்கள் பங்கேற்கின்றனர். 2014ஆம் ஆண்டு சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் யோசனையில் உருவாக்கப்பட்ட ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இலங்கை ஒரு நிறுவக நாடாக அங்கம் வகிக்கின்றது. (வ-5)

## பொலிஸாரின்

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு நுழைவாயிலுக்கு அண்மையாக வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகம் 59 ஏக்கர் நிலப் பரப்பில் உள்ளது. இதனைச் சுற்றி இராணுவத்தினர் வசம் இருந்த காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன. ஆனால் பொலிஸார் வசமுள்ள தனியார் காணிகள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இராணுவக் காவலரண்கள் இன்று தொடக்கம் அகற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ் நிலையம் அமைந்திருக்கும் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது என்கிறார்கள் சிவில் அதிகாரிகள். (உ-வ-5)

## முக்கிய

அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி.

காணி விடுவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பாதுகாப்புச் செயலர் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு தரப்பினரின் தேவை களை ஆராய்ந்து வருகின்றோம். தேசியப் பாதுகாப்புக்கு ஆகக் குறைந்த காணி எவ்வளவு தேவை என்பதைப் பார்க்க வேண்டும். இதனை ஆய்வுக்கு உட்படுத்தி வருகின்றோம்.

ஏனைய காணிகள் பின்னர் படிப்படியாக விடுவிக்கப்படும். இதற்கு காலம் தேவை. காணி விடுவிப்பு நடவடிக்கைகள் இன்றுடன் முடிவடையப் போகின்ற விட யமல்ல. இது தொடர்ந்து இடம்பெறும். ஆனால் நீண்ட காலத்தை இதற்கு எடுத்துக் கொள்ள மாட்டோம்.

தேசியப் பாதுகாப்புக்கு முக்கிய மான சில காணிகள் விடுவிக்கப்பட மாட்டாது. அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும். இந்தக் காணிகள் எவையென்பது தொடர்பில் தற்போது தெரிவிக்கமுடியாது.

யாழ். மாவட்டத்தில் 29 ஆயிரம் ஏக்கர் படையினர் வசம் இருந்தது. அவை தற்போது 3 ஆயிரம் ஏக்கராகக் குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டுக்குள் முக்கியமான காணிகள் தவிர, ஏனையவற்றை விடுவிப்போம் – என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க உரையாற்றினார். மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் வசம் இருந்த காணிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின் கடைசிப் புகையிரத நிலையம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப் பட்டுள்ளது. நல்லிணக்கத்துக்காக அரசு பல நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. அதே போன்று பாதுகாப்புக்காகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன – என்றார். (வ-5)

## தனியார்

இலங்கை போக்கு வரத்து பஸ் சேவைக்கு 40 சதவீதமும் என்ற அடிப்படையிலான உடன்பாட்டுடன் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

கடந்த 3 ஆண்டு கால முயற்சியின் பின்னர் இது உருவாக்கப்பட்டது. பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்கும், பயணத்தை இலகுபடுத்துவதற்கும், இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிகரித்த சேவையின் காரணத்தினாலும் இந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

இந்த இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்த இலங்கை போக்குவரத்து சபை ஒத்துழைப்பு வழங்காமல் பின்னடித்து வருகின்றது. இந்த விடயம் சம்பந்தமாக மத்திய அரசுடனும், மாகாண அரசுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தியும், எமக்கு எந்தவிதமான பயனும் கிடைக்கவில்லை.

இதனால் பாதிப்படைந்த பஸ் உரிமையாளர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் தீர்வு கிடைக்கும் வரைக்கும் தொடர் சேவைகளைப் புறக்கணிக்க உள்ளோம். இந்தச் சேவைப் புறக்கணிப்புப் போராட்டத்தில் எமது தரப்பு எந்தவிதமான வன்முறைகளிலும் ஈடுபடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம் – என்றுள்ளது. (உ-வ-ரி)

## பூநகரி

வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோதும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரைச் சொந்த இடமாகக் கொண்ட மரியதாஸ் அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ-32 பாதை வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் விபத்துக்குள்ளானார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. டிப்பர் வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது. அதன் சாரதியான கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டார். (வ-4,21,ரி3)

## கூட்டமைப்பில்

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் நான்கிலிருந்தும் தலா இருவர் என்ற அடிப்படையில் இந்த எட்டுப் பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான கூட் டம் நேற்று இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10 மணி முதல் ஒரு மணி வரையில் நடைபெற்றது. பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டு இறுதியில் பேச்சுக் குழு நியமிக்கப்பட்டது.

அரசியல் தீர்வு தொடர்பில் ஆராயப்பட வேண்டும். மீள்குடியமர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு என்பனவும் தீர்க்கப்படவில்லை. இவை தொடர்பில் இலங்கை அரசுடன் பேச வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடயங்களைக் கடுமையாகக் கையாண்டால், தென்பகுதியில் அது பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்காக பேசாமல் இருக்க முடியாது. அரசு, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுகின்றது. இதில் நீண்ட கால தாமதம் ஏற்படுகின்றது.எனவே அரசுடன் பேச்சு நடத்த வேண்டும்.

இவ்வாறு தமிழரசுக் கட்சி தவிர்ந்த மூன்று கட்சிகளும் வலியுறுத்தின.

இவற்றைத் தலைவர் இரா.சம்பந்தனும் ஏற்றுக்கொண்டார். இந்த விடயங்கள் குறித்து அரசுடன் பேசுவதற்காக ஒரு குழுவை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புளொட் அமைப்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், ஆர்.ராகவன், ரெலோ அமைப்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீகாந்தா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

அரசுடன் பேச வேண்டிய விடயங்கள் தொடர்பில் இந்தக் குழுவே இனிப் பேசி இறுதித் தீர்மானம் எடுப்பது என்றும் நேற்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (வ-5)

## எஞ்சிய

மாதம் ஆயிரத்து 53 ஏக்கர், ஜனவரி மாதம் 701 ஏக்கர், தற்போது 201 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. தற்போது விடுவிக்கப்படும் காணிகள் ஊடாக 200 குடும்பங்கள் மீள்குடியமர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள தனியாருக்குச் சொந்தமான ஏனைய காணிகளையும் விடுவியுங்கள். இந்தக் கோரிக்கையை கருத்தில் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். நலன்புரி நிலையங்களில் 971 குடும்பங்களும், உறவினர்கள் – நண்பர்கள் வீடுகளில் 9 ஆயிரம் குடும்பங்களும் இருக்கின்றனர். நலன்புரி நிலையங்களிலுள்ள காணியில்லாத மக்களுக்கு காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

விடுவிக்கப்படுகின்ற பகுதிகளில் சொந்தக் காணி உள்ளவர்கள் உடனடியாக இங்கே வந்து மீளக்குடியமர வேண்டும். விடுவிக்கப்பட்ட பின்னரும் அந்தக் காணிகளுக்கு மக்கள் திரும்பாதது குறித்து இராணுவத் தளபதி பல கூட்டங்களில் எம்மிடம் கேள்வி எழுப்புகிறார். ஏன் என்று கேட்கிறார். எனவே காணிகள் விடுவிக்கப்பட்டதும், அதில் மக்கள் வந்து குடியமர வேண்டும்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் அரச திணைக்களங்களும் உடனடியாக இங்கு வந்திருந்து பணிகளை ஆரம்பிக்க வேண்டும். செயற்பட வேண்டும். இதில் கால தாமதம் கூடாது. காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

மீளக்குடியமரும் மக்களுக்கு உடனடியாகவே சகல வசதிகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது – என்றார். (வ-5)

## கூட்டமைப்பின்

பின்னர் நேற்று நடந்தது. எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வருமான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச் சந்திரன், சிவ சக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா), ஹென்றி மகேந்திரன், சிறிகாந்தா, தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவநேசன் (பவான்) ஆர்.ராகவன் ஆகியோர் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண சபைக் குழப்பம் தொடர்பில் அங்கு ஆராயப்பட்டது. உள்ளுக்குள் பேசித் தீர்க்க வேண்டிய விடயங்கள் சபைக்கு கொண்டு வரப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சயந்தன், ஆனோல்ட், அஸ்மின், சுகிர்தன், பரஞ்சோதி ஆகியோரே சபையில் குழப்பங்களை விளைவிக்கினர் என்றார். இவர்களைப் பின்னணியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இயக்குகிறார் என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்தார். மாகாண சபை உறுப்பினர்களை அழைத்துச் சந்திப்பு நடத்தப்பட்டது, ஆளும் கட்சிக்குள் பேச வேண்டிய விடயங்களை சபையில் பேச வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று பதிலளித்தார் தமிழரசுக் கட்சித் தலைவர் சோ.சேனாதிராசா. இந்த விவகாரம் தொடர்பாக வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் தான் பேசுவார் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மாகாண சபையில் கூட்டமைப்புக்குக் கிடைத்த இரண்டு நியமன உறுப்பினர் பதவிகளையுமே சுழற்சிமுறைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. தற்போது ஒரு உறுப்பினர் பதவி சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மற்றையதில் நிரந்தரமாக அஸ்மின் பதவி வகிக்கிறார். அந்தப் பதவியையும் சுழற்சிக்கு உட்படுத்தி அவரது கட்சியிலிருந்தே வேறு முஸ்லிம் சகோதரர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. அதனைப் பரிசீலிப்பதாக கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையிலான கலந்துரையாடல் விரைவில் நடத்தப்படும் என்று இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற நடவடிக்கைக் குழுவில் நடைபெற்று வரும் விடயங்கள் தொடர்பில் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு இரா.சம்பந்தன் விளக்கினார். தற்போது தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராயப்படுகின்றது. இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. ஆனாலும், கலப்பு முறையே இறுதித் தெரிவாக வரக்கூடும். தொகுதி வாரியாக 60 சதவீதமும், விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஊடாக 40 சதவீதமும் தெரிவு செய்யப்படும் முறை ஒன்றே வரலாம். யாழ். மாவட்டத்துக்கு வழக்கமான ஒதுக்கீட்டைவிட மேலதிகமாக 4 ஆசனங்களை குறைந்தது 10 வருடங்களுக்காவது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தாம் வலியுறுத்தியுள்ளார் என்று சம்பந்தன் தெரிவித்தார். தேர்தல் விடயங்களை முடித்துக்கொண்டே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பில் ஆராயப்படும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். இறுதியாக அரசியல் தீர்வு விடயம் ஆராயப்படும் என்றும் இவை எல்லாவற்றிலும் நடவடிக்கைக் குழு ஒரு மனதாக தீர்மானம் எடுத்தால்தான் அது நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும் என்றும் விளக்கினார்.

“அரசியல் தீர்வு தொடர்பிலான எமது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியிருக்கின்றோம். அது அவர்களுக்கு (அரசு) தெரியும். நாங்கள் இதுதான் தீர்வு என்று இப்போது சொன்னால், அதனை எதிர்ப்பதற்கு சிங்களப் பேரினவாதிகள் உடனே வெடித்துக் கிளம்புவர். ஆனால் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் ஏற்காத எந்தவொரு தீர்வுக்கும் நாம் ஒப்புக் கொள்ளமாட்டோம்.

சந்திப்பில் வவுனியா பொருளாதார மத்திய நிலையம் தொடர்பிலும் பேசப்பட்டது. வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு மாகாணத்திற்கு கொண்டு செல்லவிடாது, இது தொடர்பில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் கூட்டமைப்பின் தலைவர் பேச வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனை, தமிழ் அரசுக் கட்சியில் இணைத்தமை தவறு என்ற விவகாரத்தை சுரேஷ் பிரேமசந்திரன் கிளப்பினார். அவரை யாரும் தமிழ் அரசுக் கட்சியில் இணைக்கவில்லை என்று அதற்குப் பதிலளித்தார் சம்பந்தன். அவர் விண்ணப்பித்துள்ளார். அதனை நாம் ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கவில்லை என்றார் மாவை சேனாதிராசா. ஆனால் அவர் தன்னை தமிழ் அரசுக் கட்சி என்று சொல்லி விளம்பரப்படுத்துகின்றார், ஊடகங்களிலும் அவ்வாறுதான் வெளிவருகின்றது எனவே நீங்கள் பகிரங்கமாக, அவர் தமிழ் அரசுக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதைத் அறிவிக்க வேண்டும் என்றார். சம்பந்தன் அதனை ஏற்றுக்கொண்டார். (உ-வ-5)

# போனஸ் புள்ளியுடன் இறுதியில் மே.தீவுகள்

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில் போனஸ் புள்ளியால் தென்னாபிரிக்காவை வீழ்த்தி இறுதிக்குத் தகுதிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. தீவுகளின் ஆரம்ப வீரர்களாக சாள்ஸ் மற்றும் பிளெச்சர். ஒற்றையிலக்கத்துடன் இருவரும் பவிலியன் திரும்பினர். சாமுவேல்ஸை ஓட்டமெதுவும் பெறவிடாதும், ரம்டினை நான்கு ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து போல்ட் செய்தார் ரபாடா. தீவுகள் 21-4 என்று தத்தளித்தது. பிராவோ, பொலார்ட் இருவரும் இணைந்து அணியை கரைசேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இருவரும் அரைச்சதத்தைப் பதிவுசெய்து இணைப்பாட்டமாக நூறு ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பொலார்ட். ஒரு முனையில் கோல்டர் தாக்குப் பிடிக்க மறுமுனையில் சதம் கடந்தார் பிராவோ. 102 ஓட்டங்களுடன் பிராவோவை இருக்கைக்குத் திருப்பினார் மொறிஸ். பிரீத்வைட் ஓரிரு பவுண்டரிகளைப் பதிவுசெய்ய முடிவில் 285 ஓட்டங்களைக் குவித்தது தீவுகள்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா, மொறிஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் பார்நெல், மோர்கல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவை





நரைனின் சுழலும், கபிரியேலின் வேகமும் படாதபாடு படுத்தியது. அம்லாவைத் தவிர முன்வரிசை வீரர்கள் எவரும் ஒற்றையிலக்கத்தைத் தாண்டவில்லை. அம்லாவால் முடிந்ததும் 16 ஓட்டங்களே. பெக்கார்டின் சிறிது தாக்குப்பிடிக்க டுமினி, மோர்கல் இருவரும் முறையே 5 ஓட்டங்களுடனும், 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 35 ஓட்டங்களுடன் பெக்கார்டினை வீழ்த்தினார் பிரீத்வைட். 134 ஓட்டங்களில் 9 இலக்குகளை பறிகொடுத்தது தென்னாபிரிக்கா. மோர்கலும், தகிரும் இணைந்து இறுதி இலக்குக்காக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தென்னாபிரிக்கா 185 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 29 ஓட்டங்களுடன் தகிரின் இன்னிங்ஸ் முடிவுகாண, கூடவே தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸும் முடிவு கண்டது.

பந்துவீச்சில் நரைன், கபிரியேல் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், பிரீத்வைட் இரு இலக்குகளையும் கோல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

**போனஸ் புள்ளியால் முன்னேறிய தீவுகள்**

இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றாலோ அல்லது மேற்கிந்தியத் தீவுகள் சாதாரண ஒரு வெற்றியைப் பதிவுசெய்தாலோ தென்னாபிரிக்காவே இறுதிக்குத் தகுதிபெறும் நிலை காணப்பட்டது. மேற்கிந்தியத் தீவுகள் இறுதிக்குத் தகுதிபெற வேண்டுமாயின் போனஸ் புள்ளியால் தென்னாபிரிக்காவை வீழ்த்த வேண்டிய கட்டாயம் நிலவிய நிலையில் 100 ஓட்டங்களால் வெற்றிபெற்று போனஸ் புள்ளியுடன் இறுதிக்குத் தகுதிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள். இறுதியாட்டம் இன்று நடைபெறும். (ம)




# இலங்கைச் சிங்கங்களை வேட்டையாடியது இங்கி.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 10 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது இங்கிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பம் மோசம் என்று சொல்லுவதற்கில்லை. பந்துப்பரிமாற்றத்துக்கு ஆறு ஓட்டங்கள் என்றவாறாக நகர்ந்து கொண்டிருக்க 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குணதிலக. ஒன்பது பந்துகளை வீணடித்து ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார் மென்டிஸ். இதுவே ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது. இலக்குச் சரிவை கருத்தில் கொண்டு அதிகம் நிதானித்தார் சந்திமல். 37 ஓட்டங்களுடன் குசல் பெரோராவை ரன் அவுட் செய்தார் றோய். மத்தியூஸ், சந்திமல் இணை அனுபவத்தன்மையை வெளிப்படுத்தியது. அரைச்சதம் கடந்தார் சந்திமல். சந்திமல்லையும் ரண்அவுட் செய்தார் றோய். மத்தியூஸ் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பிரசன்னா, மஹறூவ் இருவரும் அடுத்தடுத்து பவிலியன் திரும்பினர். அரைச்சதம் கடந்து தன்னை நிரூபித்தார் தரங்க. முடிவில் இலங்கை 254-7. தரங்க 53 ஓட்டங்களுடனும் ரன்டிவ் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக பிளங்கெட், மொயின் அலி இருவரும் தலா இரு இலக்குகளையும், வில்லி ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக றோய் மற்றும் கேல்ஸ். இணைப்பாட்டம் கச்சிதமாக நிலைபெற்றது. இலக்குச்சரிவு என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. சுழல், வேகம், உட்திரும்பல், வெளித்திரும்பல், மாற்று வேகங்கள் என்று உலகில் உள்ள அத்தனை பந்துவிச்சுப் பாணிகளையும் பரிசீலித்துப் பார்த்தாயிற்று. எதுவும் பயனில்லை. இங்கிலாந்தில் துடுப்பாட்ட வரிசையின் முன்னால் இலங்கையின் பந்துவீச்சு ஒன்றுமில்லாமல் பொசுங்கிப் போனது. இருவரும் ஆளுக்கொரு சதம் கடக்க 10 இலக்குகளால் அபார வெற்றிபெற்றது இங்கிலாந்து. கேல்ஸ் 133 ஓட்டங்களுடனும் றோய் 112 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். மூன்றாவது ஆட்டம் இன்று நடைபெறும். (ம)

# ஜி.பி.எல். தொடர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டு கழகம்நடத்தும்அணிக்கு 6 வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஜி.பி.எல். தொடர் இன்று ஆரம்பமாகிறது.




மகாஜனக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்தத் தொடரின் இறுதியாட்டம் இன்று மாலையே நடைபெறும். கிறாஸ்கொப்பர்ஸ்விளையாட்டுக்கழக தலைவர் இ.சிறிதரன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராஜா கலந்துகொள்வார். (ம-422)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

**திருமகள் வி.க. தொடர்**

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் அணியை எதிர்த்து அராலி சில்வேஸ்ரார் அணி மோதவுள்ளது.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்தகழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணிமோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து வலைப்பாடு செண்.ஆன்ஸ் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க. தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டபயிற்சிநிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதவுள்ளது. (ம-23)

# இளையோர் கூடைப்பந்தாட்டத்தில் இன்றைய அரையிறுதியாட்டங்கள்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப்பிரிவினருக்கான அரையிறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் பிற்பகல் 2.45 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதவுள்ளது.

பெண்கள் பிரிவில் பிற்பகல் 2.45 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி மோதவுள்ளது. ஆண்களுக்கான ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியிலும், பெண்களுக்கான ஆட்டங்கள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. (ம-23)

# தேசியமட்ட பளுதூக்கல்; வடக்குக்கு 9 பதக்கங்கள்


சுகனியா


லக்சிகா


ஜெப்ரின் றிக்சா


திவிசாளினி


மேரிதர்சனா


தர்சினி


ரஜினா


வக்சனா


நிதுர்சனா

யாழ்ப்பாணம், ஜூன் 26
தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் பெண்கள் பிரிவில் வடமாகாணத்துக்கு இரு தங்கம், இரு வெள்ளி, ஐந்து வெண்கலம் என ஒட்டுமொத்தமாக ஒன்பது பதக்கங்கள் கிடைத்துள்ளன.
தேசியமட்ட பளுதூக்கும் போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. இதில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்து யாழ். விளையாட்டுக் கழகத்தினூடாகக் களமிறங்கிய சுகனியா 75 கிலோ எடைப் பிரிவில் 73கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், மேரி லக்சிகா 75 கிலோ எடைப் பிரிவில் 70 பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், ஜெப்ரின் றிக்சா 75 கிலோ எடைப் பிரிவில் 55 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.
வசாவிளான் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரஜினா 75 கிலோ எடைப் பிரிவில் 57 பளுவைத் தூக்கி தங்கம் வென்றார். வக்சனா 48 கிலோ எடைப்பிரிவில் 67 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலம் வென்றார்.
யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளான மேரி தர்சனா 69 கிலோஎடைப்பிரிவில்62கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், திவிசாளினி 75 கிலோ எடைப் பிரிவில் 50 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தர்சினி 58 எடைப் பிரிவில் 67 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப்பதக்கதை வென்றார்.
எழாலை சிறிமுருகன் வித்தியாலயத்தைச் சேர்ந்த நிதுர்சனா 53 கிலோ எடைப் பிரிவில் 67 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலம் வென்றார். (ம-23)

# வைகறை-ஆலடி சிந்து இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 26
அண்ணா வி.கழகம் நடத்தி வரும் தாச்சித் தொடரின் இறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியும், உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் நாளை மோதவுள்ளன.
இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் அண்ணா வி.கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும்.
(ம-23)

# மத்தி. - இந்து. இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி அணி, யாழ். இந்துக் கல்லூரி அணி என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.
யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 52:40 என்றபுள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 44:32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
(ம-23)


யாழ். மத்தி- ஏஞ்சல் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் போது

# மாகாண மட்ட எல்லே தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 26
பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட எல்லே தொடரில் பெண்கள் பிரிவு ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இன்று, நாளை, நாளை மறுதினம் என மூன்று நாள்கள் கொண்டதாக இந்தத் தொடர் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
ஏற்கனவே நடைபெற திட்டமிட்டு பிற்போடப்பட்ட தொடரே இன்று ஆரம்பமாகிறது. (ம-23)

# பெண்கள் அரைமரதனோட்டம்; கற்சிலைமடு அ.த.க. தங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான அரை மரதனில் முல்லைத் தீவு-கற்சிலைமடு அ.த.க. பாடசாலை வீராங்கனை எஸ். விதுசா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தா[illegible]
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி முன்பாக நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க. பாடசாலையைப் பிரதிநிதித்துவம் [illegible]சய்த எஸ். விதுசா ஒரு மணி 34 நிமிடம் [illegible]6செக்கனில் இலக்கை அடைந்து தங்கப் [illegible]க்கத்தை வென்றார். மன்னார் அடம்பன் ம[illegible]வித்தியாலயத்தைச் சேர்ந்த எம். மேரி ஜான்சி [illegible]ந மணி 40நிமிடம் 38செக்கன்களில் ஓடி மு[illegible]நு வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.
முல்லை[illegible]தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சுடர்மதி ஒரு ம[illegible] 42நிமிடம் 43செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.


விதுசா (014), மேரிஜான்சி (009), சுடர்மதி (643)

நான்காமிடத்தை யாழ்ப்பாணம் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி. மான்சு. ஐந்தாமிடத்தை கிளிநொச்சி மத்திய மகா வித்தியால்யத்தைச் சேர்ந்த ரி. டினேஸ்கா, ஆறாமிடத்தை முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த யு.பிரகலா, ஏழாமிடத்தை முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க. பாடசாலைச் சேர்ந்த வை.புவனேந்தினி, எட்டாமிடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். தமிழினி, ஒன்பதாமிடத்தை முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே. டினோஜா பத்தாமிடத்தை வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என். உசாதினி ஆகியோர் தமதாக்கினர்.
(ம-422)

# மாகாண பூப்பந்தாட்டம்: யாழ். மீண்டும் சம்பியன்



மாகாண மட்ட பூப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் வவுனியாவை வீழ்த்தி மீண்டும் சம்பியனாகியது யாழ். மாவட்ட மகளிர் அணி.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நடப்புச் சம்பியனான யாழ். மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று தனி நபர் ஆட்டங்கள், ஒரு இரட்டையர் ஆட்டம் என ஒட்டுமொத்தமாக 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் நடைபெற்றது. முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட வீராங்கனையான சாமினி தன்னை எதிர்த்துக் களமிறங்கிய தனோஜாவை 21:13, 21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று 1:0 என முன்னிலை பெற்றுக்கொடுத்தார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியின் வீராங்கனை யதுசா தன்னை எதிர்த்துக் களமிறங்கிய துவாரகாவை பலத்த போராட்டத்தின் பின் 14:21, 21:18, 21:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தினார். மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்திலும் யாழ். வெற்றி பெற்றால் இரட்டையர் ஆட்டத்துக்கு வேலை வைக்காமல் அந்த அணி கிண்ணம் வெல்லக்கூடிய நிலை இருந்தது. யாழின் சார்பாக மதுமிதா, வவுனியா சார்பாக ஜனனி களமிறங்கினர். ஜனனி 21:15, 15:21, 25:23 என்ற புள்ளி களின் அடிப்படையில் வெற்றி பெற நேர்செற் வெற்றி யாழுக்கு இல்லாமல் போனது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது இரட்டையர் ஆட்டத்தையும் கைப்பற்றி முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணத்தை தக்கவைத்தது யாழ். மாவட்ட அணி. (ம-108)

## CIMA UK புலமைப்பரிசில்

CIMA-UK நிறுவனம் வறிய மாணவர்களும் கற்கைநெறியினை பயிலும் வகையில் மிகப்பெரும் புலமைப்பரிசிலினை வழங்குகின்றது. இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம், 2 வருடத்திற்கான வருடாந்தக்கட்டணம் என்பனவற்றை புலமைப்பரிசிலாக வழங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வறிய மாண்வர்களும் கல்வியைத் தொடரும் வகையில் யாழ் MCS நிறுவனம் கற்கைநெறிக்கான செலவில் 20000 ரூபாவினை கட்டணச்சலுகையாக வழங்குகின்றது. இதன் மூலம் கற்கை நெறியை பயிலும் மாணவர்கள் 90000 ரூபா வரையில் சேமிக்க முடியும். க.பொ.த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் விண்ணப்பித்து பரீட்சையின் பின் பயில முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

-இணைப்பாளர், CIMA கற்கை நெறி,

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள பாதுகாப்பான கிறிஸ்தவ டாக்டர் ஒருவரின் குடும்பத்திற்கு (மனைவி இரண்டு பிள்ளைகள்) தங்கியிருந்து சமையல் உதவி வீட்டு வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.

சம்பளம் 25,000/= (J 2317) (14,17,18)

தொடர்பு : 077 758 8729

**FRENCH LANGUAGE CENTRE**
FLC "FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

**ஜூஸ் பக்கெட் மெசின்**
விரைவான வேலை நிறைவான இலாபம் !!
Eastman
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
max adz

**Nalin Information Technologies (PVT) LTD**
இரண்டு வருட உத்தரவாதம்
உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களில் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள்....
24 மணிநேரத்தினுள் நிறுவி கொடுக்கப்படும்

4 CH CCTV PACKAGE cmos cam — 30,140/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| CMOS 1000TVL CAMERA | 4 |
| HDD 500GB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

4 CH CCTV PACKAGE — 33,740/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA | 4 |
| HDD 500GB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

4 CH CCTV PACKAGE — 32,540/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA 960p 131 | 4 |
| HDD 500GB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

8 CH CCTV PACKAGE — 59,180/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA | 8 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

8 CH CCTV PACKAGE cmos cam — 49,980/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| CMOS 1000TVL CAMERA | 8 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

8 CH CCTV PACKAGE — 56,780/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA 960p 131 | 8 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

4 CH CCTV PACKAGE — 40,340/-

| | |
|---|---|
| 4 CH DVR AHD | 1 |
| AHD 2.4MP CAMERA | 4 |
| HDD 1TB | 1 |
| BNC PINS | 8 |
| DC JACK | 4 |
| POWER PACK 12V ~ 5A | 1 |
| CAMERA STAND | 4 |
| 3C 2V CABLE | 50M |
| POWER CABLE KELANI | 50M |

8 CH CCTV PACKAGE — 73,480/-

| | |
|---|---|
| 8 CH DVR AHD | 1 |
| AHD 2.4MP CAMERA | 8 |
| HDD 2TB | 1 |
| BNC PINS | 16 |
| DC JACK | 8 |
| POWER PACK 12V ~ 10A | 1 |
| CAMERA STAND | 8 |
| 3C 2V CABLE | 100M |
| POWER CABLE KELANI | 100M |

வடபிராந்தியத்தில் எங்கும் இல்லா விலைக்கழிவு

16 CH CCTV PACKAGE — 96,660/-

| | |
|---|---|
| 16 CH DVR AHD | 1 |
| AHD 1.3MP CAMERA | 16 |
| HDD 2TB | 1 |
| BNC PINS | 32 |
| DC JACK | 16 |
| POWER PACK 12V ~ 20A | 1 |
| CAMERA STAND | 16 |
| 3C 2V CABLE | 200M |
| POWER CABLE KELANI | 200M |

16 CH CCTV PACKAGE — 132,960/-

| | |
|---|---|
| 16 CH DVR AHD | 1 |
| AHD 2.4MP CAMERA | 16 |
| HDD 2TB | 1 |
| BNC PINS | 32 |
| DC JACK | 16 |
| POWER PACK 12V ~ 20A | 1 |
| CAMERA STAND | 16 |
| 3C 2V CABLE | 200M |
| POWER CABLE KELANI | 200M |

அதிநவீன CCTV Camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.

குறிப்பு :- உங்கள் கணனிகளிலும், கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும், ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.

No. 195/4 Parameswara Junction, Palay Road. T.P : 021 222 1121/1166 Mob : 0777 667 975

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.